ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 ஜனவரி 1938 கதிர் 6

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	தலையங்கம்	1
புதிய தம்பதிகள்	—	9
கண்ணீர் மாலை	மீராபாய்	10
ஜெர்மனியில் அறுவடைத் திருநாள்	டாக்டர் எச். பெய்தான் Dr. H. Beythan	11
தேசாபிமானம்	"பாலபோதகர்"	13
உலகத்தில் என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	14
புதுவை ஆனந்த ரங்க பிள்ளை	எஸ். சோமசுந்தர தேசிகர் (இலக்கண விளக்க பரம்பரை ஆசிரியர்)	17
வான் லுடெண்டார்ப்—ஒரு பலாத்கார வாதி	—	21
ஹிந்து மதமும் நவீன உலகமும்— இம்மதம் தற்காலத்திற்குப் பொருத்தமில்லையா?	சி. முத்துவீரப்பன் B. A.	23
சீன—ஜப்பானிய யுத்தமும், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையும்	ஏ. எஸ். ஸ்ரீனிவாசன் B. A., B. L.,	29
உலகப் பேர்வழிகள்	—	33
மனித வாழ்க்கையின் லட்சியமென்ன?	கமால் அதா துருக் Kamal Ataturk	34
நில்-ஓடாதே!	யாரோ பாடியது	38

உலகத்திலுள்ள பணக்காரர்கள்—சில ருசிகரமான விவரங்கள்		39
லண்டன்—நியூயார்க்—டோக்கியோ	நமது அன்னியநாட்டு நிருபர்	49
ஒரு குடும்ப சம்பாஷணை	ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா	55
ஞானக்களஞ்சியம்	—	66
முதலாவது பர்மிய யுத்தம்	கு. கோ. கிருஷ்ணன் B. Sc. (Hons)	68
அசோகன் சாஸனங்கள்	"மௌத்கல்யன்"	71
ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்	ஒரு காங்கிரஸ்வாதி	76
கனகாவின் கடிதங்கள்	"சரசா"	78
பேரூர்க் கனகசபை—ஓர் கலை விருந்து	சு. குருசாமி B. A.,	80
இந்தியாவிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்கள்		84
அழகுக்கும் அழிவுண்டோ?	வை. சுந்தரம் ஐயர் B. A., B. L.,	85
கோவில்கள் சமைத்ததேன்?	எஸ். கே. நாராயண ஐயர் B. A., B. L.,	86
கடவுள் என்ன செய்கிறார்?	வி. கே. ஜே.	88
ஆகாய விமானம் உயரப்பறப்பதேன்?	"விஞ்ஞானபோதகர்"	90
வைரங்களுக்கு ஏன் அதிக விலை?	சி. ஜே. ஏ.	98
சமஷ்டி அரசியல் என்றால்—?	கே. வி. ராமசுப்ரமணியம் B. A., B. L.,	100
நமது அரசியல் டைரி	—	104
துலாக்கோல்	(புஸ்தக விமர்சனம்)	107
விசுவ விசித்திரம்	(படங்கள்)	109
அன்றாடஉலகம்	—	112
நமது நிருபர்களுடன்—	—	116

கண்ணீர் மாலை

(10-ம் பக்கம் பார்க்க)

ஜோதி

சுடர் 1 | ஜனவரி 1938 | கதிர் 6



பொங்கல்

உழைப்பு முடிந்தது. பலனை அநுபவிக்க வேண்டியகாலம் ஆரம்பமாகிறது. இதனைத்தான் பொங்கல் விழா வென்று தமிழ் நாட்டில் நீண்ட காலமாகக் கொண்டாடி வருகிறார்கள். இந்தப் பொங்கல் விழாவின் தத்துவத்தை நாம் எப்பொழுதோ மறந்துவிட்டோம். என் ? நாம் கொண்டாடி வருகிற எல்லா விழாக்களும் இப்படித்தான் இருக்கின்றன. சுதந்திரமில்லாத நாட்டினருக்கு விழாக்களைக் கொண்டாடவும், அவைகளை அநுபவிக்கவுங் கூடத்தெரியாது என்று யாராவது எப்பொழுதாவது சொல்லியிருந்தால் அது நமக்கு முற்றிலும் பொருந்தும். மதத்தையும் தேசத்தையும் பிணைத்துத்தான் நமது பெரியோர்கள், இந்த விழா முதலியவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. நமது நாட்டுச் சீதோஷ்ணம், நமது பரம்பரை நாகரிகம், அந்த நாகரிகத்தின் பயனை நம்மிடத்தில் பதிந்துள்ள மனப்பான்மை இவைகளையெல்லாம் உத்தேசித்தே இந்தப் பண்டிகைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்தியா விவசாய நாடு. கிராமங்களோடுதான் நமது வாழ்வு பிணைக்கப் பட்டிருக்கிறது. அந்த வாழ்விலே அவ்வப்பொழுது பூக்க வேண்டிய மலர்கள் இந்தப் பண்டிகைகளும் விழாக்களும். விவசாயி, உழுது, பயிரிட்டு, அறுவடை செய்து அதன் பலனை இந்தப் பொங்கலின்போது தான் நுகரத் தொடங்குகிறான். ஆனால் அவன் மட்டும் இந்தப் பலனை அநுபவிப்பதில்லை. தன் உழைப்புக்குத் துணை செய்த கால் நடைகளும் இந்தப் பலனை அநுபவிக்கச் செய்கிறான். தன் உற்றார் உறவினரும், ஊராரும் தன் மகிழ்ச்சியிலே—பொங்கலிலே—கலந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறான். இந்த விவசாயியின் இருதயம் எவ்வளவு விசாலமானது பாருங்கள். தன் சுகத்திலே மட்டும் அவன் திருப்தி யடைகிறானில்லை. மற்றவர்களுடைய சுகத்திற்காகவும் அவன் பாடு படுகிறான். அவர்களுடைய நல்வாழ்வுக்கும் பிரார்த்தனை செய்கிறான். பொங்கலுக்கு முந்திய நாள், பழையன வெல்லாம் இல்லையென்றாக்கி, பொங்கலன்று புதியனவெல்லாம் கொண்டு, அதன் மறுநாள் சர்வப்பிராணிகளும் மகிழுமாறு அவற்றிற்கு ஆராதனை செய்கிறான்.

இப்பொழுதைய விவசாயி, இந்த மாதிரி பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறனு? கொண்டாட வேண்டுமென்ற ஆவலென்னவோ அவனுடைய களங்கமற்ற உள்ளத்தில் நிறையக் குடிகொண்டிருக்கிறது. ஆனல் அவனுக்குச் சந்தர்ப்பமில்லையே; சௌகரியங்களில்லையே. பழையனகழிக்கவோ, புதியன கொள்ளவோ, மற்றவர்கள் மீது கருணை காட்டவோ அவனல் எங்கே முடிகிறது? அவன் மீது கருணை செலுத்துவார் யார்? வரிச் சுமைஅவனைஇறுக்குகிறது; பசிப்பிணி அவனை இழுக்கிறது. அவன் என்ன செய்வான் பாவம்! உயிரில்லாத சிரிப்பை முகத்திலே வருவித்துக் கொண்டு, எப்பொழுதாவது நமக்கு நல்ல காலம் வராதா வென்ற நம்பிக்கையிலே, தன் பெருமூச்சைக் கலக்க விட்டு, பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி வருகிறன். அவனுக்கு நம்பிக்கைத் தளர்ச்சி ஏற்படாவண்ணம் பாதுகாப்பது நமது கடமையல்லவா? அவனுடைய மகிழ்ச்சிப் பொங்கலிலேதான் தேசத்தின் வாழ்வு நிலைத்திருக்க முடியும். ஒவ்வொரு வருஷப் பொங்கலின் போதும், அவனுடைய நிலை சிறிது சிறிதாக உயருமானல், அதுவே நமது தேச வளர்ச்சியு மாகும்.

விவசாயத்தில் சம்பந்தப்படாத சிலர் நினைக்கலாம், நமக்கும் இந்தப் பொங்கலுக்கும் என்ன சம்பந்தமென்று. இதைவிட முட்டாள்தனமான நினைப்பு வேறென்றும் இருக்க முடியாது. சீனவில் ஒரு சம்பிரதாயம் இருந்து வந்தது. அறுவடையெல்லாம் முடிந்து, புதிய உழவு ஆரம்பிக்கிறபோது, அரசனே வந்து ஏரைப் பிடித்துச் சிறிது தூரம் உழுது செல்வான். 'விவசாயத்திற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? வரி வசூலிப்பதோடும், ஜனங்களைச் சத்துருக்களினின்று காப்பாற்றுவதோடும் நமது கடமை முடிந்து விடுகிறது' என்று அவன் நினைக்கவேயில்லை. அது போல, விவசாயியினது உழைப்பின் பேரில்தான், விவசாயிகளல்லாதாருடைய வாழ்வு நடைபெறுகிறது. கிராமங்களிலிருந்து வருகிற பொருள்களைக் கொண்டுதான், நகர ஜனங்கள் ஆடம்பரமாக வாழ்க்கையை நடத்துகிறர்கள். எனவே, தங்களுடைய நலத்தை முன்னிட்டாவது, விவசாயிகளின் நலத்தை இவர்கள் கோர வேண்டிய அவசியமில்லையா?

ஈசுவர வருஷம் தை மாதம் முதல் தேதி (14-1-1938) வரும் பொங்கல் பண்டிகையன்று நாம் சங்கற்பித்துக் கொள்வோம்:—

'ஈசுவரா! விவசாயிகளுடைய வளைந்துபோயிருக்கிற முதுகெலும்பைச் சிறிது நிமிர்த்திக் கொடுக்க இன்று முதல் சங்கற்பம் செய்து கொள்கிறேம். அந்தச் சங்கற்பம் நிறைவேற வேண்டுமானல், அதற்கு முதல் தேவையாயிருப்பது தேச விடுதலை. அந்த விடுதலைக்கு—சுதந்திர தேவியின் தரிசனத்திற்கு—நாங்கள் அல்லும் பகலும் உழைப்போம். எங்களுடைய உழைப்புக்கு முட்டுக்கட்டையாக எது வந்தபோதிலும்—எங்களுடைய பாரம்பரிய தர்மமாகிற அஹிம்சா தர்மத்தினின்று பிறழாமல்—அதனை எதிர்த்துப் போராடுவோம். அடுத்து வரும் வெகுதான்ய வருஷம் தை மாதம் முதல் தேதியன்று கொண்டாட இருக்கின்ற பொங்கலின்போது, விவசாயியின் நிலைமை ஓர் அங்குலமாவது உயர்ந்திருக்கும் என்று சர்வபூத சாட்சியாய் உன் முன்னிலையில் தெரிவித்துக் கொள்கிறேம்.'

மனிதத் தன்மை

இப்பொழுது நமது நாட்டிலே அவசியம் தேவையா யிருப்பது எது? மனிதத் தன்மை. இது, அநேகமாக கிராம வாசிகளிடத்திலேயே காணப்படுகிறது. அவர்கள் வறுமையினால் அழுத்தப் பட்டிருந்த போதிலும், தங்கள் தேசத்தின் வருங்காலம் மிகவும் பிரகாசமானதா யிருக்கும் என்று அவர்கள் பூரணமாக நம்புகிறார்கள். இப்படி அவர்கள் நம்புவதற்குக் காரண மென்ன? அவர்களிடத்திலுள்ள மனிதத் தன்மை தான். ஆனால் படித்த வகுப்பார் என்று சொல்லப்படுவோரிடத்தில் இந்தத் தன்மையை நான் காண வில்லை. அவர்களுக்கு அதிகமான அறிவு இருக்கிறது. ஆனால் அந்நிய ஆதிக்கத்தின் சுமையானது, அவர்களுடைய ஆத்மாவையே தின்று விட்டிருக்கிறது.

இது பண்டித நேருவின் வாசகம். இந்தக் கருத்து, ஒரு சிலருக்குப் புதுமையா யிருக்கலாம். ஆனால் எவ்வளவு உண்மையா யிருக்கிறது?

உலக நிலை

மிருக பலம் இப்பொழுது ஆதிக்கம் பெற்றிருப்பதைப் போல் எப்பொழுதும் ஆதிக்கம் பெற்றிருக்க வில்லை. மனித சமூகத்தின் சமரஸத் தன்மையில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்த நமது தாய் தந்தையர்கள், 1937ம் வருஷம் நமது குழந்தைகளுக்குத் தற்காப்பு நிமித்தம் விஷ வாயு முக மூடிகளை அணிந்து கொள்ளும் முறைகளைக் கற்றுக் கொடுக்கிறோம் என்று கேட்டால் அவர்கள் நம்புவார்களா? அநேக இடங்களில் சுதந்திரம் என்பது அழிக்கப் பட்டிருக்கிறது. நீதி புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. சகிப்புத் தன்மையில்லாத குணம் சிறந்ததென்று சொல்லப் படுகிறது.

இவை ஸர் ஸாமியல் ஹோரின் வார்த்தைகள். தற்போதைய உலக நிலையை, இதைவிட அழகாக வேறு யாராவது சித்திரித்திருக்க முடியுமா? ஆனால், விளக்கெண்ணெயினால் ஓடிக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ராஜதந்திர யந்திரத்தின் ஒரு துருப்பிடித்த ஆணியாக இவர் பேசும் இந்த வார்த்தைகள், சொல்லுக்கும் செயலுக்கும் இடையே உள்ள அகலத்தை நன்றாக அளந்து காட்டுகின்றன வல்லவா? பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மற்றொரு மந்திரியாகிய ஸர் தாமஸ் இன்ஸ்கிப், லண்டனில் சமீபத்தில் பேசியபோது, இன்னும் நாலைந்து வருஷங்கள்வரை பிரிட்டன், தனது யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்வதை நிறுத்த முடியாது என்று கூறுகிறார். உலக நிலை இப்பொழுது சீர் கெட்டுப் போயிருப்பதற்குக் காரணம், ஒவ்வொரு தேசமும், ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பதேயாகும் என்று இது காலை இந்தியாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து கொண்டிருக்கும் லார்ட் லோதியன் கூறுகிறார். இவர் பிரிட்டிஷ் அரசாங்க யந்திரத்தினின்று (தற்காலிகமாக?) கழற்றி எறியப் பட்டிருக்கிற ஆணி. முன்னம் உதவி இந்தியா மந்திரியா யிருந்தவர். ஒரே சமயத்தில் வெவ்வேறு ராகத்தில் வெவ்வேறு சுருதியில் இரண்டு மூன்று பேர் பாடினால் எப்படி அநுபவிக்கிறோமோ அப்படித்தான் இவர்களுடைய பேச்சையும் நாம் அநுபவிக்க முடிகிறது.

ஒரு ரேகை

சென்னை அரசாங்கத்தாரால் அமுலுக்குக் கொண்டு வரப்பட இருக்கும் விவசாயிகளின் கடன் பளு நிவாரணச் சட்டம் விவசாயிகளின் பரிதாப நிலைமையில் ஒரு நம்பிக்கை ரேகை போல் இருக்கிறது. இதனைக் கண்டு, நிலச்சுவான்தார்களோ மற்ற லேவாதேவித் தொழில் செய்பவர்களோ மருள்வது சரியில்லை. இந்தச் சட்டம், விவசாயிகளுக்கு அதிகமான நன்மையை

உண்டு பண்ணிவிடாது என்று நினைக்கிறவர்கள் பலர் இருக்கின்றனர். விவசாயிகளுக்கு இப்பொழுது தேவையானது நிலவரி வஜா. நில விலை கூடுதலாகவும், அதிலிருந்து உற்பத்தியாகும் பொருள்களின் விலை ஏற்றமாகவும் இருந்த காலத்தில் இந்த நிலவரி உயர்வினால் விவசாயிகள் தங்கள் கஷ்டத்தை அதிகமாக உணரவில்லை. ஆனால், இப்பொழுது நில விலையும் அக விலையும் குறைந்து விட்டன. இன்னும் நிலவரி அதே உச்ச நிலையில் இருக்கிறது. இதனை இறக்க வேண்டுவது அவசியமில்லையா? சென்னை அரசாங்கத்தார் இது விஷயத்தில், அடுத்த வரவு செலவுத் திட்டத்தை ஆஜர் படுத்துவதற்கு முன்னேரேயே இப்பொழுது செலுத்தியுள்ள கவனத்தை விட அதிகமான கவனஞ் செலுத்துவர் என்று எதிர் பார்க்கிறோம்.

சுதந்திர நாள்

இந்தியாவின் லட்சியம், பூர்ண சுயராஜ்யம் என்று எட்டு வருஷங்களுக்கு முன்னாடியே, லாகூர் காங்கிரஸில் தீர்மானித்து விட்டோம். அந்தச் சங்கற்பத்தை பிரதி வருஷமும் புதுப்பித்துக் கொள்வதற்காக, ஜனவரி மாதம் 26ந் தேதியைக் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த வருஷமும் ஜனவரி மாதம் 26ந் தேதி இந்தத் திருநாள் எங்கும் கொண்டாடப் படும் என்பது நிச்சயம். ஆனால் சென்ற வருஷங்களைக் காட்டிலும் இந்த வருஷம் ஒரு விசேஷம் உண்டு. எந்தக் காங்கிரஸ் கட்சியினர் இந்தச் சுதந்திர சங்கற்பத்தைச் செய்து கொண்டனரோ, அவர்களே இப்பொழுது அரசாங்க நிருவாக பதவியிலிருக்கிறார்கள். அரசாங்க தோரணையிலேயே இந்தத் திருநாளை, இந்த வருஷம் கொண்டாடினால் எவ்வளவு பொருத்தமாயிருக்கும்!

வேண்டியதுதானே

பர்மாவுக்கென்று தனியான தேசியக் கொடி, தேசிய கீதம் முதலியன வெல்லாம் அமைக்க வேண்டுமென்று பிரதம மந்திரி டாக்டர் பாமா முயற்சி செய்து வருவதை நாம் முற்றிலும் ஆதரிக்கிறோம். எந்த நாடும், தனக்கென்று தேசீயச் சின்னங்களை ஏற்படுத்திக் கொள்ள உரிமையுண்டு. டாக்டர் பாமாவின் இந்த நல்ல முயற்சியில் எல்லாரும் ஒத்துழைத்து விரைவில் ஒரு முடிவுக்கு வருவார்களென்று எதிர் பார்க்கிறோம்.

பொருட் காட்சியில்

சென்னையில் நீல் சிலையை இருந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி பொருட் காட்சி சாலையில் வைத்ததற்காக நாம் எவ்வளவு சந்தோஷப் படுகிறோமோ அதைவிட அதிகமாகச் சந்தோஷப்படுவோம், வருஷந்தோறும் மிதவாத மகா நாடென்று சொல்லி சிறு கூட்ட மொன்றைக் கூட்டும் சில நபர்களை மேற்படி பொருட் காட்சியில் வைத்தால். ஸர் சிமன்லால் சேதால் வாட்டின் தலைமையில் 29, 30, 31–12–1937ல் கல்கத்தாவில் கூடிக் கலைந்த இந்தப் 'பழம்பசலிகளி'ன் கீச்சுக் கீச்சுச் சப்தத்தை யார் கேட்கப் போகிறார்கள்? கால வேகத்தோடு இசைந்து போக இவர்களால் முடியவில்லையானால், கண் மூடி மௌனியாயிருக்கலாமே. அரசாங்கத்தினிடம் இவர்களுக்கு முன்னிருந்த செல்வாக்குக் கூட இப்பொழுது இல்லை. விரைவில் இவர்கள் புத்திசாலிகளாக வேண்டுமென்று விரும்புகிறோம்.

நாகரிக மில்லையா ?

ஆப்ரிக்காவிலுள்ள தாங்கனிகா என்ற பிரதேசத்தில் ங்காஸா என்ற ஒரு சுதேசி, வைத்திய ஆராய்ச்சிக்காகத் தன்னைப் பலி கொடுத்துக் கொண்டான். தூக்க வியாதி சிலருக்கு ஏற்படுகிறதல்லவா? அதைப் பற்றிப் பரிசோதனை செய்ய சில வைத்தியர்களிடத்தில் தன்னை ஒப்புக் கொடுத்து விட்டான் ங்காஸா. இந்தத் தியாக புத்தி, அநாகரிகமான கறுப்பர்களிடத்திலே இருக்கிறதென்று எத்தனை வெண்மை நிறத்தவர் ஆச்சரியப் படுவரோ? நிறம் எதுவா யிருந்தா லென்ன? மனிதத் தன்மையுள்ளவர்கள் தான் நாகரிக புருஷர்கள் என்று மேனாட்டார் எப்பொழுது தெரிந்து கொள்ளப் போகிறார்களோ ?

தர்மாத்மாவின் தொண்டு

பண்டித மாளவியாவை 'தர்மாத்மா' என்று காந்தியடிகள் அழைப்பது வழக்கம். வித்யா தானஞ் செய்வதையே தமது வாழ்க்கையின் தர்மமாகக் கொண்டுள்ள பண்டிதரை 'தர்மாத்மா' வென்றல்லாது வேறு எவ்விதமாக அழைக்க முடியும்? இவர் காசி ஹிந்து சர்வ கலா சாலையை, ஒரு விசுவ வித்யாலயமாகச் செய்யும் பெருந் தொண்டில் ஈடுபட்டு, எப்பொழுதும் 'பிட்சா பாத்திரத்'தை ஏந்தி நிற்கிறார். இது வரை, இவருடைய பிட்சாபாத்திரத்தில் மன்னர்களும் மன்பதைகளும் சேர்ந்து தங்களாலியன்ற பொருளைச் சொரிந்திருக்கிறார்கள். ஆனால், லட்சியம் மிகவும் உயர்ந்திருப்பதால், இதற்கு இன்னும் பொருள் தேவையாயிருக்கிறதென்று அறிகிறோம். இதற்காக இந்தத் தள்ளாத வயதில் —பண்டிதருக்கு 25–12–1937–ல் 76 வயது பூர்த்தியடைந்தது இவர் எங்கெங்கேயோ சுற்றி யலைகிறார். சரஸ்வதி தேவியின் வாசஸ்தானமாகிய ஸ்ரீ காசியில், நமது பழம் பெரும் விசுவ வித்யாலயங்களான நாளந்தை, தட்ச சீலம் போல இந்த விசுவ வித்யாலயத்தையும் பக்குவமான நிலைமையில் அமைத்து விட்டால் தான் இவர் ஓய்வு கொள்வார். முகத்திலே ஞானக்களை வீச, முது கெலும்பு வளைந்து கொடுக்க, பிட்சாபாத்திரம் ஏந்தி நிற்கும் தர்மாத்மாவின் இருதயம் பூரிக்கும்படி இந்தியர்கள் இந்த காசி ஹிந்து சர்வ கலாசாலை நிதிக்கு நன்கொடையளிக்க வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இத்தலியின் போக்கு

சர்வ தேச சங்கத்திலிருந்து இத்தலி விலகிக் கொண்டு விட்டது. முழுகிப் போனது ஒன்று மில்லை. இதில் ஆச்சரியப்படவுந் தேவையில்லை. இத்தனை நாட்களாக, சர்வ தேச சங்கத்திலிருந்து கொண்டு அதன் வரம்புக்குட்பட்டு நடந்து கொண்டிருந்தால், இப்பொழுது விலகிக் கொண்டதே யென்று கொஞ்சமாவது விசனிக்கலாம். அல்லது, இத்தலியின் அவ்வப் பொழுதைய வரம்பு மீறிய செயல்களுக்கு சர்வதேச சங்கம் ஏதேனும் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருந்தாலும், "வாத்தியார் என்னமோ கண்டிப்புத்தான். பிள்ளை தான் முரடு' என்று நம்மை நாம் சமாதானப் படுத்திக் கொண்டிருக்கலாம். சர்வதேச சங்கத்தின் சக்தியைப் பொறுத்துத் தான், அதன் அங்கத்தினர்கள் அதனிடம் மதிப்பு வைத்திருக்கிறார்கள். இந்தச் சங்கத்தை 'சர்வதேச சங்கம் ஆடிக் கொண்

டிருக்கிற ஒரு கோயில். அங்கே யுள்ள மனிதர்கள், சமாதானத்திற்காக வேலை செய்யவில்லை. யுத்தத்திற்காக வேலை செய்கிறார்கள்' என்று முஸோலினி வருணிக்கிறான். ஆனால் இதே தொனியில், உலகத்தை யுத்தத்திற்கு அறை கூவி அழைப்பது போல் இவன் பேசுவது, மற்ற ஜன நாயக வல்லரசுகளின் வழ வழப்புக் கொள்கையைத்தான் நன்றாக வெளிப் படுத்துகிறது.

பின் விளைவு

இத்தலி, சர்வ தேச சங்கத்திலிருந்து விலகி விட்டதன் பயனாக, ஜெர்மனி, இத்தலி, ஜப்பான், ஆகிய மூன்று நாடுகளின் கூட்டுறவும் அதிக வலுவடையும். இந்த மூன்றும், சர்வ தேச சங்கத்தை எப்பொழுதுமே அலட்சியம் செய்து வந்திருக்கின்றன. இந்த மூன்றில் இரண்டுக்கு, முறையே அபிசீனியா மூலமாகவும் சீனா மூலமாகவும் கொஞ்சம் ஏகாதிபத்திய ஆசை அடங்கியிருக்கிறது. இதனால் தான், ஜெர்மனி, இழந்து போன தன் குடியேற்ற நாடுகளை மீண்டும் கொடுக்க வேண்டுமென்று உரத்த குரலில் கேட்க ஆரம்பித்திருக்கிறது. பிரிட்டனும் பிரான்சும் எவ்வளவு காலந்தான் எல்லாருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து கொண்டு வரப் போகின்றனவோ தெரியவில்லை. ஆனால் இரண்டு நாடுகளும் இப்பொழுது, அமெரிக்காவின் துணையை அதிகமாக எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த எதிர் பார்த்தல் ஏதேனும் நன்மையை விளைவிக்குமா? வெர்னான் பார்ட்லெட் கூறுவதைக் கேளுங்கள்.

'பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இப்பொழுது இரண்டு வித தவறுகளைச் செய்கின்றனர். தன் பொறுப்புக்களைக் கழித்து விட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு, ஐரோப்பிய வல்லரசுகளில் பெரும்பாலானவை உதவி செய்யும் என்று எதிர் பார்ப்பது முதல் தவறு. பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று இப்பொழுது அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் சொல்கிறாரென்றால் அது பிரிட்டிஷாரின் மீது வைத்த காதலால் அல்ல. இதை அறியாமலிருப்பது இரண்டாவது தவறு.'

இதை நாம் முற்றிலும் ஆதரிக்கிறோம்.

பொய் வதந்தியும் பிடிவாதமும்

ஸ்பெயினிலே நடைபெறும் போராட்டமானது, இடையிலே இருந்து பொய்ச் செய்திகளைப் பரப்பி விட்டு வேடிக்கை பார்க்கிற பேர் வழிகளால் இன்னும் நீடித்துக் கொண்டு வருகிறது. முடியிழந்து ஓடிப்போன போர்பன் வமிசத்து அல்பான்ஸோ மன்னனுடைய மூன்றாவது குமாரனை மறுபடியும் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க சில முயற்சிகள் செய்யப் படுகின்றன என்பதைக் கேட்டு, அரசாங்கக் கட்சியினரும், பிராங்கோ கட்சியினரும் பின் கண்ட அறிக்கையை முறையே வெளியிட்டிருக்கின்றனர்:—

<u>அரசாங்கக் கட்சி:</u>

சமாதானப் பேச்சுகள் நடைபெறுவதாகப் பொய் வதந்திகளைப் பரப்பிவிட்டு, துருப்புகளுக்கு மனச் சோர்வை யுண்டு பண்ணுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள்.

<u>பிராங்கோ கட்சி:</u>

வெற்றி கண்டுதான் என் அதி

காரத்தைச் செலுத்துவேன். அதற்கிடையில் நான் எந்த விதமான சமரஸப் பேச்சுகளுக்கும் இடங்கொடுக்க மாட்டேன். ஆயுதபலத்தைக் கொண்டு, நான் யுத்தத்தில் வெற்றி பெறுவேன். அரசாங்கத்தோடு எந்த விதமான சமரஸப் பேச்சும் நடத்த மாட்டேன்.

இந்த இரண்டு பேருடைய பிடிவாதத்திற்கிடையிலே, ஸ்பெயின் தேச ஜனங்கள், அந்தோ? மண்ணிலே புதைந்து போய்க் கொண்டு வருகிறார்கள்.

சாந்தியடையாத ஆத்மா

உலகத்திலே சமாதானம் நிலவ வேண்டுமென்று மகாநாடுகள் கூட்டியும், ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவித்தும் தொண்டு செய்து வந்த ப்ராங்க். பி. கெல்லாக் இறந்துபோய் விட்டார். பாவம்! சாந்தியடையாமலேதான் இவருடைய ஆத்மா துடித்துக்கொண் டிருக்கும் என்று நாம் அஞ்சுகிறோம். கெல்லாக் ஒப்பந்தம் இப்பொழுது எந்த தஸ்தவேஜுகளுடன் கட்டிப் போடப்பட் டிருக்கிறதோ!

அக்கிரமம்

ராய்ட்டர் செய்திகளை நாம் அப்படியே நம்புவதானால், ஜப்பானியர், நாங்கிங் நகரத்தைக் கைப்பற்றிய போது செய்த அட்டூழியங்களை நாம் கண்டிக்கவேண்டி யிருக்கிறது. வெற்றி கொண்டவர்கள் மீது வன்மந்தீர்ப்பது எந்த விதமான நாகரிகத் தன்மையுமாகாது. இதற்கெல்லாம் பரிகாரமாக 'மன்னிப்பு' என்ற ஒரு வார்த்தையைச் சொல்லி விடுவதனாலேயே இந்த அட்டூழியங்களெல்லாம் மறைந்து விடுமா? சீன—ஜப்பானிய யுத்தந் தொடங்கிய பிறகு, ஜப்பான், எதிர்பாராத பல தவறுகளைச் செய்திருக்கிறது. பிரிட்டிஷ் ஸ்தானிகரின் மோடாரின் மீது வெடிகுண்டு எறிந்ததுமுதல், 'பானே' என்ற அமெரிக்கக் கப்பலை முழுகடித்தது வரை நாம் பார்த்தோமானால், எல்லாவற்றிற்கும், 'வருந்துகிறோம்' என்று சம்பிரதாயமாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறது ஜப்பான். வல்லரசுகளும் இதனை ஏற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இதற்கு வேறு பரிகாரம் இல்லையா?

அதிகப் பிரசங்கித்தனம்

மத்திய மாகாண அரசாங்கத்துப் பிரதம காரியதரிசி ஸ்ரீ ப்ரெட், தன் சொந்த ஹோதாவில் ஜில்லா அதிகாரிகளுக்கு எழுதிய அதிகப் பிரசங்கத்தனமான கடிதத்திற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் என்றும் இந்தக் கடிதம் வாபீஸ் பெற்றுக் கொள்ளப் பட்டதென்றும் மேற்படி மாகாண சட்ட சபையில் பிரதம மந்திரி தெரிவித்திருக்கிறார். இந்த மாதிரியான சம்பவங்கள் இனி நேரிடாதென்று நம்புகிறோம். அரசாங்க நிரந்தர உத்தியோகஸ்தர்களுக்கு அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரத்தான் உரிமையுண்டே தவிர, அரசாங்கத்தின்கொள்கையோ வேலைத் திட்டமோ இப்படித் தான் இருக்க வேண்டுமென்று நிர்ணயித்துச் சொல்ல அதிகாரமில்லை. மற்ற மாகாணங்களிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு, ஸ்ரீ ப்ரெட்டின் உதாரணம், ஓர் எச்சரிக்கையா யிருக்கட்டும்.

உங்கள் அபிப்பிராய மென்ன?

அடுத்துவரும் (ஹரிபுரா) காங்கிரஸ் தலைவர், தேசத்தைச் சுயராஜ்ய லட்சியத்திற்கு அழைத்துச் செல்ல என்னென்ன மாதிரி வேலை செய்ய வேண்டும்?

அவருக்கு ஒரு வேலைத் திட்டம் வகுத்துக் கொடுங்கள்.

1. இது சம்பந்தமாக வரும் கட்டுரைகளில் எது சிறந்ததாயிருக்கிறதோ, அது 'ஜோதி'யின் 1938ம் வருஷத்து மார்ச் மாத இதழில்—அதாவது காங்கிரஸ் விசேஷ கதிரில்—பாராட்டப்பெற்ற கட்டுரை யென்று வெளியிடப்பெறும்.

2. அந்தக்கட்டுரை எழுதியவருக்கு 'ஜோதி' அந்த மார்ச் மாதம் முதல், ஒரு வருஷத்திற்கு இலவசமாக அனுப்பப்பெறும்.

3. கட்டுரை எளிய நடையில், பல புதிய கருத்துக்கள் கொண்டதாய், அநுஷ்டானத்தில் கொண்டுவரக் கூடிய அமிசங்கள் அடங்கியதாய் இருக்கவேண்டும். கையெழுத்துப் பிரதி பூல்ஸ்காப் அளவு 12 பக்கங்களுக்கு அதிகம்போகக்கூடாது.

4, கட்டுரையைப் பொறுத்த எல்லா உரிமைகளும் 'ஜோதி' பத்திரிகாலயத்தைச் சேர்ந்தது.

5. கட்டுரைகள், 1938ம் வருஷம் பிப்ரவரி மாதம் 15ஆந் தேதிக்குள் எமது காரியாலயத்திற்குக் கிடைக்குமாறு அனுப்பப் பெற வேண்டும்.

6. சன்மானிக்கப் பெறும் கட்டுரை தவிர, மற்றக் கட்டுரைகளில் பிரசுரிப்பதற்குத் தகுதி யுடையன 'ஜோதி'யில் இடம் பெறும்.

7. பிரசுரிக்கப் பெறுத கட்டுரைகள் திருப்பி அனுப்பப் படமாட்டா.

—ஆசிரியர்.

புதிய தம்பதிகள்

எகிப்து மன்னர் பரூக்

அவரை மணந்து கொள்ளப் போகும் பரீதா ஜுல்பிகர்

எகிப்து தேசத்தின் தற்போதைய அரசர் பரூக் மன்னருக்கும், எகிப்திலுள்ள அலெக்ஸாந்திரியா ஹைகோர்ட்டின் நீதிபதியாகிய யூசூப் பே ஜுல்பிகர் என்பவருடைய குமாரி ஸ்ரீமதி பரீதா ஜுல்பிகருக்கும் சமீபத்தில் விவாகம் நடக்கப் போகிறது. பரூக் மன்னருக்கு இப்பொழுது 18 வயது தான் ஆகிறது. 11-2-1920ல் பிறந்தவர். 1937ம் வருஷந்தான் பட்டத்தை ஏற்றுக் கொண்டார். இங்கிலாந்திலே படித்துத் தேர்ச்சி பெற்றவர். அரசாங்கக் காரியங்களைத் தாமே நேரில் கவனித்து முடிவு செய்வதில் நம்பிக்கையுடையவர். சமீபத்தில் கூட, பிரதம மந்திரி நஹாஸ் பாஷாவுக்கும் இவருக்கும் சில அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. ஜனங்களுடைய பூரண அன்பை பரூக் மன்னர் பெற்றிருக்கிறார்.

எகிப்து தேசம் ஆப்ரிக்கா கண்டத்தின் வட பாகத்திலுள்ள ஒரு புராதன நாடு. இந்நாட்டில் ஓடும் நீல நதியினால் இதற்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது. எகிப்தின் நில விஸ்தீரணம் 12,431 சதுர மைல்; உத்தேச ஜனத்தொகை 14,168,756. எகிப்து, அனேக ஆண்டுகளாக துருக்கியின் ஆதீனத்தில் இருந்தது. கி. பி. 1798ம் வருஷம் முதற் கொண்டு இங்கே பிரிட்டிஷாருடைய செல்வாக்கு வளர்ந்து வர ஆரம்பித்தது. 1904ம் வருஷத்தில், பிரிட்டிஷ் ஆதிக்கம் இங்கே சட்ட பூர்வமாக அங்கீ

கரிக்கப் பட்டது. ஆனால் இதே சமயத்தில் தேசீய உணர்ச்சியும் தலையெடுக்க ஆரம்பித்தது. எகிப்து, பூரண சுதந்திர மடைய வேண்டுமென்ற கிளர்ச்சி நாளுக்கு நாள் வலுத்து வந்தது. ஜாக்லுல் பாஷா, இந்தக் கிளர்ச்சிக்குத் தலைமை பூண்டு தேசியக் கட்சியைத் திறம் பட நடத்தி வந்தான். அடக்கு முறைகள் கையாளப் பட்டன. கலகம் உண்டாயிற்று. பின்னர் 1922ம் வருஷம் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப் பட்டு, புவாத் மன்னர், எகிப்து சிங்காதனத்தில் அமர்த்தப் பட்டார். ஆனாலும் பிரிட்டிஷாருடைய ஆதிக்கம் இருந்து கொண்டிருந்தது. பின்னர் 1930 ம் வருஷம் பல கிளர்ச்சிகளின் பயனாக எகிப்து பூரண சுதந்திர நாடாக ஏற்றுக் கொள்ளப் பட்டு, அரசருக்கு பரம்பரை பாத்தியமும் அளிக்கப் பட்டது. சர்வ தேச சங்கத்திலும் எகிப்துக்குத் தனி ஸ்தானம் கிடைத்தது. இவ்வளவெல்லாம் இருந்த போதிலும் எகிப்தில் பிரிட்டிஷார், பாதுகாப்பு முதலிய சில விசேஷ பொறுப்புக்களை மட்டும் தங்களுக்குள் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

கண்ணீர் மாலை

(மீராபாய்)

தோழீ! உலக மனைத்தும் உறங்குவது காணாய்.

தமியளாய் நானும் தவிக்கிறேன் விழித்து.

ஏன் போலொருத்தி ஆனந்த பவனத்திலமர்ந்து

முத்தி னலாய மாலையோ முடித்து வருகிறள்;

ஆனல் வேறொருத்தியோ கண்ணீர் மாலையைத் தொடுத்து நிற்கிறள்.

நானோ, விண்மீன் எண்ணி இரவு முழுவதும் கழித்தே வருகிறேன்.

ஆனந்த மணி அடிப்பதுதான் எப்போழ்து?

மீராவின் நாயகன் கிரிதரன.

அவனை அடைந்தால்தான் என்துயரெல்லாம் ஆறுதலடையும்.

ஜெர்மனியில் அறுவடைத் திருநாள்

—டாக்டர் எச். பெய்தான்
Dr. H. Beythan

இவர், ஜெர்மனியிலுள்ள பேர்லின் சர்வ கலாசாலையில் தமிழாசிரியர். 'ஹிட்லர் ஆர்?' என்ற பெயருள்ள ஒரு தமிழ் நூலை வெளியிட்டிருக்கிருர். ஜெர்மனியைப் பற்றிப் பிரசாரஞ் செய்வதில் மகா கெட்டிக்காரர். இந்தக் கட்டுரையில், ஜெர்மனியில் வருஷந் தோறும் கொண்டாடப் பட்டு வரும் அறுவடைத் திருநாளைப் பற்றி எழுதி யிருக்கிருர். இதனையே, பொங்கல் என்ற பெயரால் நாம் கொண்டாடி வருகிறோம்.

'அறுவடையும் அறுவடைக் கொண்டாட்டமும் பயிர் ஜீவனஞ் செய்கிறவனுக்குத்தான் சொந்தமானது'. பட்டணங்களிலே வசிக்கிறவர்கள் இப்படியாக எண்ணலாம். 'பயிர் வளர்ந்தாலென்ன, அல்லது நாசமாய்ப் போனாலென்ன, பட்டணங்களிலே வசிக்கிற நாம், ரொட்டிக் கடைக்காரனிடத்திலோ, அல்லது பால்காரனிடத்திலோ போய், பணத்தைக் கொடுத்துக் கேட்டால் நமக்கு வேண்டியதைக் கொடுக்கிருன். நாம் இந்தக் கொண்டாட்டத்தைக் கொண்டாடுவானேன்' என்று, அழகாக உடுத்திக் கொண்டிருக்கிற ஆண் பிள்ளைகளும், கொழுத்திருக்கிற பெண் பிள்ளைகளும் நகரத்திலே யிருந்து கொண்டு நினைக்கலாம். இந்தப் பெண் பிள்ளைகள், கோதுமை மாவை (பவுடராக) முகத்திலே பூசிக் கொள்கிருர்கள். இந்த மாவு, பசித்திருக்கிற ஒரு மனிதனுடைய அல்லது குழந்தையினுடைய வயிற்றுக்குள்ளே போனாலும் பசி தீரும். 'ஆடு மாடுகளை வளர்ப்பதும், எருவைக் கையால் தொடுவதும் எங்கள் கவலை யில்லை. நாங்களெல்லாம் நாகரிக புருஷர்கள்' என்று சொல்லிக் கொண்டிருக்கிற பேர்வழிகள், எந்தத் தேசத்திலும் இருக்கவே இருப்பார்கள். இப்படிப் பட்டவர்கள் நேற்றைய ஜெர்மனியில் இருந்தார்கள்; இன்றைய ஜெர்மனியில் இல்லை.

ஜெர்மனியில், இந்த அறுவடைக் கொண்டாட்டம் ஒரு புதிய விஷயம். தேசம் எல்லாவற்றிற்கும் இது விஷயமா யிருக்கிறது. இதனை, கிராமங்களிலே மட்டுமில்லை, சிறிய ஊர்களிலேயும் பெரிய நகரங்களிலேயும் கொண்டாடுகிருர்கள். இந்தக் கொண்டாட்ட தினத்தில், பேர்லின் நகரத் தெருக்களில் கொடிகள் பறப்பதைப் பார்க்கலாம். கிராமப் பெண்கள் மட்டும் தங்கள் வீட்டுக் கதவுகளின் முன் பக்கத்தில் புஷ்பங்களைக் கட்டித் தொங்க விடுவார்களென்று நீங்கள் நினைக்க வேண்டாம். பேர்லின் போன்ற எல்லாப் பட்டணங்களிலும், கடைகள், ஆபீஸ்கள் ஆகியவைகளில் கூட அலங்காரம் செய்து வைப்பார்கள். ஓடுவதற்குச் சக்தி யில்லாது போன மோடார் வண்டிகளை பாகம் பாகமாகப்பிரித்து விற்கிற ஒரு பழைய இரும்பு வியாபாரியின் கடையிலும் பூக்கள் தொங்க விட்டு அழகு பண்ணியிருப்பான். தெருவிலே போகிற சில்லரையான ஜனங்கள்கூட, தங்கள் பொத்தான் சந்துகளில் ஒரு சின்ன புஷ்பக் கொத்தை வைத்துக் கொண்டிருப்பார்கள். இந்தப் பூங்கொத்து, தோட்டத்திலே உண்டாகிற தல்ல.

வேலை யில்லாமல் இருக்கிறவர்கள் இந்தமாதிரியான போலி(செயற்கைப்) புஷ்பங்களைத் தயார் செய்து ஒவ்வொன்றும் இரண்டணாவுக்கு விற்கத் திட்டம் செய்திருக்கிறது. இதிலிருந்து கிடைக்கிற மிச்சப் பணம், உதவி யில்லாதவர்களுக்கு உதவி செய்யப் படுகிறது. பாண்டு வாத்தியம் அடித்துக் கொண்டு, ஒரே மாதிரியான உடுப்புக்களையோ, சாதாரணமான துணிகளையோ போட்டுக் கொண்டு, ஜனங்கள், ஒரு கூட்டம் நடைபெறுகிற இடத்திற்குப் போவார்கள். அங்கேதான், இந்தக் கொண்டாட்டத்தை எல்லாரும் ஒத்தவர்களா யிருந்து நடத்துவார்கள்.

இது பூராவும் புதிய சங்கதி. இது ஆடோல்ப் ஹிட்லரின் வேலை. அவர், தன்னுடைய எண்ணம், வார்த்தை இவைகளின் பலத்தினால், சமூகத்தின் எல்லா வகுப்புகளிடத்திலேயும் ஒற்றுமையான எண்ணம் தோற்ற வேண்டுமென்று உழைக்கிறார். சமூகத்திலே வித்தியாசங்களே இருக்கக் கூடாது. ஒரே தேச சமூகமாகத் தான் இருக்க வேண்டும். இதுதான் அவர் நினைப்பது. இந்த அறுவடை உற்சவம், பாட்டு, நாட்டியம் முதலியவைகளோடு கொண்டாடப் பட்டாலும், உற்சவத்திற் கெல்லாம் மத்தியமா யிருப்பவர் ஆடோல்ப் ஹிட்லர் தான். இந்த வருஷம் 1937-ம்வருஷம் (அக்டோபர்— நவம்பர் மாதம்) 700,000 பயிர் ஜீவனஞ் சேய்வோர் ஒரு சிறிய மலையின் கீழ் கூடி யிருந்தார்கள். அங்கே ஹிட்லர் பேசினார். இந்த ஏழு லட்சம் பேரும் தங்கள் செலவிலே சுயேச்சையாக வந்தவர்கள். தங்களுடைய தலைவருடைய பேச்சைக் கேட்க இவர்களுக்கு ஆசை. எந்தத் தேசத்தின் தலைவரைச்சுற்றி இந்த மாதிரி ஜனங்கள் சூழ்ந்திருக்கிறார்கள்?

ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்த பிற்பாடு, பயிர் ஜீவனஞ் செய்வோர்களுடைய நிலைமை மாறுதலடைந்து விட்டது. ஹிட்லருக்கு முன்னடி தேசத்தை அரசாட்சி செய்துகொண்டிருந்த ஸோஷலிஸ்டுகளும் பாதிரிமார்களும்குடியானவர்களுடைய அழிவைச்செய்வதில் ஜெயித்து விட்டார்கள். ஆனால் விவசாயிகள் தான், தேசத்து முது கெலும்பு என்றும், அவர்களைக் காப்பாற்றுவது தேசத்தைக்காப்பாற்றுவதென்றும் ஹிட்லர்கண்டுபிடித்துச் சொன்னார். இந்த வருஷம் அவர் பேசினதிலே, தான் (அதிகார) கடிவாளத்தைக் கையிலே எடுத்துக் கொண்டபோது என்னென்ன கஷ்டங்கள் பட வேண்டியிருந்ததென்பதைச் சொன்னார். 'நாங்கள் அரசாட்சியை ஏற்றுக் கொள்கிற போது ஆழமான கவலைகளும் பயங்களும் எங்களைச் சூழ்ந்திருந்தன. எல்லாராஜாங்க பொக்கிஷப்பெட்டிகளும்காலியாகவே இருந்தன. ஆனாலும்நாங்கள்முற்போக்கில் போனோம். முதல் வருஷத்திலேயே, கஷ்டப் படுகிறவர்களுக்கு உதவி செய்ய 3500 லட்சம் மார்க்குகள் இலவச பணம் வசூல் செய்தோம். * * * இங்கே ஏழு லட்சம் குடியானவர்கள் கூடியிருப்பது, நம்முடைய ஜனங்கள், கடவுளால் கொடுக்கப் பட்ட நிலத்தையும் பழையகாலம் முதல் நிலத்தைப் பயிரிடுகிறவர்களையுமே நம்பி யிருக்கிறார்களென்று காட்டுவதற்கே யாகும்' என்று அவர் சொன்னார்.

ஜெர்மனியில் சாதாரண ஏழை ஜனங்களும் வாங்கி உபயோகிக்கக் கூடிய மாதிரி 750 ரூபாய் விலையில் மோட்டார் வண்டிகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

தேசாபிமானம்

—"பாலபோதகர்"

அம்பலத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே!'
என்ற பாடலின் சந்தம்.

நாட்டுக்கலை போற்றவேண்டும் தம்பிமாரே!—நம்
நாட்டுமொழி கற்கவேண்டும் தம்பிமாரே! 1.

நாட்டுள்பகை கூடாது தம்பிமாரே!—அயல்
நாட்டுப்பகை தானுமாகா தம்பிமாரே! 2.

நாட்டுப்பொருள் மீதினிலே தம்பிமாரே!—நாம்
நாட்டமிகக் கொள்ள வேண்டும் தம்பிமாரே 3.

நாட்டுப்பொருள் தானிருக்கத் தம்பிமாரே!—வேறு
நாட்டுப்பொருள் நாடல்நன்றோ தம்பிமாரே? 4.

நாடும்பொருள் நாட்டிலின்றேல் தம்பிமாரே!—வேறு
நாட்டுப்பொருள் நாடல்நன்று தம்பிமாரே! 5.

நாடியவை போலவேதான் தம்பிமாரே!—நாமும்
கூடிச்செய்ய வேண்டுமடா தம்பிமாரே! 6.

உட்பகைகொள் ளொணாது தம்பிமாரே!—நாமும்
ஒற்றுமையாய் வாழவேண்டும் தம்பிமாரே! 7.

பேதாபேதம் பேசிநாமும் தம்பிமாரே!—நம்முள்
வாதம்பல செய்யொணாது தம்பிமாரே! 8.

பெரியர்சொல்லும் வழிநின்று தம்பிமாரே!—நாமும்
பெருமைமிகப் பெறவேண்டும் தம்பிமாரே! 9.

தேசநலத் திருப்பணியில் தம்பிமாரே!—நாமும்
நேசமிகக் கொள்ளவேண்டும் தம்பிமாரே! 10.

உலகத்தில் என்ன நடக்கிறது?



நடுக்கடலிலே தத்தளிக்கும் ஒரு பிரயாணி, கப்பலைக் கண்டால் எவ்வளவு சந்தோஷப்படுவானோ அவ்வளவு சந்தோஷத்தை சென்னை மாகாண அரசாங்கத்தார் கொண்டு வந்திருக்கும் கடன் நிவாரண மசோதாவைக் கண்டு விவசாயி சந்தோஷப்படுகிறான்.

இப்படித்தான் நாகரிகம் வளர்ச்சியடையப் போகிறதா?

வருங்கால இளைஞன்.
ஆயுதச் சுமை

வருங்கால சமாதான தேவதை.
என்ன ஒய்யாரம்!



வருங்காலப்படிப்பாளி. சன்னதை எடுத்துக் கொண்டு வேலைக்கு வீதி தோறும் அலைய வேண்டியதுதான்.



புதிய உறவு

இத்தலி சர்வதேச சங்கத்திலிருந்து விலகியதற்கும் ஜெர்மனியும் ஜப்பானும் இத்தலியுடன் கொண்டுள்ள உறவுக்கும் ஒரு சம்பந்தமுமில்லையென்று முஸோலினி கூறுகிறுன்.
'எங்கப்பா குதிருக்குள் இல்லை'

இந்த மூன்று பேரும் சேர்ந்து சாகுபடி செய்யப்போவது இதுதாளு?

இங்கே இருக்கவேண்டிய பிராங்கோ

?

புதுவை ஆனந்த ரங்க பிள்ளை

——எஸ். சோமசுந்தர தேசிகர்

(இலக்கண விளக்க பரம்பரை ஆசிரியர்)

புதுவை ஆனந்த ரங்க பிள்ளையவர்களைப் பற்றிப்பல புதியவிஷயங்களை ஸ்ரீமான் தேசிகர் இந்தக் கட்டுரையில் தெரிவிக்கிறார். பிரிட்டிஷ் ராஜாங்கம் தென்னிந்தியாவில் ஸ்தாபிதமான காலத்தில், பல தமிழ்ப் பெரியார்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களுடைய அற்புதமான வாழ்க்கை வரலாறுகள் நமக்குப் புதைபொருள்கள் போலிருக்கின்றன. இவைகளை 'ஜோதி'யின் மூலமாக வெளிக் கொணரும் ஸ்ரீமான் தேசிகருக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனந்த ரங்க பிள்ளையவர்களின் படத்தை, முகப்பிலும், இந்தக் கட்டுரை நடுவிலும் வெளியிட்டிருக்கிறோம். சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன், தென்னிந்தியாவிலிருந்த பிரபல தமிழர்களின் உடை முதலியவற்றை இதைக் கொண்டு நாம் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். பிள்ளையவர்களின் படத்தை, இதுவரை யாரும் வெளியிடவில்லை யென்று கருதுகிறோம். அந்தப் பெருமையை 'ஜோதி'க்கு அளித்த ஸ்ரீ தேசிகருக்கு நமது நன்றி.

ஆனந்தரங்க பிள்ளை அப்பொழுது ஆண்ட ஆர்க்காட்டு நவாப்பினாலும் பிரஞ்சு அரசாங்கத்தாராலும் மதிக்கப்பட்டவர். அதனாலேயே வஜீர் (Vizier) வஜாரதராயர் என்ற பட்டம் நவாப்பினாலும், இராயர் என்ற பட்டம் பிரஞ்சு அரசாங்கத்தாராலும் கொடுக்கப்பட்டன. மேலும் இவர் பதினெண் வகை விருதுகளுடனும் செல்ல உத்தரவு பெற்றவர். முற்காலத்திலே குடை, கவரி முதலிய விருதுகளும் பல்லக்கில் ஏறிச் செல்வதும் அரசாங்க உத்தரவின்றி நடைபெறாத காரியம். ஆனந்தரங்க பிள்ளை இவற்றையெல்லாம் அனுபவித்தவர் என்பது பின் வரும் செய்யுளால் விளங்கும் :—

சோதிமதிக் குடைகவரி யால
வட்டம்
துவசமவு தாகிரிபே ரிகைகள்
சட்டம்
கோதில்பசுஞ் சிவிகையம் பாரித்
திட்டம்
குமாரபா ணங்கள்வஜீ ரென்னும்
பட்டம்
நீதியோடு நிஜாமலிகான் அளிக்கப்
பெற்று
நிலைகொளுமா னந்தரங்க ராயர்
வாழ்வே
மேதினியோர் துதிக்கும்வஜா
ரத ராய
விஜயதிரு வேங்கடமா லாடீ
ரூசல்—

என்பது அது.

இவர்மேல் பாடிய கோவை நூலின் கீழ்

'வஜாரத விஜாயாநந்தரங்கே பதே பிரஞ்சு ராஜந்ய துர்கிய சாசனம் லோகசாசனம்' என்றுங் காணப்படுகிறது. ஆகவே இவருக்கு வஜீர், வஜாரதராயர், ஆனந்தரங்க ராயர் என்ற பட்டங்கள் வழங்கி வந்தன வென்பது தெளிவு.

இவருக்கு அன்னுசாமி என்றும் திருவேங்கடம் என்றும் இரண்டு பிள்ளைகள் இருந்தனர்.

ஆனந்தரங்கபிள்ளை பல புலவர்களை ஆதரித்தவராவர். அக்காலத்திலே பேரரச ரற்றுப் போகவே கொடை வள்ளல்களாயிருந்த புரவலர் பலரை

யடுத்து வாழ்ந்த புலவர் பலராவர். இவரால் ஆதரிக்கப்பட்ட புலவருள் இராம கவிராயர் என்பவர் ஒருவர். இவர் தொண்டை நாட்டினர். பொன்னேரியைச் சார்ந்த திருவாய்ப்பாடி என்ற ஊருக்கு ஸ்தலபுராணம் பாடியவர். சித்தம் பாகையிலிருந்த பெரியாரான குமாரசுவாமி யென்பார் மேல் சாரப்பிரபந்தம் என்ற பிரபந்தம் பாடியவர். இவர் ஆனந்தரங்கபிள்ளையைக் காணச் சென்றிருந்தார். ஆனந்தரங்க பிள்ளை, புலவர்களைக் கண்டவுடன் பரிசில் கொடுத்து அனுப்பிவிடும் வழக்கமுடையவரன்று. அதனாலே இராம கவிராயரை அனுப்பாது வைத்துக் கொண்டிருந்தார். இவர் ஊர் செல்ல வேண்டுமென்ற குறிப்பைக் கண்டபோது 'ஏன் பறக்கிறீர்' என்று பிள்ளை கேட்க, அவர்.

கொக்குப் பறக்கும் புறாப் பறக்கும்
 குருவி பறக்குங் குயில் பறக்கும்
நக்குப் பொறுக்கிகளும் பறப்பர்
 நானேன் பறப்பேன்நராதிபனே
திக்கு விசயஞ் செலுத்தியுயர் செங்
 கோனடாத்து மரங்கானின்
பக்க மிருக்க வொருநாளும்
 பறவேன் பறவேன் பறவேனே

என்று பாடி உவப்பித்தார்.

பிறிதொரு சமயத்தில் பரதநாட்டியத்தில் வல்லவளான கணிகை யொருத்தியின் சதிர்க்கச்சேரி நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது நமது கவிராயர் அவளது ஆடலில் கண்ணுங் கருத்துமா யிருந்தார். புலவர் பெருமகன் நாட்டியத்தின் திறனை யனுபவித்துக்கொண் டிருப்பதைக் கண்ட ஆனந்த ரங்கபிள்ளை புலவரைப் பரிகசிக்க நினைத்து 'கவிராயருக்குக் கணிகைமேற் காதல் போலு' மென்றனர். புலவர்சிகாமணி அக்கணமே

மூவொன்ப தென்பதிலோர்
 நாளில்லை மொய்வனத்தில்
காவுங் கனிமிருகந்தானில்லை—நேரே
வளையா நடையில்லை வாரினுக
 விம்மும்
முலையாளையான் முயங்குதற்கு.

என்றுவிடை யிறுத்தார். இவ்விடையைக் கேட்ட புரவலர் மிக்க மகிழ்ச்சி கொண்டனர். பின்னொருக்கால் இவரைக் குறித்துப் புலவர் பாடிய செய்யுளொன்று வருமாறு:-

கார்படைத்த கரதலத்தான் றுரை
 திருவேங் கடமளித்த கன்னு
 [வெங்கும்
பேர்படைத்த வானந்த ரங்கமகி
 பாலாநின் பிரம்பூர் நாட்டில்
நேரிழைக்கு விழியேழு முலையாறு
 காலைந்து நெற்றி நான்கு
பாரிடத்தி விப்புதுமை கண்டுவந்தே
 னிதன்பயனைப் பகர்ந்திடாயே.

பாண்டி நாட்டிலுள்ள பரமக்குடியென்னும் பரம்பைக்குடிக்கடுத்த எமனேச்சுரத்திலே ஒரு மகமதிய உயர் குடியிற் பிறந்த சவாதுப் புலவரும் ஆனந்த ரங்க பிள்ளையால் ஆதரிக்கப் பட்டவர். புலவர் இராமநாதபுரம் சமஸ்தான வித்வானுவர். அவர்

பானுகிர ணம்பார்க்கும் பங்கே
 ருக நிலவு
கானும்வரப் பார்க்குஞ்
 சகோரங்கள்—வானமரு
மையைப்பார்க்கும் மயில்கண்
 மாவிசபா நந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவோர்கள்.

என்றும்,

பாலையிலாள் பின்னங்காற் பஞ்சுளி
 யென்றே சுளிப்பாள்
பாலையிலாள் பின்னென் படுவா
 ளோ—சோலையிலே
ஆடு மயிற் பிரம்பூ ரானந்த ரங்க
 துரை

நாடுதனி லென்னினமின் னுள்.
என்று பாடிச் சன்மானம் பெற்றார்.

தொண்டை நாட்டிலுள்ள அமரம் பேடு என்ற ஊரிலே ஒரு புலவர் இருந்தார். அவருடைய பெயர் மதுர கவிராயர் என்பர். அவர் மதுரம் பொருந்தப் பாடுபவர். அவர் திருக்கே தீச்சுர நொண்டி என்ற நூல் பாடிய வர். அவர் நமது பிள்ளையவர்களைக் காண வந்தார். அவரைக் கண்ட போது

உலங்கொண்ட மணிப்புயனே
பிரம்பூரானந்தரங்கா
வுன்பாற் செல்ல

புதுவை ஆனந்தரங்க பிள்ளை

வலங் கொண்ட கருடனையா மிடங் கண்டோ
மெழினரையான் வலத்தே கண்டோம்
பொலங் கொண்ட மணிமாட மீமி சையிற்
புயறவழும் புதுவை யென்னும்
தலங்கண்டோ நினது நகை முகங் கண்டோ
மினி வேண்டுந்தனங் கண்டோமே.

என்று பாடினர். இப்புலவர் ஆனந்த ரங்க பிள்ளையோடு நீண்ட நாள் இருந்தன ரென்று அறிய அனேக ஆதாரங்கள் உண்டு. ஆனந்த ரங்க பிள்ளைக்கும் முதற் பிள்ளை பிறந்த போதும் இவர் இருந்து அதனைச் சிறப்பித்துள்ளார். இரண்டாவது பிள்ளை பிறந்து வளர்ந்து மணமாகிய பின் அவனுக்குப் பிள்ளை பிறந்து உடனிருந்து பாடியுள்ளார். ஆகவே பிள்ளை புலவர்களை யாதரித்த பிற்கால வள்ளலாவர்.

நீண்டநாள் ஆனந்த ரங்கபிள்ளையால் ஆதரிக்கப்பட்ட மற்றொரு புலவர் தியாகராஜ தேசிகர் என்பவர். இலக்கண விளக்கம், நல்லூர்ப் புராணம் இயற்றிய வைத்தியநாத தேசிகரின் இரண்டாவது புதல்வர். 'அந்த நாளிலே கலாபனையாக விருந்தபடியாலே அவர் சூனம்பேட்டைவிட்டு புதுவைவந்து ஆனந்தரங்கபிள்ளை மேல் கோவையும் வல்லிபுரம் அந்தாதியும்

செய்ததுமன்றி உழலூர் வேலப்ப முதலியாருக்குச் சிவஞான சித்தியார் முதலான சாஸ்திர பாடங்களும் சொல்லி வந்தார்' என்று அவர்களது வமிசாவளி கூறும். 'திருவாரூரிலிருக்கும் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத தேசிகர் குமாரர் தியாகராய தேசிகர் சித்தார்த்தி வரு ஆவணி மீ 15உ சுக்கிரவார தினம் பிரம்பூர் மகா-ா-ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் வஜாரத விஜய வாநந்த ரங்கபிள்ளை மேற் கோவைப் பிரபந்தம்பாட, யுவ வரு ஆவணி மீ 3உ நிறைவேறி அரங்கேற்றுபடி செய்தது' என்று பிள்ளையவர்கள் வீட்டிலிருந்த கோவைப் பிரதியின் முகப்பேட்டு வரிகள் முற்கூறிய செய்தியை வலியுறுத்தும். இந்தக் கோவை பாடிமுடிய பதினைாண்டுகள் சென்றன வென்பதும் அந்தப் பதினாண்டும் புலவர் பெருமான் பிள்ளையால் போற்றப்பட்டு வந்தாரென்பதும நன்கு விளங்கும். இச் செய்திகளாலே பிள்ளையவர்கள் புலவர்களை வெகுவாக மதித்து அவர்களுக்கு வேண்டுவன செய்து வந்தார் என்பது நன்கு விளங்கும்.

நல்லோரிடத்தும் பொல்லாரும் தீயோரும் கூடியிருப்பது இயல்பான காரியம். அஃதேபோன்றுஆனந்தரங்க பிள்ளைக்கும் முத்தைய பிள்ளையென்ற ஒரு காரிய நிர்வாகியிருந்தார். இவர் ஆவனவற்றை யாகாமலும், ஆகாத காரியங்களை வேளையறிந்து செய்து முடித்தும் வந்தார். இதனைக் கண்ட தியாகராய தேசிகர்

பத்தைய னென்னு தமிழ்ப் பாப்
புலவர் மெச்சவரும்
முத்தையா கோவை மொழி விளங்க—வித்தகநல்
லானந்த ரங்கைய னுக்குநீ யன்பு
வைத்தத்
தானந்த ரங்க முறச் சாற்று.

என்று வேண்டிக் கொண்டார். கோவையும் விரைவில் அரங்கேறியது. கோவையை நன்கு மதித்த ஆநந்தரங்க பிள்ளையும் வேண்டிய பரிசில்களை யளித்துப் புலவர் சிகாமணியை மனமகிழச் செய்தார். இச்செய்கையைப் பாவலரும்

'இருகோவை யொத்த புயத் தே
ந்து முல்லைத்
தொடையலென்று மிலங்கு
நின்சீர்க்
கொருகோவை யாம்பாட வெண்
கோவை
வெண்குடைக்கீ ழுறநீ பெற்றாய்
பொரு கோவைத் தழுவு பிரம்
பூர் திருவேங்கட தீரன்
புதல்வா நாளும்
வருகோவைப் பதமலர் கொள்
விஜயவானந்த ரங்கா
மன்ன ரேறே'
'தேனூறும் படிமதுரித் தின்
சொல் கொண்டு
திகழ்பதினா றாயிரங்கோ
வியரின் மிக்க
நானூறு காரிகையார் திரண்
டோர்பாகம்
நயந்துவைக மணம்புணர்த்தன்
ஞாயங் கண்டேர்
கானூறு படக்குதிகொண்டெழுந்து
பாயுங்
கடுப்பினிற் பின் றொடர்ந்து
பொருங் கணையான் மாய
மானூறு படவெய்து பிரம்பூ
ரோங்க
வந்தவா னந்தரங்கா மன்ன
ரேறே'
'அண்டர்வரோ தயன்பிரம்பூர்த்
திருவேங்கடேந்த்ர துரை
யளித்த பாலன்
மண்டலங் கொண்டாடவரு
மானந்த

வான் லுடெண்டார்ப்—ஒரு பலாத்கார வாதி

ஐரோப்பிய மகாயுத்தத்தின் போது ஜெர்மனியின் சார்பில் மூன்று பெயர்கள் பிரபலமாக அடிபட்டன. கெய்ஸர், ஹிண்டென்புர்க், லுடெண்டார்ப் ஆகிய மூவரும் மும்மூர்த்திகளாகவே கருதப்பட்டனர். இந்த மூவரில், முதலிருவரை ஆட்டி வைத்தவன் லுடெண்டார்ப். இவன் பெரிய ராணுவ வீரன். ஜெர்மன் தரைப்படையில் பல பொறுப்பான உத்தியோகங்களை வகித்தவன். ஐரோப்பிய யுத்த ஆரம்ப காலத்தில், ருஷ்யச்சேனையை முறியடித்துப் புகழ்பெற்றவன். சிறப்பாக டானென்பர்க் என்ற இடத்தில், ருஷ்யர்களை இவன் த்வம்சம் செய்து ருஷ்ய ராணுவத்தின் முதுகெலும்பை ஒடித்து விட்டான் என்று சொல்ல வேண்டும். இது தவிர, இவன் தலைமையிலிருந்த படைகள் வேறு சில இடங்களிலும் வெற்றியடைந்தன. ஆனாலும், உள்நாட்டுக் குழப்பத்தினாலும் வேறு பல காரணங்களினாலும், ஜெர்மனி, கடைசியில் சரணாகதியடைய வேண்டியதாயிற்று.

லுடெண்டார்ப், யுத்த காலத்தில் வெறுந் தளகர்த்தனாக மட்டும் இருக்கவில்லை. உள்நாட்டு அரசியலிலும் தலையிட்டு, அநேக சந்தர்ப்பங்களில் சர்வாதிகாரிபோல் நடந்திருக்கிறான். மந்திரி சபைகளைப் பொம்மைகள் போல் ஆட்டிவைத்தான். யுத்தம் தொடங்கப்பட்ட காலத்தில் ஜெர்மன் பிரதம மந்திரியாயிருந்த பெத்மான் ஹால்வெக், இவனை மீறி நடக்க அசக்தனாயிருந்தான். ஏன்? கெய்ஸர் கூட இவனிடத்தில் அகப்பட்டுக் கொண்டு திணறினான் என்று சொல்ல வேண்டும்.

ஜெர்மனி, சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டதும் இவன்

ரங்கதுரை மானரத்ன
குண்டலமுஞ் சரப்பணியும் பதக்கமோடு
சாலுவையுங் கொடுத்தே நாளும்
தண்டமிழா ரூர்வசிக்கப் பொன் முடிப்பும்,
பூமிகளுந் தந்திட்டானே'

என்று பாடுகின்றார். இவைகளாலே பிள்ளையினது கொடைத்திறன் ஒருவாறு விளங்கும்.

இவர்மேல் இக் கோவையையன்றிப் பின்னும் பல நூல்களும் தமிழில் பாடப் பட்டுள்ளன. இவைகளையன்றி வடமொழியில் ஆநந்தரங்க விஜயம் என்றொரு சரிதமும், தெலுங்கில் ஆநந்தரங்க ராட் சந்தஸ் என்றொரு சரிதச் சுருக்கமும் எழுதப் பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்னொரு முறை வரைவோம்.

ஸ்வீடனுக்கு ஓடிப்போய் விட்டான். 1919ம் வருஷம் மீண்டும் ஜெர்மனிக்குத் திரும்பி வந்து, இழந்துபோன தனது செல்வாக்கை, அரசியல் கட்சிகளின் துணை பற்றி சம்பாதித்துக் கொள்ள முயன்ருன். 1920ம் வருஷம் மார்ச் மாதம் நடைபெற்ற 'காப்புரட்சி' என்பதில் இவன் கலந்து கொண்டான். ஆனல் இந்தப் புரட்சி பலிதமடையாமற் போய் விட்டது. பின்னர், 1923ம் வருஷம் ம்யூனிக் நகரத்தில் ஹிட்லரின் தலைமையில் நடைபெற்ற புரட்சியிலும் இவன் சம்பந்தப்பட்டிருந்தான். ஆனல் இவன் எதிலும் முன்னணியில் நின்று வேலை செய்யவில்லை. நல்ல சந்தர்ப்பத்தில், இவன் ஹிட்லரைக் கைசோரவிட்டு விட்டான். ஆனல், இவன் அடைந்திருந்த பழம் புகழானது, அப்போதைய அரசாங்கத்தின் தண்டனையினின்று இவனைக் காப்பாற்றியது. 1924ம் வருஷம், இவன் ஜெர்மன் பார்லிமென்டில் ஓர் அங்கத்தினனுகத் தெரிந்தெடுக்கப் பட்டான். அடுத்த வருஷம்—1925ம் வருஷம்—ஜெர்மன் குடியரசுத் தலைமைப்பதவிக்கு அபேட்சகனுக நின்ருன். ஆனல் நூற்றுக்கு ஒரு ஓட்டுக்குமேல் இவனுக்குக் கிடைக்கவில்லை. இதற்குப்பிறகு, ம்யூனிக் நகரத்திற்குச்சில மைல்தூரத்திலுள்ள ஸ்டார்ன்பெர்கர் ஏரிக்கரையில் நிம்மதியான ஓர் இடம் அமைத்துக் கொண்டு வசித்து வந்தான்.

லுடென்டார்ப் 9-4-1865 ல்பிறந்தவன். பலாத்காரத்திலே அதிகமான நம்பிக்கை யுடையவன். உலகத்தை நல்வழிப் படுத்த வேண்டுமானல், சமாதான முறைகளைக் கையாள்வதனலே பிரயோஜனமில்லை என்று அடிக்கடி வற்புறுத்தி யிருக்கிருன். அசாதாரணமான தைரியம், கூர்மையான அறிவு இவை யிரண்டும் ஒன்று சேர்ந்து இவனிடத்தில் பிரகாசித்தன. ஆனல் மகா பிடிவாத குணமுடையவன். எதற்கும் அஞ்சான். மரணப் படுக்கையிலே இவன் இருந்த காலத்தில் கூட இவன் என்ன கூறினன் தெரியுமா? 'நான் எத்தனையோ சம்பவங்களைப் பார்த்திருக்கிறேன். இப்பொழுது நான் எதைக் கண்டு அஞ்ச வேண்டும்?' என்று டாக்டர்களிடம் கூறினன்.

இவன் 20-12-1937ல் தன்னுடைய 72-வது வயதில் இறந்துபோனுன்.

இவனுடைய மரணச் செய்தியைக் கேட்டு. ஹிட்லர் பின் வருமாறு தெரிவித்தான்:— 'ஜெர்மனி, ஒரு பெரிய போர்வீரனை, ஒரு உண்மையான மைந்தனை இழந்து விட்டது. ஜெர்மானிய சரித்திரத்தில் இவனுடைய பெயர் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கும்'.

மனைவியை அடித்தால்—?

அமெரிக்காவில் காலிபோர்னியா என்ஞெரு மாகாணம் உண்டு. இங்கே விநோதமான சட்டமொன்று அமுலில் இருக்கிறது. அதாவது மனைவியை அடிக்கிற கணவனுக்கு முக்கோணங்கட்டி சவுக்கடி கொடுக்கலாமென்று மேற்படி சட்டம் கூறுகிறது. அந்த மாகாணத்திலே, தண்டனையெல்லாம் பெரும்பாலும் சவுக்கடிதான். ஆனல் எந்தக் குற்றத்திற்கும் அறுபது அடிகளுக்கு மேல் அடிக்கக் கூடாது. இந்த அறுபது அடி, யாருக்குக் கொடுக்கலாமென்ருல், பொது ஜன சொத்தில் தீ வைத்தவர்கள், விஷம் வைத்துக் கொல்ல முயன்றவர்கள் முதலியோருக்குத்தான். கற்பழிப்பவர்களுக்கு முப்பது அடி. மனைவிமாரை அடிப்பவருக்கு ஐந்து அடிக்கு மேல் இருபது அடிக்குள்ளாக.

ஹிந்து மதமும் நவீன உலகமும்—

இம்மதம் தற்காலத்திற்குப் பொருத்தமில்லையா?

—சி. முத்து வீரப்பன்
B. A.

இஃது, ஆராய்ச்சி நிரம்பிய ஒரு கட்டுரை. நுண்ணிய கருத்துக்கள் பல இதில் அடங்கி யிருக்கின்றன. மதத்தின் ஆதி காலத்தோற்றம் முதல் தற்கால நிலைமைவரை படிப்படியாகச் சுருங்கச்சொல்கிறார் ஸ்ரீ முத்துவீரப்பன். கடைசியிலே இந்தக் கட்டுரையை இவர் முடிக்கிறபோது 'தற்கால நாகரீக முன்னேற்றத்திற்கும் மதத்திற்குமுள்ள பிரச்னையைவிட, நாளைய தினம் போஜனத்திற்கு என்ன ஏற்பாடென்பதே தற்சமயம் பெரும் பிரச்னையாயிருக்கிறது' என்று கூறுவது நம்மை ஓர் உலுக்கு உலுக்கிவிடுகிறது.

நான்கு வேதங்களையும் தலைமையாகக்கொண்ட மதமே ஹிந்துமதமென்றும் அதுவே சனாதன தர்மமென்றும் அழைக்கப் படுகிறது. எது அக்ஷராப்யாச மில்லாதவர்களுக்கும் கூட மனச் சாந்தியை அளிக்கிறதோ, எது கொடுங்கோல் மன்னனையும் ஓர் வரம்புக்குள் அடங்கி நிற்கச் செய்கிறதோ, எது மரண பயத்திற்கு அபயாஸ்தம் கொடுக்கிறதோ, எது அதிக ஜனங்களுக்கு அதிக அளவு சந்தோஷத்தைக்கொடுக்கிறதோ, எது ஒரு மனிதனின் அன்பை இப் பிரபஞ்சத்தின் எல்லையுள்ள மட்டும் வியாபிக்கச்செய்ய ஹேதுவாக இருக்க முடியுமோ, எது ஒருவருக்கு அறிவு வந்த இளம்பிராய முதல் அறிவுள்ள வரையும் எக்காலும் துணையாக இருக்க முடியுமோ, அதையே அவ்வக் காலங்களிலுள்ள அறிவாளிகள் மதமென வழங்கி யிருக்கிறார்கள். சரித்திர பூர்வமாக ஆராயுங் காலத்தில் பிருதிவியில் அனேக மதங்கள் தோன்றி அழிந்திருக்கின்றன. இப்பொழுது உலகில் ஏறக்குறைய எழுபத்தைந்து மதங்களிருப்பதாகக் கணக்கிடுகிறார்கள்.

சென்ற நூற்றாண்டி லிருந்து, உலகத்தின் பல பாகத்திற்கும் போய்வர பிரயாண வசதி ஏற்பட்டதி லிருந்து, ஜனங்களின் சுற்றுப் பிரயாணம் அதிகமாகி யிருக்கிறது. அதனால் சந்தேகமின்றி மனிதர்களின் அறிவு பல துறைகளில் விருத்தியாகி யிருக்கிறது. பல ஜனங்களும் சந்தித்துப் பழகுவதற்குச் சந்தர்ப்பங்கள் நேர்ந்திருக்கிறது. இக்காரணங்களைக் கொண்டும், மேல்நாட்டு நாகரீக நிழல் எல்லா விடங்களிலும் விழுந்து வருவதைக் கொண்டும் ஹிந்து மதம் தற்கால வழக்க பழக்கத்திற்குப் பொருத்தமில்லையென பல விடங்களிலும் கூக்குரல் கிளம்பி யிருக்கிறது. இக்குற்றம் சாட்டுதல் உண்மையா இல்லையா என்பதைச் சற்று ஆராய்வோம். மத விஷயம் அதி சூக்ஷ்மமானது. அத் துறையில் உழைத்துப் பலனடைய அதிகப் பொறுமையும் விடா முயற்சியும் வேண்டி யிருக்கிறது. மதம் வேண்டுவது இன்றியமையாததா என்பது ஒரு பெரும் பிரச்னை. இப்பொழுது அதில் நாம் பிரவேசிக்க வில்லை. மதம் வேண்டுவது அவசியமென்றும், அக் காரணத்தாலேயே மதம் ஒவ்வொரு தேசத்தவருக்கும், ஒவ்வொரு சமூகத்தவருக்கும் இருந்து வருகிற தென்றும் தீர்மானித்துக் கொள்ளுவோம். ஒரு மதம் சரியென்றோ, அல்லவென்றோ' நல்ல மத மென்றோ சொல்ல அம் மதத்தின் மூல கிரந்தங்களை பக்ஷபாத

மின்றிக் கற்றுணர்ந்திருக்க வேண்டும். இம் மத ஆராய்ச்சி வெளிப்படையாக பிரதிப் பிரயோஜன மற்றதென எல்லோருக்கும் தோன்றுவதால் அதை உற்று நோக்கி அறிய அளவின்றிய பொறுமையும் திரவியமும் வேண்டி யிருக்கிறது. தற்காலக்கல்லூரிகளில் பட்டம் பெற சுமார் பதினைந்து வருஷங்கள் உழைக்க வேண்டி யிருக்கிறது. இதில் பாதியாவது மதத்திற்கு உழைத்தால் போதும். நம் மதத்தையும் அதன் கொள்கையையும் நாம் உணராமலிருக்கும்போது அது இக் காலத்திற்குப் பொருத்த மென்றோ இல்லையென்றோ எவ்விதம் ஒரு முடிவு கூற முடியும்? ஆகவே கண்ணும் கருத்துமாக நம் மதத்தை யறிந்து கொள்வதில் தினம் சிறிது நேரமாவது செலவிட வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்க வேண்டாமா?

ஓர் மதத்தை எடுத்துக் கொண்டு அதன் நூல்களை ஆழ்ந்து கவனித்தால் அம்மதமானது பெரும்பாலும் ஏழுவித சம்பந்தமான விஷயங்களை விஸ்தரித்துக் கூறியிருப்பதைக் காணலாம். முதலாவது, அம்மதத்தால் பிரதிபாதிக்கப் படும் கடவுளுக்கும் அம்மதத்தவர்களுக்கும் உள்ள சம்பந்தம். இரண்டாவது, அம்மதத்தின் அதிசூக்ஷமமும் மூல காரணமுமாயுள்ள உண்மைக் கொள்கைகள். மூன்றாவது, அம்மதத்தவர்கள் மத சம்பந்தமாக வேண்டிய வெளிப்படையான கர்மங்கள். நான்காவது அம்மதத்திற்கும் பொதுவாக ஜன சமூகத்திற்குமுள்ள சம்பந்தம். ஐந்தாவது, அம்மதத்திற்கும் ராஜ்யக் கொள்கைக்கும் உள்ள தொடர்பு. ஆறாவது, அம்மதத்திற்கும் ஜனங்களின் பொருளாதாரத்திற்கும் உள்ள சம்பந்தம். ஏழாவது, அம்மதத்தினர்களின் மரணத்திற்குப்பின் நடைபெறும் சம்பவங்களுக்கும் மறு உலகத்தின் விஷயங்களுக்கு முள்ள பந்தம் என்று இவ்விதம் ஏழு வகையாகப் பிரிக்கலாம். மேல்கண்ட ஏழு துறைகளிலும் ஒரு மதத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் எவ்வளவு வரை நடந்துகொள்ள வேண்டுமென்பதையே மத ஆராய்ச்சியில் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. உலகிலுள்ள ஒவ்வொரு மதங்களும் பெரிது சிறிது, உயர்வு தாழ்வு எனச்சண்டையிட்டுக் கொள்வது, மனிதன் மரணத்திற்குப்பின் என்னவாகிறானென்பதை யாரும் நிதர்சனமாக ஐம்புலன்களாலும் அறியும்படி நிரூபித்துக் காட்டமுடியாம லிருக்கும் குறையாலேயே யன்றிவேறில்லை. மரணத்திற்குப்பின்னுள்ள இருட்டு இராஜ்யத்திலே எல்லா மதங்களும் தங்கள் தங்கள் தலை நகரங்களை ஸ்தாபித்திருக்கின்றன. இன்று ஒருவன், மரணத்திற்குப்பின் அடையும் நிலையை ருஜுப்பித்துவிட்டால் தற்காலமுள்ள மதங்களில் எந்த மதம் நிற்குமென்றோ எல்லாம் போய் வேறு எப் புது மதம் வருமென்றோ திட்டமாய்க் கூறுவது அசாத்தியம். அன்றே உண்மையும் விளங்கும். எதற்கு ஒரு பெயரும் இல்லையோ அதற்கு எந்தப்பெயர் கொடுப்பதும் தகும். எதை இருப்பதாக ருஜுப்பிக்க முடியாதோ அதை இல்லையென்றும் ருஜுப்பிக்க முடியாது. நமக்குப் புலப்படாததால் இருக்கும் அவ்வஸ்து இல்லையெனப் போய்விடாது. இந்நூற்றுண்டில் வெளிக்கிளம்பிய அநேக விஷயங்களை, முந்திய நூற்றுண்டுகளில் இல்லையென்றே கருதினர்கள். உண்மையில் ஒரு நாளும் மாறுதல் வரப்போவதில்லை. ஆயிரக் கணக்கான வருஷங்களாகிய காலங்களும், எவ்வளவு முன்னேற்ற

மடைந்த நாகரீகமும், எந்த ஜனசமூகமும், ஓர் உண்மையை மாற்றிவிட முடியாது.

ஆகவே எல்லா மதங்களும் கடவுளோ அல்லது சர்வ சக்தியுள்ள ஒரு வஸ்துவோ இருக்கிறதெனவே ஒப்புக் கொண்டிருக்கின்றன. அவ்வஸ்து இறந்துபோவதில்லையெனவும் நித்திய மெனவும் எல்லாமதங்களும் ஒருங்கே சம்மதிக்கின்றன. அவ்வஸ்துவுக்கு திட்டமான ஓர் பெயர் கொடுக்க முடியாததால் ஒவ்வொரு மதமும் அதன் பாஷைக் கேற்றவாறு அவ்வஸ்துக்குப் பெயர்கள் கொடுத்துக் கொண்டன. எல்லா மதங்களும் ஜன சமூகத்தின் நன்மைக்காகவே உண்டாயின. ஒன்றுவது கெடுதலுக் கோ சண்டையிட்டுக் கொள்ளவோ சிருஷ்டிக்கப்படவில்லை. ஒரு கடவுளை வழிபட வேண்டுமென்பது, எல்லா மதத்திற்கும் பொதுவான விஷயம். மதங்களும் மத நூல்களும் மனித சிருஷ்டிக்குப் பின்பே உண்டானவை யென்பதை மறுக்க முடியாது. மனிதருக்கு மதமே யன்றி மதத்திற்கு மனிதரில்லை. இதனாலேயே மனிதர்களும் மதங்களைச் சட்டை போடுவது போல் மாற்றிக் கொள்ளச் செய்கிறார்கள். ஆக நம் ஆராய்ச்சியின் பலனைக் மேற் கண்ட ஏழு பிரிவுகளையும் ஒருங்கே எடுத்துச் சீர்தூக்கும்போது எந்த ஒரு மதத்தின் அதி சூக்ஷமமான கொள்கையை எடுத்துக் கொண்டாலும் கடவுள் ஒன்று என்பதும், அது என்றும் இறக்காத நித்திய வஸ்து என்பதும், அக்கடவுளை ஒவ்வொருவரும் வழிபட வேண்டுமென்பதும், மதம் ஜன சமூகத்தின் நன்மையைக் கருதியே சிருஷ்டிக்கப் பட்டதென்பதால் ஜனங்களுக்குக் கெடுதல் செய்யாது நன்மையே புரியவேண்டுமென் பதும் ஒருங்கே எல்லா மதங்களிலும் காண்கிறோம். இவ்வளவில் எம்மதமும் சச்சரவின்றி ஒருங்கே நிற்கிறது இந்த நாலு கருத்துக்களும் எக்காலத்திலும் மாறுதலின்றி ஒரு மதத்தில் இருந்து வந்திருக்கிறது. இக் கொள்கைகளை ஹிந்து மதம் அடிப்படையாகக் கொண்டிருக்கும் போது இதைக் குறை கூறக் காரணம் சிறிதுமில்லை. மற்ற வெளி ஆசரணைகளும், பழக்கவழக்கங்களும் அத்துறையில் மதத்திற்குரிய சம்பந்தங்களும் ஒரு தேசம், காலம், ஜன சமூகம் இவைகளைப் பொறுத்திருக்கின்றன. அக்காலத்தில் தேசங்கள் தனித்தனியாக ஒன்றுக் கொன்று சம்பந்தமின்றியிருந்ததால் இக் கொள்கைகளில் பேதமேற்பட்டது. இக் கொள்கைகள் கால பேதத்திற் கேற்றவாறு மதத்தின் ஆஸ்தானமாயுள்ள கொள்கைகளுக்கு விரோதமின்றி மாற்றிக் கொள்ளக் கூடியவைகளே. பிராதக் காலத்தில் நதி ஸ்நானம் செய்வது புண்ணியமென்று ஒரு மதம் சொல்லியிருக்கிறதாக வைத்துக் கொள்ளுவோம். இது எந்த தேசத்திற்கு எந்த காலத்திற்கு எந்த ஜனங்களுக்கு என்பதை யோசிக்க வேண்டும். அவ்வித யோசனையின்றி ஒருவன் வடதுருவத்தில் போய் பிராதக் காலத்தில் நதி ஸ்நானம் செய்வதானால் அவன் கதி என்னவாகும்? ஆனால் அவ்விடத்திற்குப் போவானேன் என்ற பிரச்னை வரலாம். அக்காலத்திய மனிதருக்குப்போக வேண்டிய அவசியமிருக்கவில்லை. இப்பொழுது போக வேண்டியிருப்பது காலத்தின் பேதமே. ஒரு காலத்திலுள்ள மனிதர்களுக்காக ஏற்படுத்திய பாஹ்ய ஆசரணைகள் எக்காலத்திலும் எல்லா மனிதருக்கும் ஏற்படுத்தியதெனக் கருதுவது அறிவுடைமையுமில்லை. இது ஒரு

மதத்தின் அடிப்படையானகொள்கை யுமில்லை, இவ்விதம் ஒவ்வொரு மதத்தி லும் தற்காலத்திற்குப் பொருத்தமி லாத விஷயங்கள் பல இருக்கவே செய் கின்றன. இதனால் மதத்தைக் குறைகூ றுவதற்கில்லை. அவ்வாறே மூட நம்பிக் கையும் அதை யொட்டிய ஆசாரங்க ளும் ஒவ்வொரு மதத்தினர்களிட மும் இருக்கவே செய்கின்றன. கூர் ந்து கவனிக்கையில் கடவுளிடத்தில் அன்பு குறையும் போது ஒருவனை மூட நம்பிக்கை யென்ற பேய் பிடிக் கிறது. கடவுள் எல்லாவற்றையும் மனிதவர்க்கத்தின் நன்மைக்கே சிருஷ் டித்திருக்கிறார் என்பதையும், ஒரு வரையொருவர் துன்பப்படுத்தி எத்து றையிலும் அடக்கியாளச் சிருஷ்டிக்க வில்லை என்பதையும் ஒருவன் உணரும் போது அவன் அம்மதத்தின் லக்ஷியத்தைக் கடைப் பிடித்தவனுகி றான். ஒரே கடவுளின் சிருஷ்டிக்கு உட்பட்டிருப்பதால் மனிதவர்க்கத் தில் எல்லா விடங்களிலும் ஒற்றுமை யைக் காண்கிறோம். ஒரு சமூகத்தி னருக்காவது, அச் சமூகத்தின் கட வுள், மூன்று கண்களைச் சிருஷ்டிக்க வில்லை. ஒவ்வொரு மதத்திலும் பிரதி பாதிக்கப் பட்ட கடவுள் வெவ்வே றாக யிருந்தால், அக்கடவுள்களிலும் சண்டை யுண்டாகி பலமுள்ளது மற் றவைகளை யழிக்கும். ஆக அப்பல முள்ள கடவுளின் குடிகளே இபபூவு லகிலும் சுகமாக வாழ்வார்கள். இவ் விதமின்றி எல்லாக் கொள்கையின ரும் சௌகர்யமாகக் காலங்கழிப்ப தால் கடவுள் ஒன்றென்பதை அறிவ தில் கஷ்டமில்லையே. அவ்விதமிருக்க மனிதர்கள் ஒருவருக் கொருவர் சண் டையிடுவதும், தேசங்கள் சண்டை யிடுவதும் கடவுள் என்ற சர்வ சக்தி யில் நம்பிக்கையின்மையாலேயே என்ற முடிவுக்கு வர வேண்டியிருக் கிறது. ஒவ்வொருவருக்கும் தன் மதம் உயர் வென்று நினைத்துக் கொள்ள உரிமையுண்டு. ஆனால் மற்ற மதம் தாழ்ந்த தென்று சொல்வது குற்றம். எல்லா வகுப்பினரும் ஒத்து வாழ இடந்தருவதே நல்ல மதம். இவ் வியாசத்தின் ஆரம்பத்தில் ஒரு மதம் ஏழு விதமான துறையில் மனி தன் செய்ய வேண்டிய காரியங்களைப் பிரித்துக் கூறுகிற தென்று கண்டோ மல்லவா? அவ்வேழு துறைகளிலும் முதலிரண்டு, அதாவது கடவுள் ஒன்று உண்டென்பதும், அம்மதத் தின் அடிப்படையான அதிசூக்ஷ்மக் கொள்கைகளும் எல்லா மதத்திற்கும் பொதுவே. வேறுபாடுகள் பாஹ்ய கிரியைகளிலேதான். இப் பாஹ்ய கிரியைகள் கால தேச வர்த்தமானத் திற்கேற்றவாறு அமைத்துக் கொள் ளக்கூடியவைகள். எல்லா மதங்களின் அடிப்படையான கொள்கைகளில் ஒற் றுமை இராவிடில் எங்கும் ஒரே தன் மையதாக இருக்கும் மனித சுபாவத் திற்குத் திருப்தியைக்கொடுத்து அம்ம தத்தின் சீடர்களாக ஆக்கிக் கொள் ளும் சக்தியை அம்மதம் இழந்து விடும். ஆகவே முக்கிய அம்சங்களில் ஒற்றுமையை எல்லா மதங்களிலும் காணக்கிடக்கிறது.

இன்று நாம் எந்த மதத்தினரை உதாரணமாக எடுத்துக் கொண்டா லும், அந்த மதத்தினரும், அதன் மூல கிரந்தத்தில் பற்றுதலுடைய வர்களாகவும் அதை யனுசரித்த ஒரு ஆலய முடையவர்களாகவும், அவ்வா லயத்திற்குப் போகும் வழக்க பழக் கங்களுடையவர்களாகவும், அதன் வந்தனை வழி பாடுகளில் பணம் செல விடுபவர்களாகவும் இருப்பதோடு அம் மதத்தின் ஆச்சார்யர்களாகச் சில மனிதர்களைக் கொண்டாடுவதும் சக ஜமாகவே இருக்கிறது. அவ்வித

மிருக்க ஹிந்து மதம் மட்டும், காலத்திற்குப் பொருத்தமில்லையெனக் கூறுவது பக்ஷபாதமென்றோ அல்லது எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்காத குறையென்றோதான் சொல்ல வேண்டியிருக்கிறது. நிற்க மத வெறுப்புண்டாவதற்குக் காரணம் ஒவ்வொரு மனிதனும் அந்த ஜன சமூகம் ஏற்றுக்கொள்ளாத அனேக விஷயங்களையும் பாவங்களென்று கருதப்படுபவைகளையும் செய்யவே செய்கிறான். ஆனால் அவ்விஷயங்கள் மற்ற மனிதர்களுக்குத் தெரியாவிட்டாலும் அது அவன் மனதைத் துன்புறுத்துகிறது. அப்போது அதனின்றும் விடுபட மதத்தின் உதவியை நாடுகிறான். இத்துக்கத்தைப் போக்குவதற்கு மதம் எவ்வளவு தூரம் இடங்கொடுக்கிறதென்பதைக் கொண்டே அம்மதம் தற்காலத்திற்குப் பொருத்தமுடையதாவெனத் தீர்மானிப்பது சரியாகுமா? இதன்றி மனிதன் செய்யும் ஒவ்வொரு செய்கைக்கும் மதத்தில் ஆதாரமிருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதும் சிறந்ததா? இதுஒரு புறமிருக்க, மதத்தைத் தாங்கி நிற்கும் போதகர்களும் நடத்தை ஒழுக்கமுள்ளவர்களாக இராததாலும், சுய நலத்தையே விருத்தி செய்வதில் நோக்கமுடையவர்களாக இருப்பதாலும், மனித சுபாவத்திற்கு இயற்கையாகவுள்ள குறைகளை மதம் என்ற போர்வையால் மறைப்பதாலும் அவர்கள் மேலுள்ள வெறுப்பு அவர்கள் ஆசரிக்கும் மதத்தின் மீதும் உண்டாகிறது. இக் காரணத்தைக் கொண்டு மதம் பொருத்தமுள்ளது இல்லை யென்று சொல்ல முன் வருவதும் சரியாகுமா? இக் குற்றங்கள் எக் காலத்திலும் சகஜமே. ஒரு மனிதன் நினைப்பதை எல்லோரும் அறிந்துகொள்ளும் சக்தியை இறைவன் மனித வர்க்கத்திற்கு இன்று அளித்திருப்பானாயின் உலகத்தில் எவ்விதத் தீய செயல்களும் அறவேயின்றி எல்லோரும் நீதி வழுவாது நடப்பார்கள். இது சாத்தியமா?

இவ் விஷயங்களையெல்லாம் ஒருங்கே உற்று நோக்கும்போது மற்ற எல்லா மதங்களிலுமுள்ள முக்கிய அம்சங்களும் அதற்கு மேலும் ஒரு படி கூட ஹிந்து மதத்தில் இருக்கவே செய்கிறது. சரித்திர பூர்வமாக ஆயிரக்கணக்கான வருஷங்களாக இம் மதம் இருந்து வருகிறதென்பதை மறுக்க முடியாது. மற்ற தேசங்களில் முற்காலங்களில் வயிற்றுப் பிழைப்புக்கு அதிகச் சிரமப்பட வேண்டியிருந்ததால் மற்ற மதங்கள் எவ்விதம் பாஹ்யமான வெளிப்படை விஷயங்களில் அதிகம் கவனம் செலுத்தியிருக்கிறதோ அவ்வாறு ஹிந்துமதஸ்தர்களுக்கு அக் காலத்தில் பாஹ்யக் கவலை அவ்வளவு அதிகமில்லாததால் ஆத்மாவிலும் அதன் அம்சங்களை ஆராய்வதிலும் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள். ஹிந்து மதம் பல கடவுளை உடைத்தாயிருக்கிறதென்றும் கற் சிலைகளே கடவுளென்றும் சொல்வதாக மற்ற மதத்தினர் கருதுவதற்கு, அவர்களின் மேலெழுந்த ஆராய்ச்சியை நோக்கி நாம் வருந்த வேண்டியதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. இம் மதம் பல கடவுளர்களை ஒப்புக்கொள்ளவே சர்வ வியாபகமுள்ள காரிய ஈசன் ஒன்றே. அந்த ஈசனை, கண், காது, மூக்கு, சரீரம், பிராணன், மனம் முதலான புலன்களே அறிய முடியாதென நூல்கள் சொல்லுமாயின், ஈசன் பல என்றோ, கல்லென்றோ, மண்ணென்றோ எவ்விதம் சொல்லமுடியும்? எல்லா மதங்களிலும் காரண ஈசன்

தான் பலவென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது கதாரூபமாக ஜனங்களை ப்ரமிக்கச் செய்வதற்கேயன்றி வேறில்லை. இவ் விசார்கள் எல்லா மதங்களிலும் நூற்றுக்கணக்காக யிருக்கின்றனர். கடவுள் ஒன்று, அது நித்தியம், அது சர்வ வியாபகம், சர்வ சக்தியுள்ளதென்பது ஹிந்து மதத்தின் அடிப்படையான கொள்கை. பிறப்பினுல் உயர்வு தாழ்வு என்பதை இம்மதம் ஒப்புக்கொள்ளவேயில்லை. இவ்விதம் சொல்வது பிற்காலத்தில் வந்த குற்றங்களில் ஒன்று. அறிவிஞலேயே மனிதனின் பாகுபாட்டை வகுத்திருக்கிறது. இம்மதத்திலுள்ள கடவுள் மனித வர்க்கத்திற்கே பொது. ஒவ்வொரு மனிதனும் கடவுளை அறியவும், மதக்கொள்கைகளை அறிந்து அதனையனுசரிக்கவும், சம உரிமை உண்டென்பதையும் அவ்விதம் செய்யாததே குற்றமென்பதையும் இம்மதம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதற்கு விருத்தமாக மற்றவர்கள் சொல்வதை நாம் பொருட்படுத்துவதற்கில்லை. ஹிந்து மதம் ஒன்றே, சுருதி—யுக்தி—அனுபவம்—என்ற மூன்று வகைப்பட்ட கொள்கைகளுக்கும் ஏற்க மனிதன் நடக்க வேண்டுமென்று விதிக்கிறது. யாராயிருந்தாலும் கடமையைச் செய்ய வேண்டியது அவசியமென்று விதிக்கிறது. ஆனுல் நாளடைவில் பல குற்றங்கள் மதத்தின் பேரைக் கொண்டு உலவி வருவது எல்லா மதங்களுக்கும் சகஜமே. இது மதத்தின் தோஷமல்ல. வைத்தியனின் புதல்வனை வைத்தியனென எப்படி நாம் சொல்லுகிறதில்லையோ அவ்விதமே அறிவாளியின் புத்திரன் அறிவாளியல்ல. அறிவு என்ற தன்மை அவனிடம் இருந்தால்தான் அறிவாளி. சரீரத்தின் தர்மங்கள் எல்லோருக்கும் பொதுவென்பதையும் மறந்து விடக்கூடாது. மத போதகர்களின் வார்த்தையிலிருந்தும் அவர்களின் நடத்தையிலிருந்தும் மதத்தின் கௌரவத்தைத் தீர்மானிக்கக்கூடாது. மதத்தின் முக்கியக் கொள்கைக்கு விரோதமாக அவர்கள் சொல்லும் வாக்கியங்களைப் பொருட்படுத்தாது தள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. ஹிந்து மதத்தின் உன்னத நிலையைக் கவனிக்கும்போது ஒரு அறிஞனுக்கு மனக்கோவிலின்றி வேறு கோவில் வேண்டியதில்லை. திட்டமான ஜெப தபங்கள் வேண்டுவதில்லை. பாபம் புண்ணியமில்லை. தீண்டாமை முதலான ஆசார நியமங்களுமில்லை. கடவுள் உண்டா இல்லையாவென்பதே சந்தேகம். சரீரத்தில் உடையும்கூட வேண்டுவதில்லையென்ருல் இவைகளினின்றும் மேம்பட்ட வேறு எந்தக் கொள்கைதான் தற்கால நாகரீகத்திற்கு வேண்டுமோ என்பது தெரியவில்லை. இன்று கோவில்கள் போய் விட்டாலும் மதம்போய் விடாது. ஆகவே ஹிந்து மதம் சற்றும் அறிவின்றிய மூடர்கள் முதல் பூர்ண அறிவு வளர்ச்சி யுடைய அதிமேதாவிகளுக்கும் எக்காலத்தும் சௌகர்யமாகக் காலக்ஷேபத்தை நடத்திக் கொண்டுபோக இடம் வைத்திருக்கிறதென்ருல் இதற்குமேல் என்ன தேவையோ? ஹிந்து மதம் தற்காலமுள்ள மனிதவர்க்கத்திற்கும் சரி, இனிவர இருக்கும் மனித வர்க்கத்திற்கும் சரி, போதிய அளவு திருப்தியைக் கொடுப்பதற்கு வேண்டிய சாமக்கிரியைகளுடன் இருந்து வருகிறதென்பதில் சற்றும் ஐயமில்லை. நாம் அதை உபயோகித்துக் கொள்ளுவதில்லையானுல் குற்றம் யாருடையது? தற்கால நாகரீக முன்னேற்றத்திற்கும் மதத்திற்குமுள்ள பிரச்னையைவிட, நாளைய தினம் போஜனத்திற்கு என்ன ஏற்பாடென்பதே தற்சமயம் பெரும் பிரச்னையாயிருக்கிறது.

சீன—ஜப்பானிய யுத்தமும் இந்தியாவின் வெளி நாட்டுக் கொள்கையும்

—ஏ. எஸ். ஸ்ரீனிவாஸன்
B. A., B. L.,

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸன், ஊக்கமும் ஆக்கமும் நிறைந்த ஒரு தேசபக்தர். இவருடைய இந்தக் கட்டுரை, பலருடைய சிந்தனைக்கு வேலையைக் கொடுக்குமென்பது நிச்சயம், நம்முடைய நிலைமையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது இப்பொழுது மிகவும் அவசியமா யிருக்கிறது, அப்படி அறிந்து கொள்வதற்கு இந்தக் கட்டுரை பெரிதும் உதவியா யிருக்கும்.

'இனி யுத்த பயமில்லை. ஆயுதப்பரிஹரண மஹாநாடு வெற்றியடைந்து விடும். ஒரே ஒரு சிறு விஷயந்தான் பாக்கி. அதிலும் எல்லோரும் ஒத்துப் போய்விட்டார்கள். பிரிட்டிஷார் மட்டிலும்தான் பாக்கி. போயும் போயும் இந்தப் பழியை இவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இவர்களும் ஒத்துக் கொண்டு விடுவார்கள்' என்றிவ்வாறெல்லாம் மனக் கோட்டை கட்டும் படியான நிலைமை கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஏற்பட்டிருந்தது.

பிரச்னை என்னமோ சாதாரணப் பிரச்னைதான். 'ஆகாயக் கப்பல்களைப் பிரயாண வசதிக்காக மட்டும் உபயோகப் படுத்திக் கொள்ளுகிறது. மேலேயிருந்து குண்டு மாரி பொழிவதற்கும், விஷ வாயுவைப் பிரயோகிப்பதற்கும் இன்னும் இம் மாதிரியான முயற்சிகளுக்கும் இடம் கொடுக்கக் கூடிய ஆகாயக் கப்பல்களை செய்வதில்லை' என்பதுதான் தீர்மானம். எல்லா அரசாங்கங்களும்,—பிரிட்டனைத்தவிர—ஒப்புக்கொண்டு விட்டன. இதில் ஒற்றுமை ஏற்பட்டு விட்டால், பிறகு படிப்படியாக கடற்படை, தரைப்படை, மற்ற யுத்த தளவாடங்கள் இவைகளைக் குறைப்பது அனுபவ சாத்தியமாகி விடும். யுத்த மனப்பான்மை மாறி ஸமாதானம் நிலவும். 'இவ்வளவு பெரிய காரியத்தை ஸாதிப்பதில் பிரிட்டிஷ் சர்க்கார் முட்டுக் கட்டையாக நிற்க மாட்டார்கள், நிற்கத் துணிய மாட்டார்கள்' என்று உலக முழுதும் நம்பியது. மூச்சு நின்றது தெரியாமல் பிரிட்டிஷ் சர்க்கார் முடிவை எதிர் நோக்கி நின்றது. உலக சரித்திரத்திலேயே மிகவும் நெருக்கடியான சில மணி நேரங்களைப் பொறுக்கி யெடுப்பதென்றால் மேலே சொன்ன ஸந்தர்ப்பத்தில் பிரிட்டிஷார் முடிவு செய்வதற்கு எடுத்துக்கொண்ட சில மணி நேரங்களைத்தான் சொல்ல வேண்டும். இந்தியர்கள்—இதில் நான் பர்மியரையும் கலந்தே குறிப்பிடுகிறேன்—ஒவ்வொருவரும் மிகவும் கவனமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டிய விஷய மிது.

பிரிட்டன் ஒப்புக்கொள்ளவில்லை.

பின்னீடு நடந்தது எல்லாம் எதிர் பார்க்கப் பட்டபடிதான் நடந்தன. பேச்சுக்கள் முறிந்து, ஆயுதப்பரிஹரண முயற்சியே கை விடப்பட்டு, நிலைமை வருஷத்திற்கு வருஷம், மாதத்திற்கு மாதம் கேவலமாகி, ஜெர்மனி இஷ்டம்போல் ரைன்லாந்தில் பிரவேசிக்கவும், ஜப்பான் மஞ்சூரியாவை விழுங்கவும், மகா கேவலமான முறையில்

இத்தாலி அபிசீனியாவை அழிக்கவும், ஸ்பெயினில் குடியரசு கவிழ்ந்து விடும்படியான நிலைமை ஏற்படவும் இப்படியாக நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம் நிலைமை மிகவும் மோசமாகி; இப்பொழுது புராணங்களி லுள்ள கற்பனை பிரளயத்தை விட பயங்கரமான ஒரு மாபெரும் யுத்தத்தை ஒவ்வொரு விநாடியும் எதிர் பார்த்துக் கொண் டிருக்கிறோம்.

இவ்வளவு பிரமாதமான கெடுதல்கள் வரக்கூடிய தென்று தெரிந்திருந்தும் பிரிட்டன் ஆயுதப்பரிஹாரமகா நாடு உருப்படாமல்செய்த தற்குக்காரணம் என்ன சொல்லிற்று? 'இந்தியாவில் வட மேற்கு எல்லைப் புறத்தில் ஆகாயக் கப்பல்களிலிருந்து குண்டு போடவேண்டியது எங்களுக்குஇன்றியமையாதது. அந்த பாத்தியதையை நாங்கள் விட்டுக் கொடுக்க முடியாது'. பிரிட்டிஷார் சொன்ன ஸமாதானம் இதுதான். இந்தியாவின் வட கோடியில் ஒரு மூலையில் மகாஅக்கிரமமான, கேவலமான, வெறுக்கத்தக்க, அநாகரிகமான முறையில் நடந்துகொள்ள வேண்டியது பிரிட்டனுக்கு அவசியமா யிருந்தது. இதற்காக, உலக ஆயுதபரிஹார மகாநாடு முறிந்து உலகமே இன்று யுத்த தேவனின் கைவசப்பட்டு தன் அழிவை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருக்கிற நிலைமையை பிரிட்டன் உண்டு பண்ணி விட்டது. இதன் அர்த்தம் என்ன? இந்தியாவை இழப்பதல்ல; இந்தியாவின் மேல் தங்களுக் கிருக்கும் இரும்புப்பிடியைக் கொஞ்சம் தளர்த்துவ தென்றால் கூட பிரிட்டன் அதை சகித்துக் கொண்டிருக்க முடியாது. அந்த மாதிரியான நிலைமை ஏற்படுவதைத் தடுப்பதற்கு பிரிட்டன் உலக யுத்தத்தைக் கூட பொருட்படுத்தா தென்பதுதான். கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாக யுத்தங்களில் பிரிட்டன் இறங்கிய பொழுதெல்லாம், இந்தியா, தங்கள் கையை விட்டு நழுவிப்போய்விடாத வண்ணம், இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை பெருக்கும் நோக்கத்துடனேயே இறங்கியது. இது மட்டுமல்லாது, பிரிட்டனின் வெளிநாட்டு இலாகா சம்பந்தமான பிரச்னைகள் ஒவ்வொன்றும் இந்தியாவை மனதிற்கொண்டே முடிவு செய்யப்பட்டு வந்தன: இன்றும் செய்யப்பட்டு வருகின்றன. நெப்போலியனிக் யுத்தத்திலிருந்து சீன ஜப்பான் யுத்தம் வரை பிரிட்டனின் போக்கையும் செயல்களையும் கவனித்து வந்தவர்களுக்கு இது புலனாகும். அபிசீனிய யுத்தம் காரணமாக பிரிட்டனுக்கும் இத்தாலிக்கும் பிணக்கு ஏற்பட்ட காலத்தில் இத்தாலிய பத்திரிகைகள் எழுதியதையும், இன்று ஜப்பானிய பத்திரிகைகள் எழுதுவதையும் கவனித்தால் இந்தியப் பிரச்னை எப்படி பிரிட்டனின் வெளிநாட்டு விவகாரங்களில் முக்கியத்துவத்தை அடைந்திருக்கிறதென்பது தெரியும். பிரிட்டன், இந்தியாவில் செய்தவற்றையே தாங்கள் செய்வதாகவும், கண்ணாடி வீட்டிலுள்ளவர்கள் பிறர் வீட்டில் கல் லெறியும் பொழுது யோசித்துச் செய்யவேண்டுமென்றும், இன்னும் இது போன்ற குத்தலான வாசகங்கள், மிகவும் தீவிரமாகக் கையாளப்பட்ட தணிக்கைமுறைகளைத் தாண்டி நம்மிடம் வந்துள்ளன. இன்று எப்படியாவது இத்தாலியையும் ஜெர்மனியையும் ஸமாதானம் செய்து ஜப்பானிடம் தீவிர முறைகளைக் கையாள நினைக்கும் பிரிட்டன் ஏன் அப்படிச் செய்கிறது என்பது இந்தியாவைப் பொறுத்தே யாகும் என்பது புத்திசாலிகளனைவரும் ஊகித்துக் கொள்ளக்

கூடிய விஷயமாகும்.

சில நாட்களுக்கு முன் பிரிட்டிஷ் சேனாதிபதி ஸர் ஆயான் ஹாமில்டன் சொல்லியிருப்பது இந்தச் சமயம் கவனிக்கத் தகுந்தது. 'ஜப்பானியர் பாதை தெளிவாக இருக்கிறது. ஹாங்கோ, அங்கிருந்து ஹாங்காங், சிங்கப்பூர், பர்மா, அஸ்ஸாம், வங்காளம்.' 1937ம் வருஷம் டிஸம்பர் மீ 8ம் தேதி 'மதராஸ் மெயில்' தலையங்கத்தைப் பாருங்கள். 'ஜப்பான் மனதிலிருப்பது ஆசியாவின் ஆதிக்கம். ஜப்பானின் கத்தி இந்தியாவின் மேல்' என்றெல்லாம் எழுதியிருப்பது யார் யார் நோக்கங்கள் எங்கெந்த வழியில் செல்லுகிறதென்பதைக் காட்டுகிறது. 'இன்று நடப்பது சீன ஜப்பானிய யுத்தமில்லை. ஆங்கிலேயருக்கும் ஜப்பானியருக்குமே யுத்தம்' என்று நினைப்பவர்கள் பலரிருக்கின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால் ஜப்பானியர் திருஷ்டி என்னவோ தெளிவாகத்தான் இருக்கிறது. அதைவிடத் தெளிவாக இருக்கிறது பிரிட்டிஷாரின் திருஷ்டி. இந்தியர்களுக்குத்தான் இன்னும் தெளிவு ஏற்படவில்லை என்று நினைக்கும்படி இருக்கிறது. வெளி நாட்டு விவகாரங்கள் சம்பந்தமாக எப்படி இந்தியர்கள் நடந்து கொள்ள வேணுமென்பது பற்றிப் பதட்டமில்லாமல் மிக மிக நிதானமாக, தீர்க்கமாக ஆலோசித்து முடிவு செய்ய வேண்டுவது அவசியம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தாங்கி நிற்பவர்கள் மிகவும் வல்லமையும் தைரியமும் பிடிவாதமும் தந்திரமும் கட்டுப் பாடும் பொருந்தியவர்கள். பொதுவாகவே பிரிட்டிஷார் ராஜ தந்திர விஷயங்களில் மிகவும் உன்னதமான பக்குவ நிலையை அடைந்தவர்கள். அவர்கள் தங்கள் வெளி நாட்டுக் கொள்கையை நிர்ணயிக்கும் பொழுதெல்லாம் இந்தியப் பிரச்னையை மனதிற்கொண்டே முடிவு செய்கிறார்கள் என்பது நாம் நன்றாக மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு விஷயம். அவ்வளவு தந்திர சாலிகள் வழியைப் பின்பற்றி, நாமும் நம் வெளி நாட்டுக் கொள்கையை நிர்ணயிக்கும் பொழுதெல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை மனதிற் கொண்டே முடிவு செய்ய வேண்டும். இதை ஒரு வழியாகக் காங்கிரஸ் மகா ஸபையும் ஒரு தீர்மானத்தின் மூலம் தெரிவித்திருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தலையிடும் எந்த யுத்தத்திற்கும் இந்தியர்கள் எவ்விதத்திலும் உதவி புரிதல் கூடாது என்பது அந்தத் தீர்மானத்தின் சாரம். காரியாம்சத்தில் பிரிட்டிஷ் ராஜ தந்திரம், மேற்கண்ட தீர்மானத்தைப் பிரயோஜனமற்றதாக ஆக்கிவிடும். ஏற்கனவே ஓரளவுக்கு அப்படி ஆக்கி விட்டது என்று நான் பயப்படுகிறேன்.

உதாரணமாக இரண்டு விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஜப்பானிய சாமான்களைப் பஹிஷ்கரிக்க காங்கிரஸ் கமிட்டி செய்திருக்கும் தீர்மானம் ஒன்று. சைனாவுக்கு இந்திய சர்க்கார் இந்தியத் துருப்புக்களை அனுப்பி, அதற்கு மத்திய அஸெம்ப்ளி காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் சம்மதம் பெற்றிருப்பது இரண்டு. சைனாவிடம் நமக்கு அனுதாபம் இருக்கலாம். இருக்க வேண்டியதுதான் நியாயம். இந்தியர்களாகிய நமக்கு அதுதான் இயற்கையானது. ஆனால் தீவிரமான செய்கையில் முடியக் கூடியதல்லாத அனுதாபம் பிரயோஜனமற்றது; அபாயகரமானதுங் கூட. அம்மாதிரி அனுதாபம் காட்டுபவர்களை அது மிகவும்

பலஹீனர்களாகச் செய்பவல்லது. இந்தியா ஸ்வதந்திரத்துடன் பலமுள்ள ஒரு நாடாயிருந்தால் என்ன செய்ய வேணுமோ அதையே இப்பொழுதும் செய்ய நினைப்பது அபாயகரமானது; புத்திசாலித்தனமாகாது. இந்தியாவின் முதல் பிரச்னை விடுதலை. மற்றதெல்லாம் அதைத் தழுவியதும் அதற்குட்பட்டதுமாகும்.

சைனாவின் மேல் நமக்கு இயற்கையாகவுள்ள நியாயமான அனுதாபத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கு, நம்மேல் தனக்கிருக்கும் பிடிப்பை பலப்படுத்துவதற்கு உதவியாகச் செய்து கொண்டு விடலாகாது. அப்படிச் செய்து கொள்வதற்கு வேண்டிய தந்திரமும் முன் யோசனையுமுள்ளவர்கள் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள். இதற்கு எதிராக, நாம் மிகவும் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். ஜப்பானை ஆதரிப்பதால் இந்திய விடுதலை துரிதப் படுமானால் நாம் ஜப்பானை ஆதரிப்பதே முறை என்று கூடச் சொல்லலாம். அதாவது நம் விடுதலை அவ்வளவு பெரிய பிரச்னை என்று சொல்லுகிறேன். நம் நாட்டின் பரி பூர்ண விடுதலை—அதற்கு உண்மையும் அஹிம்சையுமான மார்க்கம்—இவ்விரண்டையும் தவிர நாம் கவனிக்க வேண்டுவது வேறொன்றில்லை. சைனாவுக்கு எவ்விதத்திலும் பிரமாதமான உதவி புரியக் கூடிய நிலைமையிலில்லாத நாம், வீணில் ஜப்பானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, அதன் மூலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குத் துணை புரிந்ததாக ஏற்பட்டு விட்டால் நம் நாட்டின் விடுதலைக்கு எதிராக வேலை செய்ததாகவே யாகும். மொத்தத்தில் ஏகாதிபத்தியத்துக்கு நம் அனுதாபமோ உதவியோ இருக்க முடியாதென்பது தெளிவு. ஆனால் நாம் அடிமைகளாயிருப்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு; நாம் கோரும் விடுதலை அந்த ஏகாதிபத்தியத்திலிருந்து என்பதை ஒரு கணமும் நாம் மறப்பதற்கில்லை. ஏகாதிபத்தியங்கள் ஒன்றுக் கொன்று முட்டிக் கொண்டே இராவணன் மூலபலம் போல் அழிய வேண்டுவது ஆண்டவன் சித்தம் போலும். இதில் நாம அவசரப்பட்டு, நம்மை மாட்டி வைத்திருக்கும் ஏகாதிபத்தியத்திற்கு எவ்விதத்திலும ஆதரவு கொடுக்காம லிருப்போமாக.

சீனாவில் ஜனங்களுடைய அந்தஸ்தை நான்கு விதமாகப் பிரித்திருக்கிறார்கள். முதலில் அறிஞர்கள்; இரண்டாவது விவசாயிகள்; மூன்றாவது தொழிலாளிகள்; நான்காவது வியாபாரிகள். ராணுவத்தில் சேர்ந்துழைப்பவர்கள், தனிச் சமூகத்தினராகக் கருதப் படுகிறார்கள்.

ஃ ஃ ஃ

சீனாவில் பல தேசத்தினரும் முதல் போட்டு பலவகைத் தொழில்கள் நடத்துகின்றனர். பிரிட்டிஷார் போட்டிருக்கிற மூலதனம் சுமார் 567,000,000 ரூபாய்; ஜப்பானியருடையது சுமார் 411,000,000 ரூபாய்; அமெரிக்காவினுடையது சுமார் 720,000,000 ரூபாய்.

ஃ ஃ ஃ

ஜப்பானின் தலை நகராகிய டோக்கியோவில், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அநுஷ்டித்துவரும் அந்நிய நாட்டுக் கொள்கைகளைப் பற்றி அபிப்பிராயங் கூறுவதற்கென்று ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் சுருக்கமாக இந்தச் சங்கத்தின் பெயர் SFEOOBP.

உலகப் பேர்வழிகள்

தளபதி ராபர்ட் அந்தோனி ஈடன், பிரிட்டிஷ் மந்திரிச் சபையினருள் மகா அதிருஷ்டசாலி. வயது நாற்பதுதான் ஆகிறது. இவ்வளவு பாலியத்தில் சென்ற 90 வருஷங்களாக யாருமே, பொறுப்புள்ள ஒரு மந்திரிப் பதவியை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் வகித்ததில்லை. இவர் ஐரோப்பிய யுத்தத்தில் சேவைசெய்தவர். பிறகு, 'யார்க்ஷைர்போஸ்ட்' என்ற ஒரு பத்திரிகையின் அரசியல் நிருபராக இருந்து, அநேக வியாசங்களை எழுதிக்கொண்டு வந்தார். அவைகளைப் பாராட்டின மேற்படி பத்திரிகையின் சொந்தக்காரர் தம் பெண்ணை இவருக்கு விவாகம் செய்து கொடுத்தார். பார்லிமெண்டில் 1923ம் வருஷம் ஸ்தானம் பெற்றார். 1926ம் வருஷம் ஸர் ஆஸ்டின் சேம்பர்லேனின் பார்லிமெண்டரி காரியதரிசியாக இருந்தார். 1934ம் வருஷம் ஜார் பிரதேசம் ஜெர்மனி வசம் ஒப்புவிக்கப் பட்டபோது இவர் பெயர் அதிகமாக அடி பட்டது. 1935ம் வருஷம், ஸர் சாமியல் ஹோருக்குப் பதில் அந்நியநாட்டு மந்திரியானார். பால்ட்வினுடைய பரமானந்த சிஷ்யரென்று இவரைச் சொல்லலாம். பால்ட்வினிடத்திலும், இப்பொழுதைய பிரதம மந்திரி நெவில்லி சேம்பர்லேனிடத்திலும் அதிகச் செல்வாக்குடையவர்.

பிரிட்டிஷ் மந்திரிச் சபை காரியாலயத்தில் இவருடைய ஆபீஸ் அறை நிரம்ப சாதாரணமானது. அதிகமான மேஜை நாற்காலிகள் இங்கே கிடையாது. இவருடைய மேஜையின் மீது மூன்று விதமான வர்ணப் பெட்டிகள் வைக்கப் பட்டிருக்கும். இவை நிறைய அரசாங்க ரகசிய தஸ்தவேஜுகள் இருக்கும். சிவப்பு வர்ணப் பெட்டியில் அவசரமாகக் கவனிக்கவேண்டிய தஸ்தவேஜுகள்; பச்சைப்பெட்டியில் கொஞ்சம் மெதுவாகக் கவனிக்கக் கூடிய தஸ்தவேஜுகள்; வெள்ளைப் பெட்டியில், சாதாரணமாகப் பார்தது அனுப்பவேண்டிய தஸ்தவேஜுகள். இப்படியாக ஏற்பாடு. ஈடனுக்கு, எந்த விஷயத்தையும் நுணுக்கமாகப் பார்க்கும் சக்தியுண்டு. அதனால்தான் இவ்வளவு சீக்கிரத்தில் இவர் முன்னுக்கு வந்தார். இவருக்கு லண்டனில், பெர்க்ளி தெருவில் ஒரு வீடு இருக்கிறது. பத்து வயதுள்ள சைமன் என்ற ஒரு பிள்ளையும், நான்கு வயதுள்ள நிகோலாஸ் என்ற ஒரு பிள்ளையும் இவருக்கு இருக்கிறார்கள்.



பேர்வழி—1

தளபதி ராபர்ட் அந்தோனி இடன்

பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி

பிறந்தது - 1897.

ஈடன் எதை எதை விரும்புகிறார்?

- விடாமல் சிகரெட் பிடிப்பது.
- கலர் படங்கள்.
- தன் வயதொத்தவர்களுடன் சரளமாகப் பழகுவது.
- புஷ்டி தரும் ஆகாரங்கள்.

ஈடன் எதை எதை வெறுக்கிறார்?

- ஆகாய விமானத்தில் பிரயாணஞ் செய்வது.
- சர்வாதிகாரிகள்.
- ஆமை ஓட்டுச் சட்டம் போட்ட மூக்குக் கண்ணாடியை பகிரங்கமாக அணிந்து கொள்ளுதல்.
- பிரசங்கம் செய்யப் போவதற்கு முன்னர் தம் பிரசங்கத்தை மனப்பாடம் பண்ணல்.
- மெதுவான கழுத்துப் பட்டைகள்.

மனித வாழ்க்கையின் லட்சியமென்ன?

—கமால் அதாதுருக்

Kamal Ataturk

கெமால் பாஷா என்று சாதாரணமாக அழைக்கப் படுகிற கமால் அதாதுருக், துருக்கியின் சர்வாதிகாரி. துருக்கிய பாஷை சம்பிரதாயப் படி கமால் அதாதுருக் என்றுதான் அழைக்க வேண்டும்.

'ஐரோப்பாவின் நோயாளி' என்று சொல்லப் பட்டு வந்த துருக்கியை ஒரு சில வருஷங்களுக்குள்ளே, வல்லரசுகளில் ஒன்றென மதிக்கத் தகுந்த நிலைமைக்குக் கொண்டு வந்த பெருமை கமாலையே சாரும். ஐரோப்பிய சர்வாதிகாரிகளுக்குள்ளே, கமாலுக்குத் தான் நாம் முக்கிய ஸ்தானம் கொடுப்போம். இதற்குரிய காரணங்களைச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது 'ஜோதி'யின் மூலமாக விளக்குவோம்.

துரதிருஷ்ட வசமாக, இந்தச் சர்வாதிகாரிகளைப் பற்றித் தவறான பிரசாரங்களே செய்யப் பட்டு வருகின்றன. அவர்களுடைய கொள்கைகளில், அவர்கள் அநுஷ்டிக்கிற முறைகளில் நாம் அபிப்பிராய வேற்றுமை கொள்ளலாம். அது வேறு விஷயம். ஆனால் அவர்களும் மனிதர்கள், அவர்களிடத்தில் மனிதத் தன்மை நிறைந்திருக்கிறது என்பதையாவது நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். உதாரணமாக, 'பால்கன் ஹெரால்ட்' என்ற பத்திரிகையில் கமால் அதாதுருக் எழுதியுள்ள இந்தக் கட்டுரையைப் பாருங்கள். ஒரு தனி மனிதனோ, ஒரு தேசமோ, எந்த லட்சியத்தோடு வாழ்க்கையை நடத்த வேண்டுமென்பதை எவ்வளவு அழகாக எடுத்துக் கூறுகிறான் இவன்? கீதாசாரியன் அருளிய நிஷ்காம்ய கர்ம யோகத்தைத் தான் இவன் வலியுறுத்துகிறான். காந்தியடிகள் போன்ற மகாத்மாக்களின் வாழ்க்கையெல்லாம், இந்த நிஷ்காம்ய கர்ம யோகமென்னும் முளையைச் சுற்றித் தான் சுழன்று கொண்டிருக்கின்றன என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோமல்லவா?

வாழ்க்கையைப் பற்றித் தத்துவ ஞானிகள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலினால், நான் ஒரு சமயம் அநேக புஸ்தகங்களைப் படித்ததுண்டு. வாழ்க்கையின் இருளடர்ந்த பாகத்திலேயே கண் செலுத்தின சில நூல்கள் 'வாழ்க்கை யென்னமோ அநித்தியம்; கடைசியில் எல்லாம் சூனியத்திலேதான் முடிகின்றன. ஆகையால் சாசுவதமற்ற இந்த இகலோக வாழ்க்கையில் சுகத்திற்கும் சந்தோஷத்திற்கும் இடமே கிடையாது' என்று கூறின.

இன்னும் அறிஞர்களாலே எழுதப் பட்ட வேறு சில நூல்களையும் நான் படித்தேன். அவை என்ன சொல்லுகின்றன வென்றால் 'முடிவென்னமோ சூனியம். அதனால் நாம வாழ்கிற வரையில் சுகமாகவும் சந்தோஷமாகவும் இருப்போம்' என்பதேயாகும்.

இரண்டாவதாகக் கூறப்பட்ட இந்த வாழ்க்கைத் தத்துவந்தான் எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் சில நிபந்தனைகளுடன்.

'மானிட சமூகத்தின் வாழ்க்கையெல்லாம் தன்னொருவனிடத்திலேயே பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது' என்று எவனொருவன் நினைக்கிறானோ அவனுக்குச் சந்தோஷமோ சந்துஷ்டியோ இராது. அவன் அந்த எண்ணத்தோடு அழிய வேண்டியது தான். வாழ்க்கையிலே இன்பங் காண்பதற்கு மூலாதாரமாயிருப்பது, தன்

நலத்துக்காக உழைப்பதல்ல; இனி வரப்போகும் சந்ததியாருக்கு உழைப்பதே யாகும். நியாய புத்தியுள்ள எந்த மனிதனும் வேறு விதமாகச் செய்ய முடியாது. வரப்போகுஞ் சந்ததியாருடைய நிரந்தர வாழ்வு, கௌரவம், சந்தோஷம் இவைகளுக் காக உழைப்பதன் மூலமாகத்தான் வாழ்க்கையில் ஒருவன் இன்பங் காண முடியும்.

ஆனால் அப்படி உழைக்கிறபோது,

இவர்தான் துருக்கி சர்வாதிகாரி

'இந்தமாதிரி நான் உழைக்கிறேனே, எனக்குப் பின்னடி வருகிறவர்கள் என்னுடைய இந்த நன்னோக்கத்தை அறிந்து கொள்வார்களா?' என்று தன்னைத்தான் எவனும் கேட்டுக் கொள்ள லாகாது. எந்தத் தலை முறையினருக்கும் தெரியாதபடி அமைதியாக இருந்து எவனொருவன் வேலை செய்கிறானோ அவன்தான் உண்மையிலேயே ஆனந்தபுருஷன் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ருசி உண்டு. சிலர் தோட்டப் பயிர் செய்வதில் அதிக சந்தோஷத்தை அடைகிறார்கள். இன்னும் சிலர் புஷ்பச் செடிகள் வைத்துப் பார்ப்பதில் திருப்தி காண்கிறார்கள். வேறு சிலர், மனிதர்களிடத்தில் மனிதத்தன்மையைப் பயிர் செய்வதில் இன்பம் நுகர்கிறார்கள்.

புஷ்பச் செடிகளைப் பயிரிடுகிறவன், அந்தப் புஷ்பங்களிலிருந்து ஏதேனும் பலனை எதிர் பார்க்கிறானா? இதே மனப்பான்மையுடன் தான், மனிதர்களைப் பயிர் செய்கிறவனும் நடந்து கொள்ள வேண்டும். இந்தமாதிரி எண்ணியும் நடந்தும் வருகிறவர்கள்தான், தங்கள் நாட்டுக்கும், சமூகத்திற்கும், வருங்கால வாழ்வுக்கும் உபயோக முள்ளவர்களா யிருக்க முடியும். தேசம், சமூகம் இவற்றின் சௌக்கியத்தை விட தன்னுடைய சௌக்கியமே பெரிதெனக் கருதுகிறவன் இரண்டாந்தரத்துமனிதனேயாவான். தங்களைப் பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறவர்களாலேயோ, தேசம், சமூகம் இவற்றினுடைய நல்வாழ்வு தங்களைப் பொறுத்தே இருக்கிறதென்று எண்ணிக்கொண்டிருக்கிறவர்களாலேயோ அந்தத் தேசத்தினுடையவும் சமூகத்தினுடையவும் சுகவாழ்வுக்கு வேலை செய்ய முடியாது. வருங்கால சந்ததியாரைப் பற்றி நினைத்தும், அவர்களுக்காக வேலை செய்தும் வருகிறவர்களால்தான், தேசம் வாழவும் முன்னேற்ற

மடையவும் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

ஒரு தனி மனிதன் காலமாகிவிட்ட பிறகு, (தேசத்தின்) முன்னேற்றம், தொண்டு செய்யும் ஆற்றல் முதலியனவெல்லாம் மறைந்து விடுமென்று நினைப்பது அறியாமையாகும்.

மேலே நான் குறிப்பிட்ட விஷயங்களை அந்தந்த சமூகத்தின் நிலைமைக்குத்தக்க மாதிரி அமைத்துக்கொள்ள வேண்டும். ஆனல் இன்றைய உலகத்தின் நிலைமை என்ன? எல்லாச் சமூகத்தினரும் பரஸ்பரம் உறவினராக நடந்து கொண்டு வருகிருர்கள். அல்லது அப்படி நடந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிருர்கள். எனவே, தன் தேசம் செளக்கியமாயும் சுபிட்சமாயும் இருக்க வேண்டுமென்று நினைப்பது போல், உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் அப்படியே செளக்கியமாயும் சுபிட்சமாயும் இருக்க வேண்டுமென்று ஒவ்வொருவனும் கோர வேண்டும். அப்படிக் கோருவது மட்டுமல்லாமல், மற்ற நாடுகளின் செளக்யத்திற்காக உழைக்கவும் வேண்டும்.

இந்த மாதிரியான வழிகளில் வேலை செய்வதனல் எவ்வித நஷ்டமுமில்லையென்பதை எல்லா அறிஞர்களும் ஒத்துக் கொண்டிருக்கிருர்கள். ஏனென்ருல் உலக நன்மைக்கு உழைப்பதன் மூலமாகத்தான் ஒருவன் தன்னுடைய சாந்தியையும் சந்தோஷத்தையும் தேடிக் கொள்ள முடியும். உலக சமூகங்களினிடையே பரஸ்பர சமாதானம், நல்லெண்ணம் முதலியன ஏற்படாவிட்டால், எந்த ஒரு தேசமும் அஃது எவ்வளவு கஷ்டப் பட்டு வேலை செய்த போதிலுங் கூட தனி முறையில் சாந்தி பெற முடியாது. என்னல் நேசிக்கப் படுகிற, என்னுடைய ஜனங்களுக்கு இதனையே நான் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

நேசத் தலைவர்களாயிருக்கப் பட்டவர்கள், தங்கள் தேச க்ஷேமத்தின் அச்சாணிபோல் தாங்கள் இருக்க வேண்டுமென்று விரும்புவது சகஜந்தான். ஆனல் இதே நல்லெண்ணத்தை எல்லாத் தேசத்தினருக்கும் அவர்கள் புகட்ட வேண்டும்.

இப்பொழுது நடக்கிற ஒரு சிறிய சம்பவம், அஃது எவ்வளவு தொலை தூரத்திலே நடந்த போதிலுங் கூட, ஒரு தேசத்தையோ, உலகத்தினையோ முற்றிலும் பாதிக்கக் கூடியதாக இராது என்று நாம் எப்படி நிச்சயமாகச் சொல்லி விட முடியும்?

துருக்கியும் அதன் சிநேகித தேசங்களும் பலம் பொருந்தியவைகள். எங்கிருந்தும் எந்த விதமான உதவியையும் நாங்கள் தேடவேண்டியதில்லை. அதனலேயே உலகமனைத்தும் சாந்தமயமாய் இலங்க வேண்டு மென்று நாங்கள் விரும்புகிருேம். ‘உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒருசிறு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்குமாயின் அதைப் பற்றி எங்களுக்கென்ன கவலை’ என்று நாங்கள் சொல்ல மாட்டோம். அப்படிச் சொல்லவுங் கூடாது. நமது தேசத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒரு கொந்தளிப்பை எப்படி சூட்சுமமாகக் கவனித்து அதற்குப் பரிகாரந் தேடுவோமோ அப்படியேதான் மற்ற இடங்களிலே நடக்கிற கொந்தளிப்புகள் விஷயத்திலும் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

ஒரு சம்பவம் எவ்வளவு தொலை தூரத்திலே நடந்த போதிலும் மேலே கூறப்பட்ட தத்துவக்கோல் கொண்டு தான் அதனை அளக்க வேண்டும். அப்படிப் பார்த்தால்தான், மனிதர்களோ, தேசங்களோ, அரசாங்கங்களோ,

சுய நலத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஒரு தனி மனிதனுக்கோ அல்லது ஒரு தேசத்திற்கோ, சுய நலம் என்பது கூடவே கூடாது. அது தீமையிலேயே கொண்டு விடும்.

நம்முடைய நலன்களை முதலில் தேடிக் கொள்வோம். அதற்குண்டான சாதனங்களையும் தேடிக் கொடுப்போம். அதற்குப் பிறகு உலக நன்மையில் நாம் ஈடுபட வேண்டாமா?

இங்கே ஒரு சிறிய உதாரணம் தருகிறேன். நான் ஒரு யுத்த வீரன். ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது, நான் ஒரு ராணுவத்தின் தலைவனாயிருந்தேன். துருக்கியின் மற்றப் பாகங்களிலும் தனித் தனிச் சேனைகளுக்குத் தளகர்த்தர்கள் இருந்தார்கள். நான், எனது படையைப் பற்றி மட்டும் கவனஞ் செலுத்துவதில்லை; எல்லாப் படைகளின் நிலைமையையுங் கவனித்துக் கொண்டிருப்பேன். ஒரு சமயம், எர்ஸெரூம் என்ற போர் முனையில், துருப்புகளை எங்ஙனம் அணிபடுத்துவது என்பதைப்பற்றித் திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் பக்கத்திலிருந்த மெய்க் காவலன், 'உங்களுக்குச் சம்பந்தப் படாத விஷயங்களைப் பற்றி நீங்கள் ஏன் தொந்திரவு எடுத்துக் கொள்கிறீர்கள்?' என்றான். 'மற்றப் படைகளின் நிலைமையைத் தெரிந்து கொள்ளாமல், என் படையை நான் எப்படி நடத்திச் செல்வது?' என்று நான் பதில் கூறினேன்.

ஒரு தேசத்தை நடத்திச் செல்வதையோ அல்லது அதனை ஆள்வதையோ கடமையாகக் கொண்டுள்ளவர்கள், இந்த விஷயத்தைக் கவனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

துருக்கியைப் பற்றி

ஆசியா கண்டத்தையும் ஐரோப்பா கண்டத்தையும் சந்திக்கச் செய்கிறது துருக்கி. ஆசியா கண்டத்தில் சுமார் 285,246 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசமும், ஐரோப்பா கண்டத்தில் சுமார் 9,256 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசமும் துருக்கியைச் சேர்ந்தது. ஐரோப்பா கண்டத்தின் தென்கிழக்கு மூலையில் மத்திய தரைக் கடலுக்குக் கிழக்கேயுள்ள இந்தச் சுதந்திரக் குடியரசு நாட்டின் மொத்த ஜனத்தொகை உத்தேசம் 13,660,275. கமால் அதாதுருக், குடியரசு அரசாங்கத்தின் தலைவர். துருக்கியின் தலை நகரம் அங்காரா.

கமால் அதா துருக், துருக்கியின் நிருவாகத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, பல மாறுதல்கள் அந்நாட்டில் ஏற்பட்டிருக்கின்றன. கோஷா வழக்கத்தில் ஆழ்ந்து போயிருந்த துருக்கியப் பெண்கள் இப்பொழுது ராணுவப் பயிற்சி பெறுகிறார்கள். எவ்வளவு விபரீதமான மாறுதல்! இன்னும் வெகு சீக்கிரத்தில் ஆறுலட்சம் ஸ்திரீ போர் வீரர்கள், யுத்தகளஞ்செல்லத் தயாரா யிருப்பார்கள்.

கமால்அதா துருக் செய்தவற்றுள் முக்கியமானது பாஷைச்சீர்திருத்தம் என்று சொல்லலாம். அராபிய எழுத்துக்களில் எழுதப்பட்டு வந்த துருக்கிய பாஷையை, ரோமன் எழுத்தில் எழுதுமாறு செய்வித்தான். தவிர, அராபியச் சொற்கள் கலப்பில்லாமல், அராபிய பதங்களுக்குப் பதில் துருக்கிய மொழிகளையே கண்டு பிடித்துப் போட்டு, துருக்கிய பாஷைக்கே ஒரு தனிச் சிறப்பை ஏற்படுத்திக் கொடுத்தான்.

மதமும் அரசியலும் அநேக நூற்றாண்டுகளாகவே துருக்கியில், பிரிக்க முடியாத ஒரு பின்னலாக இருந்தது. அதைச் சிக்கறுத்தவன் கமால் அதா துருக். இப்பொழுது ஐரோப்பிய வல்லரசுகள், துருக்கியினிடம் ஒரு மதிப்பு வைத்திருக்கின்றன வென்றால் அதில் என்ன ஆச்சரியம்?

நில்-ஓடாதே!

—யாரோ பாடியது

1 எண்ணிய கருமம் பண்ணி முடிக்க இசையாமற் போகலாம்;
செல்லும் பாதை கல்லும் முள்ளும் கரடுமாய்க் கோணலாம்;
கையிருப்புக் குறைய கடனே குவியலாம்;
உயிரில்லாத நகையும் உஷ்ணமான பெருமூச்சும் வரலாம்;
கவலையோ தலைக்குமேல் அமுத்தி நிற்கிறது;
ஓய்வு கொள் மகனே! ஆனால் ஓடி விடாதே.

2 வாழ்க்கை, சந்துகளும் பொந்துகளும் நிறைந்த பாதை,
இவற்றில் சென்று பார்த்தால்தான் வழி தெரியும்;
இருக்கும் இடத்தில் ஒட்டிக் கொண்டிருந்தால் தோல்வியும் வெற்றியாக மாறலாம்;
மெதுவாகச் செல்; சோர்ந்து விடாதே, முடியாது என்று சொல்லி விடாதே.
இன்னும் ஓர் அடியில் உன் லட்சியத்தை அடைந்து விடலாம்.

3 சோர்ந்து போகிற, தட்டுத் தடுமாறி நடக்கிற ஒருவனுடைய கண்ணுக்குத் தென்படுகிறதைக் காட்டிலும் நமது லட்சியம் சமீபத்தில் இருக்கலாம்;
மறு நாள் காலை வெற்றி கிடைப்பது நிச்சயம்;
ஆனால் இன்றிரவு பின்னோக்கி ஓடிப்போகாதே.
பொழுது விடிந்ததும் பார்ப்பாய்;
கைக்கெட்டியது வரய்ச் கெட்ட வில்லையே யென்று வருந்துவாய்.

4 வெற்றி யென்பது என்ன? தோல்வியின் மறு புறம்;
சந்தேகமென்னும் மேகத்தின் பிரகாசமான விளிம்பு;
லட்சியத்திற்கு எவ்வளவு அருகாமையில் இருக்கிற யென்பது உனக்கே தெரியாம லிருக்கலாம்.
தூரத்தி லிருப்பதுபோல் உனக்குத் தோன்றலாம்; ஆனால் அது மிகச் சமீபத்தில் இருக்கலாம்.
ஆதலின் அதிகமாகத் தாக்கப்பட்டால் தீவிரமாகப் போராடு.
கலங்குலைந்த நிலைமையில்தான் நீ இடத்தை விட்டுப் பெயரக்கூடாது.

உலகத்திலுள்ள பணக்காரர்கள்—

சில ருசிகரமான விவரங்கள்

நாம் ரெயிலிலே பிரயாணஞ்செய்கிற போதோ அல்லது தனியாக எங்கேனும் உலாவிக் கொண்டிருக்கிற போதோ, எத்தனையோ மனக்கோட்டைகள் கட்டுகிறோம். நமக்கும் ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்று நினைக்கிறபோது, நம்மை யறியாமல் ஒரு சந்தோஷம் உண்டாகிறது. எவ்விதக்கவலையுமின்றி நிம்மதியாக இருக்கலாமென்ற ஒரு தன்னம்பிக்கை உண்டாகிறது. ஆனால், பணக்காரர்களென்று மதிக்கப்படுகிற எல்லாருமே மன நிம்மதியோடு இருக்கிறார்களா? இஃது ஒரு சங்கடமான கேள்வி. தவிர, கோடீசுவரர்களைப் பற்றி நாம் நினைக்கிற போதே, அவர்கள் பணத்தின் மீது புரண்டு கொண்டிருப்பார்களென்றும் பன்னீரில்தான் ஸ்நானம்செய்வார்களென்றும்என்னென்னமோ எண்ணிக் கொண்டு விடுகிறோம். ஆனால் இவை யெல்லாம் கற்பனைகளே.

உலகத்திலுள்ள முக்கியமான சில கோடீசுவரர்கள் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கையை நாம் சிறிது அலசிப் பார்த்தோமானால் எளிய, இயற்கையான வாழ்வையே அவர்கள் விரும்புகிறார்கள் என்பது நன்கு புலப்படும்.

உலகத்துக் கோடீசுவரர்களில் முதன்மை ஸ்தானம் பெறுகிறவர் நமது இந்தியா தேசத்தைச் சேர்ந்தவர் என்று நாம் தெரிந்து கொள்கிற போது நமக்கு, இந்தத் தரித்திர தசையிலுங் கூட, ஒருவித பெருமை உண்டாகத்தான் செய்கிறது. அவர் தான் ஹைதராபாத் சமஸ்தானத்து நைஜாம் மன்னர். சுமார் ஐம்பது வயது நிரம்பிய இவர் மிகவும் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்துகிறார். இவரிடத்திலேயுள்ள பொக்கிஷங்கள் ஏராளமானவை. இவரிடம் சுமார் 3,750,000,000 ரூபாய் ரொக்கமாகவும் சுமார் 750,000,000 ரூபாய் நகையாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. தவிர, சமஸ்தானத்திலிருந்தும் சொந்த சொத்துக்களிலிருந்தும், சராசரி தினம்15,000 ரூபாய் வருமானம் கிடைப்பதாகவும் சொல்லப் படுகிறது. இவரிடத்தில் 277 காரெட் நிறையுள்ள ஒருவைரம் இருக்கிறது. இதன் விலை எவ்வளவுஎன்று இன்னும் எவராலும் மதிப்பிட முடியவில்லை. இவருக்கு மொத்தம் முப்பது அரண்மனைகள் இருக்கின்றன. இவ்வளவு பெரிய பணக்காரர், ஆடம்பரமற்ற வாழ்க்கையையே நடத்துகிறார் என்று சொன்னால் அது ஆச்சரியப் படத்தக்கது தானே. நைஜாம் மன்

நைஜாம் மன்னர்

மைசூர் அரசர்

பரோடா அரசர்

னர், சாதாரண உடை உடுத்து, சாதாரண உணவையே உண்கிறார். தமது அரண்மனைகள் ஒன்றில் வசிப்பதில் என்ன இன்பங் காண்கிறாரோ அதே இன்பத்தை ஒரு கூடாரத்திலும் இவர் காண்கிறார். இவர் ஒரு கவிஞர். உருது பாஷையில் அநேக கவிகளை இயற்றி யிருக்கிறார்.

நைஜாம் மன்னரை உத்தேசிக்கையில் மைசூர், பரோடா, பாடியாலா முதலிய சமஸ்தான மன்னர்கள் ஏழைகள் என்றுதான் சொல்ல வேண்டும். மைசூர் மன்னரிடத்தில் சுமார் 45,000,000 ரூபாய் நகைகள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது.

நாடில்லாத அரசராகவும் ஆனால் பெரிய கோடீசுவரராகவும் இருக்கக்கூடிய பெருமை கனம் ஆகாகானுடையது. முஸ்லீம்களில் ஒரு பகுதியினருக்கு இவர் மத குருவாக இருக்கிறார். உலகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் இவருக்குக் காணிக்கைகள் கிடைக்கின்றன. இதனால் இவர் ஒரு பெரிய கோடீசுவரராக இருக்கிறார். இவருக்கு ஏராளமான பந்தயக் குதிரைகள் இருக்கின்றன. இப்பொழுது இவர் சர்வதேச சங்கத்தின் தலைவராயிருக்கிறார்.

இனி, மேனாட்டுக் கோடீசுவராகளைப்பற்றிச் சிறிது கவனிப்போம். உலகத்தில் நடைபெறும் கப்பல் வியாபாரத்தில் பெரும் பகுதி எல்லர்மான் கம்பெனி வசம் இருக்கிறதென்பது வியாபார நண்பர்களுக்குத் தெரியும். இந்தக் கம்பெனியின் சொந்தக்காரர் ஸர் ஜான் எல்லர்மான். இவருக்குச் சொந்தமாகச் சுமார் ஆயிரம் கப்பல்களுக்கு மேல் இருப்பதாகச் சொல்

பாடியாலா வேந்தர்

ஸர் ஜான் எல்லர்மான்

லப் படுகிறது. ஸர் ஜான் எல்லர் மானுடைய ஆஸ்திமதிப்பு சுமார் 75 கோடி ரூபாய். இவருக்கு இப்பொழுது 30 வயதாகிறது. மிகவும் சங்கோஜமுள்ளவர். தன்னை எல்லர்மான் என்ற பெயரிட்டு அழைப்பதைக் கூட இவர் சில சமயங்களில் விரும்புவதில்லை. மிஸ்டர் பவுண்டென் அல்லது மிஸ்டர் பாண்ட் என்று சாதாரண ஒரு மனிதனை அழைக்கப் படுவதையே இவர் விரும்புகிறார். இவர் வருஷத்தில் 15,000,000 ரூபாய் வருமான வரியாக மட்டும் கட்டுகிறார். ஆனால் இவருடைய வீட்டின் மாதச் செலவு சுமார் 2500 ரூபாய் தான். இங்கிலாந்திலுள்ள பெர்க் ஷைர் மாகாணத்தில் ஒரு சாதாரண வீட்டில் தான் இவர் வசிக்கிறார். இவருடைய மனைவி, ஒரு பணக்கார யூத குடும்பத்தைச் சேர்ந்தவள். இருவரும் ஆடம்பரமற்ற அந்நியோந்ய வாழ்க்கையையே நடத்துகிறார்கள். எல்லர்மான், பொழுது போக்குக்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தொழில்கள் ஆமை, முயல், முதலியவைகளை வளர்த்து அவைகளோடு விளையாடுவதுதான். தவிர, தன்னிடத்திலுள்ள ஒரு சிறிய மோடார் வண்டியை ஏதாவது 'சில்மிஷம்' செய்து கொண்டே இருப்பார். எல்லர்மான் தம்பதிகள் அதிகமாக வெளியிலே கூடவருவது கிடையாது. சமீபத்தில் லண்டனிலே பிரபல பத்திரிகைகள் என்று கௌரவிக்கப்படுகிற 'ஸ்பியர்' 'டாட்லர்' 'ஸ்கெச்' 'இல்லஸ்ட்ரேடெட் லண்டன் நியூஸ்' என்ற பத்திரிகைகளை நடத்துகிற கம்பெனியில் பெரும்பகுதி ஷேர்களை சுமார் 75 லட்சம் ரூபாய் கொடுத்து இவர் வாங்கியிருக்கிறார்.

எல்லர்மானுக்கு அடுத்த படியாக வெஸ்ட்மினிஸ்டர் பிரபுவைச் சொல்லலாம். இவருடைய ஆஸ்தி மதிப்பு சுமார் 300,000,000 ரூபாய் என்று சொல்கிறார்கள். 'என்னுடைய ஆஸ்தி எவ்வளவு என்று என்னால் நிர்ணயித்துச் சொல்ல முடியாது' என்று இவர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். இவருக்கு லண்டனில் மட்டும் 600 ஏகரா விஸ்தீரணமுள்ள பூமி இருக்கின்றது. அவற்றில் ஏராளமான வீடுகளைக் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார். இது தவிர பிளிண்ட் ஷைர் என்ற மாகாணத்தில் 30,000 ஏகரா பூமியிருக்கிறது. படகோட்டுவது, வேட்டையாடுவது ஆகிய இரண்டும் இவருக்குப் பிரியமானவை. சில வருஷங்களுக்கு முன் இவர் சார்லி சாப்லினுடன், பிரான்சில் வேட்டையாடி அதன் விளைவாக ஒரு பவுன் அபராதம் விதிக்கப் பட்டார்.

ஜே. பி. மார்கன்

லார்ட் நப்பீல்ட்



லார்ட் பேவர்ப்ரூக்

பெரிய பணக்காரர்களில் அதிக நன்கொடை கொடுத்தவர் தொகுதியில் லார்ட் நப்பீல்ட் என்ற கோடீசுவரரைச் சேர்க்கவேண்டும். இவர் இது வரை 150,000,000 ரூபாய் தர்மத்திற்காகச் செலவழித்திருக்கிறார். 'லார்ட் நப்பீல்டினுடைய ஆஸ்தியெல்லாம் செலவழிந்து போயிருக்கும். அவ்வளவு தானம் செய்திருக்கிறார்' என்று கூடச் சிலர் சொன்னார்கள். ஆனால் இவருடைய ஆஸ்திமதிப்பு சுமார் 300,000,000 ரூபாயென்றும், இவருடைய சராசரி வருஷ வருமானம் 12,000,000 ரூபா யென்றும் கணக்கிட்டிருக்கிறார்கள்.

நப்பீல்டுக்கு வந்த வாழ்வெல்லாம் சென்ற 25 வருஷ கால வாழ்வுதான். சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்னே, இவர் ஆக்ஸ்போர்ட் நகரத்தில் சைகிள் ரிபேர் செய்து கொண்டிருந்தார். 1910ம் வருஷத்தில் மோடார் வண்டிகள் தயாரிக்கும் தொழிலில் இறங்கினார். 1914ம் வருஷத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி, சுமார் 400 வண்டிகளை முதல் வருஷத்தில் தயார் செய்தார். இப்பொழுது 'மாரிஸ்' என்று ஓடுகிற மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இவருடையதுதான. இவருடைய ஆதிப்பெயர் மாரிஸ் என்பது. அந்தப் பெயரையே இவர், தமது மோட்டார் வண்டிகளுக்கும் வைத்தார்.

நப்பீல்ட், தேம்ஸ் நதிக்கரையில் உள்ள ஒரு சிறு வீட்டில் மிக எளிய முறையில் வசிக்கிறார். இவர், பொது வாழ்வில் ஈடுபடுவதே கிடையாது. ஏன்? அதைக் கண்டால் வெறுப்புங்கூட.

லார்ட் நப்பீல்டுக்குப் போட்டியாக மற்றொரு நப்பீல்ட் ஏற்பட்டிருக்கிறார். இவரை ஸ்காத்லாந்து நப்பீல்ட் என்று அழைக்கிறார்கள். இவர் பெயர் டாக்டர் போலாக் என்பது. வைத்தியத்

தொழிலில் ஏராளமான பொருள் சம்பாதித்ததோடு, பழுதுபட்டுப்போன கப்பல்களை வாங்கி, அவைகளைப் பிரித்துத் தனித்தனிச் சாமான்களாக விற்பனை செய்து அதிக திரவியம் சேர்த்தார். அதிகமாக தர்மமுஞ்செய்து வருகிறார். இவர் எடின்பரோ சர்வகலாசாலைக்கு 3,750,000 ரூபாய் முன்னர் கொடுத்திருப்பதோடு இப்பொழுது மறுபடியும் ஒரு பெரிய தொகை கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

சில பணக்காரர்கள் இருக்கிறார்கள்; நல்ல தர்ம சிந்தனையுடையவர்கள். ஏராளமான பொருள்களை தர்மத்திற்காகச் செலவழிக்கிறார்கள். ஆனால் பிறருக்குத்தெரியாமல் கொடுப்பதிலேயே இவர்கள் பிரியப்படுகிறார்கள். பத்திரிகைகளில் தங்கள் பெயர் வெளியானால் இவர்களுக்கு அதிகக் கோபம் வருகிறது. அப்படிப்பட்டவருள் ஜோஸப் ராங்க் என்பவர் ஒருவர். இவர் ஒரு பெரிய மாவு மில்லின் சொந்தக்காரர். இவருடைய ஆஸ்தி மதிப்பு சுமார் 375,000,000 ரூபாய். இவருக்கு இப்பொழுது 81 வயதாகிறது. ஆனாலும் மிகவும் சுறுசுறுப்பாக, தம் வேலைகளைக் கவனிக்கிறார். அநேக நல்ல காரியங்களுக்கு இவர் தருமஞ் செய்திருக்கிறார். வெஸ்லியன் மிஷன் ஸ்தாபனத்திற்கு மட்டும் இவர் சுமார் ரூ. 75,000,000 தர்மமாகக் கொடுத்திருக்கிறார்! ஆனால் இந்த விஷயம் எப்பொழுதாவது எந்தப் பத்திரிகையிலாவது விளம்பரப்படுத்தப் பட்டிருக்கிறதா? இல்லவே இல்லை. ஜோஸப் ராங்குக்கு வெளிப்பகட்டு கொஞ்சங்கூட பிடிக்காது. இவரைப் பத்திரிகை நிருபர்கள் ஒரு முறைகூட பேட்டி கண்டு பேசியது கிடையாது. ஒரு முறையோ இரண்டு முறையோதான் இவரைப்போடோ பிடிக்க முடிந்தது.



லார்ட் ராதர் மியர்.

ஸர் பிலிப் ஸாஸூன்

வெஸ்ட் மினிஸ்டர் பிரபு

1874ம் வருஷத்தில் ஜோசப் ராங்க் தமது 21வது வயதில், 3,750 ரூபாய் விலை கொடுத்து ஒரு மாவு மில்லை வாங்கினார். அதுதான் அப்பொழுது இவருக்கு இருந்த ஆஸ்தி. பிறகு தம்முடைய மனோதைரியத்தினால் ஷேர் மார்க்கெட்டுகளில் பணம் புரட்டி ஏராளமான மில்களை வாங்கி நடத்த ஆரம்பித்தார். ஐரோப்பிய யுத்த சமயத்தில் கொள்ளை லாபம் கிடைத்தது. ஒரு சமயம் ஸ்ரீமான் லாயிட் ஜார்ஜுக்கு எவ்வித லாபமும் இல்லாமலே மாவு சப்ளை செய்யப் படும் என்று இவர் ஒரு கடிதம் எழுதினார். ஆனால், லாயிட் ஜார்ஜ் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. யுத்த காலத்தில் இவர் அடைந்த லாபத்தில் ஒரு பகுதியை—அதாவது 60,000,000 ரூபாயை மெதாடிஸ்ட் மாதா கோவில் ஸ்தாபனத்திற்கு தருமமாகக் கொடுத்தார்.

இவ்வளவு பணக்காரராக இருந்தும் ஜோசப்ராங்க் சாதாரண ஒருகுடியானவனுடைய வாழ்க்கையையே நடத்துகிறார். ஸர்ரே மாகாணத்தில் ரேயிகேட் என்ற ஊரிலுள்ள ஒரு சிறிய வீடுதான் இவருடைய வாசஸ்தலம். ஞாயிற்றுக்கிழமை தோறும் கால்நடையாகப் பக்கத்துக் கிராமத்திலுள்ள ஒரு மாதா கோவிலுக்குச் செல்வார். அப்பொழுது தமக்குப் பிரியமான சில தின்பண்டங்களை ஒரு காகிதத்தில் சுருட்டி எடுத்துக் கொண்டு போய் வழியிலே எங்கேயாவது நின்று கொண்டு தின்பார். ஒரு சமயம் அரசாங்க நிர்வாகத்திலிருந்த அரசியல் கட்சியினர், இவரிடம் வந்து 'உங்களுக்கு லார்டு பட்டம் கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். அதற்கு இவர் புருவத்தை நெறித்துக் கொண்டு 'அதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? ஜோ ராங்க் என்று சொன்னாலே எல்லா ஜனங்களும் என்னைத் தெரிந்து கொள்வார்கள். அது போதும் எனக்கு' என்றார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் விநோதமான பணக்காரர் என்று அழைக்கப்படுகிற சர் ஆபே பெய்லி என்பவருடைய வாழ்க்கை மகாவிசித்திரமானது. இவர் ஆரம்பத்தில் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று தங்கம் எடுக்க முயன்றார். ஆனால் அதில் வெற்றிபெறவில்லை. பிறகு, ஜீவனோபாயமாக ஒரு சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்து குதிரை ஏறி சவாரிசெய்யும் வேலையாளாக இருந்தார். பின்னர், பயில்வானாக இருந்து காலட்சேபம் நடத்தினார். ஜோஹான்னெஸ்பர்க் நகரத்திலே சுகாதார இன்ஸ்பெக்டராக இருந்து வேலை பார்த்தார். போயர் யுத்தத்திற்கு முன்னர், தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற குழப்பத்தில் சம்பந்தப்பட்டு இரண்டு வருஷம் சிறைவாசம் அநுபவித்தார். பிறகு விடுதலை அடைந்து போயர் யுத்தத்திலே கலந்து கொண்டார். அதற்குப் பின்னர்தான் இவருடைய வாழ்க்கை ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் ஒரு ஷில்லிங்—அதாவது முக்கால் ரூபாய்—மூலதனம்வைத்து பங்கு மார்க்கெட்டில் தரகு வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். இதிலிருந்து படிப்படியாக விருத்தியாகி கடைசியில் ட்ரான்ஸ்வால் தங்கச் சுரங்கங்கள் பலவற்றைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். பெயிலிக்கு இப்பொழுது வயது 85. இவருக்கு முடக்கு வாதம், இசிவு, குடலில் கோளாறு, இருதய நோய் எல்லாம் உண்டு. சென்ற வருஷம் ஒரு பக்கத்துக் காலையும் துண்டித்துவிட்டார்கள். ஆனாலும் இப்பொழுது திடகாத்திரமாக இருந்து தமது வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டு வருகிறார்.

இன்னும் சில கோடீசுவரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெயரே ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் மட்டும் எங்கும் பிரசித்தமாயிருக்கின்றன. சுமார் 105 வருஷங்களுக்கு முன்னே எகிப்து தேசத்தில் துருக்கியப் படைகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அப்பொழுது திடீரென்று ஒரு வெடி குண்டு எகிப்தியர் நடுவில் வந்து விழுந்தது. அந்த வெடி குண்டைச் சுற்றியிருந்த காகிதம் மட்டும் கெடாமல் இருந்தது. அதில் ஒரு புகை யிலையை வைத்துச் சுருட்டி நெருப்புப் பற்ற வைத்தார்கள். அதிலிருந்து புகையும் நெடியும் கிளம்பின. இது எகிப்தியப் படைகளுக்கு மிகவும் பிடித்தமாயிருந்தது. அது முதற் கொண்டுதான் சிகரெட் பிடிக்கிற வழக்கம் ஏற்பட்டது. இந்தப் பழக்கத்தை ஆதாரமாகவைத்துக் கொண்டு பெரியகோடீசுவர ரானவர் லார்டு டல்வெர்ட்டன் என்பவர். இவர் ஏராளமான பொருள்களைத் தர்மத்துக்குக் கொடுத்திருக்கிறார். இவர் பாட்ஸ்போர்டு என்ற ஊரில், செடி கொடிகள் நிறைந்த ஓரிடத்தில் சிறிய வீடு ஒன்று அமைத்துக்கொண்டு வசிக்கிறார். மாடுகளை வைத்து மேய்ப்பதில் இவருக்கு அதிக விருப்பம். தவிர, பழைய கட்டை வண்டிகள் எங்கெங்கு அகப்படுகின்றனவோ அவைகளை விலை கொடுத்து வாங்கிப் பொருட் காட்சிபோல் வைத்திருக்கிறார்.

ஜோஸப் ராங்க்

வட்டித் தொழில் செய்து பெரும் பணக்காரர் ஆனவருள் ஜே. பி. மார்க்கன் என்பவர் ஒருவர். இவர் அமெரிக்கர். இவருடைய தகப்பனார் இவருக்கு 240,000,000 ரூபாயை ஆஸ்தியாக வைத்துவிட்டுப் போனார். அதை இவர் விருத்தி செய்தார். அமெரிக்காவில் 'யுனைடெட்ஸ்டேட்ஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன்' என்ற ஒரு எஃகுத் தொழிற்சாலை ஸ்தாபனம் உண்டு. இதன் மூலதனம் கோடிக்கணக்கில். இதற்கு இவர்தான் தலைவர். 1915-ம் வருஷ ஐரோப்பிய யுத்தத்தின்போது நேசக்கட்சியினருக்கு கொஞ்சம் பொருளாதாரச் சறுக்கல் ஏற்பட்டது. அப்போது இவர் 1,500,000,000 ரூபாய் கடன் கொடுத்துக் கைதூக்கி விட்டார். பங்கு மார்க்கெட்டுகளில் இவருடைய வியாபார மெல்லாம் பத்துக் கோடி, நூறு கோடிக் கணக்கில் இருக்குமே தவிர லட்சக்கணக்கில் இராது.

ஐரோப்பா கண்டத்தின் மற்றொரு விநோதமான கோடீசுவரர் ஜுவான் மார்ச் என்ற ஸ்பானிஷ்காரர். இவருக்கு எழுதப் படிக்கக் கூட அதிகமாகத் தெரியாது. ஆரம்பத்தில் பன்றி மேய்ப்பதை ஜீவனோபாயமா

கக் கொண்டு வாழ்க்கையைத் தொடங்கினார். இப்பொழுது ஸ்பெயினில் நடக்கிற குழப்பத்திற்கு இவரது செல்வாக்குத்தான் காரணம் என்று ஊகிக்கப்படுகிறது. இவருடைய ஆள் தான் தளபதி பிராங்கோ. வட ஆப்ரிக்காவின் மூர் ஜாதியினரை, பிராங்கோ கட்சியில் சேரும்படி செய்வதற்காக இவர் சுமார் 125,000,000 செலவழித்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. சமீபத்திலே கூட இவர் முஸோலினியிடம் தூது சென்றார் என்ற செய்தியைப் பத்திரிகைகளில் நேயர்கள் படித்திருக்கலாம். பிராங்கோ படையினரின் செலவு வகையராக்களுக்கு இவர் இது வரை, 3,000,000,000 ரூபாய் செலவழித்திருக்கிறாராம்.

உலகத்தின் முக்கியமான நகரங்களில் பாடா பூட்ஸ் கம்பெனி என்ற ஸ்தாபனங்கள் இருப்பதை அன்பர்கள் பார்த்திருக்கலாம். இந்த ஸ்தாபனத்தின் தலைவர் ஜே. ஏ. பாடா என்பவர் உலகத்துக் கோடீசுவரர்களில் ஒருவர். இவர் ஜெக்கோ ஸ்லோவேகிய வாசி. ஐரோப்பிய யுத்தத்திற்குப் பின்னடி உருவடைந்த நாடு இது. சுமார் இருபது வருஷ காலத்திற்குள் இந்த நாடு பல துறைகளிலும் முன்னேறி பெண்ஸில் முதற்கொண்டு, பல சாமான்களை உலகத்தின் பல பாகங்களுக்கும் ஏற்று மதி செய்து கொண்டு வருகிறது. அந்த நாட்டைச் சேர்ந்த பாடா ஒரு சக்கிலியன் பிள்ளை. பாலியத்தில் இவர் தன் தகப்பனாருடைய செருப்புகளை வீதி தோறும் எடுத்துச் சென்று விற்று வந்தார். பின்னர், பெருவாரியாக பூட்ஸ்களை உற்பத்தி செய்தால்தான் லாபம் கிடைக்கு மென்று கருதி ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தார். இப்பொழுது இந்தத் தொழிற்சாலையில் வருஷந்தோறும் 30,000,000 ஜதை பூட்ஸ்கள் தயாராகின்றன. 30,000 தொழிலாளர்கள் இதில் வேலை செய்கிறார்கள். இவர்களுக்கென்று தனியாக ஒரு நகரம் அமைக்கப்பட்டிருக்கிறது. தமது தொழிற்சாலைக்கும், தொழிலாளர்களுக்கும் வேண்டிய மூலப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் இவரே தயார் செய்கிறார்; வெளியிடங்களிலிருந்து வாங்குவது கிடையாது. இடையில் தரகு இல்லாமையினால் இவரால் உற்பத்தி செய்யப்படும் பூட்ஸ்கள் குறைந்த

லார்ட் ஆஸ்டின்

விலையில் விற்கப்படுகின்றன. உலகத்தின் பல பாகங்களிலும் இவருக்கு ஐயாயிரம் கடைகள் இருக்கின்றன. இவைகளின் மூலமாகவே தம்முடைய பூட்ஸ்களை விற்பனை செய்கிறாரே தவிர, ஏஜெண்டு முதலியவர்களை நியமிப்பது இல்லை.

பத்திரிகை உலகத்தில் சம்பாதித்து கோடீசுவரர்களானவர்கள் லார்டு ராதர் மீயர், லார்டு பெவர் ப்ரூக்,

லார்டு சவுத்உட், லார்டு காம்ரோஸ், லாட்டு கெம்ஸ்லே முதலியவர்களைச் சொல்லலாம். இவர்களில் ஒவ்வொருவரும் பல பத்திரிகைகளை வைத்து நடத்துகிறார்கள். இவர்களைப்போலவே அமெரிக்காவில் பல பத்திரிகைகளை வைத்து நடத்துகிற வில்லியம் ராண்டோல்ப் ஹார்ஸ்ட் என்பவரும் ஒரு பெரிய கோடீசுவரர்.

போர்ட் மோடார் வண்டிகளை உற்பத்தி செய்கிற ஹென்ரிபோர்ட் என்ற அமெரிக்கர், நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான மோடார் வண்டிகளை உற்பத்தி செய்து உலக மார்க்கெட்டுகளை நிரப்பியிருக்கிறார். இவர் ஒரு கோடீசுவரர். இவருடைய தொழிற்சாலையில் இரண்டு லட்சம் தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள்.

ஆஸ்டின் மோட்டார் கம்பெனிக்குச் சொந்தக்காரரான லார்ட் ஆஸ்டின், 'இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ்' என்ற ஸ்தாபனத்தின் தலைவரான லார்ட் மெல்செட், அமெரிக்க ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியின் சொந்தக்காரரான ராக்பெல்லர், க்ரைஸ்லர் மோடார் கம்பெனியின் மூல கர்த்தாவான வால்டர் பி. க்ரைஸ்லர் முதலியவர்கள் ஏராளமான பணம் வைத்திருக்கிறார்கள்.

லார்ட் டெர்பி என்பவர் ஒரு பெரும் பணக்காரர். இவருக்கு ஏராளமான பந்தயக் குதிரைகள் உண்டு. லிவர்பூல் நகரத்தில் இவருக்குச்சொந்தமாயிருந்த ஒரு துண்டு நிலத்தை இவர் ஒரு சமயம் 15,000,000 ரூபாய்க்கு விற்றார். மாஜி எட்டாவது எட்வர்ட் மன்னர், 1936ம் வருஷம் கோடை காலத்தின்போது 'நாஹ்லின்' என்ற ஒருசிறு கப்பலில் யாத்திரை சென்றார் என்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். இந்தக் கப்பலை இவருக்கு இரவலாகக் கொடுத்தவர் லேடி யூல் என்ற ஒரு சீமாட்டி. இவருடைய கணவனை ஸர் டேவிட் யூல் இந்தியாவில் வியாபாரஞ் செய்து ஏராளமான பொருள் சம்பாதித்தவர்.

ஜப்பானிலே நடக்கிற வியாபாரத்தின் பெரும்பாகம் மிட்ஸூயி, மிட்ஸூபீஷி என்ற இரண்டு குடும்பங்களின் கையிலேயே இருக்கின்றது. சிறிய ஸ்டோர் முதற்கொண்டு பெரிய கப்பல் கம்பெனி வரை எல்லாவித வியாபாரங்களையும் இவர்கள் செய்கிறார்கள்.

இந்தியாவிலும் சீனாவிலும் வியாபாரஞ்செய்து ஏராளமான பொருள் சம்பாதித்தவர்கள் ஸாஸூன் குடும்பத்தினர். ஸர் டேவிட் ஸாஸூன், ஸர் விக்டர்ஸாஸூன், ஸர் பிலிப் ஸாஸூன் ஆகியோர் இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சமீபத்தில் ஷாங்காய் நகரத்தில் 'காதே ஹோட்டல்' என்ற பிரபல ஹோட்டல் ஒன்று வெடி குண்டுகளினால் தாக்கப்பட்டதை நண்பர்கள் அறிவார்கள். அந்த ஹோட்டல் ஸர் விக்டர் ஸாஸூனினுடையது.

மோடார் வண்டிகளுக்கு உபயோகப் படுத்துகிற 'காஸ்ட்ரால்' எண்ணெய் உற்பத்தி செய்கிற கம்பெனியின் சொந்தக் காரரான லார்ட் வேக்பீல்ட், தமது செல்வத்தின் பெரும்பாகத்தை, பிரிட்டிஷாருடைய கௌரவத்தை நிலை நாட்டுகிற பல முயற்சிகளுக்குச் செலவழித்திருக்கிறார். ஆலன் கோப்ஹாம், மாலிஸன் தம்பதிகள் முதலியவர்கள் ஆகாய விமானங்களில் வெற்றிகரமாகப் பறந்து செல்வதற்கு இவர் பொருளுதவி செய்தார். பழைய பைபிள் பிரதி யொன்றை அதிக விலை கொடுத்து வாங்கி இவர் சென்ற வருஷம் பிரிட்டிஷ் பொருட் காட்சி சாலைக்கு நன்கொடையாகக் கொடுத்தார்.

ராயல் டச் பெட்ரோல் கம்பெனியின் சொந்தக்காரரான ஸர் ஹென்ரி டெடெர்டிங் என்பவர் ஒரு பெரிய முதலாளி. இவர் பெட்ரோல் வியாபாரம் செய்வதோடு, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குப் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதன் மூலமாகவும் பொருள் சம்பாதிக்கிறார்.

பத்திரிகைகளை விற்று அதில் கிடைக்கும் கமிஷனைக் கொண்டு கோடீசுவரப் பிரபுவானவர் இங்கிலாந்திலே இருக்கிறார் என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இவர்தான் வைகவுண்ட் ஹாம்பிள்டன். டப்ளியு. எச். ஸ்மித் அண்ட் சன்ஸ் என்ற பத்திரிகை விற்பனைக் கம்பெனி இவருக்குச் சொந்தமானது. இங்கிலாந்திலுள்ள நூற்றுக் கணக்கான ரெயில்வே புக்ஸ்டால்களில் இவருடைய பத்திரிகை விற்பனைக் கடைகளைப் பார்க்கலாம்.

ரெவெண்ட்லோ சீமாட்டி

இவர்கள் தவிர, லார்ட் ரன்ஸிமான், லார்ட் பெர்ஸ்டெட், லார்ட் ஹோவார்ட் டி, வால்டன், முதலியவர்கள் இங்கிலாந்திலேயுள்ள சில கோடீசுவரர்கள்.

பெண்களிலேயும் பல கோடீசுவரிகள் இருக்கிறார்கள். இவர்களில் ரெவெண்ட்லோ சீமாட்டியை முக்கியமாகக் குறிப்பிடலாம். இங்கிலாந்தில் உல்வொர்த் கம்பெனி என்ற பெயரால், எல்லா நகரங்களிலும் முக்கியமான கடைகள் இருக்கின்றன. இக்கடைகளில் ஒரு குண்டூசி முதல் பெரிய சாமான்கள் வரை எல்லாம் கிடைக்கும். இந்தப் பெரிய கம்பெனியின் சொந்தக் காரியாக இந்தச் சீமாட்டி இருக்கிறாள். இவருடைய பாட்டனாராகிய உல்வொர்த் என்பவர், தனது ஒரே வாரிசாகிய இவளுக்கு 15,000,000 ரூபாய் பெறுமான ஆஸ்தியை வைத்துவிட்டுப் போனார். இவள் இப்பொழுது மூன்றாவது புருஷனாக ஒரு டச்சு பிரபுவைக் கலியாணம் செய்துகொண்டிருக்கிறாள். இவள், ஆடம்பர வாழ்க்கையை நடத்திக் கொண்டு வெளிநாடுகளில் ஏராளமான பொருள்களைச் செலவழித்துக் கொண்டிருக்கிறாள். தன்னை யாரேனும் வந்து தூக்கிக் கொண்டு போய் விடப் போகிறார்களே யென்பதற்காகத் தன் வீட்டைச் சுற்றி எஃகுத் தகடுகளை அடித்து வைத்திருக்கிறாள்.

இதே மாதிரி அமெரிக்காவிலும் பணத்தைத் தண்ணீர் போல் கருதும் பல பணக்காரிகள் இருக்கிறார்கள்.

மரண வரி

இங்கிலாந்தில், பணக்காரர்கள் இறந்துபோன பிறகு, அவர்களுடைய ஆஸ்தி மதிப்பைக் கொண்டு மரண வரி வாங்குவதுண்டு. இப்பொழுதுள்ள ஸர் ஜான் எல்லர்மானுடைய தகப்பனார் இறந்துபோன பிறகு, அவருடைய சொத்திலிருந்து 375,000,000 ரூபாய் மரண வரியாக வசூலிக்கப் பட்டது.

லண்டன்—நியூயார்க்—டோக்கியோ

—நமது அந்நிய நாட்டு நிருபர்

இன்றைய உலகில் மிகப் பெரிய மூன்று நகரங்கள் லண்டன், நியூயார்க், டோக்கியோ ஆகியவைகளே யாகும். இம் மூன்று நகரிலும் சிறிது காலம் வசித்த நமது அந்நிய நாட்டு நிருபர் இம் மூன்று நகரங்களுக்குள்ள ஒற்றுமை வேற்றுமைகளைச் சுருக்கமாகக் கூறுகிறார்.

லண்டன், நியூயார்க், டோக்கியோ ஆகிய இம் மூன்றும் உலகிலே இன்று பெரிய நகரங்களாக விளங்குகின்றன. நகரங்களின் அளவைக் கொண்டு நாம் கணக்கிடாமல், ஜனத் தொகையை மட்டும் கொண்டு கணக்கிடுவோமானால் இவை மூன்றும் முறையே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஸ்தானங்கள் வகிக்கின்றன. லண்டனின் ஜனத்தொகை சுமார் எண்பது லட்சம். நியூயார்க் சுமார் 70 லட்சம். டோக்கியோ சுமார் 60 லட்சம்.

லண்டனும், டோக்கியோவும் இரு ஏகாதிபத்தியங்களின் தலை நகரங்கள். நியூயார்க் நகரம் சாதாரண ஒரு பட்டணமே யாகும். நியூயார்க் ஸ்டேட்டிற்கு ஆல்பனி என்ற மிகச் சிறிய ஊர்தான் தலை நகர். ஐக்கிய அமெரிக்காவின் ஜனத்தொகையில் பதினெட்டில் ஒரு பங்கினர் நியூயார்க் நகரில் வசிக்கின்றனர்.

ஃ ஃ ஃ

இம் மூன்று நகரங்களின் வெளித் தோற்றம் முற்றிலும் வேறானது. லண்டனில் சாதாரணமாக ஆறு முதல் 10 மாடி வரை கொண்ட கட்டிடங்களை நகரின் மத்தியில் காணலாம். சரித்திரப் பெருமை வாய்ந்த கோட்டைகளும், பழைய காலத்துக் கட்டிடங்களும், ஜய ஸ்தம்பங்களும், சிலைகளும் நகரை யலங்கரிக்கின்றன. பக்கிங் ஹாம் பாலஸ், பார்லிமென்டுக் கட்டிடம், வெஸ்ட் மினிஸ்டர் அபே முதலியவைகள் குறிப்பிடத் தக்கன. ஆனால் நியூயார்க் நகரின் தோற்றமே முற்றிலும் வேறு. 1238 அடி உயரமும் 102 மாடியும் உள்ள எம்பையர் ஸ்டேட்டுக் கட்டிடமும் 60, 70, 80 மாடிகள் கொண்டபல கட்டிடங்களும் கம்பீரத் தோற்ற மளிக்கின்றன. 15 மாடிகளை உடைய கட்டிடங்கள் சர்வ சாதாரணம். ஆயிரக் கணக்கான (Apartment) வீடுகள், சிறந்த சுகாதார வசதியோடு அமைக்கப் பெற்றிருக்கின்றன. சுமார் 400 பார்க்குகள் நகரை யலங்கரிக்கின்றன. ஜப்பானின் தலை நகரான டோக்கியோவில் நகரின் மத்தியில் மட்டும் 10 மாடிகளை உடைய கட்டிடங்கள் தோன்றுகின்றன. அடிக்கடி பூமியதிர்ச்சி யுண்டாவதை முன்னிட்டு அரசாங்கத்தார் 10 மாடிகளுக்கு மேல் கட்டிடம் கட்ட அனுமதிப்பதில்லை. நகரை யடுத்த-ஆனால் நகரைச் சேர்ந்த கிராமங்களில் இன்னும் காகித வீடுகளும் கண்ணாடி ஜன்னலும் இருக்கின்றன. ஏழை மக்கள் வசிக்குமிடம் எங்கும் ஒரே மாதிரி தான்.

ஃ ஃ ஃ

இம் மூன்று நகரங்களிலும் நியூயார்க் நகரின் அமைப்பு மிகவும் சிறந்தது. லண்டனில் உள்ள ரோடுகளின் பெயருக்கு அளவேயில்லை. ஒரே

நீளமான வீதி பல பெயர்களில் தோன்றும். டோக்கியோவின் நகர அமைப்பு மிகவும் சிக்கலானது. வீட்டு நம்பர் உள்ளிட்ட ஜப்பானிய பாஷையிலுள்ள விலாசத்தைக் கொடுத்த போதிலும் கூட, டாக்ஸி டிரைவர் அதனைக் கண்டு பிடிக்கச் சில மணி நேரம் செலவிடுவான். பொறுமை யிழந்த நாம், அவன் பொறுமையைக் கண்டு ஆச்சரியப் படுவோம். ரங்கூன் நகர அமைப்பு எவ்வளவு சிறந்ததோ அதைப் போன்றுதான் மிகப் பெரிய நியூயார்க்கின் நகர அமைப்பும். நியூயார்க் நகரில் ஆற்றுக்குக் கீழே செல்லும் ஹாலண்டு டன்னல் (Holland Tunnel) என்பது உலகிலேயே மிகச் சிறந்த பாதைகளில் ஒன்றாகும்.

ஃ ஃ ஃ

இந்த மூன்று நகரங்களும் ஆற்றுப் போக்கு வரத்தால் அதிக நன்மை யடைகின்றன. லண்டனில் தேம்ஸ் நதியும், நியூ யார்க்கில் ஹட்ஸன் நதியும், டோக்கியோவில் சுமிதா நதியும் குறிப்பிடத்தக்கன.

லண்டன் நகரில் சூரிய தரிசனம் கிடைப்பது அபூர்வம். பெரும்பாலும் பனியால் மூடப்பட்டிருக்கும். நியூயார்க் நகரில் கோடை காலம் தவிர மற்றக் காலங்களில் சீதோஷ்ணம் பாதகமில்லை. டோக்கியோவில் குளிர் காலத்தில் குளிர் மிக அதிகம்.

டோக்கியோவுக்கு பூமியதிர்ச்சியால் ஏற்படக் கூடிய அபாயம் லண்டனுக்கும் நியூயார்க்குக்கும் கிடையாது.

லண்டனும் டோக்கியோவும் முறையே சவுத்தாம்டன், யோகஹாமா ஆகிய துறை முகங்களை எதிர் பார்த்திருக்க, நியூயார்க் நகரம் தனக்குச் சொந்தமான மிகப் பெரிய துறை முக மொன்றைப் பெற்றிருக்கிறது.

நியூயார்க்கில் வலது புறமாகத்தான் நடக்க வேண்டும்; அல்லது வண்டியைச் செலுத்த வேண்டும். லண்டனிலும் டோக்கியோவிலும் இடது புறமாக. இந்த மூன்று நகரங்களிலும் பூமிக்குக் கீழ் ஓடும் ரயில்கள் இருக்கின்றன. இவைகளை லண்டனில் 'ட்யூப்' (Tube) என்றும், நியூயார்க்கில் 'ஸப்வே' (Subway) என்றும், டோக்கியோவில் 'அண்டர் கிரவுண்ட்' (Under-ground) என்றும் அழைக்கின்றனர். லண்டனிலும் டோக்கியோவிலும் தூரத்திற்குத் தகுந்தாற் போல் கட்டணம். நியூயார்க்கில் ஒரே கட்டணம். ஐந்து செண்டுகள். இச் சிறிய தொகைக்கு இருபது மைல் தூரம் வேண்டுமானாலும் பிரயாணம் செய்யலாம். லண்டனிலுள்ள இந்த ரயில்கள் அழகும் வசதியும் உள்ளவை. அடுத்தபடியாக டோக்கியோவைக் கூறலாம். நியூயார்க் ரயில்கள் அதிக வேக முள்ளவை.

வாடகை மோட்டார்கள் எல்லா ஊர்களிலும் ஏராளம். ஒரு வாடகை மோட்டாரை அமர்த்த மிகக் குறைந்த கட்டணம், லண்டனில் சுமார் பன்னிரண்டணா. நியூயார்க்கில் பத்தணா. டோக்கியோவில் இரண்டரையணா. முதல் இரண்டு நகரங்களிலுமுள்ள வாடகை மோட்டார் டிரைவர்கள் 'இனாம்' எதிர் பார்க்கின்றனர். டோக்கியோ டிரைவர்கள் எதிர் பார்ப்பதில்லை. எல்லா வகையிலும் டோக்கியோ மோட்டார்கள் தான் சிறந்தது என்று கூறலாம்.

ஃ ஃ ஃ

இந்த மூன்று நகரங்களிலும் 'டைம்ஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியாகின்றன. 'லண்டன் டைம்ஸ்' பிரதி யொன்று சுமார் இரண்டணா; 'நியூயார்க் டைம்ஸ்'

ஒரு அணு; 'ஜப்பான் டைம்ஸ்' ஒன்றே கால் அணா. இதில் முதலிரண்டு, பத்திரிகைகளாகக் (கொள்கையில் அல்ல) கருதப்படுகின்றன. 'ஜப்பான் டைம்ஸ்' சாதாரணச் சிறிய பத்திரிகை. வெளி நாட்டு விஷயங்களை வெளியிட்டால் எங்கு தங்கள் பத்திரிகையின் கௌரவம் போய் விடுமோ என 'ஜப்பான் டைம்ஸ்' ஆசிரியர்கள் அஞ்சுகிறார்கள் என்றே நாம் கருத வேண்டி யிருக்கிறது. இந்தியர்கள் விஷயத்தில் எல்லாப் பத்திரிகைகளும் ஏறக்குறைய ஒரே கொள்கையைத் தான் அனுசரிக்கின்றன. 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையின் ஞாயிற்றுக் கிழமை இதழ் மிகப் பெரிது. சுமார் இரண்டரையணா. பத்துக்கு மேல் பதினைந்து பகுதிகளாக அச்சிடப் படுகிறது. உலக விஷயங்களை 'நியூயார்க் டைம்ஸ்' கொள்கையோடு தெரிந்து கொள்ள விரும்புவோர்க்கு இது மிகச் சிறந்த பத்திரிகை. 'லண்டன் டைம்ஸின் 'பெருமை'களை இந்தியர்கள் அறிவார்கள். ஆதலால் நாம் அதிகம் எழுத வேண்டுவதில்லை.

ஃ ஃ ஃ

சினிமாப் பைத்தியம் இம் மூன்று நகரங்களிலும் அதிகம். நியூயார்க், மற்ற இரு நகரங்களை விட அதிகமான சினிமா தியேட்டர்களையுடையது. சுமார் ஆறாயிரத்தைந்நூறு மக்கள் உட்காரக் கூடிய 'ரேடியோ சிட்டி ஹால்' உலகத்திலே மிகச் சிறந்ததும் பெரிதுமாகும். சிறந்த ஜப்பானியத் தியேட்டரில் ஒரு அமெரிக்கப் படமும், ஒரு ஜப்பான் படமும், ஜப்பான் செய்திப் படமும், சில்லரை ரெவ்யூகளும் காண்பிக்கின்றனர். நியூயார்க்கில் சிறந்த அமெரிக்கப் படமும், அமெரிக்கச் செய்திப் படமும், சிறந்த பாண்டுச் சங்கீதமும் உண்டு. லண்டன் தியேட்டரில் ஒரு லண்டன் படமும், இங்கிலீஷ் செய்திப் படமும், கார்ட்டூன், யாத்திரைப் படம் ஒன்று ஆகியவைகள் காண்பிக்கின்றனர். லண்டனில் இயற்கையாகவே வகுப்பு வித்தியாசம் உண்டு. நியூயார்க்கிலும் டோக்கியோவிலும் பெரும்பாலும் ஒரே கட்டணமும் ஒரே வகுப்பும். எல்லா ஊர்களிலும் தொடர்ச்சியாகவே படங் காண்பிக்கப் படுகிறது. ஜப்பானில் ஆசனங்கள் நியூயார்க், லண்டனைப்போல் நன்றாக இருந்த போதிலும் மிகச்சிறிது. நியூயார்க்கில் ஒரே நாளில் சுமார் பத்துப் பாஷைகளில் படம் பார்க்கலாம். தியேட்டர்கள் தங்கள் கொள்கைக் கேற்ப படங்கள் காண்பிக்கின்றன. ஜப்பானியச் செய்திப் படங்களும் இங்கிலீஷ் செய்திப் படங்களும் இன்னும் குழந்தைப் பருவத்திலேயே இருக்கின்றன. இவ்விரு நாடுகளில் பட உற்பத்தி செய்யும் ஸ்டூடியோக்கள் இத் தலை நகரங்களிலேயே அமைக்கப்பெற்றிருக்கின்றன. நியூயார்க்கில் சில தியேட்டர்களில் காலை 8-மணி முதல் இரவு இரண்டு மணி வரை படங் காண்பிக்கின்றனர். பகல் ஒரு மணிக்கும் படம் பார்க்கச் சென்றால் மூன்றில் ஒரு பகுதிதான் கட்டணம்.

ஃ ஃ ஃ

நாடகக் கலையை வளர்ப்பதிலும் இம் மூன்று நகரங்களும் சிரத்தை காட்டுகின்றன. டோக்கியோவிலுள்ள 'காபுக்கிஸா' என்ற தியேட்டரில், பண்டைக் காலத்தை யனுசரித்த சிறந்த நாடகங்கள் நடிக்கப் பெறுகின்றன. ஒரு நாள் நாடகத்தில் பல பகுதிகள் உண்டு. எல்லாவற்றையும் பார்ப்பதற்கு ஒரே டிக்கட் வாங்கலாம். குறிப்பிட்ட ஒரு பகுதியைப் பார்ப்பதற்கும் குறைந்த கட்டணத்தில் டிக்கட்டுகள் கொடுக்கிறார்கள்.

நியூயார்க்கில் சில நாடகங்கள் நான்கு அல்லது ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. லண்டனும் நாடகத்தில் சிறந்து விளங்குகின்றது. ஆனால் ஆங்கிலேயர்கட்கு ஷேக்ஸ்பியர் பைத்தியம் அளவு கடந்திருக்கிறது. இம் மூன்றையும் நோக்குமிடத்து அமெரிக்கர்களின் நகைச்சுவை மிகவும் சிறந்தது. வெற்றி பெற்ற அமெரிக்க நாடகங்கள், பின்னால் சினிமாப் படங்களாக உருக் கொள்கின்றன.

ஃ ஃ ஃ

'இரவு வாழ்க்கை' என்பது பெரும்பாலான இந்தியர்கட்குத் தெரியாமலிருக்கலாம். ஏனெனில் நமது நாட்டில் இதற்குச் சந்தர்ப்பமில்லை. இதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். லண்டனில் 'பிக்காடிலி சர்க்கஸ்' என்ற இடமும், நியூயார்க்கில்'டைம்ஸ் ஸ்கொயரும்' டோக்கியோவில் 'ஜின்ஸா' என்ற பகுதியும் அவ்வவ் நகரங்களின் முக்கிய இடங்களாகும். ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருக்கும். 'நைட் கிளப்' (Night Clubs) என்று சொல்லப்படுகிற பலவித பெயர்களையுடைய சிறிய உணவுச்சாலைகள் பல. இவைகளில் இரவு பன்னிரண்டு மணிக்குமேல் தான் 'உயிர்' உண்டாகும். கண்டபடி குடித்து, நிர்வாண நாட்டியங்களை ரசிப்பது 'நாகரிக'த்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றல்லவா? இத்துறையில் இந் நகரங்களில் எது சிறந்தது என்று கூறுவது மிகவும் கஷ்டமானது.

ஃ ஃ ஃ

உணவுச் சாலைகள் எல்லா நகரங்களிலும் ஏராளம். லண்டனில் ஒன்பது மணிக்கு மிகப் பெரும்பாலான உணவுச் சாலைகள் மூடப்படுகின்றன. நியூயார்க்கில் இரவு பன்னிரண்டு மணிக்கு மூடி விடுகின்றனர். சில உணவுச் சாலைகள் எப்பொழுதுமே மூடப்படுவதில்லை. ஜப்பானியர்களைப் போல் அமெரிக்கர்கள் 12 மணி நேரமோ அன்றி 14 மணி நேரமோ வேலை பார்ப்பதில்லை. எட்டு மணி நேரந்தான் வேலைபார்ப்பார்கள். லண்டனில் எட்டு மணி நேரத்திற்கு அதிகமாகவும் வேலை பார்ப்பதாகத் தெரிகிறது. லண்டனில் 'டிப்ஸ்' மனிதனைப் பிடுங்கித் தின்று விடும். நியூ. யார்க்கில் 'ஆடோமாட்' (Automat) என்று சொல்லப்படும் உணவுச்சாலைகள் ஏராளம். உணவுப் பொருள்கள் கண்ணாடிப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருக்கும். ஐந்து காசோ, அல்லது பத்துக் காசோ, உரியவிலையை அப்பெட்டியில் போட்டு விட்டு 'பட்டனை' அழுத்தினால் கதவு திறந்து கொள்ளும். இந்த உணவுச்சாலைகள் மிகச் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அடுத்தபடியாக 'காபடேரியா' (Cafetaria) என்பது. நூற்றுக் கணக்கான மக்கள் சாப்பிடுவதற்குரிய பெரிய உணவுச் சாலைகள் இவைகள். நாம் உள்ளே நுழையும் பொழுது, யந்திரத்தில் முன்னால் நிற்கும் டிக்கட் ஒன்றை எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை 'செக்' என்று கூறுவர். பின்னர், ஒரு மரவையில் கத்தி, கரண்டி, தண்ணீர், முதலியவைகளை எடுத்துக் கொண்டு, வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் உணவுகளில் நமக்குத் தேவையானதை நமது மரவையில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு உணவின் விலையும் குறிப்பிடப்பட்டிருக்கும். கோடியிலுள்ள ஒரு பெண், நமது உணவு எவ்வளவு என்பதை நமது 'செக்'கில் குறிப்பிடுவாள். சாப்பிட்டு விட்டுச் செல்லும்

பொழுது இப் பணத்தைக் கொடுக்க வேண்டும். சில இடங்களில் இந்த 'செக்' கிடையாது. மறு கோடியிலுள்ள பெண் நமது உணவின் விலையை வசூலிப்பாள். இது தவிர மிகச் சிறிய 'காபி கிளப்'புகள் ஏராளம். இங்கெல்லாம் 'டிப்ஸ்' கிடையாது. மற்ற உணவுச் சாலைகட்குச் சென்றால் பத்து அல்லது பதினைந்து சென்டுகள் 'டிப்ஸ்' கொடுக்க வேண்டும். ஜப்பானில் நல்ல காலமாக 'டிப்ஸ்' கிடையாது. டிபார்ட் மெண்ட் ஸ்டோர்கள் குறைந்த விலையில் ஆயிரக் கணக்கான மக்களுக்கு உணவளிக்கின்றன. உணவுச் சாலைகட்கு ஏற்றவர்கள் பெண்கள்தான். இந்திய உணவுச் சாலைகள் இம் மூன்று நகரங்களிலும் உண்டு. நடுத்தரமான இந்திய உணவு லண்டனில் ஒன்றரை ரூபாய். நியூயார்க்கில் மூன்று ரூபாய். டோக்கியோவில் முக்கால் ரூபாய். டோக்கியோவில் 'நாகமுராயா' என்ற ஒரே இந்திய உணவுச்சாலைதான். இந்தியக் கறியும் சோறும் சில சமயங்களில் கிடைக்கும். நியூயார்க் நகரில் மூன்று இந்திய உணவுச்சாலைகள் உள்ளன. லண்டனில் இவைகளைவிட அதிகம்.

ஃ ஃ ஃ

'டீ ரூம்கள்' (Tea Room) டோக்கியோவுக்கே தனிச் சிறப்புள்ளவை. அழகிய இளம்பெண்களோடு இரண்டு மணி நேரம் 'அரட்டை' யடிக்கவும், விரும்பினால் பத்திரிகைகள் படிக்கவும், நண்பர்களைச் சந்திக்கவும், குளிர் காலத்தில் நெருப்புக் காற்று பெறவும், கிராமபோன் சங்கீதம் கேட்டு ஆனந்திக்கவும் ஒன்றேகால் அணா விலையுள்ள ஒரு கோப்பைத் தேயிலை வாங்கினால் போதுமானது.

ஃ ஃ ஃ

லண்டனில் மோட்டார், குதிரை வண்டி முதலிய எல்லா வற்றையும் காணலாம். நியூயார்க்கில் மோட்டார்கள் ஏராளம். டோக்கியோவில் சைக்கிள்கள் அதிகம்.

ஃ ஃ ஃ

டோக்கியோவில் மிகச் சில ரிக்ஷாக்கள் தென்படும். லண்டனிலும் நியூயார்க்கிலும் இவைகளை மருந்துக்கும் காணுதல் அரிது.

ஃ ஃ ஃ

லண்டன் போலீஸ்காரர்கள் அன்பும் அனுதாபமும் உள்ளவர்கள். நியூயார்க் போலீஸ்காரர்களும் நல்லவர்கள்தான். ஏனெனில் பெரும்பாலோர் ஐரிஷ்காரர்கள். டோக்கியோ போலீஸ் காரர்களைப்பற்றிக் குறை கூறுவதற்கில்லை. எனினும் இம்மூவரில் லண்டன் போலீஸ்காரர்கள் மிகச் சிறந்தவர்கள் என்று கூறுவது தவறாகாது.

ஃ ஃ ஃ

'ட்ரக் ஸ்டோர்' (Drug Store) என்ற மருந்துக் கடைகள் நியூயார்க்கில் மூலைக்கு மூலை தோன்றும். மருந்துக்கடை என்ற பெயரே தவிர சாப்பாடு முதற்கொண்டு எல்லாம் விற்பார்கள். சில மருந்துக் கடைகளில் 'மருந்து' தவிர எல்லாம் கிடைக்கும்!

இம் மூன்று நகரங்களும் தங்கள் பெருமைக்கேற்ப பொருட் காட்சி சாலைகளையும், மிருகக் காட்சி சாலைகளையும், புத்தக சாலைகளையும் கொண்டு விளங்குகின்றன. இதில் நியூயார்க் நகரிலுள்ள புத்தகசாலை மிகப் பெரிது. காந்தி யடிகளைப் பற்றி மட்டும் சுமார் 200 புத்தகங்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன என்றால் கேட்பானேன்! நூற்றுக்கு மேற்பட்ட தமிழ்ப் புத்தகங்கள் இங்குள்ளன. நான் கண்ட முதலாவது புத்தகத்தை ஐந்து நிமிஷத்தில் படித்து முடித்து விட்டேன். உண்மைதான். ஆச்சரியப் படாதீர்கள். அப் புத்த

கத்தின் பெயரென்ன தெரியுமா? 'ஆறுமுக நாவலரின் பால பாடம்!'

ஃ ஃ ஃ

டோக்கியோவில் சுமார் பத்து இந்திய மாணவர்கள் பயில்கின்றனர். இங்கு வாழ்க்கைச் செலவு மற்ற நாடுகளை விட மிகச் சொற்பம். எல்லோரும் தொழில் முறை கற்கும் மாணவர்களே யாவர். நியூயார்க்கிலும் சுமார் பத்து மாணவர்கள் பயில்கின்றனர். உபாத்திமைத் தொழில், பத்திரிகை, போட்டோகிராபி முதலியவைகளுக்கே தகுதி செய்து கொள்கின்றனர். லண்டனில் சுமார் 1500 மாணவர்கள் பயில்கின்றனர் என்று தெரிகிறது. பெரும்பாலோரின் பயிற்சி 'உத்தியோக வேட்டை'க்குத்தான் என்று கூறவும் வேண்டுமோ?

ஃ ஃ ஃ

இக் கட்டுரையில் கூறப் பெற்றுள்ள விஷயங்கள் இக் கட்டுரையாளரின் தன்மையைப் பொறுத்தது. மற்றவர்களின் அனுபவங்கள் சிறிது வித்தியாசமாக இருக்கலாம். இதில் புதிய விஷயங்களோ அன்றிப் புதிய அம்சங்களோ கிடையாது. இதை எழுதுவதற்குப் புத்திசாலித்தனமோ அன்றித் திறமையோ தேவையில்லை. பிரயாணம் செய்வோர் இவ்விஷயங்களை எதிர் பாராமலே தெரிந்து கொள்வர். சில வருடங்களுக்கு முன் ஜப்பான் சென்று திரும்பிய அறிஞர் ஒருவரிடம் கட்டுரைப் பிச்சைக்காக நான் சென்றபொழுது 'அவர் எவ்வளவு பணிவோடு கூடிய அலட்சியமா'கப் பதில் கூறினார் என்பது எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. தேசங்கள் தோறும் பாஷைகளும் பழக்க வழக்கங்களும் வேறு. அவைகளைத் தெரிந்து கொள்ள விரும்புவது மாந்தர் இயல்பு. உங்கள் பிரயாணத்தில் கண்ட இன்ப துன்பங்களை 'கயிறு திரிக்காமல்' மற்றவர்கட்குக் கூறுவதில் நன்மையுண்டு. இந் நகரங்களில் நான் தங்கிய காலம் மிகச் சொற்பமாகையால் ஒரு சில விஷயங்களையே இச் சிறு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். இந்த மூன்று நாடுகளில் ஒன்றிலோ மூன்றிலுமோ பிரயாணம் செய்யச் சந்தர்ப்பம் வாய்க்கும் 'ஜோதி'யின் வாசகர்கள் தங்கள் அனுபவத்தை எழுதுவதற்கு இது ஒரு தூண்டுகோலாய் இருக்குமென்று நம்புகிறேன். எதுகை மோனைகளைப் பற்றியோ, நடையழகைப் பற்றியோ அவதிப் படாதீர்கள். நாம் வேண்டுவது விஷயம், விஷயம் ஒன்றுதான். மற்றவைகளும் தானகவே அமைந்திருப்பின் நல்லது.

ஃ ஃ ஃ

வெள்ளிக் கரண்டியோடு பிறந்து, பணத்திலே புரண்டு யாத்திரை செய்து களியாட்டயரும் இந்தியர்களைப் பற்றி நாம் இப்பொழுது பேசவில்லை; சாதாரண இந்தியர்களைப் பற்றியே நாம் இப்பொழுது பேசுகின்றோம். அரசியல் அடிமைத் தனத்தின் காரணமாக அந்நிய நாடுகளில் இந்தியர்கள் படுந் துன்பங்கட்கு அளவேயில்லை. சமீபத்தில் எனது ஜர்மானிய நண்பர் ஒருவர், 'இந்தியா பண்டைப் பெருமைகளை யுடைத்தா யிருக்கலாம். சரித்திரத்தில் ஸ்தானம் பெற்றிருக்கலாம். கலைகள் நிரம்பியதா யிருக்கலாம். ஆனல் இன்று தினம் இந்தியா ஒரு நாடு அல்ல. நாடு என்பது தனது சொந்த அரசியலைக் கொண்டு தன் மக்களால் ஆளப்படும் தேசமே யாகும். இந்தியா பிரிட்டிஷாரின் குடியேற்ற மான இடம்' என்று கூறினார்.

இவரைப் போன்று பலர் எண்ணுவதில் ஆச்சரியமில்லை. பல இடங்களில் இந்தியர்கள் கேவலமாக நடத்தப் படுகிருர்கள். வெளி நாட்டில் இந்தியனின் வாழ்க்கை கரடு முரடா

ஒரு குடும்ப சம்பாஷணை

—ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா

தாய் காவேரியும், மகன் முருகனும் வாத்தியார் மாணிக்கமும்:

காவேரி—நம்முடைய சேலம் ஜில்லாவில் கள்ளுக்கடை இல்லாமல் ஒரு கிராமம் சுகித்து சந்தோஷமாயிருக்க முடியும் என்பதைச் சென்ற சில மாதங்களாகத் தான் காண முடிந்தது. குடிப் பழக்கத்தில் சிக்கிக் கொண்டிருந்த நம் முருகன், முதல் வாரத்தில் தான் ஒரு சிறிது கஷ்டப் பட்டான். அப்புறம் வரவர சரிப்பட்டு விட்டான். இன்றுதான் முன் போல அவன் என் மகனாயிருக்கிறான்.

மாணிக்கம்—இந்தப் பாழும் குடிப் பழக்கம் உன் குல கவுரவத்தையும், உயர் படிப்பையும் வீணாக்கி விட்டதே, முருகா, இந்தச் சனியன் உனக்கு எங்கு ஏற்பட்டது? சிறு பிள்ளையாயிருந்த போது நீ வெகு நல்லவனா யிருந்தாயே!

முருகன்—எல்லாம் சகவாச தோஷந் தான். நான் யார் கூடச் சேர்ந்தாலும் அவர்கள் பழக்கம் எனக்கு வந்து விடும்.

மா—இளம் பிராயத்தில் எல்லாருக்கும் அப்படித்தான். அதன் பொருட்டாகவே சிறுவர்களுக்கு நற் பழக்கம் அதிக அவசியம்.

மு—சென்னையி லிருக்கையில் நான் மற்றச் சிறுவர்களைப் போல 'வந்தே மாதரம்' பாடி கத்தர் துணி விற்பவர்களோடு தெருத் தெருவாய்த் திரிந்து வருவேன். என் படிப்பு கெட்டு விட்டதென்று உபாத்தியாயர் கண்டிக்கவே, நல்ல படிப்பாளிகளான மாணவர்களுடன் பழகலானேன். பிள்ளைகளின் அன்பும் உபாத்தியாயரின் அன்பும் கிடைத்தது. 'கிரிக்கெட்' பந்தாட்டம் நன்றாக ஆடுவேன். அதன் காரணமாகப் பணக்காரப் பிள்ளைகள் என்னோடு நெருங்கிய நட்பு பாராட்டுவார்கள். ஆட்டம் முடிந்ததும் விடாயாற்றும் போதும், அவர்கள் அழைத்துச் செல்லும் ஐரோப்பிய சிற்றுண்டிச் சாலையிலும் சிறிது குடிக்க ஆரம்பித்தேன்.

கா—பந்தாட்டங்களிலும், சிற்றுண்டி சாலைகளிலுமா சாராயம்? என்ன அநியாயம்! உன்னைச் சென்னையில் தனியாக விட்டது எங்கள் தவறு.

மா—அது ஆங்கிலேயர் ஆடும் பந்தாட்டமாகையால், முடிவில் சிறிது

னது. பலர் பரிகாசம் செய்வர். கறுப்பு நிறத்தானென்று ஏளனம் செய்வர். அருகில் இடமிருந்தும் ஒன்றாக உட்காராமல் அவமானப் படுத்துவர். பின்னாலிருந்து கேலியாகப் பேசி மகிழ்வர். காரியும் கூட உமிழ்வர். இக்கொடுமைகளை சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

டோக்கியோவில், இந்திய சமூகத்தைப் பற்றிக் கௌரவமான எண்ணமிருந்த போதிலும் கறுப்பு நிறத்தைக் கண்டு ஆச்சரியமாக உற்று நோக்குகின்றனர். நியூயார்க்கில் நிறத்தின் காரணமாகச் சில சமயம் கேவலப் படுத்தப் பட்ட போதிலும் 'ஹிந்து' என்ற முறையில் தெரிந்து கொண்டால் கௌரவமாக நடக்கின்றனர். லண்டனில் ஹிந்து என்று தெரிந்தும் அலட்சியமாக நடத்துகின்றனர். **இதில் எது சிறந்தது?**

சாராயம் அருந்துவது அவர்கள் வழக்கம். ஒரு வேளை அதன் அடையாளமாகத்தான் அதில் வெற்றி பெற்றவர்களுக்குக் கிண்ணங்களைப் பரிசாக அளிக்கிறார்கள் போலும். சிற்றுண்டி சாலையில் ஒரு வாய் சாராயம் குடிப்பதும் அவர்களுக்குச் சாதாரணம் தான். ஆனால் நம் சிறுவர்கள் அதில் மிதமிஞ்சி விடுகிறார்கள்.

மு—அப்படி மிதமிஞ்சியவர்களில் நானுமொருவன். முதலில் அந்நண்பர்கள் அழைத்தாலும் போக மறுத்தேன். பின்னர் நானே அவர்களைத் தூண்ட ஆரம்பித்தேன்.

கா—அட பாவி! இப்படியா குடியைக் கெடுத்தாய்! நல்ல வேளையாய் என் தந்தை இதையறியாது காலமானார். இங்கு நீ திரும்பி வந்த பிறகு எவ்வளவு தடவை எனக்கு வாக்களித்துத் தவறியிருக்கிறாய், தெரியுமா?

மு—என்ன செய்வேன், அம்மா? உனக்குவாக்குக் கொடுக்கும் போது எப்படியாவது அதன்படிநடக்கவேண்டுமென்று உண்மையாகவே எண்ணுவேன். அந்த வேளை வந்து விட்டால் பேய் போல ஏதோ ஒன்று என்னை வலித்துக் கொண்டு போய் விடும். வழியில் மனதில் ஒரு குறு குறுப்பு இருந்து கொண்டிருக்கும். சாராயக் கடையைக் கண்டு விட்டேனோ வாக்குறுதி, மானம் எல்லாம் பறந்து போகும். கடைக்குள் வேகமாய் நுழைந்து விடுவேன். குடி மயக்கம் தெளிந்து வரும் போது தான் மனச் சாட்சி மறுபடி குத்த ஆரம்பிக்கும்.

கா—ஆமாம், குழந்தைகளுக்கு வாழைப் பழம் காட்டுவது போல குடியனுக்குக் கண் முன் ஒரு கள்ளுக் கடையைத் திறந்து வைத்துக் கொண்டேயிருந்தால் அவன் என்ன செய்வான், பாவம்!

மு—இப்பொழுது போல கடைகளை அடைத்து விட்டால் கிட்டாத சாராயத்தை வெட்டென மறக்கா விட்டாலும், அதன் மேலுள்ள ஆசையும் அதன் நினைவும் படிப் படியாக மனதை விட்டு அகன்று விடும்.

கா—இந்த அடைப்புச் சட்டத்தால் நம் குடும்பம் போல எத்தனையோ குடும்பங்கள் பிழைத்துப் போகும். இதை நம் கிராமத்தார் முன்னரே அறிந்து தாமாகவே இக் கடைகளை அடைத்திருக்கலாகாதா?

மா—கிராமத்தார் தாமாகச் செய்திருந்தால் வெகு நன்றாகவே இருக்கும். அதற்காகத்தான் பல மாணவர் இங்கு வந்து மறியல் செய்து பார்த்தார்கள். சுய நலப் பற்றினால் கிராமத்தாரால் அதைச் செய்ய முடியவில்லை.

கா—என்ன சுய நலப்பற்று? இக் கிராமத்திலுள்ள குடிகளுக்கு இக் கள்ளுக் கடை திறந்திருப்பதனால் என்ன இலாபம் இருக்கிறது? இங்குள்ளவர்களில் ஐந்திலொரு பங்கு கூட கட்குடியர்களல்லவே!

மா—உண்மை தான்; ஐந்திலொரு பங்குகூட குடிப்பதில்லைதான். ஆனால் கள் இங்கிருந்து வெளியூர்களுக்குப் போவதனால் இங்கு அதை இறக்குபவர்களும், பனை, தென்னை தோப்புகளையுடைய தோட்டக்காரர்களும், குத்தகை எடுப்போரும் மற்றும் பல கூலிக்காரர்களுமாகச் சேர்த்துக் கணக்குப் பார்த்தால் பெரிய மனிதர்கள் உள்பட முக்கால் வாசி கிராமத்தார் இதனால் இலாப மடைந்து வருகின்றனர்.

கா—ஆமாம்; நாம் கூட இது வரை நம் தென்னை மரங்களை கள்ளு குத்தகைக்குத்தானே விட்டிருநதோம். தற்போதைய இலாபத்தைப் பார்த்

தோமே யன்றி, அதனால் விளையும் நீடித்த தீங்கை கவனிக்க இல்லையே!

மா—தனிப் பேர் வழிகள் தத்தம் நலத்தை நாடுவார்கள் என்றுதான் கிராமத்தில் பொதுத் தலைவர்களை ஏற்படுத்துகிறோம். ஆனால் அவர்களும் தம் கிராமத்தின் நன்மையைத்தான் நாடுகிறார்கள்.

கா—அதில் என்ன கெடுதி? ஒவ்வொரு கிராமமும் தனது நன்மையைப் பார்த்துக் கொள்ளட்டுமே?

மு—ஜலப் போக்கு, ஏரிப் பாய்ச்சல், பொது ரஸ்தாக்கள், அனுப்புவது முதலிய பொதுவிஷயங்களில் தகராறு ஏற்பட்டால் என்ன செய்வது?

கா—தம்முள் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்திக் கொண்டு அவைகளைத் தீர்த்துக் கொண்டால் போகிறது.

மா—பண்டைக் காலத்தில் பாரத தேசத்தில் நம் ஹிந்து அரசர்களின் கீழ் கிராமங்கள் இம்மாதிரியான தொரு வகை சுதந்திர வாழ்க்கைதான் நடத்தி வந்தன. ஆனால் கடைசியில் அதுவே நமது வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று என்று கூடச் சொல்லலாம்.

கா—கிராம சுதந்திரம் இல்லையென்று இன்னாட்களில் நாம் முறையிடுகிறோமே. அப்படி இருக்க அது எப்படி நமது வீழச்சிக்குக் காரணமாகும்?

மா—சுதந்திரத்தைச் சரிவரப் பயன் படுத்தா விட்டால் அதுவே பெருந் தீமைக்குக் காரணமாகிறது. பூர்வ காலத்து ஹிந்து அரசர்கள் கிராம முறைகளில் தலையிடாது தமக்கு ஏற்பட்ட பகுதிப் பணத்தைப் பெற்று அவைகளை வெளி நாட்டார் பாதிக்காதபடி பாதுகாத்து வந்தார்கள். அப்போது இக் கிராமங்கள் ஒழுங்காகவே வாழ்ந்து வந்தன. தத்தமக்கு வேண்டிய மூலப் பொருள்களையும் செயற்கைப் பொருள்களையும் தாமே உற்பத்தி செய்து கொண்டு சுகமாயிருந்தன. அவைகளில் தோன்றும் பெருங்குடி மக்களும் அங்கு வசிப்பதை ஒரு பெருமையாகக் கொள்வார்கள்.

கா—ஆமாம், நானும் கேட்டிருக்கிறேன். முற்காலத்தில் பெரிய பெரிய பண்டிதர்களும், தொழில் நிபுணர்களும், பொருள் சம்பாதிக்க பல தூர தேசங்களுக்குப் போக வேண்டியிருந்தாலும் தம் கடைசி காலங்களை தத்தம் கிராமங்களிலேயே கழிப்பார்களாம். இப்பொழுது செய்வதைப் போல நகரங்களை கதி என்று தங்கி விட மாட்டார்களாம்.

மா—உண்மைதான்: அப்படி வெளியிலிருந்து கொண்டு வரும் தனம் கிராமத்தின் செல்வ விருத்திக்கு வெகு உபயோகமாயிருந்தது.

மு—இப்படிக் கெல்லாம் இருக்கையில் நமது வீழ்ச்சிக்கு அது ஏன் காரணமாக வேண்டும்?

மா—அக்காலத்தில் நமது கிராமங்கள் தத்தம் பகுதிப் பணத்தைச் செலுத்திவிட்டு, தம்மை ஆளும் அரசர்களின் வெற்றி தோல்விகளில் அக்கறை காட்டவில்லை. ராஜ்யத்தை எந்த அரசன் கைப் பற்றினாலும் தம்முடைய தினசரி வாழ்க்கையில் அவன் தலையிட மாட்டான் என்ற நிச்சயம் அவைகளுக்கு ஏற்பட்டிருந்தது.

மு—ஆமாம், பாண்டியன் ஆண்டாலும், பல்லவன் ஆண்டாலும், சோழன் ஆண்டாலும் கிராம வாழ்க்கை, கிராம முறைகள் ஒரேமாதிரியாகவா இருந்தன?

மா—வட நாட்டு மகத ராஜ்யம், மாளவ ராஜ்யம் முதலியன இங்குச்

செங்கோல் செலுத்திய போதும், ஹூணர்கள் வந்த போதும் கூட கிராமங்கள் தம் ஒழுங்குப்படியே காலங்கழித்தன.

மு—ஆமாம், ஹூணர்களின் தொகை சிறிது. அன்றியும் அவர்கள் வெகு சீக்கிரத்தில் ஹிந்து பழக்க வழக்கங்களையே ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

மா—ஆனால் இன்றைக்கு சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு அராபியா நாட்டிற்கு மகமதுநபி அளித்த புத்துயிரால் அந் நாட்டினர் ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா கண்டங்களை ஒரு குலுக்கு குலுக்கினார்கள். தம் நாட்டிலிருந்த யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் முதல் முதலில் அங்கிருந்து விரட்டி யடித்தார்கள். இவ்விரு வகுப்பினருள் பலர் நம் மேற்குக் கடற்கரையிலும் தென்னாட்டிலும் சரண் புகுந்தார்கள்.

மு—அராபியாவுக்கு அடுத்தாற்போலுள்ள ஆப்ரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கு அவர்கள் போயிருந்தால் கடலைக் கடக்க வேண்டி யிராதே.

மா—அவ் விடங்களுக்கும் பலர் சென்றார்கள். பிற்காலத்தில் ஐரோப்பா கண்விழித் தெழுவதற்கு அது ஒரு பெருங் காரணமா யிருந்தது. ஆனால் அச் சமயத்தில் அந் நாடுகள் நம் பாரத தேசத்தின் வளமும், நாகரிகமும் பெற்றிருக்க வில்லை. நமது தென்னாடு, அதிலும் தமிழ் நாடு 'ஸாலமன்' அரசன் காலத்திற்கும் முந்திய காலங்களி லிருந்து, நாம் யவனதேசம் என்றழைக்கும் அந்த தேசங்களோடு பெருத்த கடல் வியாபாரம் செய்துகொண் டிருந்தது. மரக்கலங்கள் பெரிதும் தமிழ் மக்கள் கையிலிருந்ததனால் அவைகளிலேறி வந்தே இங்குப் புகலிடம் பெற்றிருக்கலாம்.

மு—மலையாளத்தில் இப்பொழுதுள்ள யூதர்களும் ஸிரிய கிறிஸ்தவர்களும் இப் பண்டை ஜனங்களின் சந்ததிகளா யிருக்கலாமோ?

மா—அநேகமாய் அப்படித்தான் இருக்கும். அதோடு நில்லாமல் இவர்களைப் பின் தொடர்ந்தே அராபிய முஸ்லீம்களும் இங்கு வந்து குடியேறினார்கள். 'லப்பை'களென்றும், 'மாப்பிள்ளை'களென்றும் இன்று நாம் அழைப்பவர்கள் இவர்களாகவே யிருக்கவேண்டும்.

மு—இப்படிப் புதிய குடிகள் வந்து சேர்ந்ததனால் நம் கிராம வாழ்க்கையில் மாறுதல்ஏற்பட்டிருக்கு மல்லவா?

மா—இவர்கள் தென்னாட்டில் சாதாரணக் குடிகளாக வந்து சேர்ந்தார்களாகையால் நம் அரசர்கள் அவர்களுக்கென்று தனிச் சேரிகள் ஏற்படுத்தி தத்தம் முறைப்படி வாழ விட்டு ஒதுக்கி வைத்தார்கள். அதனால் நம் கிராம வாழ்க்கை அதிகமாக பாதிக்கப் படவில்லை.

மு—ஹூணர்களைப்போல் இவர்களும் ஏன் ஹிந்துக்களாகவில்லை?

மா—இதற்குப்பல காரணங்களுண்டு. இரண்டு அவைகளில்முக்கியமானவை. தென்னாட்டினர் அன்னியர்களைத் தம் மதத்தில் சேர்த்துக்கொள்ள அச்சமயத்தில் விரும்பாதது ஒன்று. மற்றொன்று, இஸ்லாம் மதத்தின் புது வேகத்தில் ஈடுபட் டிருந்த அராபியர், நயத்தாலும் பயத்தாலும் நம்மவர்களையே முஸ்லீம்களாக்கி வந்தனர்.

கா—சாமானிய குடிகளாக வந்த இவர்களுக்கு நம்மவர்களை நயத்தாலும் பயத்தாலும் வற்புறுத்த எப்படி சாத்தியப் பட்டது?

மா—நாட்டில் ஹிந்து அரசர்களே ஆண்டுவந்தார்களானாலும் கடல்களில் போக்கு வரத்தின் அருமை பெருமைகளை கவனியாது அவர்கள், முஸ்லீம்

களின் கையில் இக் கடல் வியாபாரம் போகும்போது, சும்மா இருந்துவிட்டார்கள். அதனால் கிழக்கில் ஸுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளிலிருந்து மேற்கில் ஆப்ரிக்காவின் கீழ்க் கடற்கரை நாடுகள்வரை உள்ள வியாபாரமெல்லாம் ஹிந்துக்கள் கையை விட்டு அம் முஸ்லீம்கள் கைக்குப் போய் விட்டது. அவ் வியாபாரப் பெருக்கினால் அவர்கள் அரசர்களை விட அதிக செல்வாக்கு கொண்டவர்களா யிருந்தபடியால் அவர்கள் தூண்டுதலின் மேல் நம்மவர்கள் அம் மதத்தைத் தழுவி அவர்களோடு ஒன்றாய் விட்டார்கள்.

கா—'பொருளில்லார்க் கிவ்வுலகில்லை' என்பது இதனால்நன்கு விளங்குகிறது.

மா—இதோடு வட நாட்டில் பல ராஜ்யங்களைக் கைப்பற்றிச்சில நூற்றாண்டுகளில் தென்னாட்டிலும் தம் அதிகாரத்தை முஸ்லீம்கள் பரப்பலானார்கள். அப்பொழுதுதான் கிராமங்களில் சீர் கேடு ஏற்படலாயிற்று.

மு—அவர்களுக்குத்தான் சில சேரிகள் ஒதுக்கப்பட்டிருந்தனவே?

மா—நாளடைவில் மற்ற இடங்களிலும் பரவினார்கள். ஆட்சி முறையில் அவர்கள்கை யேலோங்க ஓங்க ஹிந்து கிராம வாசிகளுக்கு அவர்கள் தலைவர்களிடமிருந்த பற்றுதலும் கவுரவமும் குறைந்துகொண்டேவந்தது. அதற்கேற்றவாறு தலைவர்களின் உற்சாகமும் நேர்மையும்கூட குலைவுறலாயின. அதுவும் ஆங்கிலேயர் கையில் நாட்டின் அதிகாரம் வந்ததிலிருந்து கிராம வாழ்க்கையின் பெருமையே போய்விட்டது.

கா—ஆங்கிலேயர்கள் கெட்டிக்காரர்களாயிற்றே! பயிர்த்தொழிலின் பெருமை அவர்களுக்குத் தெரியாமலிருக்குமா? கிராமம் சீராயிருந்தால் தானே பயிர்த் தொழில் நன்றாக நடக்கும்?

மா—அவர்கள் சொந்த நாடாகிய இங்கிலாந்தில் பயிர்த் தொழில் அவ்வளவு முக்கியமானதன்று. அங்கு கைத்தொழில்தான் அதிகம். அதையும் யந்திரங்களைக் கொண்டுதான் நடத்துகிறார்கள். அதனால் அங்கு நகரங்களும் அவைகளைச் சுற்றியுள்ள சேரிகளும்தான் பெருமை கொண்டுள்ளன: கிராமங்கள் இரண்டாம் தரமானவைதான்.

கா—அரசாங்கத்துக்கு நில வரிதானே ஆதாரம். அப்படி யிருக்க இங்கு வந்த ஆங்கிலேயர்களாவது கிராமத்தின் முக்கியத்தை அறிந்திருக்க வேண்டாமா?

மா—அப்படிக் கிருந்தும் அவர்கள் உணரவில்லை. அதன் காரணம் ஆதியில் இங்கு வந்த ஆங்கிலேயர் நல்ல வழியிலோ கெட்ட வழியிலோ இங்குள்ள ஏராளமான தனத்தைத் தம் நாட்டிற்குக் கொண்டுபோக வேண்டுமென்ற நோக்கம் கொண்டிருந்தார்களே யன்றி இந் நாட்டின் பெருமையை அறிய முயலவில்லை. முகலாய ஆடம்பரந்தான் அவர்கள் கண்களைக் கவர்ந்தது. பெரிய ராஜ்யப் புரட்சிகள் நடக்கும் போதும் இங்குள்ள கிராம ஒழுங்கு அமைதியாகவே நடைபெறுவதின் பெருமை அவர்கள் புத்திக்கு எட்டவில்லை.

மு—அவர்கள் வியாபாரிகளாகத் தானே இங்கு வந்தார்கள். அவர்கள் அக்கரை கொண்டது நகரங்களைப் பற்றித்தான்.

மா-அவர்கள் வெறும் வியாபாரிகளாகவே இருந்து விட்டிருந்தால் நாட்டிற்கு மிக நன்றாக இருந்திருக்கும். ஆட்சி முறையில் அவர்கள் தலையிட்டது பெருங் கேடாய் முடிந்தது.

கா—அதெனப்படி?

மா—இவ்விரிந்த நாட்டை ஆளுவது வெகு சிறு பான்மையினரான ஆங்கி

லேயர்களுக்கு நமது உதவி யின்றி இயல வில்லை. அதனால் நம்முள் புத்தி கூர்மை கொண்டவர்களை ஆட்சி முறை யில் தம்மோடு ஒத்துழைக்கச் செய்ய வேண்டி யிருந்தது. அதற்காக உத்தி யோகஸ்தர்களுக்கு முந்திய அரசர் கள் கொடுத்த சம்பளத்தைவிட பதின் மடங்கு அதிகமாகச் சம்பளங்கள் கொடுக்கத் தொடங்கினார்கள்.

மு—இப் பதின் மடங்கு சம்பளம் நம்மவர்களுக்குத்தானே கொடுத்தார் கள்? இதில் என்ன கெடுதி?

மா—முன்பு ஜனத் தலைவர்களென்று பெருமையாக நடத்தப் பட்டு ஜன உரிமைகளைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்து வந்த நம் நாட்டு புத்தி மான்கள் ஆங்கிலேயர்களின் ஊழியர் களாகி, இவ் வன்னிய ஆட்சியில் நம் ஜனங்களை அடக்கி ஆளுவதற்கு அவர் களுக்குச் சாதகமான கருவிகளானார் கள். கிராமங்களில் தம் வாழ் நாட் களைக் கழிப்பதை விட்டு நகர வாழ்க் கையில் சுவை கொண்டார்கள். இவர் களுக்கும் கிராம வாசிகளுக்கும் இடை யில் ஏற்படக்கூடிய பற்று இல்லாமற் போய் விட்டது. கிராமங்க ளிப்படி அழியவே நாட்டின் பெருமையும் போய் விட்டது.

கா—நமது நாடு முன்னிருந்த நிலைக்கு மறுபடி வருமா? நமது கிரா மங்களும் சீர்படுமா?

மா—கிராமங்கள் சீர் பட்டால்தான் நம் நாடு மேன்மையடையும். அதற்கு எவ்வளவோ கஷ்டங்க ளிருக்கின்றன. ஏனெனில் தற்காலத்தில் கிராமங்களில் உட் பகை, பொறாமை, ஜாதிமத வேற் றுமையின் கொடுமை முதலியன நிறைந்திருப்பதோடு புத்தி வளர்ச்சிக் கும் செல்வப் பெருக்கிற்கும் வழி யையே காணோம்.

மு—நமது ஏழ்மைத்தனம் சொல் லொணாதது. பெரும்பாலோர்களுக்கு ஒரு வேளை கூட நல்ல ஆகாரம் கிடைப் பதில்லை. கஞ்சியோ, கூழோதான் குடிக்க வேண்டியிருக்கிறது. வருஷத் தில் ஏழெட்டு மாதம் வேலையின்றி கூலியின்றி காலம் தள்ள வேண்டி யிருக்கிறது. இதற்கு யார் என்ன செய்யலாம்?

மா—நாமாக இதற்குப் பரிகாரம் தேடாவிட்டால் நம்மை என்றென்றும் அன்னியர்தான் ஆண்டு வருவார்கள்.

மு—இங்கிலாந்தில் மாத்திரம் ஏழை களில்லையா? அவர்கள் கிராமங்களில் சண்டை சச்சரவுகளில்லையா?

மா—இல்லாமல் இல்லை. ஆனால் அவர் களிடம் ஒரு குணமிருக்கிறது. தமக் குள் என்ன மனஸ்தாபம் இருந்தாலும் பொதுவான ஒரு எதிரி வந்து விட் டால் தம்முள் ளிருக்கும் வித்தியாசங் களை எல்லாம் மறந்து விடுகிறார்கள். எல்லோரும் ஒருமித்து தம்மில் ஒரு வனைத் தலைவனைத் தேர்ந்தெடுக்கிறார் கள். தேர்ந்தெடுக்கையில் பலத்த வாக்கு வாதமும் நடக்கும். ஆனால் ஒரு முறை தேர்ந்தெடுத்து விட்டால் பழைய மாற்சரியத்தை மனதில் வைத் துக்கொண்டு அவன் இடும் கட்டளை யை மீற மாட்டார்கள்.

கா—இப்படி அவர்கள் செய்வது தம் சுய நலத்திற்காகத்தானே? நாம் போராடுவது மாத்திரம் வேறெதற்கு?

மா—நம்முடைய சுய நலம் வெகு குறுகியது. கண்ணுக் கெதிரிலுள்ள விரோதியை தற்சமயம் வென்று விட் டால் போதுமெனக் கருதுகிறோம். அவர்களுடைய சுய நலம் இதைவிட சற்று விரிவானது. தற்பொழுது தமக்கு வெற்றி யில்லா விட்டாலும் தம் தாய் நாட்டின் வெற்றிக்குப் பாடு படுவார்கள். அதன் மூலம் தமக்கும் தம்மவர்களுக்கும் நீடித்த பயனுண் டாகும் என்னும் நம்பிக்கை அவர் களுக் குண்டு. நம் நாடு அன்னியர்

வசப்பட்டுப் போனபடியால் நமக்கு அந் நம்பிக்கைநக்கு இடமில்லை.

கா—அவர்களில் எல்லாருமா இப்படி இருக்கிறார்கள். எத்தனையோ பேர் மேற்கூறிய குறுகிய நோக்கம் கொண்டவர்களா யிருக்க மாட்டார்களா?

மா—அவர்களிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். சர்க்காரின் முக்கால் வாசி வேலை இவர்களைச் கண்டு பிடித்துத் தண்டிப்பதே யாகும். போலீஸ் ஆட்கள் கண்டு பிடிப்பதற்கும் நீதிபதிகள் தண்டிப்பதற்குமாக இருக்கிறார்கள். இதல்லாமல் பல நியாய வாதிகளும், கணக்கற்ற சில்லரை ஆட்களும் இதற்கு வேண்டி இருக்கிறது.

கா—குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதற்கு இவ்வளவு பேர்கள் தம் காலத்தை வீணாக்குவதைவிட அவர்களுக்கு நற்புத்தி புகட்ட முயன்றால் நன்றாயிராதா?

மா—நன்றாக இருக்கும். அதற்காகவே கல்வி எல்லாருக்கும் கற்பிப்பதற்காக பெருத்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இருந்தாலும் தண்டனை விதிப்பதற்காகச் செய்துள்ள பலமான கட்டுப்பாடும், பெரும் பதவியும், கல்வி விஷயத்தில் ஏற்பட்டில்லை. ஜனங்களை நற்புத்தி புகட்டி சீர் படுத்துவதை விட தண்டித்து அடக்கி வைப்பதில்தான் அதிகாரிகளுக்கு அதிக நம்பிக்கை போலிருக்கிறது.

கா—இருக்கலாம். வீட்டில் குழந்தைகளை இனிய பேச்சுகளால் நல்வழிக்குக் கொண்டு வருவதைவிட அவர்களைக் கடிந்து பயமுறுத்தி அடக்குவதுதான் புருஷர்கள் வழக்கம் என்பதை நாம் காண்பதில்லையா?

மா—பொது ஜனங்கள் அவ்வளவு அறியாக் குழந்தைகளா? இது ஒரு புறமிருக்க மற்றொரு புறம் அதிகாரிகள் ஒரு பெரும் ஜனக் கூட்டத்தை பயனற்ற வாழ்க்கையில் காலம் கழிக்கச் செய்கிறார்கள்.

கா—அதேன் அப்படிச் செய்கிறார்கள். அக் கூட்டம் எது?

மா—ஒரு நாட்டை அன்னியர் தாக்கா வண்ணம் காப்பதற்கு பெருந்தொகையான ஒரு படையை சேர்த்து வைக்கிறார்கள். இதே படையாட்கள் அன்னிய நாடுகளைக் கைப்பற்றவும், அவைகளை அடக்கி ஆளவும் கூட பயன் படுகின்றனர். இப்படை வலி அதிகரிக்க அதிகரிக்க அந் நாட்டுத் தலைவரின் அகம்பாவமும், மண்ணாசையும் வளர்ந்து கொண்டே வருகிறது. அவர்கள் வாய்ப் பேச்சில் மட்டும் உலக நன்மையைப் பற்றித்தான் தாம் கவலைப் படுவதாகக் கூறுவார்கள்.

மு—உலக நன்மைக்கென்று சொல்லி வளர்க்கும் இப்பெரும் படையின் செலவு ஏராளம். அதுவும் நம் நாட்டில் இதற்காகச் செய்யப்படும் செலவு கிராம வாசிகளாகிய நம்மை நிமிஷத்திற்கு நிமிஷம் ஏழைகளாக்கி வருகிறது.

கா—நம்மிடமிருந்து வசூலிக்கப் பெறும் வரிப்பணம் இப்படி ஆட்கொல்லிப் படைக்கா செலவாகிறது?

மா—மனிதர் ஒருவருக் கொருவர் உதவி புரிந்து அன்போடு வாழ்வதை விட்டு, ஒருவரை யொருவர் கண்டு அஞ்சி, லக்ஷக் கணக்கான ஆட்களை சண்டை யாடுகள் போலக் கொழுக்க வைத்து பீரங்கிகளுக்கு இரையாக்கத்தான் நமது வரிப் பணம் பெரும்பாலும் செலவாகிறது. வரி என்பது நமது அன்பின்மை, அறிவீனம், ஒற்றுமையின்மை, நேர்மைக் குறைவு இவை பொருட்டு வருஷா வருஷம் நாம் செலுத்தும் அபராதமே யன்றி வேறில்லை.

மு—உலகத்திலுள்ள பெரிய ராஜ தந்திரிகளுக்கு இந்த அநீதி தெரியாம லிருக்குமா? அவர்கள் ஒன்றுசேர்ந்து இதற்கொரு பரிகாரம் தேட லாகாதா?

மா—இப்பொழுதுள்ள பெரும்பான் மையான ராஜ்யங்கள் 'லீக் ஆப் நேஷன்ஸ்' என்ருெரு பெரும் பஞ்சா யத்து ஏற்படுத்தியுள்ளன. அதில் எல்லா வல்லரசுகளும் தம் தகராறு களை இப் பஞ்சாயத்து மூலமாகவே தீர்த்துக் கொள்வதாக உறுதி மொழி யும் தந்திருக்கிருர்கள். ஆனல் எந்த அரசுக்குத் தன் படை வலியில் நம் பிக்கை அதிகரிக்கிறதோ அது தன் உறுதி மொழியை விளையாட்டுப் பேச்செனக் கருதி விடுகிறது. உலக நன்மை அவசியம்தான்; ஆனல் அது தன் மூலமாகத்தான் வர வேண்டு மென்றும், அதற்குத் தன் மேன்மை இன்றியமையாதது என்றும் கூறு கிறது.

கா—இப் பஞ்சாயத்தில் சேர்ந்த ஜனத் தலைவர்கள் இவ்வாறிருந்தாலும் நாட்டிலுள்ள புத்திமான் முன் வந்து இக்கொடுமையைப் போக்கலா காதா?

மா—சிலர் முயன்று பார்க்கிருர்கள். ஆனல் அது சாய்வதில்லை. அரசி யல் கட்டுப்பாடு அவ்வளவு பலமாகச் செய்யப் பட்டிருக்கிறது. அதற்கு விரோதமாக நிற்க வேண்டுமானல் பெரிய ஜனக்கட்டு ஏற்படுத்த வேண் டியிருக்கிறது. இது ஏற்படா வண் ணம் தடுக்க, முன் நம் பாதுகாப்புக் காக ஏற்பட்ட படையே உபயோக மாகிறது. இதுதான் இக்காலத்திய உயர்தர அரசியல் முறை!

கா—ஐயோ தெய்வமே! வேலியே பயிரை மேய்கிறதே! நாட்டைக் காக்க வந்த படை நாட்டின் சுதந்திரத் தையே அழிக்கப் பயன் படுகிறதே! எப்படிப் போனலும் தலை எடுக்க வழி இல்லை போலிருக்கிறதே! வேறு மருந்து இல்லையா?

மா—நம் பாரத நாட்டில் புத்தர் கால முதல் ஒரு மருந்து இருந்து வரு கிறது. பிறவித் துயருக்கு அவர் அதை உபயோகப் படுத்தச் சொன் ஞர். இன்றும் மகாத்மா காந்தி அந்த அஹிம்சை வழியையே கொண்டு அரசியல் துன்பங்களைக் களையச் சொல்லுகிருர். சத்தியாக்கிர கம் (அல்லது உண்மையான எதிர்ப்பு) என்று தமது முறைக்குப் பெயரிட்டு, கொடுமையை எதிர்க்க அஹிம்சை பயன் படுவது போல வேறெந்த கொடுமையும் பயன்படாது எனக் கண் கூடாகக் காட்டி வருகிருர்.

கா—கொடியவனிடம் அஹிம்சை பாராட்டுவது அவன் கொடுமைக்கு வழி திறந்து வைப்பது போலாகுமே! அச்சம் யாதுமின்றி தன் கொடுந் தொழிலை அவன் புரிவானே!

மு—புலியினிடம் அஹிம்சை காட்டி னல் என்ன பயன்? அது நம்மை விழுங்காது விடுமா?

மா—புலி விஷயத்தில் நீ சொல்வது உண்மையே. ஆனல் மனிதன் புலி யன்று. அவன் எவ்வளவு கெட்டுப் போனலும் மனித உணர்ச்சி அவனை விட்டு அடியோடு அகலுவதில்லை. ஒரு புலி மற்ற புலிகளால் மதிக்கப் பட வேண்டுமென்று ஆசைப் படுவ தில்லை. அவைகளின் உதவியை எதி லும் நாடுவதில்லை. மனிதன் தன் னைப் போன்றவர்களிடம் எத்தனை யோ எதிர் பார்க்க வேண்டி இருக் கிறது. அவர்கள் நன் மதிப்பு அவ னுக்கு இன்றியமையாதது. உலகம் தன்னை இகழ்வதை அவன் விரும்புவ தில்லை. மற்றவர்களுடைய இகழ்ச் சிக்குப் பயப்படும் ஜந்து இவனை விட் டால் பூமிமேல் வேறு கிடையாது.

கா—ஆமாம்; இதை சிறு பிள்ளைகளிடம் கூட நாம் காண்கிறோம். அவர்களுள் ஒருவன் மற்றொருவனை அடிக்க வரும்போது இவனும் அடிப்பதானால் சண்டை மூண்டு விடுகிறது. அப்படி அடிக்காமல், 'நீ என்னைத் தொட்டாயோ நான் உன்னோடு இனி விளையாடவே மாட்டேன், டூ, டூ' என்று இவன் சொல்வானேயாகில் பெரும்பாலும் முதல்வன் பணிந்து சமாதானத்துக்கு வந்து விடுகிறான்.

மூ—சிறு பிள்ளைகளிடம் அகம்பாவமும், சுய நல உணர்ச்சியும் ஆழ்ந்தில்லை. தம் பகையை சீக்கிரம் மறந்து விடுகிறார்கள்.

மா—வயது முதிர்ந்தவர்கள், அதிலும் அதிகார பதவியி லிருப்பவர்கள் இவ்வளவு சுலபமாக நயப்படாததோடு தம் புத்தி கூர்மையைக் கொண்டு நயமாகப் பேசி, பசுத்தோல் போர்த்த புலியைப்போலே, தம் கொடுந் தொழிலைப் புரியப் பார்க்கிறார்கள். இந் நயப் பேச்சும், பசுத்தோலுமே அவர்கள் பலவீனத்தைக் காட்டுகிறது, உலகத்தினரிடத்தில் அவர்களுக் குள்ள பயம் இதனால் வெளிப்படுகிறது.

கா—அவர்களே இப்படி பயப்படுகையில் நமது அஹிம்சையும் சத்தியாக்கிரகமும் எதற்கு?

மா—அவர்களுடைய போர்வையை எடுத்து விடுவதற்குத்தான். சாதாரணமாய் சத்தியாக்கிரகிகளை மிருக பலம் கொண்டு அவர்கள் அடக்குகிறார்கள். இவர்களும் மிருக பலம் கொண்டு எதிர்த்தால் பொது ஜனங்களுக்குச் சில தீங்குகள் நேரும். இவைகளைக் காரணமாகக் காட்டித் தாம் பெரும் பலம் கொண்டு தடுத்திராவிட்டால் மகத்தான தீமை சம்பவித் திருக்கும் என்று உலகத்துக்கு எடுத்துச் சொல்லுவார்கள்.

கா—அஹிம்சையோ டிருந்தால் இவர்களே இகழ்வார்களே!

மா—முதலில் இகழத்தான் செய்வார்கள். ஆனால் சத்தியாக்கிரகி ஒருவன் பலாத்காரத்தைக் கைப்பற்றாது அவர்கள் கொடுஞ் செயலை விடா முயற்சியோடு எதிர்த்து வருவானாகில் இவர்கள் மிருகத்தன்மை உலகத்தார் காண பச்சையாய் விளங்கும். அதனால் அவர்கள் மனம் தளர்வார்கள். அவர்கள் கையும் சோர்ந்து விடும்.

மூ—அமைதியான காலங்களில் இச் சத்தியாக்கிரக முறை வெற்றிபெறக் கூடும். ஆனால் பெரும் படைகளையுடைய இரண்டு நாடுகள் போர் தொடுத்து நின்றால் அப்போது இந்த அஹிம்சை முறை என்ன பயன்படும்?

மா—மகாத்மா காந்தி இம்முறையை ஆரம்பித்த பிறகு நம் பாரத தேசத்தில் ராணுவப் போர் பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை. எல்லைப்புறச் சண்டைகளில் தலையிடாமல் அதிகாரிகள் இவரைத் தடுத்து விட்டார்கள். ஆனால் சென்ற நூற்றாண்டிலும் இந் நூற்றாண்டிலும் ருஷியா தேசத்தின்மேல் தொடுத்த இரு பெரும் போர்களில் அந் நாட்டினர் சத்தியாக்கிரகம்போலக் காணப்படும் ஓர் வகை முறையை அனுசரித்து வெற்றி பெற்றார்கள். அதிலிருந்து பெரிய யுத்தங்களில் கூட இம் முறை பயன்படக் கூடுமென்று எண்ண இடமிருக்கிறது.

கா—அந்தப் போர்கள் எப்படி நடந்தேறின?

மா—கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற் பகுதியில் நப்போலியன் தலைமையின்கீழ் பிரெஞ்சுசாம்ராஜ்யம்வெற்றிமேல் வெற்றி பெற்று ஓங்கிக் கொண்டிருந்தது. 1812-ல் தன் முழுபலத்தையும்கொண்டு ஒரு பெரும் சேனையைத் திரட்டி நப்போலின்

ருஷிய நாட்டைத் தாக்கச் சென்ருன். ருஷியத் தலைவர்கள் தமது சேனு பலத்தைக் கொண்டு கொந்தளித்துப் பொங்கி வரும் இப் பெரும் பிரெஞ்சு சேனைக் கடலை எதிர்த்து நிற்க இயலாது என்றுணர்ந்து அதன் முன் னின்று போர் செய்யாது பின்னடைந்துகொண்டே சென்றனர். தம் தலை நகராகிய மாஸ்கோ பட்டணத்தையும் கூட விட்டுவிட வேண்டியிருந்தது. ஒரு நரப்பிராணி கூட அங்கில்லாமல் நகரையும் காலி செய்தார்கள். அன்ன ஆகாரமின்றி பரிதவித்துக் கொண்டு தன் பெருஞ் சேனையோடு முன்னேறி வந்த நப்போலியன் மயானம் போலே காலியாகக் கிடந்த 'மாஸ்கோ' நகரைக் கண்டு இடி விழுந்து போனுன். அன்றிரவே அந்நகரும் தீவாய்ப் பட்டது. எதிர்ப்பற்ற—ஆனுல் கடும்பகை நிறைந்த—இம்மா பெரும் வெளியைக் கண்டு தீரனுன இந்த நப்போலியன் கூட மனம் தளர்ந்து விட்டான். அவன் ஐயமின்றி, கவலையுற்று தன் நாடு திரும்புகையில் இம்மா பெரும் சேனை குளிரால் உறைபனியில் புழுக்கள் போல நசித்து வருவதைக் கண்டான். பிரகிருதி தேவி இப்படையின், பெருமையை இகழ்ந்து துப்பிய குளிர்ச்சியில் இது நசிப்பது போலிருந்தது. இதைக் காணச் சகியாத நப்போலியன் யாருமறியாதபடி ஒரு நால்வரோடு மாத்திரம் தன் தலை நகராகிய 'பாரீஸ்' நகர் வந்து சேர வேண்டியதாயிற்று. ருஷியர்கள் நின்று எதிர்த்துப் போர் செய்து முறியடித்திருந்தாலும் கூட இப் பெரும் பிரஞ்சு சேனை இப்படி அடியோடு அழிந்திராது. தெய்வ சாபந்தானே என்னவோ, தெரியாது. நப்போலியன் கை அன்றையிலிருந்து மேலோங்கவே இல்லை.

கா—என்ன ஆச்சரியம்! பகைகள் எதிர்த்து நிற்கும்போது கூடவா இப்படிப்பட்ட தொன்று நிகழும்! மற்ருெரு நிகழ்ச்சி எது?

மா—இருபது வருஷங்களுக்கு முந்தி நடந்த உலக மகாயுத்தத்தின் கடைசி பாகத்தில் ருஷிய நாட்டுத் தலைவர்கள் தம் அரசனை நீக்கி விட்டு குடியரசு நாட்டினுர்கள். அச்சமயம் ருஷிய அரசனேடு ஜர்மனி தொடுத்திருந்த யுத்தத்தைத் தாம் நடத்த விரும்பவில்லை என்று எதிரிக்கு இத்தலைவர்கள் தெரிவித்தனர். யுத்த வெறி கொண்ட ஜர்மனி இதுதான் சமயம் என்று கடுமையான நிபந்தனைகள் கொண்ட ஒரு ஒப்பந்தத்தைத் தயாரித்து 'ப்ரெஸ்ட் லிடோவிஸ்க்' போர் முனையில் கொடுத்தார்கள். ருஷியா அதை வெறுத்துத் தள்ளிவிட்டு, உங்களாலானதைச் செய்யுங்கள் என்று சொல்லிச் சும்மா இருந்து விட்டது. பிறகு ஒரு வருஷத்திற்கெல்லாம் ஜர்மனி தோல்வியுற்று தன்னைத் தயாளத் தன்மையோடு நடத்தவேண்டுமென்று தன் பகையரசர்களைக் கேட்டுக் கொண்டது. அப்பொழுது அமெரிக்கா ஐக்கிய நாட்டுத் தலைவனுன வில்ஸன் 'ப்ரெஸ்ட் லிடோவிஸ்க்' ஒப்பந்தத்தை எடுத்துக்காட்டி 'நீங்கள் எவ்வித தயவிற்கும் அருகரல்ல' ரென்று கூறி கடுமையான நிபந்தனைகளை அதன் மேல் விதித்தான்.

மு—இவ்விரு நிகழ்ச்சிகளைப் பற்றி நான் முந்தியே படித்திருக்கிறேன். ஆனுல் அவைகளில் சத்தியாக்கிரக முறை ஒரு சொற்பம் இருக்கக் கூடும் என்பது எனக்குத் தோன்றவே இல்லை. அவைகளின் முடிவு மாத்திரம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

மா—இவைகளில் சத்தியாக்கிரகத்தின் முக்கிய அம்சமாகிய அஹிம்சை உணர்ச்சி இல்லாவிடினும் ஒரு

ஞானக்களஞ்சியம்

கவலையின்றி நாம் தூங்குகிறபோழ்துதான், ஆத்மா விழித்தெழுந்திருக்கிறது.

—ஓர் அறிஞன்

ஃ ஃ ஃ

சோம்பேறித்தனத்திற்குப் பதில்தான் அவகாசம் போதவில்லையென்று மரியாதை பாஷையில் சொல்கிறோம்.

—ஜெர்மி டேய்லர்

ஃ ஃ ஃ

பூமியோடு, மகனே! பேசு. அஃது உனக்கு எத்தனையோ பாடங்களைக் கற்றுக் கொடுக்கும்.

—ஜாப்

ஃ ஃ ஃ

சிறிய விஷயங்களில் திருப்தியடையாதவன், எதிலுமே திருப்தியடைய முடியாது.

—எபிக்யூரஸ்

ஃ ஃ ஃ

ஆத்மாவிலே சிறிதென்றும் பெரிதென்றும் இல்லை. அஃது எங்கும் ஒன்றுதான்.

—எமர்ஸன்

ஃ ஃ ஃ

ஒழுக்கமுடையவன் ஞானி; ஞானியே நல்லவன்; அந்த நல்லவனே சந்தோஷமாயிருக்க முடியும்.

—போய்தியஸ்

ஃ ஃ ஃ

ஒரு மனிதன் மிக ஜாக்கிரதையாக வைத்துக் காப்பாற்ற வேண்டிய அருமையான பொக்கிஷம் எது? சத்தியம்.

—வோர்ட்ஸ்வோர்த்

ஃ ஃ ஃ

அழியாப் புகழை நாடுகிறவன், உயிரைத் திரணமாகத்தான் மதிக்க வேண்டும்.

—பிவோவுல்ப்

ஃ ஃ ஃ

ஒரு சோம்பேறியின் மனது, அவனையே சாப்பிட்டு விடுகிறது.

—லூதர்

ஃ ஃ ஃ

நான் காலத்தை வீணாக்கினேன். இப்பொழுது காலம் என்னை வீணாக்கிக் கொண்டு வருகிறது.

—ஷேக்ஸ்பியர்

ஃ ஃ ஃ

உன் குடும்பம் எளிமையுடையதாயிருக்கலாம். ஆனால் அதில் உலகத்தையெல்லாம் காணலாமல்லவா?

—ஸர் தாமஸ் ப்ரௌன்

ஃ ஃ ஃ

தன் மதிப்பு, சுய ஞானம், தன்னடக்கம் இவை மூன்றுந்தான் ஒரு மனிதனை உயர் பதவியில் ஏற்றி வைக்கின்றன.

—டெனிஸன்

ஃ ஃ ஃ

கவிஞனுடைய அறிவிருந்து எழுந்து, படிப்போருடைய இருதயத்

தில் பாய்கிறது எதுவோ அதுதான் கவி.

—காலரிட்ஜ்

ஃ ஃ ஃ

அஜாக்கிரதையா யுள்ள மனிதன் எந்தக் காலத்திலும் கர்வ விதையை விதைத்து, ஏக்கப் பயிரை அறுக்கிருன்.

—கேய்டே

ஃ ஃ ஃ

ஒரு வஸ்துவின் மீது அன்பு செலுத்தாம லிருப்பதைக் காட்டிலும், அந்த வஸ்துவின் மீது அன்பு செலுத்தி பிறகு அதனை இழந்து விடுவது நல்லது.

—டெனிஸன்

ஃ ஃ ஃ

ஒரு மனைவியினுடைய அன்பான பார்வையில், பசுமையான தோட்டங்களைக் காணலாம். அவளுடைய தூய்மையான இருதயத்திலே ஞான நூல்களை யெல்லாம் பார்க்கலாம்.

—கௌலி

ஃ ஃ ஃ

எவனொருவன் சிறிதென்றும் பெரிதென்றும் வித்தியாசம் பாராமல் எல்லாவற்றி னிடத்தும் அன்பாக நடந்து கொள்கிருனே அவன்தான் உண்மையான பக்தனுகிருன்.

—ஷேல்லி

ஃ ஃ ஃ

புகழ் பெற வேண்டுமென்ற எண்ணமொன்றுதான், நமது வாழ்க்கையில் எல்லாவிதமான கஷ்டங்களையும் சகித்துக் கொள்ளக் கூடிய ஓர் ஆற்றலை நமக்கு அளிக்கிறது.

—மில்டன்

ஃ ஃ ஃ

முதலில் தேகாரோக்கியம். அடுத்தது அழகு. அதற்கடுத்தது நல்ல வழியில் சம்பாதித்த பணம். கடைசியானது நண்பர்களிடையே காலங் கழித்தல்.

—சைமோனடைஸ்

ஃ ஃ ஃ

மகத்தான ஒரு துன்பம் வந்தால், அதைக் கண்டு பயப்பட்டு ஓடி விடாதே. அதைச் சகித்துக் கொள்ளக்கூடிய சக்தியைப் பெற்றிருப்பதே ஓர் அதிருஷ்டம் என்று நினை.

—மார்க்கஸ் அருலிஸ்

ஃ ஃ ஃ

நாம் யார்? அலைந்து கொண்டிருக்கும் காற்றின் குரல்கள். அந்தக் காற்று, ஓய்வு வேண்டுமென்று அலைகிறது. ஆனால் ஓய்வு காண்பதில்லை. அப்படித்தான் மானிட வாழ்க்கையும் இருக்கிறது.

—ஸர் எட்வின் ஆர்னல்ட்

ஃ ஃ ஃ

ஒரு மனிதனுடைய வாழ்க்கையை அளக்க முடியும். எப்படி? நீளத்தினுல் அல்ல; ஆழத்தினுல். காலத்தினுல் அல்ல; எண்ணத்தினுலும் செயலினுலும்.

—ஓர் அறிஞன்

ஃ ஃ ஃ

எப்படி ஒரு தாய், தொட்டிலை ஆட்டிக்கொண்டே குழந்தையைப் பாடித் தூங்க வைக்கிருளோ அப்படிப்போல் நாமும் உலகத்தில் வேலை செய்து கொண்டே, மன நிம்மதி பெற வேண்டும்.

—ஓர் அறிஞர்

ஃ ஃ ஃ

தங்களுக்குப் பல காரியங்களைச் செய்ய வேண்டு மென்ற விருப்பம் இருக்கிறதென்றும் ஆனல் அவகாசம் தான் கிடைக்க வில்லை யென்றும் சிலர் கூறுகின்றனர். அவகாசம் கிடைக்காதது காரணமில்லை. மனமில்லாதது தான் காரணம்.

—லார்ட் ஆவ்பரி

முதலாவது பர்மிய யுத்தம்

—கு. கோ. கிருஷ்ணன்
B. Sc. (Hons)

முதலாவதாக 16-வது நூற்றாண்டின் துவக்கத்தில் பர்மாவுக்கு வந்த ஐரோப்பியர் போர்த்துக்கீயராவர். இவர்கள் மார்ட்டபான், சிரியம் என்ற இடங்களை வியாபார ஸ்தலங்களாக ஏற்படுத்திக் கொண்டனர். ரால்வ் பிட்ச் என்னும் ஓர் ஆங்கிலேய வியாபாரி இங்கிலாந்திலிருந்து கால்நடையாகவும், கப்பல் பிரயாணமாகவும் பர்மாவுக்கு 1586-ல் வந்து சேர்ந்தார். அப்பொழுது பர்மிய அரசருக்கும் சயாம் அரசருக்கும் யுத்தம் நடைபெற்றதால் வியாபாரத்திற்கிடமில்லாதிருந்தது. மஹா தர்ம ராஜா காலத்தில் (1610) பர்மாவில் அநேக பிரிட்டிஷ் வியாபாரிகள் சிரியம், புரோம், ஆவா, பாமோ என்ற ஊர்களில் வந்திருந்தனர். பிறகு ஏதோ சில குற்றங்களுக்காக பர்மிய அரசன் எல்லா ஐரோப்பிய வியாபாரிகளையும் பர்மாவினின்று துரத்தி விட்டான்.

சுமார் 60 வருஷங்களுக்குப்பின், பர்மியர்களும், தலேய்ங் ஜாதியினரும் தங்களுக்குள் சண்டைகள் செய்துகொண்டிருக்கும்போது 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி'யைச்சேர்ந்த கேப்டன் வெல்டன் என்பவன் கி. பி. 1687-ல் பாசின் நதி முகத்துவாரத்திலுள்ள நீகரேய்ஸ் தீவைக் கைப்பற்றினன். பின்பு 1709-ல் பாசினிலும், சிரியத்திலும் வியாபார ஸ்தலங்கள் நிறுவப்பட்டன. அலாங்பையா என்ற பர்மிய அரசன் 1755-57-ல் தலேய்ங் ஜாதியாருடன் போர்புரிந்து கொண்டிருக்கும்போது புதுச்சேரியிலிருந்து பர்மாவுக்கு வந்து சிரியம் என்ற இடத்தில் நிலைபெற்று வந்த பிரெஞ்சுக்காரர்கள் தலேய்ங் ஜாதியாருக்கு உதவி புரிந்தனர். ஆனால் பிரிட்டிஷார் அவர்களுக்கு எதிரியாக அலாங்பையாவுடன் சேர்ந்துதவினர். அலாங்பையாவுக்கு ஏற்பட்ட வெற்றியின் காரணமாய் பிரிட்டிஷாருக்கு நீகரேய்ஸும், மற்றோரிடமும் சுவாதீனமாக விடப்பட்டன. பிறகு 1759-ல் தலேய்ங் ஜாதியார் மறுபடியும் சண்டைக்குக் கிளம்பும்போது அவர்களுக்குப் பிரிட்டிஷார் துப்பாக்கிகள் கொடுத்துதவினர் என்ற செய்தியைக் கேட்டு பிரிட்டிஷார்களையும், அவர்கள் வியாபார ஸ்தலங்களையும் நாசமாக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது 10 (?) பிரிட்டிஷார்களும், 100 இந்திய சிப்பாய்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

மகாபண்டுலா: மகாபண்டுலா என்பவன் ஒரு பர்மிய சேனாதிபதி. பர்மாவின் போர் வீரர்களில் வீரக்களையுடன் விளங்கியவன். இவன் மொனிவா ஜில்லாவில் நகாபாயின் என்ற இடத்தில் 1780-ல் அவதரித்தவன். இவன் வெகு காலம் போடவ்பையாவின் அரண்மனையில் சேவை செய்து வந்தான். ஒரு நாள் ஏதோ ஒரு விஷயத்தில் சச்சரவு ஏற்பட்டு மகாபண்டுலா, மந்திரியை அடித்துக் காயப்படுத்தினன். இதனைக் கேட்ட அரசன் அவன் தைரியத்திற்குப் புகழ்ந்து தனது இராணுவத்தில் சேர்த்துக் கொண்டான். பிறகு போடவ்பையாவின் பேரன் பாஜிடவ் என்பவன் அர

சாட்சியில் பண்டுலா சேனாதிபதியாக இருந்து வெகு வீரத்துடன் பிரிட்டிஷார்களை எதிர்த்துப் போர் புரிந்திருக்கிறான். இவன் தன் எதிரிகளைச் சமய தந்திரமாய் ஏமாற்றித் தோற்கடிப்பான். 'பண்டுலா' வென்றால் ஒவ்வொருவரும் நடுநடுங்குவார்கள். அவ்வளவு பயத்தை உண்டுபண்ணியிருந்தான். அதே சமயத்தில் அவனைச் சேர்ந்தவர் யாவரும் நல்ல மதிப்பைக் காட்டினர். இவ் விஷயத்தில் ஒரு சமயம் அலாங்பையாவை இணை கூறலாமேயன்றி வேறெவரையும் கூற முடியாது. இவன் தன்னம்பிக்கையும், பொது நலமுமுள்ளவன். இவன் ஜோதிடர்களின் மீது நம்பிக்கை வைப்பதில்லை. பண்டுலாவை மீறி நடப்பவர்கள் ஒருவருமிரார். அப்படி மீறியவர்கள் உயிரை இழக்க நேரிடும். ஒரு சமயம் அவன் பேச்சை மீறிய ஓர் இராணுவ அங்கத்தினரை ரம்பத்தால் இரண்டு துண்டாக நறுக்கினதாகச் சொல்லப் படுகிறது. ஆனால் அக்காலத்தில் பொதுவாக பர்மியர்கள் தங்கள் பகைவர் மீது வெகு கொடுமையாகவே நடந்து வந்திருக்கிறார்கள். 1822-ல் அஸ்ஸாம், பர்மிய அரசனுக்குக் கட்டுப் பட்டிருந்தும் சந்திரகாந்தா என்பவன் மீறி நடந்ததால், மகாபண்டுலா பெருத்த சேனையுடன்சென்று ஜெயித்து மகா திலவா என்பவனை ஆட்சி புரியும்படி செய்து திரும்பினான். இதற்கு முன் 1819-ல் மணிப்பூர் அதே மாதிரி மஜீத் கான் ஆளுகையில் நேர்விரோதமாக நடந்த போது மகா பண்டுலா அங்கு சென்று ஆயிரக் கணக்காக ஆண் பெண்களைக் கைதி செய்து கொண்டு வந்தான். இக் கைதிகளுக்கு நினைக்கக் கூடாத அட்டூத துன்பங்களை இழைத்திருக்கிறான். பெண்களின் மார்பில் பால் அருந்தியிருக்கும் சிசுக்களை பிடுங்கி கத்திகளால் நாசஞ்செய்து ஆறுகளில் எறிந்தான். ஏனெனில் அப்பொழுதுதான் பாரங்களைச் சுலபமாகச் சுமந்து கொண்டு வருவார்களென்று நினைத்தான். ஆண்களையும் அவ்வாறே உயிர்வதை செய்தானென்றும் கூறப் படுகிறது. ஆனால் மகாபண்டுலா பிரிட்டிஷாருடன் போர் புரியும் போது பிரிட்டிஷார் கைதி செய்த தனது சேனையை நன்றாய்ப் பராமரித்து வருவதாகக் கேட்டால், தான் கைதி செய்யும் பிரிட்டிஷாரை வழக்கம் போல் உயிர் வதை செய்யாது நன்றாய்ப் பராமரித்ததாகவும் கூறப் படுகிறது. மகா பண்டுலா தெற்கே இரங்கூனுக் கருகில் தனுபியு என்ற விடத்தில் பிரிட்டிஷாருடன் யுத்தம் செய்யும்போது கொல்லப் பட்டான் (1825). அவனுடைய தேகம் எரிக்கப் பட்டு மாலுன் என்ற இடத்தில் அவன் சாம்பலைக் கிடத்தி அதன் மீது ஓர் ஆலயம் கட்டப் பட்டிருக்கிறது.

யுத்தத்திற்குக் காரணம்: பர்மிய அரசனுக்குக் கட்டுப்பட்டிருந்த அஸ்ஸாம், மணிப்பூர், அரக்கான் முதலிய பாகங்கள் பிரிட்டிஷாரின் உதவியால் நேர் விரோதமாக நடந்துகொள்ள ஆரம்பித்தன. மேலும் பர்மிய அரசனால் பல நன்மைகளடைந்தும் பிரிட்டிஷார் அவனுக்குக்கீழ்ப்படிந்து நடக்கவில்லை. இப்படியான செயல்களைக் கண்டு தனக்குப் பிடித்த மின்மையை அவர்களுக்குக் குறிப்பாகவும், தனது சேனாதிபதிகளைக் கொண்டும் எச்சரிக்கை செய்ததில் அவர்கள் கவனிக்கவில்லை. பர்மா அரசனுக்கு (பாஜிடவ்) சண்டையினால் ஏற்படும் நஷ்டங்களையுணர்ந்தும் கல்கத்தா, சிட்டகாங்க் நகரங்களைக் கைப்பற்றி விட்டால் நஷ்டத்தை விட இலாபம் அதிகமடையலாமெனவு மெண்ணினான். மேலும்

பிரிட்டிஷாரிடம் துப்பாக்கிகளை அபகரித்து விட்டால் சயாம் தேசத்தை எளிதில் கைப்பற்றி விடலாமெனவும் நினைத்தான். ஆனால் இது பற்றி வெகு நாள் யோசனையாகவே யிருந்தானன்றி வேலை யொன்றும் ஆரம்பிக்கக் கருதவில்லை. அவன் சேனாதிபதிகள் தான் அவனை யுத்தத்திற்குத் தூரிதப்படுத்தினர்.

பிரிட்டிஷார் 1823 பிப்ரவரி மாதத்தில் அரக்கான் நாப் முகத்துவாரத்திலிருந்த ஷாபூரி தீவில் தங்கள் இராணுவ நிலையத்தை ஏற்படுத்தி யிருந்தனர். அவர்களை அடிக்கடி பர்மியர்கள் படகுகளில் வந்து இம்சை செய்து விட்டு ஓடி விடுவார்கள். 1823-செப்டம்பர் மாதம் 23 தேதி நடு இராத்திரியில் மகா பண்டுலா 6000 போர் வீரர்களுடன் படகுகளில் திடீரென தீ வட்டிகளுடன் தோன்றி இங்கிருந்த அநேக இந்திய சிப்பாய்களையும், பிரிட்டிஷ் வீரர்களையும் கொன்று அவர்களை அங்கிருந்து விரட்டினான்.

வடமேற்கில் மணிப்பூர், பிரிட்டிஷாரின் உதவி பெற்று பர்மிய அதிகாரத்தை ரத்து செய்ய முயன்றதால் மகா பண்டுலா 1824 ஜனவரி மாதம் பெரும் சேனையுடன் மணிப்பூர், கச்சார் நாடிச்சென்று கச்சார் எல்கையிலிருந்த பிரிட்டிஷாரின் பிக்ராம்பூர் இராணுவ நிலையத்தைத் தாக்கினான். டாட்பட்லி என்ற இடத்தில் 4 பிரிட்டிஷ் சேனாதிபதிகளையும், 155 இந்தியச் சிப்பாய்களையும் கொலை செய்தான். இவைகளைக் கேட்ட பிரிட்டிஷ் வைசிராய் லார்டு ஆம்ஹர்ஸ்ட் 1824ஹு மார்ச்சுமீ 5உ பர்மிய அரசனோடு யுத்தம் ஆரம்பிக்கப் போவதாக அறிக்கை வெளியிட்டான்.

பிரிட்டிஷார் அஸ்ஸாம் வழியாக பர்மாவுக்குட் பிரவேசித்து யுத்தம் செய்ய முடியாமல் போயிற்று. ஆகவே சிட்டகாங் வழியாகச்சேனைகளைத்திரட்டி உட் பிரவேசிக்க ஆரம்பித்தனர். அதே சமயத்தில் 1824-மே மாதம் சர் ஆர்க்கிபால்ட் கேம்பல் என்பவன் மூன்று சண்டைக் கப்பலில் சென்னை மாகாணத்தி லிருந்து 11,000 இந்திய சிப்பாய்களுடன் வங்காளக்குடாக் கடலைக் கடந்து இரங்கூன் நதியில் வந்து சேர்ந்தான். இங்கு மழையினாலும், பலவித வியாதிகளினாலும் சிப்பாய்கள் பலர் இறக்கலாயினர். ஆனாலும் பலத்த யுத்தம் செய்து 1824ஹு ஜூன்மீ 10உ இரங்கூனையும் பிறகு சிரியம், பீகு, தவாய் நகரங்களையும் கைப் பற்றினர்.

வடமேற்கில் கவனஞ் செலுத்திக் கொண்டிருந்த மகாபண்டுலா உடனே தெற்கே ஓடி வந்தான். தனுபியுவில் பாஜிடவ் அரசனின் சகோதரன் தாராவடிமின் என்பவனோடு பண்டுலா வந்து சேர்ந்து தன்னோடு 60,000 பேர்களைக் கீமந்தானிலிருந்து பசுமந்தான் (இரங்கூன்) வரை ஆற்றோரத்தில் நிறுத்தி போர் புரிந்தான். பிரிட்டிஷார் சுமார் 20 பீரங்கிகளாலும், முன்பு இறந்தது போக மீதி சுமார் 5000 சேனையுடனும் எதிர்த்து பண்டுலாவை முறியடித்தனர். பண்டுலா தெற்கே வந்துவிடவும் வட மேற்கே பிரிட்டிஷ் துருப்புகள் அஸ்ஸாம், மணிப்பூர், அரக்கான் முதலியவைகளை இலேசாகக் கைப்பற்றிக் கொண்டனர்.

இரங்கூனுக்கு இந்தியாவிலிருந்து சிப்பாய்கள் அதிகம் அனுப்பப்பட்டனர். ஜெனரல் காட்டன் என்பவன் ஐராவதி நதி வழியாகவும் சர் காம்பெல் தரை வழியாகவும் ஏராளமான பீரங்கிகளுடன் வடக்கு நோக்கிச் சென்று தனுபியுவில் மகா பண்டுலாவை எதிர்த்தனர். இங்கு நடந்த கொடிய யுத்தத்தில் மகா பண்டுலா

அசோகன் சாஸனங்கள்

—"மௌத்கல்யன்"

பதினான்கு பாறைச் சாஸனங்கள்

8

தர்ம யாத்திரை

முற் காலத்தில் சக்ரவர்த்திகள் சந்தோஷார்த்தமாக யாத்திரை செய்வதுண்டு. அந்த யாத்திரை காலத்தில் வேட்டை முதலிய களியாட்டங்கள் செயல் முறையில் கொணரப் படுவதுண்டு.

ஆனால் தேவப்பிரிய பிரியதர்சி மகாராஜர், ராஜ்யாபிஷேகஞ் செய்து கொண்ட பத்து வருஷங்களுக்குப் பிறகு ஞான பாதையில் செல்லலானார். அது முதற் கொண்டு தான் தர்ம யாத்திரை செய்யும் வழக்கம் தொடங்கியது. இந்த யாத்திரையின் போது துறவிகள், பிராமணர்கள் முதலியோரைக் கண்டு தரிசித்து அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தல், பொற்காணிக்கையோடு பெரியோர்களைக் கண்டு வணங்குதல், பிரஜைகளிடம் சென்று தர்மா சரணம் செய்யுமாறும் அதைப் பற்றி விவகரிக்குமாறும் சொல்லுதல் முதலியன அனைத்தும் நடைபெறும்.

எனவே, இது முதற் கொண்டு, முற் காலத்துச் சந்தோஷங்களுக்குப் பிரதியாக இந்த மாதிரியான சந்தோஷங்களையே தேவப் பிரிய பிரியதர்சி மாஹாராஜர் அநுஷ்டிக்கிறார்.

9

உண்மைச் சடங்கு

தேவப்பிரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

நோய் வாய்ப்பட்ட காலத்தும், பிள்ளைகள், பெண்கள் இவர்களுடைய விவாக காலங்களிலும், குழந்தைகளின் ஜனன காலத்திலும், யாத்திரைக்குப் புறப்படுவதற்கு முன்னரும் ஜனங்கள் பலவிதமான சடங்குகளைச் செய்கிறார்கள். இந்தக் காலங்களிலும் இன்னும் இது மாதிரியான காலங்களிலும் ஜனங்கள் சடங்குகள் செய்கிறார்கள். இதே மாதிரியான காலங்களில் ஸ்திரீகளும் பலவிதமான அற்ப, பிரயோஜனமில்லாத மங்கள காரியங்களைச் செய்கிறார்கள்.

சடங்குகள் செய்வதன் மூலமாகக் குறைந்த பலனே உண்டாகிறதானாலும் அவை செய்யப்பட வேண்டியதுதான். ஆனால் இந்தத் தர்மச் சடங்கு செய்வதனால் அதிகமான பலன் உண்டாகிறது. அடிமைகளையும் வேலைக்காரர்களையும் ஒழுங்காக நடத்துதல், ஆசாரியர்களைக் கௌரவித்தல்,

---

இறந்து விட்டான். உடனே அவன் சகோதரனை சேனாதிபதியாகவிருந்து போர்புரியக் கேட்டும் அவன் பயந்து ஆவா நகரை நோக்கி ஓடிவிட்டான். அவ்வாறு கோழைத்தனமாக ஓடி வந்தவனை வந்த அரை மணி நேரத்தில் அரசன் கொலை செய்யக் கட்டளையிட்டான். பிரிட்டிஷார் புரோம் நகரையும் கைப்பற்றிப் பின் தலை நகரையும் நோக்கிச் செல்லுகையில் பர்மா அரசன் சமாதானம் செய்துகொள்ள ஏற்பட்டது. ஆகவே 1826௵ பிப்ரவரி மீ யாண்டபூ உடன்படிக்கைப்படி பிரிட்டிஷார் அஸ்ஸாம், அரக்கான், தெனசரீம் மாகாணங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். கச்சார், மணிப்பூர் இவைகளிலும் பர்மியர் தலையிட முடியாமல் போயிற்று.

ஜீவப் பிராணிகளிடத்தில் கருணை காட்டுதல், சாதுக்கள், பிராமணர்கள் முதலியோரிடத்தில் தாராளமாக நடந்து கொள்ளுதல் முதலியன இந்தத் தர்மச் சடங்கிலே சேர்ந்தவை. இவைகளும் இவை போன்ற பிறவும் இந்தத் தர்மச் சடங்கில் சேர்ந்தவை.

ஆகையால் ஒரு தகப்பன், மகன், சகோதரன், எஜமானன், சிநேகிதன், அல்லது சகபாடி அல்லது ஓர் அயலான் இப்படிச் சொல்லவேண்டும்:— 'இது புண்ணியகரமானது; காரிய சித்தி ஏற்படுகிறவரையில் இந்தச் சடங்கைச் செய்யவேண்டும்.' இதை எப்படிச் செய்வது? இதத்தை உத்தேசித்துச் செய்யப்படும் சடங்குகள், சந்தேகாஸ்பதமான பலன் தரத்தக்கவை. ஒரு கால் காரியசித்தியைக் கொடுக்கவும் கூடும்; அன்றேல் கொடுக்காம லிருக்கவும் கூடும். இதனுல் இகத்திலே இதனுல் பலனில்லை.

ஆனுல் தர்மச் சடங்கானது, தற்காலிகமானதல்ல; இகத்திலே இதனுல் கோரிய பலன் கிடைக்காவிட்டாலும் மறுமையிலே அதிகமான புண்ணியம் எற்படுகிறது. இகத்திலே காரிய சித்தி யடைவோமானுல் இரண்டு விதமான நன்மைகள் ஏற்படுகின்றன. இகத்திலேயும் நன்மை. பரத்திலேயும் புண்ணியம்.

10

சத்திய கீர்த்தி

தம்முடைய ஜனங்கள் தர்மோபதேசத்தைக்கேட்டு தர்மாநுஷ்டானஞ் செய்யாதவரை, இகத்திலோ, பரத்திலோ அவர்களுக்கு ஏற்படுகிற கீர்த்தியானது, அதிக லாபந் தரத்தக்கதாயிராதென்று தேவப்பிரிய பிரியதர்சி மகாராஜர் கருதுகிருர். அந்த நோக்கத்திற்காக, தர்மாநுஷ்டானத்தை முன்னிட்டே சக்ரவர்த்தி புகழை விரும்புகிருர்.

தேவப்பிரிய பிரிய தர்சி மகாராஜர் செய்யும் எல்லா முயற்சிகளும் இனி வரப்போகும் ஜன்மத்தை முன்னிட்டுத்தான். எல்லாரும் துக்கத்தினின்று விடுதலை யடைய வேண்டுமென்பதற்காகத்தான்.

கீழ்ப்பட்டவர்களா யிருக்கட்டும், உயர்ந்தவர்களா யிருக்கட்டும் மற்ற எல்லா லட்சியங்களையும் விட்டு விட்டு, இஃதொரு விஷயத்திலேயே அதிகமான முயற்சி எடுத்துக் கொண்டாலன்றி, அப்படிப் பட்ட சுதந்திரத்தை யடைவது கடினந்தான். அதுவும் மிகவும் உயர்ந்த நிலையிலுள்ளவருக்குப் பெரிதும் கஷ்டந்தான்.

11

தர்ம தானம்

தேவப்பிரிய பிரிய தர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிருர்:—

தானத்திலே சிறந்தது தர்ம தானத்தைத் தவிர வேறொன்றுமில்லை. தர்மத்திலே நட்பு, தர்மத்திலே தாராளம், தர்மத்துடன் தொடர்பு இவைகளையே தர்ம தானம் என்று சொல்லலாம். இந்த தர்மதானத்திலே அடங்கி இருப்பவை என்னென்ன? அடிமைகளையும் வேலைக்காரர்களையும் சரிவர நடத்துதல்; தந்தை, தாய் இவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்; நண்பர்கள், சகபாடிகள், உறவினர், துறவிகள், பிராமணர்கள் முதலியோருக்குத் தம்மிடத்திலுள்ளதை அளித்தல், ஜீவப்பிராணிகளிடத்தில் தயை காட்டுதல் முதலியனவாம். ஆகையால், ஒவ்வொரு தகப்பனும், மகனும், சகோதரனும், எஜமானனும், நண்பனும், துணைவனும் ஏன்—அயலானுங் கூட—என்ன சொல்லிக் கொள்ள வேண்டுமென்ருல் 'இது சிறந்தது, இதனை நாம் செய்ய வேண்டும்' என்பதேயாகும்.

இம்மாதிரி நடக்கிறவன் அதாவது இந்த மாதிரி தர்மதானம் செய்கிறவன் இகத்திலும், பரத்திலும் மகத்தான புண்ணியத்தை யடைகிறான்.

12

சமரஸம்.

தேவப்பிரிய பிரியதர்சி மஹாராஜர் எல்லாப் பிரிவினர்க்கும் அவர்கள் துறவறத்திலே யாகட்டும், இல்லறத்திலே யாகட்டும், எதிலிருந்தாலும் தானங்கள் முதலியன செய்து அபிவாதனம் செய்து கொள்ளுகிறார்.

ஆனால், சக்ரவர்த்தி இந்த தானங்களைப்பற்றியோ, வெளி மரியாதைகளைப்பற்றியோ அதிகமாகக் கவலை கொள்ளவில்லை. எல்லாப் பிரிவினருடைய மதத்தின் தத்துவம் வளர்ச்சி பெற வேண்டுமென்பதிலேயே அவர் கவலையுள்ளவராயிருக்கிறார். இந்தத் தத்துவங்கள் பல உருவங்களாக வளர்ச்சி பெறலாம். ஆனால், இவற்றின் மூல வேராயிருப்பது நாவடக்கம். அதாவது ஒரு மனிதன் தன் மதத்தையே சிலாகித்துப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. அல்லது அகாரணமாக மற்றொருவனுடைய மதத்தையும் தூஷிக்கக் கூடாது. அங்ஙனம் கண்டனம் செய்வதாயிருந்தால் தகுந்த காரணங்களுடனேயே இருக்க வேண்டும். ஏனென்றால், மற்றவர்களுடைய மதங்கள் யாவும் ஏதோ ஒரு காரணம்பற்றி யாவது வணங்கத்தக்கதே யாகும்.

அப்படிச் செய்வதனால் ஒரு மனிதன் மதத்திற்கு கௌரவம் தேடிக் கொடுப்பதோடு மற்றவர்களுடைய மதத்துக்கும் தொண்டு செய்தவனாகிறான். இதற்கு மாறாக நடந்தால், தன் மதத்துக்குத் தீங்கிழைப்பதோடு பிற மதங்களுக்கும் தீங்கு விளைவிப்பவனாகிறான். தன் மதத்தின் மீது கொண்டுள்ள பற்றுதல் காரணமாகவும், தன் மதத்துக்குக்கீர்த்தி தேடித்தர வேண்டுமென்பதற்காவும் புற மதங்களை எவனொருவன் தாழ்த்திப் பேசுகிறானோ அவன் உண்மையிலேயே தன்னுடைய மதத்துக்குப்படுகாயத்தை உண்டுபண்ணியவனாகிறான்.

எனவே, சமரஸப்பான்மை மிகச் சிறந்தது. அதாவது மற்ற ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற தர்மத்தை சந்தோஷகரமாகக் கேட்டல். எல்லா வகுப்பினரும் அதிகமான உபதேசங்களைக் கேட்டு நல்ல கொள்கைகளை அநுஷ்டானத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது தான் தேவப்பிரிய பிரியதர்சி மஹாராஜருடைய விருப்பம்.

ஆகையால், எந்த மதத்தை அநுஷ்டிக்கிறவர்களாயிருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் சக்ரவர்த்தியானவர் தான தர்மங்களிலோ, அல்லது வெளி மரியாதைகளிலோ அதிகமாகக் கவலை செலுத்தவில்லையென்றும், ஞான வளர்ச்சியும், சமரஸ பாவமும் வளர்ச்சி பெறவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட வேண்டும்.

இந்த நோக்கத்திற்காகவே தர்மாதிகாரிகள், ஸ்திரீ அதிகாரிகள் முதலியவர்கள் அடங்கிய உத்தியோக ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டதன் பலன் என்னவென்றால், ஒருவனுடைய மதம் வளர்ச்சி பெறுவதோடு தர்மத்தின் பிரகாசமும் அதிகமாகிறது.

13

உண்மையான வெற்றி எது?

தேவப்பிரிய பிரியதரிசி மஹாராஜர் ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட எட்டாவது வருஷத்தில் கலிங்கர்கள் ஜெயிக்கப் பட்டார்கள். நூற்றம்பதி

ஆயிரம் ஜனங்கள் அப்பொழுது கைதி செய்யப் பட்டார்கள். நூறாயிரம் பேர் கொலை செய்யப் பட்டார்கள். இதைவிடப் பல மடங்கு பேர் அழிந்து போனார்கள்.

கலிங்கர்களைத் தம் பிரஜைகளாகச் சேர்த்துக் கொண்ட உடனேயே சக்ரவர்த்திக்கு தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம்; அதன் மீது பக்தி; அதனை உபதேசம் செய்ய வேண்டுமென்ற நோக்கம் இவைகளெல்லாம் உண்டாயின. கலிங்க தேசத்தை வெற்றி கொண்டதற்கு சக்ரவர்த்தி இப்படித் தான் பச்சாதாபப் பட்டார். ஏற்கனவே ஜெயிக்கப் படாத ஒரு நாட்டை ஜெயிப்பதனால், கொலை, மரணம், ஜனங்களை சிறை தூக்கிச் செல்லல், முதலியன உண்டாகின்றன. இது சக்ரவர்த்திக்கு அதிக வருத்தத்தையும் மனக்கிலேசத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது.

சக்ரவர்த்தி இன்னும் அதிகமாக துக்கப் படுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அந்த மாதிரியான நாட்டில் (கலிங்கத்தில்) பிராமணர்கள் அல்லது துறவிகள், அல்லது பல மதத்தினர், அல்லது இல்லறத்தார், முதலியோர் வசிக்கின்றனர். இவர்கள் பெரியோரை வழிபடுதல், தாய் தந்தையரை வணங்குதல், ஆசாரியர்களுக்கு மரியாதைசெலுத்துதல், நண்பர்கள், தெரிந்தவர்கள், உறவினர், அடிமைகள், வேலைக்காரர்கள் முதலியவர்களை அன்போடும் கண்யமாகவும் நடத்துதல் முதலிய காரியங்களைச் செய்து வருகிறார்கள். அப்படிப் பட்ட ஜனங்களுக்கு அப்படிப்பட்ட நாட்டில், ஹிம்சையோ, கொலையோ அல்லது பிரிவாற்றாமையோ ஏற்படுகிறது. அல்லது தங்களால் காப்பாற்றப்படுகிற நண்பர்கள் முதலியோருக்கு துரதிருஷ்டம் வந்து சேருகிறது. ஆனால் அவர்கள் பால் இவர்கள் வைத்திருக்கும் அன்போ குறைவதில்லை. எனவே, இதுவும் அவர்களைப் பொறுத்த மட்டில் ஒருவித ஹிம்சைதான். ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இத்தகைய பல சம்பவங்கள் சக்ரவர்த்திக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கின்றன. ஒரு மதத்தினரிடத்தில், மற்றொரு மதத்தினருக்கு ஏற்பட்டுள்ள அவநம்பிக்கை காரணமாக இந்த யுத்தம் ஏற்படவில்லை யல்லவா?

கலிங்க தேசத்தில் சிறை செய்யப் பட்டவர்கள் மரணமடைந்தவர்கள் முதலியவரில் நூற்றிலோ ஆயிரத்திலோ ஒரு பங்கினரேனும் இப்பொழுது அதே கதியை அடைவார்களானால் அது சக்ரவர்த்திக்கு மிகவும் வருத்தத்தைத் தருவதாயிருக்கும். தவிரவும், சக்ரவர்த்திக்கு யாரேனும் தீங்கிழைப்பாராயின் அந்தத் தீங்கினையும் பொறுத்துக் கொள்ளக் கூடியதாயிருந்தால் பொறுத்துக் கொள்வார். சக்ரவர்த்தியினுடைய ராஜ்ய எல்லைக்குள் இருக்கும் காட்டு ஜனங்களிடத்திலும் அவர் (சக்ரவர்த்தி) அன்புடன் பார்க்கிறார். அவர்களும் தர்மானுஷ்டானத்தில் ஈடுபட வேண்டுமென்று விரும்புகிறார். அப்படி அவர்கள் ஈடுபடாவிட்டால், சக்ரவர்த்தி பெரிதும் விசனிப்பார். அவர்கள் துன்புறுத்தப் படாத வகையில் அவர்கள் தீவழியிலிருந்து நல்வழிக்குத் திரும்ப வேண்டும். எல்லா ஜீவ ஜந்துக்களும் பாதுகாப்பு, தன்னடக்கம், மனச் சாந்தி, இன்ப வாழ்க்கை இவைகளோடு கூடினவராயிருக்க வேண்டுமென்பதே சக்ரவர்த்தியின் விருப்பம்.

சக்ரவர்த்தியினுடைய அபிப்பிராயத்தில் இந்த தர்ம வெற்றிதான் முக்

கியமான வெற்றி. இந்த வெற்றியை அவர் தம்முடைய சொந்த ராஜ்யத்திலும், சுற்றுப் புறத்தில் சுமார் அறு நூறு கோசம் வரையிலுள்ள அண்டியோகோஸ் என்னும் யவன மன்னன் வசிக்கிற நாட்டிலும், அந்த அண்டியோகோஸ் வசிக்கிற நாட்டுக்கு வடக்கேயுள்ள பிரதேசங்களை ஆள்கிற டாலமீ, அண்டி கோனஸ், மாகாஸ், அலெக்சாந்தர் ஆகியோருடைய பிரதேசங்களிலும், தெற்கே சோழ பாண்டிய தேசங்களிலும், இதே மாதிரி இலங்கையிலும், இங்கே சக்ரவர்த்தியின் அதிகாரத்துக்குட்பட்ட யவனர், காம்போஜர், நாப பந்திகள், போஜர், பிதினிகர், ஆந்த்ரர், புளிந்தர் ஆகியோரிடையிலும் சக்ரவர்த்தியினுடைய தர்மோபதேசம் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சக்ரவர்த்தியின் தூதர்கள் புகாத பிரதேசங்களிலே கூட சக்ரவர்த்தியின் தர்மோபதேசத்தைக் கேட்டவர்கள் அந்த தர்மத்தின்படி நடக்கிறார்கள். இனியும் நடப்பார்கள்.

இப்படி கொள்ளப்பட்ட வெற்றிதான் எங்கும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதா யிருக்கிறது. தர்மவெற்றியிலேதான் உண்மையான மகிழ்ச்சியிருக்கிறது. ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு சிறிய விஷயந்தான். அடுத்த உலகத்திலே எது நன்மையைத் தரக்கூடியது என்பதிலேதான் சக்ரவர்த்தி அதிக கவனமுள்ளவரா யிருக்கிறார்.

என்னுடைய பிள்ளைகளும் பேரன்மார்களும் ஒரு புதிய வெற்றியைக் கொள்வது தங்கள் கடமையல்ல என்று தெரிந்து கொள்வதற்காகவே இந்தத் தர்ம சாஸனம் எழுதப்பட்டது. அப்படி அவர்கள் ஆயுதந்தரித்து ஏதேனும் ஒரு வெற்றி கொள்வார்களானால், பொறுமையாகவும் சாந்தமாகவும் இருந்து, தர்ம வெற்றிதான் சிறந்தது என்று அவர்கள் கருத வேண்டும். அதுதான், இம்மையிலும் மறுமையிலும் வழி காட்டுவது. உழைப்பிலே நமது மகிழ்ச்சி யெல்லாம் இருக்கட்டும்.

14

முடிவுரை

தேவப்பிரிய பிரியதர்சி மஹா ராஜருடைய கட்டளைக்கிணங்க இந்தத் தர்ம சாஸனங்கள் எழுதப்பட்டுள்ளன. இவை சில சமயம் குறுக்கியும், சில சமயம் மத்தியதரமாகவும் சில சமயம் விரித்தும் எழுதப்பட்டுள்ளன. ஏனென்றால் எல்லாம் எல்லா இடத்திற்கும் பொருத்தமானதில்லை யல்லவா? ஏனென்றால் என்னுடைய ராஜ்யங்கள் ஏராளமானவை. (எல்லா இடங்களிலும்) அதிகமாக எழுதப்பட்டுள்ளன. இன்னும் அதிகமாக எழுதப்படவேண்டும்.

சில வாக்கியங்கள் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அவற்றில் தேனினும் இனிய தன்மை இருக்கிறது. தவிர, அவற்றின்படி ஜனங்கள் நடப்பார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

சில சமயங்களில் உத்தரவுகளைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமையினாலோ, அர்த்தம் புரியாமலோ, அல்லது லேககனுடைய தவறினாலோ சில சாஸனங்கள் குறைவு பட்டிருக்கலாம்.



ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்

ஜனனம்—1836 மரணம்—1918

—ஒரு காங்கிரஸ்வாதி

ஓர் இந்தியருடைய திறமையில், உண்மையான உழைப்பில் ஓர் ஐரோப்பியர் ஈடுபட்டார் என்றால் அது பெரிய விசேஷமல்லவா? அப்படிப்பட்ட மதிப்பைப் பெற்றவருள் கோபால கிருஷ்ண கோகலேயும் ஒருவர். இவரிடத்தில் பரமபக்தி பூண்டவர் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்பவர். ஓர் ஐரோப்பியர், காங்கிரஸின் தலைமைப் பதவியை இரண்டு முறை வகித்திருக்கிறாரென்றால் அஃது எவ்வளவு விசேஷமானது? ஸர் வில்லியம் வெட்டர்பர்ன், 1889-ம் வருஷம் பம்பாயில் நடைபெற்ற ஐந்தாவது காங்கிரஸுக்கும், 1910-ம் வருஷம் அலஹாபாத்தில் நடைபெற்ற இருபத்தைந்தாவது காங்கிரஸுக்கும் தலைமை வகித்து, இந்திய தேசீய வாழ்வின் நெருக்கடியான சந்தர்ப்பங்களில், சட்டவரம்புக்குட்பட்ட கிளர்ச்சிசெய்து கோரிய பலனைப் பெறுவதற்கு வழிகாட்டினர். ஒரு சமயம், ஸ்ரீ மகாதேவ கோவிந்த ரானடே, ஸர் வில்லியமைப் பாராட்டிப் பேசுகிறபோது 'நான் எத்தனையோ ஆங்கிலேயர்களைச் சந்தித்திருக்கிறேன். ஆனால் வில்லியம் வெட்டர்பர்னுக்குச் சமானமாக நான் யாரையும் சொல்ல முடியாது' என்றார். இதைவிட வேறு நற்சாட்சிப் பத்திரம் வேண்டுமோ?

வில்லியம் வெட்டர்பர்ன் 1836-ம் வருஷம் மார்ச் மாதம் 25-ந் தேதி இங்கிலாந்திலுள்ள கிளௌசெஸ்டர் ஷைரில் பிறந்தார். எடின்பரோ சர்வகலாசாலையில் சேர்ந்து உயர்தரப் படிப்புகளை முடித்துக்கொண்டு இந்தியன் சிவில் சர்விஸ் பரீட்சைக்கு உட்கார்ந்தார். அதில் தேறி, 1860-ம் வருஷம் நவம்பர் மாதம் 25-ந் தேதி பம்பாய் மகாணத்தில் ஒரு சிவில் சர்விஸ் உத்தியோகத்தில் நியமிக்கப்பெற்றார். இது முதற்கொண்டு 1885-ம் வருஷம் வரை, பல உத்தியோகங்களைத் திறமையாக வகித்து நிருவாகத்தை நடத்தினர். ஜில்லா மாஜிஸ்ட்ரேட், ஹைகோர்ட் ஜட்ஜ், அரசாங்க அரசியல் இலாகா காரியதரிசி ஆகிய உத்தியோகங்களையெல்லாம் வகித்தார். இந்த உத்தியோக காலத்தில் இவர், பொது ஜனங்களின் நன்மதிப்பைப் பெற்றார். இவருடைய இருதயம் மகா பரிசுத்தமானது என்பதை ஜனங்கள் கண்டுகொண்டார்கள். கடமையிலே இவர் கொண்டி

ருந்த கருத்தும், ஜனங்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று இவர் கொண்டிருந்த நல்லெண்ணமும், இவரை ஓர் உயர் நிலையில் கொண்டு வைத்தன. அயல் நாட்டார் என்ற எண்ணமே சிறிதுமின்றி, இவரை ஜனங்கள் கொண்டாடி வந்தார்கள். சிறப்பாக, வெட்டர்பர்ன் தம் கவன மனைத்தையும் விவசாயிகளின் விஷயத்தில் செலுத்தி வந்தார். தமது உத்தியோக அலுவல்களின்போது, கிராமங்களைச் சுற்றிப் பார்ப்பதும், கிராம ஜனங்களோடு கலந்து பேசுவதும் இவருக்குச்சர்வ சாதாரண பழக்கமாயிருந்தது. தற்போதைய ஆட்சிமுறையே, இந்தக்கிராம ஜனங்களின் பரிதாப வாழ்க்கைக் கெல்லாம் காரணம் என்பதைஇவர் நன்கு உணர்ந்தார். அந்தக் காலங்களில் ஏற்பட்ட பஞ்சங்களின் போது இவர், உத்தியோக முறையிலும் தனி முறையிலும் செய்த சேவைகள் எண்ணில. ஏழை ஜனங்களின் வாழ்க்கை அந்தஸ்தை இன்னின்ன விதமாக உயர்த்த வேண்டுமென்பதை அடிக்கடி மேலதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்வார். விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் பணங் கிடைக்கத் தக்கமாதிரி விவசாய பாங்கிகள் ஏற்படுத்துவதற்கு இவரே காரண பூதராயிருந்தார்.

1885ம் வருஷம் இவர் உத்தியோகத்தினின்று விலகிக் கொண்டதும், தேச சேவையில் பெரிதும் ஈடுபட்டார். தாம் உத்தியோகத்தி லிருந்த போழ்து, எந்தெந்த சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டு மென்றிருந்தாரோ அவைகளுக்காக இப்பொழுது கிளர்ச்சி செய்யலானார். 1889ம் வருஷத்து காங்கிரஸ் தலைமை யுரையில் இவர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:—

'சுமார் கால் நூற்றாண்டு பாரத தேசத்துக்கு உழைத்தேன். அதன் உப்பைத் தின்றேன். என்னுடைய பாக்கி வாழ் நாட்களையும் பாரத தேசத்தின் நன்மைக்காகவே செலவழிக்க வேண்டுமென்பது என் விருப்பம்?

இந்தச்சொல்லை, இவர் அப்படியே வாழ்க்கையில் நிறைவேற்றிக் காட்டினார்.

1893ம் வருஷம் இவர் பார்லிமெண்ட் அங்கத்தினரானார். அச்சமயம் தாதாபாய் நௌரோஜியும் பார்லிமெண்ட் அங்கத்தினரா யிருந்தார். இவ்விருவரும் சேர்ந்தே அப்பொழுது இந்தியாவின் சார்பாக பார்லிமெண்டில் பெரிய கிளர்ச்சி செய்து வந்தார்கள். 1900ம் வருஷம் வரை, ஸ்ரீ வெட்டர்பர்ன் பார்லிமெண்ட் அங்கத்தினராயிருந்தார். அது வரை இந்தியக் குடியானவர்களுடைய நிலையைப் பலவிதமாகவும் பல முறையும் இவர் எடுத்துச் சொல்லி, ஆட்சி முறையில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லி வந்தார்.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் எந்த வருஷத்தில் உத்தியோகத்திலிருந்து விலகினாரோ அதே வருஷத்தில் தான் காங்கிரஸும் ஆரம்பித்தது. காங்கிரஸ் ஸ்தாபகர்களுள் வெட்டர்பர்னும் ஒருவராயிருந்தார். மற்றும் இங்கிலாந்தில் காங்கிரசின் கிளை ஸ்தாபனம் ஒன்று ஏற்படுவதற்கும் இவர் முக்கிய காரணராயிருந்து, அதனை ஒழுங்கு பெற நடத்தி வைத்தார். அந்தக் காலத்தில், பிரிட்டிஷ் பொது ஜனங்களுக்கு இந்தியாவின் நிலையைப் பற்றிப் பிரசாரஞ் செய்து கொண்டிருக்க வேண்டியது காங்கிரசின் முக்கிய கடமை யாயிருந்தது. இந்த வேலையை வெட்டர்பர்ன் அதி தீவிரமாகச் செய்து வந்தார். மற்

கனகாவின் கடிதங்கள்

—"சரசா"

கடிதம் V

கீழ வேளூர்

அநேக நமஸ்காரித்த விஞ்ஞாபனம். உபயத்ர குசலம்.

நான் போன ஒரு மாத காலமாக உனக்கு ஒரு வரி கூட எழுத முடியவில்லை. என் கிரகசாரம். ஒரே கவலை என்னைப் பிடுங்கித் தின்கிறது. உன் மாப்பிள்ளை, இந்த ஊரிலுள்ள ஒரு கிளப்பில் ஒரு மெம்பராய்ச் சேர்ந்திருக்கிறார். 'மாதம் அரை ரூபாய் கட்டியழ வேண்டியிருக்கிறது. அதில் மெம்பராயிருப்பது ஒரு கௌரவமாம். என்ன கௌரவம் வேண்டியிருக்கு வேலையில்லாத பவிஷுக்கு' என்று என் மாமியார் மொணமொணத்துக் கொண்டேயிருக்கிறாள். அம்மாவுக்கும் பிள்ளைக்கும் சதா சண்டைதான். இவர்கள் சண்டை நடுவிலே என்னைப் பிடித்திழுத்துப் பேசுகிறார்கள். 'நீயாவதுஉன் ஆம்படையானுக்குப் புத்தி சொல்லக் கூடாதோ? என்கிறாள் என் மாமியார். 'உன் பாட்டுக்குப் பேசாமலிரு. புருஷாள் விஷயங்களிலெல்லாம் பொம்மனாட்டிகள் தலையிடக் கூடாது' என்று பல்லைக் கடிக்கிறார் இந்தப் பக்கத்தில் உன் மாப்பிள்ளை. இரண்டுக்கும் நடுவே நான் அகப்பட்டுக்கொண்டு விழிக்க வேண்டியிருக்கிறது. நீ அனுப்புகிற பணத்திலே, கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொண்டு போய், சீட்டாட்டத்திலே கரைத்து விடுகிறார் உன் மாப்பிள்ளை. நான் எதைச் சொல்வது, எதைச் சொல்லாமலிருப்பது? இந்த மாதிரியான இடத்தில் வந்து வாழ்க்கைப் பட்டோமே என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.

தவிர, ஊரிலுள்ள பாட்டிமார்களெல்லாம் மத்தியான வேளைகளிலே வந்து என்னமோ ஊர் வம்புகளெல்லாம் பேசி விட்டுப் போகிறார்கள். இஃதெனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்க

னும் இதற்குத் தேவையான செலவிலும் தாம் ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டார். தமக்குக் கிடைத்த பென்ஷன் தொகையை பாரத தேசத்தின் நன்மைக்காகவே செலவழித்தார்.

மற்றும் இவர் இந்தியாவில் இருந்த காலத்தில் ஹிந்து—முஸ்லீம் பிணக்கு தேச முன்னேற்றத்துக்குக் கெடுதலென்றுணர்ந்து இரு சமூகத்தின் ஒற்றுமைக்குப் பெரிதும் பாடுபட்டார். அலஹாபாத்தில் 1910ம் வருஷம் நடைபெற்ற இருபத்தைந்தாவது காங்கிரஸின் போது கனம் ஆகாகான் பல முஸ்லீம் பிரதிநிதிகளோடு காங்கிரஸுக்கு விஜயஞ் செய்தது இவருடைய தூண்டுதல் பேரில்தான்.

அலஹாபாத் காங்கிரஸ் முடிந்தவுடன் இவர் இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். பின்னர் இங்கிலாந்து சென்று 1915ம் வருஷம் வரை இந்தியாவின் சார்பாகப் பல காரியங்களைச் செய்து வந்தார். இந்தியாவில் என்னென்ன நிர்மாண வேலைகள் செய்யப் படவேண்டுமென்பதைப் பற்றி அடிக்கடி சிறு நூல்கள் எழுதி வெளியிட்டு வந்தார்.

கடைசியில் 1918ம் வருஷம் மார்ச் மாதம் 25ந் தேதி தமது 82வது வயதில் மரணமடைந்தார்.

வில்லை. திருப்பித் திருப்பி, ராமன் கதையையும் கிருஷ்ணன் கதையையும் சொல்லிக் கொண்டு, நடுவே நடுவே, தான் பிறந்து வளர்ந்த கதை, வாழ்க்கைப் பட்ட கதை முதலியவைகளைப் பற்றிப் பேசுகிறார்களே தவிர, நல்ல நாஜூக்கான பேச்சுக்களைப் பேச மாட்டார்களோ? யாராவது புருஷனும் மனைவியுமாக ரோட்டிலே உலாவிக்கொண்டு போவதைப் பார்த்து விட்டால், வந்தது ஆபத்து அவர்களுக்கு. இவர்கள் வாயிலிருந்து, நடையைப் பார்த்தாயோ, புடவையைப் பார்த்தாயோ என்று அவர்கள் காதில் படுமபடியாகவே, கொஞ்சங் கூட நாகரிகமில்லாமல் பேசுகிறார்கள். எனக்கு இதையெல்லாம் கேட்கவே கூச்சமாயிருக்கிறது.

பெண்களுக் கென்று இந்த ஊரிலே ஒரு கிளப் கூட இல்லை. சாயந்திரமானால் கொஞ்ச நேரம் இப்படி வெளியே போய் 'டென்னிஸ்—கின்னிஸ்'-ஏதாவது ஆடி விட்டு வருவோ மென்றால், அந்தப் பேச்சைப் பிரஸ்தாபிக்கக் கூட பயமாயிருக்கிறது. உன் மாப்பிள்ளை கிளப்புக்குப் போய் படுகிற பாட்டைத்தான் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே.

அப்பா இப்பொழுது அங்கே எப்படியிருக்கிறார்? ஜமா பந்தி யெல்லாம் முடிந்து விட்டதா? வேலையிலே ரொம்ப கண்டிப்பாக இருக்க வேண்டாமென்று சொல்லவும். ஏனென்றால் இந்தக் காலம் மிகவும் பொல்லாத காலமாயிருக்கிறது. கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களென்றால் பல பேருக்கு வேப்பிலையாய்க் கசக்கிறது. தவிர, ஜனங்களுக்கு சட்டம், ரூல் எல்லாம் தெரிந்திருக்கிறது. இந்தக் காங்கிரஸ்காரர்கள் கிராமம் கிராமமாக வந்து என்னென்னவோ பேசி ஜனங்களுடைய மனதைக் கலைத்து விட்டுப் போகிறார்கள். இந்த மாதிரியான காலத்தில், கலெக்டர், போலீஸ் சூப்பிரண்டெண்ட் முதலிய உத்தியோகஸ்தர்கள் ரொம்ப உதாராக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ரொம்ப கையை நீட்ட வேண்டாமென்று சொல்லவும். நீயும் உன் அதிகாரத்தைக் கொஞ்சம் அடக்கிக் கொள்ளவும். அதிகமாகப் பேசினாயானால், உன் பேரிலேயே கேஸ் போட்டு விடுவார்கள். வேலைக்காரர்களைக்கூட, 'வாடா, போடா' என்று அழைக்காமல், 'வாப்பா, போப்பா' என்றே கூப்பிடவும். 'இவளென்ன எனக்குப் புத்தி சொல்றது?' என்று என்னை வையாதே.

நம்மாத்துக்கு வருவாரே ஒரு மாமா—போலீஸ் சூப்பிரண்டெண்ட்—அவர் பெண் அலமுவுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார்களா? ஐ. சி. எஸ். பாஸ் பண்ணின பிள்ளைக்குத்தான் கொடுக்கப் போவதாகச் சொல்லிக்கொண் டிருந்தார்களே. எந்த இடம் அகப்பட்டது?

நீ உன்னுடைய ரெட்டை மணியை அழித்து, புதுமாதிரி சங்கிலி இரண்டு வடத்தில் பண்ணிப் போட்டுக் கொள்ளப் போவதாகச் சொன்னாயே. என்ன ஆச்சு! அப்பா, ஏதோ சௌக்கியமான நிலைமையி லிருக்கிற இந்தக் காலத்தில் ஏதாவது நகை நட்டுகள் போட்டுக் கொண்டால்தானே! பின்னாடி அப்பா 'ரிடைர்' ஆகிவிட்டால் பாதிச் சம்பளந்தானே கிடைக்கும்.

எல்லா வற்றிற்கும் விவரமாகக் கடுதாசி போடவும்.

பிரியமுள்ள

கனகா

பேரூர்க் கனகசபை—ஓர் கலை விருந்து

—சு. குருசாமி
B. A.

சிவபெருமானுடைய பல்வேறு உருவங்களில், நடன ரூபமாகிய நடராஜ வடிவமே சிற்பிகளுக்குகந்த மூர்த்தி போலும். திருப்பேரூரின் கண்ணுள்ள கனக சபையில், வீரபத்திரனின் கோர நடனமும், ஊர்த்தவ தாண்டவ மூர்த்தியின் ஆனந்தக் கூத்தும், கஜ சம்ஹாரக் கடவுளின் வெற்றி நர்த்தனமும், வெகு அழகாகக் கற்றூண்களில் செதுக்கப் பட்டிருக்கின்றன.

பேரூர்க்கோவில், இராஜேந்திர தேவ சோழனால், 11ம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று மஹா மண்பலத்திலுள்ள தூண்களிலும், உத்திரத்திலுமுள்ள கல்வெட்டுகளுனின்றுந்தெரிய வருகிறது. ஆயினும் இக் கனக சபை மதுரையில் கி. பி. 1625 முதல் 1659 வரை அரசாண்ட திருமலை நாய்க்கர் காலத்தில், அவருடைய சகோதரனாகிய அளகாத்திரி நாய்க்கரால் கட்டப்பட்டதென்பர். கனக சபைக்கு முன்னுள்ள ஒரு தூணில், துப்பாக்கி கொண்டுள்ள ஒரு போர்ச் சேவகனுடைய உருவம் செதுக்கப் பட்டிருக்கிறது. கனக சபை சமீப காலத்தது. என்பதற்கு இது ஓர் சிறந்த சான்றாயிருப்பதுடன், இந்தியச் சிற்பம் கால தேச வர்த்தமானங்களுக்கேற்றவாறு வளர்ச்சி யடைந்து வந்திருக்கிறது என்பதற்கும் ஓர் ஒப்பற்ற உதாரணமாகும். இந்தியச் சிற்பிகள், பண்டைச் சிற்ப சாஸ்திரத்தில் கூறியுள்ள விதிகளின் படியே உருவங்களையமைத்த போதிலும், காலத்திற்கேற்றவாறு, அவைகளில் சிற் சில மாறுதல்களையும் புகுத்தினார்கள். நம் சிற்பம் ஓர் வளருங்கலை என்பதற்கு இப்போர்ச் சேவகனுடைய உருவமே போதிய அத்தாட்சியாகும்.

கனக சபை வாசலின் இரு பக்கங்களிலும், குதிரை வீரர்களின் சிலைகள் வெட்டப்பட்ட இரண்டு தூண்கள் நிற்கின்றன. குதிரைகளின் உருவங்களில் வேகத்தையும், வீரன் முகத்தில் துடியையும் எளிதில் காணலாம். அக்கற் குதிரைகள், மிருக வங்கமைப்பிலக் கணத்தின்படி ஆக்கப் பட்டிருந்த போதினும்,உடம்பின் பரிமாணத்திற்கு அவைகளின் காதுகள் சற்றுச் சிறிதாகவே தோன்றுகின்றன. குதிரையின் உருவத்தின் கீழே ஒரு போர்ச் சேவகன் ஓர் சிறுத்தையுடன் சண்டையிடுவது போல் காட்டப்பட்டிருக்கிறது. போர் வீரனுடைய கத்தி, சிறுத்தையின் உடம்பை ஊடுருவிச் சென்று, மறு புறம் வந்திருப்பதாகச் சிற்பி காண்பித்திருக்கிறான். ஒரு பக்கம் குத்தின ஆயுதம் இன்னொரு பக்கம் வந்திருப்பதில், கோணம் மாறாமலிருப்பது கவனிக்கத்தக்கது. இந்தியச் சிற்பிகள் கணித ஞானமும் வாய்க்கப் பெற்றிருந்தார்கள் என்பதைப் பேரூர்க் கனக சபையைக் கூர்ந்து கவனிக்கும் ஓர் சிற்பக் கலை மாணவன் அறிவான்.

பிக்ஷாடண மூர்த்தியும், கஜ சம்ஹார மூர்த்தியும், பேரூர்க் கனக சபையில் எத்தகைய அழகுடனும், பொலிவுடனும் அமைந்திருக்கின்றனவோ, அம்மாதிரி தென்னிந்தி

யாவில் வேறு எக்கோவிலிலுமே காண முடியாது. தாருக வனத்து முனிவர்கள் தங்கள் மனைவிகளின் கற்புத்திறனைப் பற்றி மிகக் கர்வம் அடைந்திருந்ததாகவும், அவர்களைக் கர்வ பங்கம் செய்வதற்காகச் சிவபெருமான், பிக்ஷாடன மூர்த்தி வடிவமாகத் தாருக வனத்தில் தோன்றினரென்பதும் புராணக் கதை. சிவபெருமான் பிச்சைக்காரன் வடிவத்தில், நிர்வாணமாகக் கனக சபையின் இடது புறத்து மூன்றாவது தூணில் செதுக்கப்பட்டிருக்கிறார். அவ்வுருவத்தின் இடது புறத்துக் கோடியில் குண்டோதரன், தன் தலையில் திருவோட்டுடன் நிற்கிறான். தாருக வனத்து முனிவர்களால் ஏவப்பட்ட மான், பிக்ஷாடன மூர்த்தியின் வலது புறத்தில் நிற்கிறது. தூணின் இன்னும் இரண்டு புறங்களில் ரிஷி பத்தினிகளிருவர் ஆடை குலைவுற்று, கூந்தல் நெகிழ்ந்து நிற்கின்றனர்.

பிக்ஷாடன மூர்த்திக்கு எதிர்த்த தூணில் கஜசம்ஹார மூர்த்தி (யானையுரித்த மூர்த்தி)யைக் காணலாம். மானை ஏவியும் பயனில்லை யென்று கண்ட தாருக வனத்து ரிஷிகள் ஓர் பெரும் யாகஞ் செய்து, அதில் தோன்றிய யானையைச் சிவபெருமானைக் கொல்லுமாறு அனுப்பினர்களென்றும், பிச்சைக்கார வேடந்தரித்து வந்த பரமசிவன், அந்த யானையைக் கொன்று, அதன் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டாரென்றும் புராணங் கூறுகிறது. இக் கதையைச் சிற்பி கல்லில் சமைத்துக் காட்டியிருப்பது வெகு அழகாயிருக்கிறது. சிவபெருமானுடைய பாதங்களின் கீழ், யானையின் தலை துண்டிக்கப் பட்டுக் கிடக்கிறது. அதன் தோலைச் சிவபெருமான் போர்த்தி யிருக்கிறார். தோலின் பின்னால் யானையின் நான்கு கால்களும் ஒட்டிக்கொண் டிருக்கின்றன. மேற்புறத்தில் அதன் வால் சுருண்டு கிடக்கிறது. சிவபெருமான் நர்த்தனம் புரிந்து நின்றுகொண்டிருக்கிறார். அவருடைய முகத்தில் சிற்பி சிறிது கோரத்வத்தைக் காட்டியிருப்பது அவ்வளவு பொருத்தமானதாயில்லை. சம்ஹாரக் கடவுளாகிய உருத்திரமூர்த்திக்கு இதெல்லாம் ஒரு திருவிளையாட்டே யாகும். ஆகையினால் அம் மூர்த்தியின் இதழ்களில் ஒரு சிறு புன்னகையைச் சிற்பி பொருத்தி யிருந்தால், அது அவ்வுருவத்திற்கு ஓர் பெருந்தகையையும், சாந்தத்தையும் அளித்திருக்கும்.

முயலுகன் என்னும் அசுரனை அகோர வீரபத்திர மூர்த்தி வதை செய்வதுபோல், அடுத்த தூணில் ஓர் உருவம் சமைக்கப்பட் டிருக்கிறது. இதிலும், பொதுவாகக் கனகசபையிலுள்ள எல்லாச் சிலைகளிலும், கை நகம், கால் நகம் முதலிய அற்ப விஷயங்களில் கூடச் சிற்பி விசேஷ கவனஞ் செலுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது. சில மூர்த்திகளின் நகங்கள் வளர்ந்திருப்பதைக் கூட நன்கு காட்டி யிருப்பது, சிற்பியின் திறமையை வெகுவாய் எடுத்துக்காட்டுகிறது. அகோர வீரபத்திரர் ஒருபுறமாகச் சாய்ந்திருப்பதால், விலாவில் விழும் பள்ளத்தைக் கூடச் சிற்பி வெகு அற்புதமாய்க் காட்டி யிருக்கிறான். மானிட அங்கவமைப் பிலக்கணத்தில் சிற்பிக்கிருந்த புலமை இதனின்று நன்கு புலனாகிறது.

அதற் கெதிர்த்த தூணிலுள்ள அக்கினி வீரபத்திரரின் கோபக்கனல் வீசும் ஆவேசமும், கீழே விழுந்து கிடக்கும் அரக்கியின் பரிதாபகரமான தோற்றமும், மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்களின் கவனத்தைக் கூட ஈர்க்குந்தன்மையதா யிருக்கின்றன.

அடுத்த தூணில் துர்க்காதேவியின் திரு நடனமும், அதற்கு எதிர்த்த தூணில் இறைவனின் ஊர்த்தவ தாண்டவமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சமயம் தேவிக்கும், தேவனுக்கும் நர்த்தனத்தில் போட்டி வந்து விட்டதாகவும், வெகு நேரம்வரை இருவரும் தோல்வியும் வெற்றியுமில்லாமல் சரிசமமாக ஆடிக்கொண்டிருந்ததாகவும், இறுதியில் பரமசிவன் காதில் அணிந்திருந்த குண்டலம் கீழே விழுந்துவிடவே, அதை எடுப்பதற்காக நடனத்தை நிறுத்தினால், தான் தோல்வியுற்றதாகக் கருதப்படுவாரென எண்ணி, ஒரு காலின் பெருவிரலால் அதை எடுத்துக் காதில் அணிந்து கொள்வதற்காகக் காலை மேலே தூக்கவே, தேவி நாணமுற்றுத் தோல்வியை ஒப்புக்கொண்டதாகவும் ஒரு கதையுண்டு. அதைத்தான் இவ்விரண்டு உருவங்களும் காட்டுகின்றன. துர்க்கா தேவியின் முகத்தில் நாணவுணர்ச்சியைக் காட்ட முயன்ற சிற்பி பூரண வெற்றியடையவில்லை யென்றே சொல்ல வேண்டும். ஊர்த்தவ தாண்டவ மூர்த்தியின் இடக்கையிலுள்ள துடியை வலக் கையினால் அடித்துக் கொண்டிருப்பது கூர்ந்து கவனிக்கற்பாலது. அடிக்குங் கையிலுள்ள சுண்டுவிரல் சற்று உயர்ந்திருப்பது சிற்பியினுடைய தாள ஞானத்திறமைக்கு ஓர் அறிகுறியாகும்.

அடுத்த இரண்டு தூண்களில் விநாயகரும், ஆறுமுகக் கடவுளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய விநாயகர்களின் துதிக்கைகளைப் போல், இவ்விநாயகரின் துதிக்கை இடது புறம் வளைக்கப்படாமல், வலப்புறம் சுற்றியிருப்பது கவனிக்கத்தக்கது. ஆகையினால் வலம்புரி விநாயகர் என்று இவ்விக்கிரகம் அழைக்கப்படுகிறது.

சிவபெருமான் வேடனாகி வந்து அர்ஜ்ஜுனனோடு போர்புரிந்து, கடைசியில் பாண்டவ சிரேஷ்டனுக்குப் பாசுபதாஸ்திரம் அளித்த கிராதார்ஜ்ஜுனமூர்த்தியும் ஒரு தூணில் செதுக்கப்பட்டிருக்கிறது. மூல நடராஜர் சந்நிதியின் இருபுறங்களிலும், கோமுனியும், காலவ முனியும் நடராஜரின் திவ்விய நடனத்தைத் தரிசித்துக் கொண்டிருப்பது வெகு அழகாயிருக்கிறது. இது தவிர, முகட்டில் சுழல்தாமரையும், அதில் அழகிய கிளிகளும், மேலுங் கற்சங்கிலிகளும் செதுக்கியிருப்பது வெகு அற்புதமான வேலைப்பாடுகளாகும். மானிட இயற்கைக்கு மாறுபடாமல், அதி நுட்பமான வேலைத் திறனுடன் அமைந்துள்ள கனகசபைச் சிலைகள் சிற்பத்துறையிலேயே மேம்பட்டு விளங்குகின்றனவென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. பேரூர்ச் சிற்பங்களிலிருந்து, அக்காலத்து ஆடவரும் பெண்டிரும் எப்படி ஆடை யணிந்தார்கள், என்னென்ன ஆபரணங்கள் பூண்டார்கள், எவ்விதம் மயிர் புனைந்தார்கள், விலைமாதர்கள் எங்ஙனம் நாட்டிய மாடினார்கள் முதலிய பல்வேறு விஷயங்களை நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

கனகசபைச் சிற்பங்களைப் பார்வையிட்ட பெர்குஸன் என்னும் ஆங்கிலச் சிற்ப நிபுணர், அவை பெரும்பாலும் வேலூர்ச் சிற்பங்களை ஒத்திருக்கின்றனவென்றும், சிறந்த சிற்பத் திறமை அவைகளில் காணப்படவில்லை யென்றும், அவை, சிற்பம் க்ஷீணதசையடைந்த காலத்தைச் சேர்ந்தனவென்றும் கோவை ஜில்லா கெஜடியரில் எழுதியிருக்கிறார். இந்திய சிற்பத்தைப் பற்றி விமர்சனம் எழுதும் ஆங்கிலச் சிற்ப நிபுணர்கள்

ஒரு முக்கிய விஷயத்தை மறந்து விடுகிறார்கள். இந்தியக் கலை ஹிந்து மதத்துடன் நெருங்கிய சம்பந்தமுள்ளது. ஆகையினால் நமது கலையை அறிய விரும்பும் அந்நிய நாட்டார் நம்முடைய மதக் கோட்பாடுகளையும், புராண இதிகாசங்களையும் தெரிந்து கொள்ளுதல் அவசியம். அங்ஙனமில்லாது, கோயில் வேலைக்காரர்கள் புராணக் கதைகளைத் திரித்துக் கூறும் முட்டாள் தனமான வரலாறுகளைக் கேட்டுக் கொண்டு, ஆங்கில ஆசிரியர்கள் இந்தியச் சிற்பத்தைப் பற்றி அற்புதமான அபிப்பிராயங்களை வெளியிட்டு விடுகிறார்கள்! காரைக்காலம்மையாருக்கு அறுபத்து மூன்று புதல்வர்களிருந்ததாகவும், அவர்களே அறுபத்து மூன்று நாயன்மார்களென்றும் சொல்லுகிற மூட சிரோமணிகளை நான் எத்தனையோ கோயில்களில் கண்டிருக்கிறேன். இத்தகைய வித்வ சிரேஷ்டர்கள் கூறும் வரலாறுகளையே ஆதாரமாக வைத்துக் கொண்டு எழுதும் ஆங்கில ஆசிரியர்களின் அபிப்பிராயங்களுக்கு நாம் எத்தகைய மதிப்புக் கொடுக்க முடியும்?

காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோவிலில் கிராதார்ஜுன மூர்த்தியின் சிற்பம் ஒன்றிருக்கிறது. அதைப்பற்றிக் கூறும் அலெக்ஸாண்டர் ரே, அவருடைய 'பல்லவச் சிற்பம்' என்னும் புத்தகத்தில் (பக்கம் 31) பின் வருமாறு எழுதுகிறார்:—

'வேடன் வடிவமாகி வந்த சிவபெருமான், ஓர் அரசனுடன் சண்டையிடுவது போல் காட்டப் பட்டிருக்கிறது. அவ்வரசனைச் சிவபெருமான் பின்பு பன்றியாக மாற்றி விடுகிறார். வலது பக்கம் இருக்கும் மிருகமே அப்பன்றியைக் காட்டுகிறது.'

ஹிந்து மதக் கோட்பாடுகளிலும் அதன் புராணங்களிலும், இத்தகைய அறியாமையுள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கு நமது சிற்பம் எங்ஙனம் விளங்கும்? ஆனால் இம்மாதிரி அரை குறை ஞானத்தை வைத்துக்கொண்டு அவர்கள் சிற்ப விமர்சனம் எழுத வருவதுதான் நமக்கு வியப்பாயிருக்கிறது.

கனகசபைக்கு வெளியே செதுக்கப் பட்டிருப்பது போன்ற ஒரு குதிரை வீரன் உருவம், நடராஜருடைய மூலஸ்தான வாசலின் வலப் பக்கத்திலும் செதுக்கப் பட்டிருக்கிறது. இடது புறத்திலும் அம்மாதிரி ஓர் சிலை இருந்ததாம். அதைப்பற்றி ஓர் கதை வழங்கி வருகிறது. கனக சபையை அலங்கரிப்பதற்காகப் பாண்டிய நாட்டிலிருந்து ஒரு சிற்பி வந்திருந்தான். அவன் ஊரிலிருந்து புறப்படும் பொழுது, அவன் மனைவி மூன்று மாதம் கர்ப்பமாக விருந்தாள். பின்னர் அவளுடைய கர்ப்பம் முற்றி ஓர் ஆண் மகவை ஈன்றாள். வருஷங்கள் சென்றன. குழந்தையும் நாளுக்கு நாள் வளர்ந்து பள்ளிப்பிராயம் அடைந்தான். தாய் அவனைப் பள்ளியில் வைத்தாள். அவன் எழுத்தும் எண்ணுங் கற்றதோடு நில்லாமல், தனது குலத் தொழிலுக்குரிய சிற்ப சாஸ்திரம் முதலிய நூல்களையுங் கற்றுணர்ந்தான். இவ்வாறு அவனுக்குப் பதின்மூன்று வயதாகியது. ஒரு நாள் அவன் தாயையணுகி, 'என் தகப்பனார் எங்கே?' என்று கேட்டான். தாய் எவ்வளவோ மறைத்துப் பார்த்தும் பயனில்லாமையால், கடைசியில் பேரூர்க் கோயிலில் திருப்பணி செய்யப் போயிருப்பதாகச் சொன்னாள். உடனே சிறுவன், தன் தந்தையைப் பார்க்க ஆவல் மேலிட்டவனாய்ப்

பேரூருக்குப் புறப்படலானான். புருஷன் சென்ற பின்பு, பிள்ளையின் முகத்தைப் பார்த்தே ஆறுதலடைந்திருந்த அப்பேதை, தன் மகனைப் போக வேண்டாமென்று எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள். பிரயோஜனமில்லை. கடைசியில் இரண்டு வாரங்களுக்குள் திரும்பி வந்துவிட வேண்டுமென்று சிறுவனிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டு, அவனுக்குப் போக விடை கொடுத்தாள். சிறுவன் பேரூர் சென்று, கனக சபைச் சிற்பங்களை யெல்லாம் ஒவ்வொன்றாய்ப்பார்த்துக் கொண்டு கடைசியில் மூலஸ்தான வாசலுக்கு இடது புறமிருந்த குதிரை வீரன் உருவத்தண்டை வந்தான். அதைப் பார்த்ததும், 'இக் கட்டிடத்திற்கு வெகு சீக்கிரத்தில் ஊனம் வரும்' என்று கூறினான். இங்கிருந்தவர்களெல்லாம் 'ஏன்?' என்று கேட்டார்கள். 'இக் குதிரையின் வயிற்றில் நீரும், மணலும், தேரையும் இருக்கின்றன' என்றான் சிறுவன். இவ் வுருவத்தைச் சமைத்த சிற்பி 'இல்லை' என்று வாதாடினான். உடனே சிறுவன் இச் சிலையை உடைக்கவே அதில் அவன் கூறிய வண்ணமே, நீரும், மணலும், தேரையும் இருக்கக் கண்டு யாவரும் அதிசயித்தார்கள். பின்னர் அச் சிறுவன் தன் மகனே என்றறிந்த சிற்பி பெரிதும் மகிழ்வெய்தினான்.

உடைக்கப்பட்ட குதிரையின் சிதைந்த பாகத்தை இன்னும் அவ்விடத்தில் காணலாம்.

இக் கதையில் எவ்வளவு உண்மையிருக்கிறது, இதை எவ்வளவு தூரம் நம்பலாமென்று நம்மால் சொல்ல வியலாது. ஆனால் இதிலிருந்து ஒன்று மட்டும் புலனாகிறது. ஒரு கல்லைப் பார்த்த பார்வையிலேயே, அதன் தன்மையை யறியக்கூடிய சிற்ப நிபுணர்கள் அக் காலத்தில் இருந்தார்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அத்தகைய சிற்பத்திறமை இப்பொழுது எங்கே? தமிழ் நாட்டுக் கலைச் செல்வம் அழிந்து விடாமல் காப்பாற்ற வேண்டியது தமிழர்களுடைய கடமையல்லவா?

இந்தியாவிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்கள்

இப்பொழுது ஜில்லா போர்டுகள், தாலுகா போர்டுகள் முதலியவைகளைப் பற்றி அதிகமாகப் பிரஸ்தாபிக்கப் பட்டு வருகிறதல்லவா? ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த மாதிரியான ஸ்தல ஸ்தாபனங்கள் சுமார் எத்தனை இருக்கின்றன வென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிந்து கோள்வோம்.

சென்னை	155
பம்பாய்	249
வங்காளம்	109
ஐக்கிய மாகாணம்	48
பஞ்சாப்	29
பீஹார்—ஒரிஸா	66
மத்திய மாகாணம்	108
அஸ்ஸாம்	19
வ. மே. எல்லைப்புறமாகாணம்	5
ஆஜ்மீர்—மீர்வாரா	1
குடகு	1
டெல்லி	1

அழகுக்கும் அழிவுண்டோ?

——வை. சுந்தரம் ஐயர்

B. A., B. L.,

பெரிய ஏகாதிபத்தியங்கள் தோன்றின; மறைந்தன. இவைகளின் படையெடுப்புகள் விரைவிலே மறக்கப் பட்டு விடுகின்றன. ஆனால் இவைகளின் சித்திரக் கலைகள் மட்டும் அழிவது மில்லை; மறக்கப் படுவதுமில்லை. கிரேக்க, ரோம ஏகாதிபத்தியங்களை அவை விட்டுப் போன சிற்பங்கள், கலை ஞானங்கள் முதலியவைகளினால் நினைவு படுத்திக் கொண்டிருக்கிறோம். பெற்றோர்களை, அவர்களின் சந்ததி மூலமாகவன்றோ அறிந்து கொள்கிறோம். அதுபோல மொகலாய ஏகாதிபத்தியத்தின் புகழை, அதன் சித்திரக் கலைகளினால் நன்றாகத் தெரிந்து கொள்கிறோம். தென்னாட்டில் கோலோச்சிய சோழ, பாண்டிய மன்னர்களின் வீர பராக்கிரமம் மறைந்து விட்டது. ஆனால் அவர்கள் வைத்து விட்டுப் போன சித்திரங்களும் சிற்பக் கலையும் இன்னும் இருக்கின்றன. சித்திரக் கலைக்கு இந்த அழியாத் தன்மை இருப்பதனாலேயே அதற்கு அதிக பெருமை உண்டாகிறது. இதனால் அழகு, அழிவற்றது என்பது நன்கு தெரியவில்லையா?

சரித்திர சம்பவங்களை நாம் மறந்து விடுகிறோம் அவை, கட்டுக் கதைகளாகக் கூட மாறிவிடுகின்றன. ஆனால் பூமியிலிருந்து குடைந்து எடுக்கப் பெற்ற சித்திரச் சின்னங்கள், அற்றுப் போன சரித்திரத் தொடர்பை நமக்குச் சேர்த்துக் கொடுக்கிறது. இந்தப் புதை பொருள்கள் சரித்திரப் போக்கையே மாற்றி, மானிட ஜாதிக்கு சத்திய மார்க்கத்தை நன்றாகத் தெரிவிக்கின்றன.

சில சமயங்களில் ஒரு சித்திரமானது, அஃது முதலில் எதைப் பார்த்து எழுதப் பட்டதோ அதை விட அழகாக இருக்கிறது. ஓர் இயற்கைக் காட்சியைப் பாருங்கள்; புளகாங்கித மடைகிறீர்கள். அழகான படம் ஒன்றை நோக்குங்கள்; உங்கள் மெய்சிலிர்க்கிறது. ஒரு கற்சிலையைக் கவனியுங்கள். அதனையே பார்த்துக் கொண்டு மெய் மறந்து விடுகிறீர்கள்.

சித்திரத்தின் மற்றொரு பெருமையென்ன வென்றால், அஃது எப்பொழுதும் பிறர்க்கு மகிழ்ச்சியை யளித்த வண்ணமா யிருக்கிறது. ஒரு கோடீசுவரன் இருக்கிறான். அவனுடைய பணத்தை யெல்லாம் பாங்கிலே, தன் பெயரால் போட்டு வைக்கிறான். அந்தப் பணம் அவனுடையது. அதை யாரும் தொட முடியாது. அவன் இஷ்டம்போல் அதை அநுபவிக்கலாம். ஆனால் அவன் கட்டிய அழகான கட்டிடமோ, அதிலுள்ள சித்திரங்களோ, அவன் தன் பெயராலேயே அக் கட்டிடத்தை ரிஜிஸ்தர் செய்து வைத்துக் கொண்டிருந்த போதிலும், எல்லாராலும் பார்த்து அநுபவிக்கக் கூடியதா யிருக்கிறது. இந்த அழகான கட்டிடத்தைக் கட்டியவன் யார் என்று தான், கட்டிடத்தைப் பார்க்கிறவர்கள் முதலில் கேட்கிறார்கள். இந்தக் கோடீசுவரனுடைய செலவில், கட்டிடத்தைக் கட்டிய சிற்பி புகழ் பெற்று விடுகிறான். என்ன அதிசயம்!

கோவில்கள் சமைத்ததேன்?

—எஸ். கே. நாராயண ஐயர்
B. A., B. L.,

கடவுள் ஒருவருண்டென்னும் எண்ணம் தொன்று தொட்டு வந்துள்ளதென்றும், அத்தகைய தெய்வம் சர்வ வியாபி யென்றும், அவ்விதமிருப்பதாய்க் கொள்ளும் கூற்றே எண்ணிறந்த விஷயங்களை விளக்கி வைக்க உதவியளிப்பதென்றும் சொல்லப் பெற்றது. கடவுளை நிற்குணமாக வணங்குவதுவே பொருத்தம். என்றாலும் பாமர மக்களுக்கும் அறிவு விசாலமில்லா அஞ்ஞானிகளுக்கும் முதலில் சகுண வாயிலாகத் தெய்வ நிலையை விளக்கிப் பின்பே நிற்குண நிலையைச் சொல்ல வேண்டியிருக்கிறது. உலக விவகாரங்களிலும் பஞ்சேந்திரியங்களின் சேஷ்டைகளிலும் கட்டுப் பட்டுத் திரியும் மக்களுக்குத் தெய்வமொன்றுண்டென்னும் நினைவு எளிதில் தோன்றாது. அதுவும் தம் செயலில் வெற்றியும், நினைத்தபடி சாதிக்கக் கூடிய வாற்றலும், நிலையுமிருப்பின் தெய்வ நினைவே தோன்றுவது கஷ்டம். இதனை உத்தேசித்தே நம் முன்னோர்கள் ஒவ்வோர் ஊரிலும் ஓர் கோயில் கட்டுவித்தனர். பல வேலைகளைச் செய்து காலம் கழிக்கும் ஜனங்கள் கோயிலைக் காணுந் தோறுமேனும் கடவுளை நினைப்பர். அத்தகைய நினைவே தம் தொழிலிலும் நன்மை தீமை நோக்கி நியாயாநியாயம் உசாவிச் செய்யத் தூண்டும். சன்மார்க்கத்தைக் கைப்பிடிக்க ஊன்று கோல் போன்றிருக்கும். ஊரின் பல விடங்களினின்றும் பல பக்கங்களினின்றும் கோயிலைப் பார்ப்பதற்காக அவைகள் உயர்ந்த கோபுரங்களோடும் கட்டுவிக்கப் பட்டன. இக்கருத்தினை விளங்க வைக்க வேண்டி ஒளவை மூதாட்டியாரும் சுருக்கமாக 'கோயிலில்லாவூரில் குடியிருக்க வேண்டா' மென்றார்.

சகுண வாயிலாகக் கடவுளை வணங்கிய மக்கள் முதலில் கடவுள் தமக்கு இன்றியமையாத இயற்கைப் பொருள்களாயிருந்ததாகவே கருதி வந்திருக்கின்றனர். ஆரியர் தம் வேதங்களில் அக்னிக் கடவுளையும், வருணனையும் இந்திரனையும், சூரியனையும், சந்திரனையும் ஸ்தோத்தரித்து அவைகளே தெய்வங்களென்று கருதி வந்தனர் என்பது வெளிப்படை. கால தேச வர்த்தமானங்களுக் கேற்றவாறு ஜனங்கள் தத் தமக்கு முக்கியமான இயற்கைப் பொருள்களையே தெய்வங்களாகக் கொண்டாடி வந்தனர். தவிர மும்மூர்த்திகளென்று கொண்டாடும் பிரமன் பூமி யாகவும், விஷ்ணு நீராகவும், ருத்திரன் தேஜோ ரூபியாகவும் வணங்கப் பட்டு வந்திருக்கின்றனர். நீல நிறமுடைய கடலும் ஆகாயமும் விஷ்ணுவாகவும் அதனாலேயே 'சர்வம் விஷ்ணு மயம் ஜகத்' என்னும் பழ மொழியும் பிறந்திருப்பதாய்த் தெரிகிறது. நீரிலும் நிலத்திலும் ஜீவராசிகள் உண்டாவதாலும், நீரிலிருந்தே நிலம் பிறந்ததாகக் கருதப்பட்டதாலும் சர்வத்தையும் படைத்துக் காத்து வரும் விஷ்ணு தன் தொழிலில் ஓய்வு ஏற்பட பூமியாகிய பிரமனை சிருஷ்டி செய்ய உண்டாக்கியது போல் தோன்றுகிறது. எங்கும் பரந்த நீல நிற ஜலத்தினி

டையே பூமி தோன்றுவதால் விஷ்ணுவின் உந்திக் கமலத்தினின்றும் உற்பத்தியானதாகவும் கருதப்படுகிறது.

முந்திய பத்திகளில் சொல்லியதிலிருந்து பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத்துடைக்கும் எல்லையது பரம்பொருள் முன்னிருந்தபடியே தானிருப்பினும் பாமர மக்களால் நாம ரூபமாகத் தொழப்பட்டதன்றி மனித ரூபமாகவே வணங்கப் பெற்று வருவதும் புலப்படும். இத்தகைய எண்ணத்திற்கு மற்றோர் ஆதாரமுமுள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் வேதமென்று கொண்டாடும் விவிலிய நூலில் ஜெனிசிஸ் என்னும் பகுதியில் உலக உற்பத்தியைப் பற்றி கூறப்பெற்றுள்ளது. ஒவ்வோர் நாளும் எவ்வெவை சிருஷ்டிக்கப் பெற்றனவென்றுசொல்லி வந்து ஆருவதுதினத்தில் மனிதனைச் சிருஷ்டித்ததாகவும் அவனைதன் பிரதிபிம்பம்போல்படைத்ததாகவும் கூறப்பெற்றிருக்கிறது. இதனாலே புலப்படுவது யாதெனின் கடவுள் மனிதன் ரூபத்திலோ அல்லது அவன் குணம் தன்மை மாத்திரைகளைப் பொறுத்தோ இருப்பதுவே. அவ்விதம் சிருஷ்டித்த மனிதனுக்குள்ளே ஜீவனை ஊதியதாகவும் பின்னால் கூறப்பெற்றிருக்கிறது. ஜீவன் ஊதப்படுவதாவது ஜீவாத்மாக்களை பரமாத்மாவாகிய பகவான் தன்னிடமிருந்து படைப்பதையே குறிக்கும். தவிர தெய்வத் தன்மை மனிதனிடத்து முண்டென்பதையும் விளக்கும், சிற்சில விடங்களில் 'தெய்வம் மானுஷரூபேண' வென்று கேட்கப்படும் ஆன்றோர் மொழியும் ஒரு விதத்தில் இதனையே நினைவூட்டும் போலும்.

பகவான் அர்ச்சுனனுக்குச் சொல்லிக்காட்டிய கீதையைத் தமிழில் செய்தவரொருவர் தெய்வ நிலையை,

> எத்தேயத் தெத்திறத்தோர் எவ்வருணத்
> தெவ்வுருவின் என்னை ஆய்ந்தார்
> அத்தேயத் தத்திறத்தோற் கவ்வருணத்
> தவ்வுருவின வர் நேராவேன்
> முத்தேவர் முத்தொழிலும் முக்குணமும்
> கடந்து மறை முடிவின் முத்தி
> வித்தாகித் தனிநின்ற பழம் பொருள்

என்றார். கடவுள் அவரவர் மனவாக்குக் காயங்களால் தோத்தரித்தபடி அவ் வுருவிலேயே காக்ஷியளிக்கிறாரென்பது புராணக் கூற்று.

கடவுள் மனித உருவில் கொண்டாடப் புகுந்தோர் அவர் ஆணு அல்லது பெண்ணு அல்லது இரண்டு மல்லாத அலியாவென்றும் நினைக்கப் புகுந்தனர். தெய்வத்திற்குச் சக்தியுண்டென்பதால் சக்தி யென்பது ஓர் பெண்ணுகவும் அதுவே முழுமுதற் கடவுளென்றும் சொல்லுவோர் பலர். சக்தியென்பது சிவத்திலடக்க மென்றும் ஈசன் புருஷரூபியே யென்றும் பேசுவோர் பலர். இத்தகைய விஷயங்களை ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் ஒரு முடிவுக்கு வருவதென்பது சாத்தியமான காரியமல்ல. கடவுளைத் தோத்தரித்துப் பாடும் அவர் பெயர்கள் ஒவ்வொன்றும் காரணப் பெயர்களாகும். கருத்தினைச் சுட்டிக் காட்ட வேற்பட்ட பதமென்று முதலில் சங்கல்பித்துக் கொண்டாலொழிய வம்பு ஒழியாது. உண்மையை யறியாது பாமரபுத்தியினுலே தன் தெய்வமென் தெய்வமென்றும் சிறிது பெரிதென்றும்அழுக்காறுகொண்டு அரற்றுவோரனேகர். அறிவுடையாரொருவர் தெய்வ நிலையைப்பற்றிக் கூறுகிறார்:—

> "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா
> அலியுமல்லன்
> காணலும் ஆகான் உளன் அல்லன்
> இல்லை அல்லன்
> பேணுங்கால் பேணும் உருவாகும்
> அல்லனுமாம்
> கோணபெரிதுடைத்து எம்பெம்மானைக்
> கூறுதலே"

கடவுள் என்ன செய்கிறார்?—ஒரு சிறு கதை

—வி. கே. ஜெ.

மொகலாயர்கள் அரசாண்ட காலம். ஒரு சமயம் ஒரு மொகலாய மன்னனுடைய முன்னிலையில் ஒரு காஜி வர நேர்ந்தது. அவனுக்கு உண்மையிலேயே மதப்பற்று இருக்கிறதாவென்பதைப் பரிசோதிக்க மன்னன் விரும்பினான். ஆனால் அப்படி பரிசோதிப்பதற்கும் கொஞ்சம் சாமர்த்தியம் வேண்டுமல்லவா? அந்தச் சாமர்த்தியம் அரசனிடத்தில் இல்லை. ஆனால், காஜியின் மீது பொறாமை கொண்டிருந்த வேறொருவன், சில கேள்விகளை அரசனுக்குக் குறித்துக் கொடுத்திருந்தான். அந்தக் கேள்விகளையே சக்ரவர்த்தி, தன் முன்னிலையில் நிற்கும் காஜியைக் கேட்கலானான். அந்தக் கேள்விகளாவன:— கடவுளின் முகம் எந்தப் பக்கம் இருக்கிறது? எங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்? எதைச் சாப்பிடுகிறார்? என்ன செய்கிறார் என்பவைகளே. இந்தக் கேள்விகளுக்குச் சரியான பதில் சொன்னால் உத்தியோகம் நிலைக்கும் என்றும் எச்சரிக்கை செய்து விட்டான் அரசன் காஜிக்கு.

எந்தக் கேள்விகளை அரசன் கேட்டு விடப் போகிறானோ வென்று பயந்து இருந்த காஜி இவைகளுக்குச் சாமர்த்தியமாகப் பதில் சொல்ல வேண்டுமென்று தன் மனதுக்குள் நிச்சயித்துக்கொண்டு, பதில் சொல்ல எட்டு நாள் தவணை கேட்டான். இந்த எட்டு நாட்களும், காஜி பலத்த யோசனையிலாழ்ந்திருந்தான். ஒன்றும் புரியவில்லை. எட்டாவது நாளும் வந்து விட்டது. அரசனுக்குத் திருப்திகரமான பதில் சொல்ல வேண்டுமே, என்ன செய்வான்? தனக்கு உடம்பு சரியாயில்லையென்றும், ஆதலால் தர்பாருக்கு ஆஜராக முடியவில்லையென்றும் சாக்குச் சொல்லிவிடத் தீர்மானித்தான். இவன் இங்ஙனம் மனோவேதனைப்படுவதை இவன் வேலையாள் பார்த்தான். என்ன உடம்பென்று விசாரித்தான். தான் சாகுந்தறுவாயிலிருப்பதாகவும், தன்னை ஒன்றுந் தொந்திரவு செய்யவேண்டாமென்றும் காஜி கூறினான். ஆனால் வேலையாள், பிடிவாதமாக, எஜமானனின் வேதனையை அறிந்துகொள்ள ஆவல் கொண்டான். காஜி, தான் பதில் சொல்ல வேண்டிய கேள்விகளைத் திருப்பிச் சொன்னான். வேலைக்காரன், அடிமைத் தொழில் செய்து கொண்டிருந்தானானாலும் புத்திசாலி. தனது எஜமானனுக்குப் பதில், தானே தர்பாருக்குச் சென்று அரசனுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்வதாகத் தெரிவித்தான். இதைக் கேட்ட காஜி ஆச்சரியமடைந்தான். இந்தச் சமயத்தில், அரசனிடத்திலிருந்தும் ஆள் வந்தது. எனவே காஜி ஒன்றுந் தோன்றாமல், வேலையாளை அனுப்பிவிட்டான்.

வேலைக்காரன், தன்னிடமிருந்த நல்ல மாதிரியான துணிகளை உடுத்திக் கொண்டு நாசூக்காகச் சென்றான். அரசவையில், தன் எஜமானனின் பிரதிநிதியாக வந்திருப்பதாகவும், தன்னைக் கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்கலாமென்றும் கூறினான். மற்றும், தன்னிடமிருந்து விடைகள் தெரிந்து கொள்ள வேண்டுமானால், தான் குருஸ்தானத்தில் வீற்றிருக்க வேண்டுமென்றும், அரசன் சிஷ்யன் ஸ்தானத்தில் இருக்க

வேண்டுமென்றும் சொன்னான். அரசனும் இதற்குச் சம்மதித்து இவனைச் சிம்மாசனத்தில் உட்காருவித்து, தான் கீழே உட்கார்ந்தான்.

முதல் கேள்வி, கடவுள் உட்கார்ந்திருக்கும் இடம் எது என்பதல்லவா? இந்தக் கேள்விக்கு அப்படியே, வாய்மொழியால் பதில் அளிக்காமல், ஒரு பசுவைக் கொண்டு வருமாறு சொன்னான் வேலையாளாகிய குரு. அப்படியே பசு வந்து நின்றது. 'இதனிடத்தில் பால் எங்கே இருக்கிறது?' என்று அரசனைக் கேட்டான் குரு. 'பசுவின் மடியில்' என்றான் அரசன். அது தவறென்றும் பசுவின் உடம்பு முழுவதிலுமே பால் பரவியிருக்கிறதென்றும் சொன்னான் குரு. பிறகு கொஞ்சம் பாலைக் கொண்டு வரச் சொன்னான். 'இதில் வெண்ணெய் எங்கே இருக்கிறது?' என்ற கேள்விக்கு 'வெண்ணெய் பாலில் இருக்கிறது' என்றான் அரசன். 'எதோ, காண்பியுங்கள்' என்றான் குரு. யாரும் பதில் சொல்லவில்லை. அரசனும் விழித்தான். உடனே குரு சொல்கிறான்:—'பாலில் வெண்ணெய் இருப்பது உங்களுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் அதில் வெண்ணெய் இருப்பதாக நீங்கள் நம்புகிறீர்கள். உண்மையில், பால் முழுவதிலுமே வெண்ணெய் இருக்கிறது. அதுபோல் கடவுளும் எங்கும் வியாபித்திருக்கிறார். வெண்ணெய் பாலிலிருப்பதும், பால் பசுவிடத்திலிருப்பதும் போல் கடவுள் எங்கும் உளர். பால் வேண்டியிருந்தால் பசுவின் மடியிலிருந்து கறந்து கொள்வது போல, நாம் கடவுளை அடையவேண்டுமானால், நமது மனதை நாம் கறந்துகொள்ள வேண்டும்.'

இரண்டாவது கேள்வி 'கடவுள் எப்பக்கம்பார்க்கிறார்?' என்பது. இதற்குப் பதிலளிப்பதற்காக, குரு ஒரு விளக்கைக் கொண்டுவரச் சொன்னான். அந்த விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு, அதன் ஒளி ஒரு பக்கத்தில் மட்டும் பிரகாசிப்பதில்லை யென்றும் எங்கும் அவ்வெளிச்சம் தெரிகிறதென்றும், அந்தப் பிரகாரமே, மனதில் இருக்கும் ஒளியே கடவுளென்றும் அது ஜோதி மயமாய் எங்கும் வியாபித்திருக்கிறதென்றும் சொல்லி முடித்தான்.

மூன்றாவது கேள்வி 'கடவுள் என்ன செய்கிறார்?' என்பது. இதற்குப் பதில் அளிப்பதற்காக, வேலையாளாகியகுரு, தன் எஜமானனாகிய காஜியை அழைத்துவரும்படி கூறினான். அப்படியே காஜியும் வந்தான். தன் வேலையாள் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதையும், அரசன் கீழே அமர்ந்திருப்பதையும் பார்த்துத் திகைத்துப் போனான். வேலையாள் காஜியைப் பார்த்து, ஒரு வேலைக்காரனுடைய ஸ்தானத்தில் உட்காரும்படி சொல்லி, காஜிக்குரிய இடத்தில் அரசனை அமரும்படி சொன்னான். தான் சிம்மாசனத்தில் இருந்தபடியே சொல்லுகிறான்:—'இதுதான் கடவுளின் செயல். உலகத்தில் தினந்தோறும் இப்படித்தான் நடைபெற்று வருகிறது. ஒரு குடும்பம் மேன்மையடைவதும், பின்னர் இருந்த இடம் தெரியாமல் மறைவதும், அதன் ஸ்தானத்தில் வேறொன்று தோன்றுவதுமாயிருக்கின்றன. ஒரு சமயத்தில் ஒருவன் கீர்த்தி யடைவதும், மற்றொரு சமயம் அவன் புகழ் மங்குவதுமாய் உலகத்தில் சாதாரணமாக நடைபெறுகின்றன. இந்த மாதிரி வேலைகளைத்தான் கடவுள் செய்து கொண்டிருக்கிறார்.' அரசன் பரம சந்தோஷமடைந்து, அன்று முதல் அவனை காஜி உத்தியோகத்திலமர்த்திவிட்டான்.

அறிவுத்துறை



ஆகாய விமானம் உயரப் பறப்பதேன்?

—"விஞ்ஞான போதகர்"

ஆகாய விமானத்தைப் பற்றி ஆராய்வதற்கு முன் சில சில்லரை விஷயங்களைத் தெரிந்து கொள்வது மிக அவசியமாயிருக்கிறது. இரண்டு சக்திகள் ஒரு பொருளின் மீது வெவ்வேறாக இரு திசைகளிலிருந்து தாக்கினால் அல்லது இழுத்தால் அப்பொருள் அவ்விரு சக்திகள் இழுக்கும் திசைகளுக்கும் ஊடே மற்றொரு திசையில் தள்ளப்படும். இது சாதாரணமாக நாம் கண் கூடாகக் காண்பதோர் உண்மை.

அடுத்த பக்கத்துப் படத்தில் காட்டியுள்ளவாறு கப்பல் ஒன்றை, படகுகள் இ—ஈ இரண்டு திசைகளில் இழுத்துச் செல்லுகின்றன வென்று வைத்துக் கொள்ளுவோம். அவ்வாறு இரு திசைகளிலும் இழுக்கப்படும் கப்பல் அஆ திசையில் நகர்ந்து செல்லும். அதாவது அஇ, அ—ஈ என்ற இருசக்திகளால் இரு திசைகளில் இழுக்கப் படுவதை அஆ என்ற திசையில் ஒரே சக்தியால் இழுக்கப்படுவது போலாகிறதல்லவா? ஆகவே அ இ, அ ஈ இரு சக்திகளும், அ ஆ ஒரு சக்திக்குச் சமானமாகின்றன. இதனையே திருப்பிக்கூற வேண்டுமானால் அ ஆ ஒரே

சக்தி, அ இ, அ ஈ என்ற இரு சக்திகளுக்குச் சமானமாகிறது. சுருங்கக் கூறுமிடத்து ஏதாவதொரு சக்தி ஒரு பொருளின் மீது தாக்கினால் அந்தச் சக்தியை இரண்டு சிறிய சக்திகள் இரு வேறு திசைகளில் தாக்குவதாகப் பாவிக்க முடியும் என்பதே யாகும்.



ஆகாய விமானம் காற்றைவிட அதிகக் கனமாயிருந்தும் அது வாயு மண்டலத்தில் பறந்து செல்லும் மர்மம் அறிவது அவசியமல்லவா? கடந்த மாத "ஜோதி" கதிர்களில் நாம் ஆராய்ந்த புகைக்கூண்டு, புகைக் கப்பல் இவைகள் மேலே செல்லும் வகை முற்றிலும் வேறு விதமானது. ஆனால் எப்பொருளுக்கும் மேலே தள்ளும்சக்தி யொன்று உதவியாயிருக்கிறதென்பது உண்மை. புகைக் கூடு முதலியவை காற்றை விடப் பன் மடங்கு இலேசாகி விடுவதினிமித்தம் மேலே தள்ளப்படுகிறதென்று தெரிந்தோம். ஆனால் ஆகாயக் கப்பல் அவ்வாறு இலேசாயிராது. காற்றைவிடப் பன் மடங்கு கனமாயிருந்தும் மேலே போவதால் அதனை மேலே தள்ளும் சக்தி எவ்வாறு வந்தடைகிறதெனப் பார்ப்போம்.

ஏதாவதொரு பொருள் காற்றில் வெகு வேகமாகச் சென்றால் அதனைக் காற்றின் சக்தி தடுக்க முயலுகிறது. ஓடும் வஸ்துவின் வேகத்திற்குத் தகுந்த அளவுடன் காற்றும் அதனைப் பின் பக்கமாகத் தள்ளுவதை நாம் சாதாரணமாகப் பார்க்கிறோம். வேகமாக ஓடும் புகை வண்டியின் ஜன்னலருகிலிருந்து ஒரு புத்தகத்தைச் செங்குத்தாய்ப் பிடித்துக் கொண்டிருந்தால் காற்று அப் புத்தகத்தை நமது கையோடுசேர்த்துத் தள்ளுவதை நாம் உணரலாம். ஒரு மணிக்கு 20 மைல் வேகத்துடன் போகும்போது தள்ளும் காற்றின் சக்தியைவிட 4பங்கு 40 மைல் வீதம் போகும் போதும், 9 பங்கு 60 மைல் வீதம் போகும் போதும் அதிக சக்தியுடன் தள்ளுகிறது.

மேலே குறிப்பிட்ட புத்தகத்தைச் செங்குத்தாய் பிடிக்காது மறுபக்கப் படத்தில்காட்டியவாறு தரை மட்டத்திற்குசுமார் 15டிக்கிரிமுன்உயர்வாகப் பிடித்திருந்தால் காற்றின் தள்ளும் வேகம் இரு திசைகளில் புத்தகத்தைத் தள்ளுவதை உணரலாம். முன்னால் வந்து தாக்கும் காற்றால் புத்தகம் பின்புறமாக அ ஆ திசையிலும் மேலாக அ இ திசையிலும் தள்ளப்படுவதை நாம் உணர முடியும். திடீரென்று புத்தகத்தை விட்டு விட்டால் அஃது அ ஈ திசையில் அடித்துக் கொண்டு போகப்படும். ஆகவே நாம் துவக்கத்தில் அறிந்தவாறு அ ஆ, அ இ இவ்விரண்டு பக்கமாகத் தள்ளும் சக்திகள் அ ஈ திசையை நோக்கித் தள்ளும் சக்திக்குச் சமானமாகிறது. இவ்விரண்டு சக்திகளில் அ இ மேலே



தூக்கும் சக்தியையும் (Lifting force) அ ஆ பின்பக்கமாக இழுக்கும் சக்தியையும் (Dragging force) உடைத்தாயிருக்கின்றன. இவ்விரண்டிலும் தூக்கும் பலம் அதிகமானது. தூக்கும் பலத்தை அதிகரிக்கவேண்டுமானால் பின்புறமாகத் தள்ளும் பலத்தைக் குறைக்க வேண்டுமல்லவா?

நாம் மேலே குறிப்பிட்ட புத்தகத்தையே எடுத்துக் கொள்ளுவோம். அது வேகமாகச் செல்லும்போது அதன் பின்புறத்தில் அதனை ஒட்டி சதா காற்று நீக்கப்பட்டு சுத்த சூனியம் (Vacuum) ஏற்பட்டுக்கொண்டே போகுமல்லவா? அவ்வாறு பின்பக்கம் காற்று இல்லாதவாறு போகவே முன் பக்கத்திலிருந்து பின் பக்கம் தள்ளும் சக்தி இயற்கையில் அதிகமாகி வேகத்தைத் தணிக்குமல்லவா? பின்புறமாகத் தள்ளும் பலம் அதிகமானால் மேலே தூக்கும் பலம் குறைந்து விடுவது நிச்சயம். இவ்வாறு ஏற்படாவண்ணம் செய்வதற்குப் பின்புறத்தில் சதா காற்று தங்கியிருக்குமாறு புத்தகத்தை அமைத்தல் வேண்டும். அது எவ்வாறு அமைக்கப்பட வேண்டுமென்பதை விளக்குவோம்.

தற்கால மோட்டார் வாகனங்கள் முன்போல பின் புறத்தில் செங்குத்தாய் உயர்ந்திராமல் வளைவாக யிருப்பதைக் காணலாம். அவைகள் ஆங்கிலத்தில் 'ஸ்ட்ரீம்லைன்' (Streamline Cars) வண்டிகள் என்றழைக்கப்படுகின்றன.

முன் மாதிரியான வண்டிகள் ஓடும் போது பின் புறத்தில் க்ஷண நேரத்திற்காவது காற்றில்லாமல் செய்து கொண்டு ஓடுகின்றன. இதனால் வண்டியை எதிர்த்துத் தள்ளும் காற்றின் பலம் அதிகரிக்கவே வண்டியின் வேகம் குறைவு படுகிறது. இவ்வாறு வேகம் குறைவுபடவே, சாதாரண





மாக வேண்டிய வேகத்திற்கும் எண்ணெய் அதிகம் செலவாகிறது. இப்படியாக நாம் பார்க்கும்போது பழைய வண்டிகளினால் அதிகம் செலவு ஏற்பட்டிருந்ததை அறிகிறோம். ஆனால் தற்கால வளைவான வண்டிகளுக்குப் பின் காற்றில்லாமல் போக ஏதுவில்லை. ஏனெனில் வண்டி வேகமாய்ப் போனாலும் காற்று அதன் வளைந்த பக்கமாய்ச் சரிந்து கொண்டே போய் எப்பொழுதும் காற்று பின் புறம் தங்கியிருக்க ஏற்படுகிறது. ஆகவே தற்கால வண்டிகள் காற்று பின்பக்கமாகத் தள்ளும் பலத்திற்குத் தகுந்த அளவு மட்டும் வேகம் சிறிது குறைக்கப் படுகிறதேயன்றி பின்புறமாக சுத்த

அமைக்கப் படுகின்றன. பூமியில் இருக்கும் விமானம் முன் பக்கம் மிகவும் உயர்ந்தேயிருக்கும். விமானத்திலுள்ள இயந்திரமும், முன் பக்கமாக (சில பின் பக்கமாக)ச் சுழலும் கைகளும் விமானத்தை வேகமாக ஓடச் செய்கின்றன. அவ்வாறு வேகமாய் ஓடிய மாத்திரத்தில் காற்றின் பலாத்காரம் அதிகரித்து நாம் முன் குறிப்பிட்ட அடி தூக்கும் பலம் தானாக வந்தடைகிறது. இறக்கைகளுக்குப் பின் புறமாகக் காற்றில்லாமல் சுத்த சூனியம் ஏற்பட்டு வேகம் குறைவுபடா வண்ணம் இறக்கைகளைத் தட்டையாகச் செய்யாமல் பின் புறமாக வளைவுடன் கூடியதாக அமைக்கப் படுகின்றன.

1

2

சூனியம் ஏற்படுவதாலுண்டாகும் வேகக் குறைவில்லை. முன் பக்கமிருந்து காற்று அதிகமாகத் தாக்காது விலகியோடும்படியாக வண்டிகளின் முன் பாகத்தை முனையாக ஒடுக்கியமைக்கின்றனர். மோட்டார் வண்டிகளைப் போலவே மேனாடுகளில் புகைவண்டிகளையும் அமைத்து வேகத்தை அதிகப்படுத்தி வருகின்றனர்.

நாம் இதுவரை கவனித்தவைகள் யாவும் ஆகாய விமானத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன. முன் குறிப்பிட்ட புத்தகத்தைப் போலவே ஆகாய விமானத்தின் இறக்கைகள் முன் பக்கம் உயர்ந்த வண்ணமாக

மேலே காட்டிய படங்களில் உள்ளது போலவே விமானத்தில் இறக்கையின் பக்கத் தோற்றமிருக்கும். அதாவது இறக்கையைக் குறுக்காக வெட்டினால் மேலே காட்டியவாறு தோன்றும். விமானம் நேர்முகமாக ஓடும்போது காற்று, முதல் படத்தில் காட்டியது போல பின் புறம் சதாயிருக்க ஏற்படுகிறது. ஆனால் விமானம் மேல்நோக்கி திடீரென்று ஏறும்போது அதன் பின்புறத்தில் காற்றில் அனேக விதச் சுழல்கள் ஏற்பட்டு (படம் 2) வேகத்தைத் தணிக்கப் பார்க்கிறது.

ஆகாய விமானம் நேராகச் சென்றால் அது காற்றின் வேகத்தால்

மேலே தூக்கிக் கொள்ளப்படுகிறது. அங்ஙனம் தூக்கப் படுவதற்கு விமானத்தின் இறக்கைகள் முன்னுயர்வாக அமைக்கப் பட்டிருப்பது காரணமாயிருக்கிறது. விமானம் ஓடுவதற்கு அதன் முன்பாகத்திலுள்ள இயந்திரத்தால் சுழற்றப் படும் கை (Propeller) உதவியா யிருக்கிறது. விமானம், துவக்கத்தில் சிறிது தூரம் தரையில் ஓடினால்தான் அது தூக்கப் படும் காற்றின் வேகம்வந்தடைகிறது. அதுசிறிது தூரம்தரையில் ஓடிஏறவும் ஓடிநிற்கவும் அதன் அடிப்பாகத்தில் சக்கரங்கள் இரண்டும், வாலின் அடியில் சிறியசக்கரம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விமானம் தரையில் நிற்கும்போது அதன் தலைப் பக்கம் உயர்வாகவும் அடிப்பக்கம் தாழ்வாகவுமிருக்கும். அவ்வாறிருந்தால்தான் காற்றின் வேகம் அதன் இறக்கையில் அதிகமாகத் தாக்கி அதனைச் சீக்கிரத்தில் மேலே தூக்கிக் கொள்கிறது. இப்பொழுது, விமானம் ஓடும்போதே திடீரென்று மேல் நோக்கியும், கீழ் நோக்கியும் செல்லும் வகையையும், வலது, இடது புறமாகத்திருப்பப்படும் வகையையும் சற்று கவனிப்போம்.

ஆகாய விமானத்திற்கு இரண்டடுக்கு இறக்கைகள் இருப்பது அவசியமில்லை. ஆனால் வால் பக்கத்தில் செங்குத்தான தகடு ஒன்றும் (படத்தில் நெ. 1) அதின் இரு புறத்திலும் இரு மட்டமான தகடுகளும் (நெ. 2) இறக்கைகளின் பின் பகுதியில் ஒரு வாலமான பாகம் (நெ. 3) மேலும், கீழுமாக உயர்த்தக் கூடியதாகவும் அமைந்திருத்தல் அவசியமாகும். தகடு நெ. 1 வலது இடதுபுறமாகவும், தகடு நெ. 2 மேலுங் கீழுமாகவும் திருப்பக்கூடியன. இவைகள் யாவும் சிறிய கம்பிகளால் இணைக்கப்பட்டு விமானம் ஓட்டுபவன் வேண்டியவாறு இழுத்துத்திருப்பக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

விமானம் வலது புறம் திரும்ப வேண்டுமானால் மறுபக்க(அ)படத்தில் காட்டியிருப்பதுபோல நெ. 1 தகட்டை வலதுபுறமாக இழுக்க வேண்டும். அவ்வாறு திருப்பப்பட்டதும், காற்று வால் பாகத்தை அம்பால்(———>) காட்டியவாறு இடதுபுறமாகத் திருப்பும். அதே சமயத்தில் வலதுபுற இறக்கையில் தொங்கும் பாகத்தை மேலே உயர்த்தவும் இடதுபுற இறக்கையிலுள்ளதைக் கீழே தாழ்த்தவும்



வேண்டும். இதனால் வலது புறந் தணிந்து, இடதுபுறம் உயர்ந்துங் கொடுக்கும்.

விமானம் இடதுபுறமாகத் திரும்ப வேண்டுமானால் (ஆ) படத்தில் காட்டியவாறு நெ. 1 தகட்டை இடதுபுறமாக வளைக்கவேண்டும். அதனால் வால் பாகம் காற்றால் வலது புறமாகத் தள்ளப்படுகிறது. அதே சமயத்தில் வலது இறக்கையில் தொங்கும் பாகத்தைத் தாழ்த்தி இடது இறக்கையிலுள்ளதை உயர்த்தியுங் கொடுக்கப்படுகிறது.

யாவற்றையும் ஒவ்வொரு படத்திலும் திசை காட்டும் அம்புகளால் காட்டப்பட்டிருக்கின்றன.

நேர் முகமாகவே போக வேண்டுமானால் விமானம் ஒரே வேகத்துடன் செல்ல வேண்டும். ஆனால் வேகத்தை அதிகரித்தால் காற்றின் உயர்த்தும் பலம் அதிகரிக்கிறது. அதனால் விமானம் மேலே சிறிது சிறிதாகத் தூக்கப்பட்டு உயரத்தில் போக ஏற்படுகிறது. வேகத்தைக் குறைத்தால் காற்றின் உயர்த்தும் பலமும் குறைந்து விமானம் கீழே வரப் பார்க்கும். ஆகவே



அ



ஆ



இ



ஈ

விமானம் மேல்நோக்கி திடீரென்று செல்லவேண்டுமாயின் (இ) படத்தில் காட்டியவாறு நெ. 2 தகடுகளை உயர்த்த வேண்டும். அதுபொழுது வால் பாகம் காற்றால் தாழ்த்தப்பட்டு விமானம் உயரத்தில் எழும்புகிறது. அது கீழ் நோக்கிச் செல்லவேண்டுமாயின் (ஈ) படத்தில் பார்ப்பதுபோல அதே தகடுகளைத் தாழ்த்தவேண்டும். அவ்வாறு செய்தவுடன் வால் பாகம் உயர்ந்து விமானம் கீழ் நோக்கிப் போகிறது. மேற்கூறிய திருப்புதல்

ஓடும் வேகத்தை அதிகரித்தோ அல்லது குறைத்தோ விமானத்தை உயர்த்தவும் தாழ்த்தவுங் கூடும். இது மெதுவாகச் செய்யப் படும் வேலை. ஆனால் திடீரென்று உயர்த்த, தாழ்த்த வேண்டுமானால் நாம் முன்பு கூறியவாறு வால் பாகத்திலுள்ள நெ. 2 தகடுகளை கீழும், மேலுமாக வளைத்தல் வேண்டும்.

காற்று அமைதியாக விருந்தால் சாதாரண வேகத்திலும் மேற்கூறியவாறு விமானத்தை எவ்விதமாகவா

வது ஓட்டலாம். ஆனால் விமானத்தை எதிர்த்துப் புயல் ஏற்பட்டு காற்று பலமாக வீசினால் விமானத்தைத் தூக்கும் காற்றின்பலம் அதிகரிக்கிறது. ஆகவே விமானம்மேலே வேகமாக எழும்பும். அச் சமயங்களில் விமானத்தை ஓட்டுபவன் விமானத்தின் வேகத்தை வெகுவாகக் குறைக்க வேண்டும். இப்பொழுது காற்று, விமானம் செல்லும் மார்க்கமாகவே பலமாக வீசினால் அதனை எதிர்த்து விமானத்தைத் தூக்கும் காற்றின் பலம் குறைந்து விடுமல்லவா? அவ்வாறு குறையவும் விமானம் கீழிறங்கப் பார்க்கும். இதனால் பல விமானங்கள் கீழே திடீரென்று இறங்கி சிதறுண்டு போயிருக்கின்றன. இதனைத் தடுப்பதற்கு, அதாவது விமானத்தைத் தூக்கும் காற்றின் பலத்தை அதிகரிப்பதற்கு வேகத்தை அதிகரிக்க வேண்டும். இதனால் விமானத்தைத்தகுந்த வேகத்துடன் வேண்டிய உயரத்தில் ஓட்டுவதற்குக் காற்றடிக்கும் திசையும், அதன் வேகமும் தெரிவது அவசியமன்றோ? இதற்காகவே நாம் சென்ற மாதச் சஞ்சிகையில் குறிப்பிட்டவாறுஆங்காங்கு விமானம் தங்குமிடங்களில் ஜல வாயு கொண்ட ரப்பர்க் கூட்டை மேலே விடுத்து அது செல்லும் திசையையும், நேரத்தையுங் கண்டு காற்றின் வேகத்தையும், அது வீசும் திசையையும் அடிக்கடி பார்த்து ஆகாய விமானிகளுக்கு அறிவிக்கப் படுகிறது.

ஆகாய விமானம் பூமியிலிருந்து புறப்படுவதைவிட பூமியில் இறங்கும் போதுதான் அதிக அபாயம் ஏற்படும். மேலே ஏறுவதற்கு, எதிர்த்து வீசும் காற்றின் தூக்கும் பலம் உண்டாகும் வரை விமானத்தைத் தரையில் ஓட்ட வேண்டும். ஆனால் பூமியில் இறங்கும் போது வெகு ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டும். பூமியை நோக்கி வரும் போது வேகம் அதிகமாயிருந்தால் அது பூமியில் மோதுண்டு தவிடுபொடியாகி விடும். வேகம் குறைவாயிருந்தால் காற்றின் தூக்கும் பலம் திடீரென்று குறையவே விமானம் நேராகக் கீழே விழுந்து நொறுங்கி விடும். இதனால் ஆகாய விமானி,விமானத்தை நேர்முகமாக பூமியை நோக்கி ஓட்டாது, வளைவாக ஓட்டி மெதுவாகப் பூமியை வந்தடைய வேண்டும்.

நீரில் ஓடும் கப்பலின் பின் புறமாகத் தண்ணீரில் வேகமாகச் சுழலும் 'புரோபெல்லர்' என்னும் சக்கரம்போலவே ஆகாய விமானத்திலும் ஒரு சக்கரம் முன் பக்கமாகவிருந்து சுழன்றுவிமானத்தைஓட்டுகிறது. அது சாதாரணமாக ஒரு வினாடிக்கு 1000 அல்லது 1500சுற்றுகள் சுற்றுகிறது. இச் சுழலும் கருவி சாதாரணமாக உறுதியாகவும், அதே சமயத்தில் லேசாகவுமுள்ள மரக் கட்டைகளால் செய்யப் பட்டவை. அக் கட்டைகள் நுனியில் சிறிது வளைவாயிருக்கும். அதனால், அவைகள் சுழலும் போது அவைகள் வேகமாக ஒதுக்கும் காற்றின் ஒரு பாகம் விமானத்தை முன் பக்கமாகத் தள்ளுகிறது. மற்றொரு சிறிய பாகம் சுழலும் கட்டைகளின் வேகத்தைக் குறைக்கிறது. ஆனால் முன்பாகத்தைத் தள்ளும் பலம் 4 பங்கானால் சுழலும் கட்டைகளின் வேகத்தைக் குறைக்கும் பலம் 1 பங்காகிறது. இச்சுழலுங் கருவியைச் சுற்றுவதற்குச் சாதாரண மோட்டார் வாகனத்திலுள்ள 'டீசல்' இயந்திரம் போன்ற பெட்ரோல் எண்ணெயால் ஓடும் இயந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் வெகுவாக ஒரே தன்மையானாலும், விமானத்தின் இயந்திரம் வெகு இலேசான உருக்கு அலுமினியம் போன்ற உலோகங்களால் செய்யப்படுகின்றன.

காற்றுடி பறப்பதேன் ?

இப்பொழுது சிறுவர்கள் விளையாட்டுக்காகக் காற்றுடிகளைப் பறக்கவிட்டு ஒருவருக்கொருவர் சண்டை செய்து சந்தோஷமடைந்து வருகின்றனர். ஆனால் ஆதியில் காற்றுடிகளை உயரத்தில் பறக்கவிட்டு அதிலமைத்துள்ள நுட்பமான கருவிகள் மூலம் வாயு மண்டலத்தின் சீதோஷ்ணம், அமுக்கும் பலம், வாயு வேகம் முதலியவற்றை ஆராய்ந்து வந்தனர். சில சமயம் இரவிலும் காற்றுடிகளைப் பறக்கவிட்டு வந்தனர்.



(1)

ஆகாய விமானம் பறக்கும் வகையைத் தெரிந்த பின் காற்றுடி பறக்கும் காரணத்தை யறிவது வெகு எளிது. முதற் படத்தில் உஈ காற்றுடி என்று வைத்துக் கொள்வோம். அதில் பிணித்திருக்கும் நூல் அதனை படத்தில் காட்டியவாறு முன் பக்கம் நிமிர்ந்த வண்ணம் அந்தரத்தில் நிற்கச் செய்கிறது. அஆ காற்றுடியைத் தாக்கும் காற்றின் பலத்தின் திசையாயிருந்தால் அப் பலம் இரண்டு திக்கில் பிரிந்து நின்று ஒன்று ஆஇ வாகவும், மற்றது ஆஈ வாகவும் காற்றுடியைத் தள்ளும். ஆஈ காற்றுடியின் பக்கமாகச் சரிந்து போவதால் அப் பலம் காற்றுடியை ஒன்றும் செய்வதறில்லை. ஆனால் ஆஇ பக்கமாய்ச் செல்லும் பலம்தான் காற்றுடியை மேலே உயர்த்துகிறது. இதனைத் துவக்கத்தில் தெளிவாக உணர்த்தியிருக்கிறோம். இவண் காற்றின் முழுப் பலம் ஆஇ திசையில் இழுக்கிறது.



(2)

இப்பலத்தை இரண்டாம் படத்தில் காட்டியுள்ளவாறு காற்றுடியில் பிணித்து இழுக்கப்படும் ஆஊ நூலின் இழுப்பும், காற்றுடியின் கனம் ஆஎ இவ்விரண்டும் சேர்ந்து சரி சமானமாக்கி விடுகின்றன. இதனால் காற்றுடி அந்தரத்தில் அப்படியே நிற்கிறது. காற்றுடி மேலே ஏற வேண்டுமானால் ஆஇ பலம் அதிகரிக்க வேண்டும். அதாவது காற்று பலமாய் வீச வேண்டும். காற்று தானாக வேகமாய் வீசா விட்டால் அது பலமாய்க் காற்றுடியைத் தாக்குவதற்கு ஆஊ நூலை வேகமாய் இழுக்க வேண்டும். காற்றுடியை மேலே உயர்த்துவதற்கு நூலை வேகமாய் இழுக்க வேண்டியதைப் போலவே ஆகாய விமானம் மேலே ஏறுவதற்கு அதன் சுழல் சக்கரம் விரைவாய்ச் சுழன்று வேகத்தை அதிகரிக்க வேண்டும். ஆகவே காற்றுடியின் நூலைப் பிடித்து வேகமாய் இழுக்கும் பையனை, ஆகாய விமானத்தை வேகமாய் ஓட்டும் இயந்திரம் ஒத்திருக்கிறது.

வைரங்களுக்கு ஏன் அதிக விலை?

—சி. ஜே. ஏ.

ஒரு சிறிய கல். பளிச் பளிச்சென்று மின்னுகிறது. ஆனால் இதற்குக் கொடுக்கவேண்டிய விலையோ நூற்றுக் கணக்கில்தான். இதற்குக் காரணம் என்ன? எந்தப் பொருளை உற்பத்தி செய்ய அதிகமான உழைப்புத் தேவையாயிருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் அதன் விலையும் நிர்ணயிக்கப் படுகிறது என்ற பொருளாதார தத்துவம், இந்த வைர உற்பத்தித் தொழிலைக் கொண்டு தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

உலகத்திலே அதிகமான பணச் செலவில் செய்யப்படுகிற தொழில் இந்த வைர உற்பத்தித் தொழில். இந்தியாவிலேதான் இது முதன் முதல் நடைபெற்றதாகத் தெரிகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு 800 வருஷங்களுக்கு முன்னிருந்தே, இந்தியாவில் வைரச் சுரங்கங்கள் இருந்ததாகவும் இதிலிருந்து வைரங்கள் தோண்டியெடுக்கப் பட்டனவென்றும் சரித்திரங்கள் கூறுகின்றன. கிறிஸ்துநாதர் காலத்தில், வைரம், கிடைத்தற்கரிய ஒரு பொருளாகவே இருந்தது. பிளினி என்ற ரோம தேசத்து ஆசிரியன், வைரங்களில் ஆறு வகை இருந்தன வென்றும், இவை கிடைப்பது அரிதானபடியால், அரசர்களே இவைகளை உடைத்தாயிருந்தார்களென்றும் சொல்கிறான். வைரமானது, மிகவும் கெட்டிப்பட்ட ஒரு பொருளென்றும், இதனை ஓர் இரும்பு உலையின் மீது வைத்துச் சம்மட்டி கொண்டு அடித்தால் கூட உடைந்து போவதில்லையென்றும், இதனை ஒரு இளகும் பதார்த்தமாகச் செய்ய வேண்டுமானால் ஆட்டின் ரத்தத்தில் ஊறவைக்க வேண்டுமென்றும் சொல்கிறான். இந்த எண்ணந்தான், அநேக நூற்றாண்டுகளாக ஜனங்களின் மனதில் பதிந்திருந்தது.

சுமார் 1200 வருஷங்களாக, இந்தியாவிலுள்ள சுரங்கங்களிலிருந்துதான் வைரங்கள் தோண்டி எடுக்கப் பட்டு வந்தன. பிறகு போர்னியோ தீவில் வைரங்கள் இருப்பதாகத் தெரிந்தது. பின்னர் பதினெட்டாவது நூற்றாண்டில் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஜில் பிரதேசத்தில் வைரச்சுரங்கங்கள் அகப்பட்டன. இங்கிருந்து மட்டும் 160 லட்சம் காரெட் நிறையுள்ள வைரங்கள் தோண்டியெடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கும் வைரங்கள் அகப்படுவது நாளாவட்டத்தில் குறைந்து விட்டது. இதன் பிறகு தென் ஆப்ரிக்கா வைரச் சுரங்கங்கள் தலையெடுக்கலாயின. சென்ற 65 வருஷ காலத்தில் தென்னாப்பிரிக்கா யூனியன் பிரதேசத்தில் மட்டும் 1850 லட்சம் காரெட் நிறையுள்ள வைரங்கள் கிடைத்திருக்கின்றன. அதாவது உலகத்திலிருக்கும் வைரங்களில் முக்கால் பாகம் இங்கேதான் கிடைத்திருக்கின்றன. வைரங்கள் அகப்படும் இடத்திற்கு 'நீலத்தரை' என்று பெயர். ஒரு டன் நிறையுள்ள இந்த மண்ணிலிருந்து ¼காரெட் எடையுள்ள வைரமே கிடைக்கிறது. இதிலும் முக்கால்பாகம், நகைகள் முதலியன ஒன்றுஞ் செய்வதற்கு லாயக்கில்லாதது. அப்படியானால், சென்ற 65 வருஷ காலத்தில் தென்னாப்பிரிக்காவில் எத்தனை டன் மண்ணைத் தோண்டி யெடுத்திருக்கவேண்டு மென்பதை ஊகித்துக் கொள்ளலாம். இவ்வளவு சிரமப்பட

வேண்டியிருப்பதனுல்தான், வைரத்திற்கு விலை அதிகம்.

இந்த வைர உற்பத்தித் தொழிலில் எவ்வளவு சிரமம் இருக்கிறதென்பதை இன்னும் சிறிது தெளிவாகச் சொல்வோம். ஒரு டன் மண் வெளியாகும்படி சுரங்கத்தைத் தோண்டினுல், அதில் ஒரு கோடியே நாற்பது லட்சத்தில் ஒரு பாகம் வைரமாகக் கிடைக்கிறது. இந்த ஒரு பாகத்திலும் முக்கால்பாகம் கழிவுப்பொருளாகவே எதற்கும் பயன் படாமல் போகிறது.

வைரங்கள் அதிக விலையில் விற்கப்படுவதற்கு மற்றொரு காரணத்தையுஞ் சொல்லலாம். இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் வைரங்களுக்கு அரசாங்கத்தார் அதிகமான தீர்வை விதிக்கிருர்கள். சமீபத்தில் கூட, இந்த இறக்குமதித் தீர்வை, 100க்கு 5 விகிதம் குறைக்கப் பட்டிருப்பதை நேயர்கள் அறிவார்கள்.

வைரத்தைச் சாணை பிடிக்கிற கலை, முதல் முதல்இந்தியாவிலேதான்தெரிந்திருந்தது. ஒரு வைரத்தைக் கொண்டு மற்றொரு வைரத்தைச் சாணை பிடித்து வந்தார்கள். ஆனுல் இது தாமதமான வேலை. நவீன முறையில் வேகமாகவும், பல முகங்களுடனும் வைரங்களைச் சாணை பிடிக்கக்கண்டு பிடித்தவன் 1475ம் வருஷத்தில் லட்விக்வர்ன் பெர்குவெம் என்பவன். இவன் ஒரு பெல்ஜிய தேசத்தான்.

17வது நூற்ருண்டிற்குப் பிறகுதான், இந்தச் சாணை பிடிக்குந் தொழில் அதிக அபிவிருத்தியடைந்தது. ஒரு குண்டூசியின் தலை அளவுள்ள ஒரு வைரத்தைக் கூட 58 முகங்களோடு இப்பொழுது சாணை பிடிக்கிருர்கள். பெரும்பாலும் இந்தத் தொழில், பெல்ஜியத்திலுள்ள ஆண்ட்வெர்ப் நகரத்தில் நடக்கிறது.

கோஹினூர் வைரம்

ஷாஜஹான் சக்ரவர்த்தி டெல்லியில் ஆண்டு கொண்டிருந்தபோது மிர்ஜா முல்லா என்பவன் கர்நாடக மாகாணத்தின் நவாபாக நியமிக்கப்பட்டான். இவனுடைய நிருவாகத்தில் கோல்கொண்டா பிரதேசம் இருந்தது. அதிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட வைரங்களுள் ஒன்றே கோஹினூா. இதற்கு ஆதியில் மொகல் வைரம் என்று பெயர். இந்த வைரம் 1656 அல்லது 1657ம் வருஷத்தில் கண்டு பிடிக்கப் பட்டதாகச் சொல்லப் படுகிறது. இந்த வைரம் பின்னர், மொகலாய மன்னர்களின் பரம்பரைச் சொத்தாக வந்து கொண்டிருந்து. அவுரங்கஜீப் காலத்தில், டாவர்ணியர் என்ற ஒரு யாத்திரிகன் இதனைப் பரிசோதித்த போது இது சுமார் 268 காரெட் நிறையுள்ளதாக இருந்தது.

1739ம் வருஷம், நாதர்ஷா என்பவன், டெல்லியின் மீது படையெடுத்து வந்து சூறையாடியபோது, இந்த வைரத்தைத் தன் வசப் படுத்திக் கொண்டு பாரசீகத்திற்கு எடுத்துக் கொண்டு போய் விட்டான். இவன் தான் இதற்கு 'கோஹினூர்' என்று பெயர் வைத்தான். இதன் பொருள் 'ஒளி மலை' யென்பது. இதன் பின்னர், பஞ்சாப் மன்னனுகிய ரண ஜித் சிங் என்பவன் வசம் 1813ம் வருஷம் இந்த வைரம் வந்து சேர்ந்தது. பஞ்சாப் மாகாணம் பிரிட்டிஷாரால் 1849ம் வருஷம் கைப்பற்றப் பட்ட போது, இந்த வைரமும் பிரிட்டிஷார் வசம் அகப்பட்டது. விக்டோரியா மகாராணிக்கு இது பின்னர் அனுப்பப் பெற்றது. அப்பொழுது இது 186 காரெட் நிறையுள்ளதாயிருந்தது.

1851ம் வருஷம் இந்தவைரம் 38நாள் சாணை பிடிக்கப்பட்டது. இதற்கான செலவு மட்டும் 120,000 ரூபாய். இதற்குப்பிறகு இதன் நிறை 106 காரெட்டாகக்குறைந்து போயிற்று. இப்பொழுது இது பிரிட்டிஷ் அரசருடைய மகுடத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

சமஷ்டி அரசியல் என்றால்—?

—கே. வி. ராமசுப்ரமணியம்
B. A., B. L.,

சமஷ்டி அரசியல் முறையில் ஐந்து அம்சங்கள் காணலாம் என்று நாம் சென்ற நவம்பர் மாத இதழில் கூறியிருக்கிறோம். இந்த அம்சங்கள் ஒவ்வொன்றையும் இனி நாம் விவரமாக ஆராய்வோம். சுயேச்சையாக இருக்கும் சில பிரதேசங்கள் தங்கள் பொது நன்மையை யுத்தேசித்து ஒரு மத்திய ஸ்தாபனத்தை ஏற்படுத்த ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதே முதல் அம்சம். இந்த அம்சம் பூர்த்தியாக வேண்டுமானால் சமஷ்டியில் சேர விரும்பும் எல்லாப் பிரதேசங்களும் சுயேச்சையாக இருக்க வேண்டும். இதை யனுசரித்துத்தான் 1937ம் வருடம் மார்ச்சுமீ 31உ வரை இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் இங்கிலாந்தில் இருக்கும் இந்தியா மந்திரிக்கும் கீழ்ப்பட்டு இருந்த இந்திய மாகாணங்களுக்குப் பொறுப்பாட்சியாகிய சுய ஆட்சி (சில நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு) அளிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் இந்த சுய ஆட்சியுள்ள மாகாணங்களும் இந்திய சமஸ்தானங்களும் ஒரு சமஷ்டியில் சேர வேண்டும். மற்றத் தேசங்களில் சமஷ்டி அரசியல் முறை ஏற்பட்ட முறைக்கும் இந்தியாவில் அவ்வித அரசாட்சி முறை ஏற்படப் போகும் முறைக்கும் சில முக்கியமான வித்தியாசங்கள் உண்டு.

(1) மற்றத் தேசங்களில் சமஷ்டி அரசியல் ஏற்பட்ட பொழுது அந்தத் தேசத்திலுள்ள எல்லாப் பிரதேசங்களும் ஏக காலத்தில் சமஷ்டியில் சேரவில்லை. அவ்விதம் எல்லாப் பிரதேசங்களோ, அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறையாத பிரதேசங்களோ, சமஷ்டியில் சேர்ந்தால்தான் சமஷ்டி அரசியல் ஏற்படுத்த முடியும் என்ற யாதொரு நிர்ப்பந்தமும் இல்லை. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவிலும், கானடாவிலும் சில பிரதேசங்கள் மட்டுமே முதலில் சமஷ்டியில் சேர்ந்தன. பிறகு காலக்கிரமத்தில் மற்றப் பிரதேசங்களும் சேர்ந்து கொண்டன. ஆகையால் சமஷ்டியில் சேருவதற்கும், சேர மறுப்பதற்கும், இந்தப் பிரதேசங்களுக்குப் பூர்ண சுதந்திரம் உண்டு. ஆனால் இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில் அந்தச் சுதந்திரம் இந்திய சமஸ்தானங்களுக்கு இருந்த போதிலும், இந்திய மாகாணங்கள் சம்மதப்பட்டாலும் சம்மதப்படாவிட்டாலும் சமஷ்டி ஏற்படும் பொழுது சமஷ்டியில் சேர்ந்துதான் ஆக வேண்டும்.

(2) மற்றத் தேசங்களில் சமஷ்டி ஆரம்பம் ஆவதற்கு முன், குறைந்த பக்ஷம் இவ்வளவு பிரதேசங்கள் சேர வேண்டும் என்று யாதொரு நிர்ப்பந்தமுமில்லை. ஆனால் இந்தியாவில் இந்திய மாகாணங்கள் மட்டும் சேர்ந்த ஒரு சமஷ்டி சர்க்கார் ஏற்படுத்த முடியாது. குறிப்பிட்ட எண்ணிக்கைகளுக்குக் குறையாமல் சமஸ்தானாதிபதிகள் சமஷ்டியில் சேரச் சம்மதிக்க வேண்டும். அதாவது சமஷ்டி சட்ட சபையின் மேல் சபையான ராஜாங்க சபையில் (Council of State) மொத்தம் 260 பிரதிநிதிகளில் 104 ஸ்தானங்கள் சமஸ்தானங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த 104 ஸ்தானங்களில் ஒவ்வொரு சமஸ்தானமும் இவ்வளவு ஸ்தானங்க

ளுக்குப் பிரதிநிதிகள் நியமிக்க வேண்டும் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எல்லாச் சமஸ்தானங்களிலும் மொத்தம் சுமார் 8 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். குறைந்த பக்ஷம் 52 ஸ்தானங்களுக்குப் பிரதிநிதிகள் நியமிக்கப் பாத்தியமுள்ள சமஸ்தானங்கள் சமஷ்டியில் சேரச் சம்மதிக்க வேண்டும். இந்தச் சமஸ்தானங்களின் ஜனத்தொகை 4கோடிஜனங்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தியடைந்தால்தான் இந்தியாவில் சமஷ்டி சர்க்கார் ஏற்பட முடியும்.

இவ்விதம் குறிப்பிட்ட சில சமஸ்தானங்கள் சேர்ந்தால்தான் இந்திய சமஷ்டி சர்க்கார் ஏற்படும் என்று இந்தியா ஆக்டில் ஏன் விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிச் சற்று ஆராய்வோம்.

(அ) இந்தியாவில் சுமார் 600 சமஸ்தானங்கள் இருக்கின்றன. (பட்லர் கமிட்டியாரின் ரிப்போர்ட்டில் 562 சமஸ்தானங்கள் என்று கண்டிருக்கிறது. இந்த ரிப்போர்ட்டில் கணக்கிடப்படாத சிறிய சமஸ்தானங்களும் இருக்கின்றன) இந்தச் சமஸ்தானங்களின் ஜன சங்கியை சுமார் 8 கோடி. இவைகளின் விஸ்தீரணம் சுமார் 7 லக்ஷம் சதுர மைல்கள். அதாவது பூரா இந்தியாவின் விஸ்தீரணத்தில் கிட்டத்தட்ட பாதி விஸ்தீரணத்தையும் ஜன சங்கியையில் நாலில் ஒரு பங்கும் உள்ள ஓர் பாகத்தைச் சமஷ்டியில் சேர்க்காமல் மாகாணங்கள் மட்டும் சேர்ந்த ஒரு சமஷ்டி ஏற்படுத்தினால், இத்தகைய சமஷ்டி சர்க்கார், தான் நிர்வகிக்க வேண்டிய விஷயங்களைத் திருப்திகரமாக நிர்வகிக்க முடியாது என்று பிரிட்டிஷ் சர்க்கார் அபிப்பிராயப் படுகிறார்கள். உதாரணமாகத் தற்காலம் ரயில்வே வருமானம் சுமார் 87 கோடி. இதில் சுமார் 62 கோடி (அதாவது $\frac{4}{5}$ பாகம்) சுங்கவரியும் உப்பு வரியும். இந்த வரிகளை மறைமுகமான (indirect) வரிகள் என்று சொல்லுவதுண்டு. நிலவரி, வருமான வரி முதலியவைகளைப் போல் இந்த வரிகளை ஜனங்களிடமிருந்து நேராக வசூலிப்பதில்லை. ஜனங்கள் உபயோகப்படுத்தும் சரக்குகளின் பேரில் இந்த வரி விதிக்கப்படுகிறது. இந்தச் சரக்குகளின் கிரயத்தொகையில் இந்த வரித் தொகையும் சேர்ந்து விடுவதால் இந்த வரிகளையும் ஜனங்கள்தான் செலுத்துகிறார்கள். இந்திய சமஸ்தானங்களிலுள்ள ஜனங்களும் சாமான்களை உபயோகப்படுத்துவதால் இந்திய சமஸ்தானங்களிலிருந்தும் இந்த வரிகள் வசூலிக்கப்படுகின்றன. ஆனால்இந்தத்தொகைகள் பிரிட்டிஷ் இந்தியா சம்பந்தமாகவே செலவழிக்கப்படுகின்றன. இந்திய ராணுவச்செலவு இந்திய சமஸ்தானங்கள் சம்பந்தமான செலவாகயிருந்தபோதிலும், இந்திய ராணுவம சம்பந்தமாக ஏற்படும் செலவுக்காக சமஸ்தானங்கள் ஏற்கனவே பிரத்தியேகமாக பிரதேசங்களும், தொகைகளும் இந்திய சர்க்காருக்கு (அதாவது இந்திய சர்க்காரின் முன் பாத்தியஸ்தர்கனான கம்பெனியாருக்கு)க் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் சுங்கவரி, உப்புவரி முதலியவைகளைத் தங்கள் சம்மதமில்லாமல் தங்கள் ஜனங்களிடமிருந்து இந்தியா சர்க்கார் வசூலித்தும் அதனால் தாங்கள் யாதொரு பிரயோசனமும்அடைகிறதில்லை என்று சமஸ்தானங்கள் முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் பிரிட்டிஷ் சர்க்காரின் ஆதிபத்துக் குட்பட்டிருக்கும் சமஸ்தானங்கள் தங்கள் குறைகளை பகிரங்கமாக வெளியிட்டுக் கொள்

வதற்கு முடிகிறதில்லை. பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பதிலாக சுய ஆட்சி யுள்ள இந்திய மாகாணங்கள் மட்டும் சேர்ந்த ஒரு சமஷ்டி சர்க்கார் ஏற்படுத்தினால் இந்த சமஷ்டி சர்க்காருக்கும் இந்திய சமஸ்தானங்களுக்கும் மனஸ்தாபமும் வித்தியாசங்களும் உண்டாகும். இந்திய சமஸ்தானங்கள் சுங்க வரி விதிக்க ஆரம்பிக்கலாம். கடலோரமுள்ள சமஸ்தானங்கள் குறைந்த விகித சுங்க வரிகளை விதித்து வெளியூர்களிலிருந்து ஏராளமான சரக்குகளைத் தருவிக்கும். இந்தச் சரக்குகளைச் சமஸ்தான எல்லையை விட்டு மாகாணங்களின் எல்லைக்குள் வரும்போது மறுபடியும் இந்திய சர்க்காருக்கு வரி செலுத்த வேண்டும். திருட்டுத் தனமாக இச்சரக்குகளைக் கொண்டு வர முயற்சியும் நடக்கலாம். தற்காலம் புதுச்சேரியிலிருந்து திருட்டுத் தனமாகக் கொண்டு வரப்படும் சாமான்களைத் தடுப்பதற்கு மட்டும் ஏராளமான தொகைகள் செலவாகின்றன. இந்தியாவின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குள் சரக்குகளை அனுப்ப இவ்வித முயற்சி ஏற்படுமானால் அதனால் ஏற்படும் கஷ்டங்களையும் சிக்கல்களையும் விவரிக்க வேண்டிய அவசியமில்லை. இப்பொழுது கூட கத்தியவாரிலுள்ள பவநகர் (Bhavnagar) என்ற சிறிய சமஸ்தானத்துக்கும் இந்திய சர்க்காருக்கும் சுங்க வரிகள் சம்பந்தமாக வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் சமஸ்தானங்களும் சேர்ந்த ஒரு அகில இந்திய சமஷ்டி சர்க்கார் ஏற்படுத்தினால், இந்த சமஷ்டி சர்க்காரின் நிர்வாக அதிகாரத்திலும் சட்ட அதிகாரத்திலும் இந்திய சமஸ்தானங்களுக்கும் பொறுப்பு ஏற்படுவதால் இத்தகைய மனஸ்தாபங்கள் ஏற்படாது.

(ஆ) தற்காலம் ராணுவ இலாகா மத்திய சர்க்காரின் நிர்வாகத்திலிருந்து வருகிறது. மத்திய சர்க்காருக்குப் பதிலாக சமஷ்டி சர்க்கார் ஏற்படுத்தினால் மேற்படி நிர்வாகத்தை சமஷ்டி சர்க்காரிடம் ஒப்புவிக்கவேண்டும். (சில நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு) இந்திய சமஸ்தானங்களையும் இந்திய மாகாணங்களையும் பாதுகாக்கும் பொறுப்பு இந்திய ராணுவத்தைச் சேர்ந்தது. இந்திய சமஸ்தானங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை யுடைய ஒரு இலாகாவை இந்திய சமஸ்தானங்கள் அடங்காத ஒரு சமஷ்டி சர்க்காரிடம் ஒப்புவிப்பதை இந்திய சமஸ்தானாதிபதிகள் ஆக்ஷேபிக்கிறார்கள். இவ்விதம் ஒப்படைத்தல் சமஸ்தானங்களுக்கும் கம்பெனியாருக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தங்களுக்கு விரோதம் என்று சமஸ்தானாதிபதிகள் சொல்லுகிறார்கள். இந்தக்காரணத்தினாலும் இந்திய சமஸ்தானங்கள் சமஷ்டியில் சேர வேண்டும் என்று வற்புறுத்தப் படுகிறது.

(இ) இத்துடன் இன்னும் ஓர் காரணமும் கூற வேண்டும். இந்திய மாகாணங்களில் தேசீய உணர்ச்சி வளர்ந்து வருவதைக் கண்டு பிரிட்டிஷ் சர்க்காரும் முதலாளிகளும் (இந்திய முதலாளிகள் உள்பட) மனங் கலங்குகிறார்கள். இந்திய மாகாணங்களுக்குச் சுய ஆட்சி கொடுத்து இந்தியர்களுக்கு ஓட்டுரிமையையும் அதிகப் படுத்தி, இந்திய மாகாணங்களும் அடங்கிய ஒரு சமஷ்டி சர்க்காரையும் சட்ட சபையையும் ஏற்படுத்தினால் இவை மிகவும் முற்போக்காகச் செல்ல முடியாமலிருப்பதற்காக ஒரு முட்டுக் கட்டை அவ

சியம் என்று பிரிட்டிஷ் சர்க்கார் வகையராக்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இதற்காகச் சில பிற்போக்காளர்களையோ (Reactionaries) அல்லது அடிப்படையான மாறுதல்களை விரும்பாதவர்களையோ (Conservatives) சமஷ்டியில் சேர்க்க வேண்டியது அவசியம். இந்திய சமஸ்தானாதிபதிகள் சமஷ்டியில் சேர்ந்தால் இந்த நோக்கம் நிறைவேறும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் வகையராக்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இந்திய வட்ட மேஜை மகா நாட்டின் சமஸ்தானப் பிரதிநிதிகளாகிய சர் மனுபாய் மேட்டா (Sir Manubhai Mehta) சர் லிகத் ஹயத் கான் (Sir Liquat Heyat Khan) இவர்கள் 20-3-1933-ல் சமஸ்தானாதிபதிகளின் சபைக்கு (Chamber of Princes) அனுப்பிய ரிப்போர்ட்டிலிருந்தும், இந்தியா ஆக்ட் சட்டமாவதற்கு முன் ஏற்படுத்தப் பட்ட பார்லிமெண்டரி கூட்டுக் கமிட்டியறிக்கையிலிருந்தும் இந்தக் காரணம் ஸ்பஷ்டமாக வெளியாகிறது.

ஆகையால் மேலே சொல்லிய காரணங்களால்தான், குறிப்பிட்ட சமஸ்தானங்கள் சேர்ந்தால்தான் சமஷ்டி ஏற்படுத்தலாம் என்று இந்தியா ஆக்டில் கண்டிருக்கிறது.

(3) மற்றத் தேசங்களில் சமஷ்டியில் சேர்ந்திருக்கும் பிரதேசங்கள் எல்லாம் சுய ஆட்சியுள்ள தனி மாகாணங்கள். ஆனால் இந்தியாவின் சமஷ்டி அரசியலில் சேருவது சுய ஆட்சியுள்ள மாகாணங்களும் சமஸ்தானங்களும் மட்டும் அல்ல. சுய ஆட்சியில்லாத சில மாகாணங்கள்—கமிஷனர் என்ற தலைவருக்குட்பட்ட சில மாகாணங்களும் இந்திய சமஷ்டியில் சேரும். இவைகளின் நிர்வாகத்தை சமஷ்டி சர்க்காரே அந்தந்த மாகாண கமிஷனர்கள் மூலம் நடத்துவார்கள்.

இந்தியாவுக்கும் மற்ற சமஷ்டி தேசங்களுக்கும் உள்ள மற்ற வித்தியாசங்களை அடுத்த இதழில் ஆராய்வோம்.

இப்படியும் நடக்குமா?

ஜப்பானிலே மொத்தம் 1627 சினிமா கொட்டகைகள் இருக்கின்றன.

ஃ ஃ ஃ

உலகத்தில் தினந்தோறும் சராசரி ஐம்பதினாயிரம் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன.

ஃ ஃ ஃ

இங்கிலாந்தில் சராசரி ஒவ்வொருவரும் 225¼ ரூபாய் வருமானவரி செலுத்துகிறார்கள்.

ஃ ஃ ஃ

1936ம் வருஷம், ஜப்பானில் 3,300 லட்சம் ஜனங்கள் சினிமா பார்க்கச் சென்றிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

இத்தலியைத் தவிர்த்து மற்ற வெளி நாடுகளில் சுமார் ஒரு கோடி இத்தாலியர்கள் வசிக்கிறார்கள். முஸோலினி, குடியேற்ற நாடுகள் வேண்டுமென்று கேட்பதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது?

ஃ ஃ ஃ

தென்னாப்பிரிக்காவிலுள்ள ஜோஹான்னெஸ்பர்க் நகரத்தில் ஒரு கொத்தன் சமீபத்தில் இறந்து போனான். இவன் ஒரு பிரம்மசாரியாகவே வாழ்க்கையை நடத்தி வந்தான். இவன் சேர்த்து வைத்த பொருள் 8,325,000 ரூபாய். இந்தப் பெருந் தொகையை தர்மத்திற்கு எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறான்.

ஃ ஃ ஃ

பூமியிலே விதை போட்டு நமக்கு வேண்டிய கறிகாய்களைப் பயிரிட்டுக் கொள்கிறோ மல்லவா? அந்தச் சிரமம் இல்லாமல் ரசாயனப் பொருள்களின் கலப்புக் கொண்டு, கறி காய்களை உற்பத்தி செய்து கொள்கிற முறையைக் கண்டு பிடிக்க அமெரிக்க விஞ்ஞான சாஸ்திரிகள் சிலர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

நமது அரசியல் டைரி

இந்தியா

காங்கிரஸ் அங்கத்தினர்கள்—1938-ம் வருஷத்திற்கு

பர்மா உள்பட, வடமேற் கெல்லைப்புற மாகாணந் தவிர்த்து—3,140,249 பேர்.

1937-ம் வருஷத்து அங்கத்தினர்கள்—636,131 பேர்.

பர்மா

1938ம் வருஷத்திற்கு பர்மா மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள்

19-12-37ல் பர்மா மாகாண காங்கிரஸ் கமிட்டி தேர்தல் நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் :—

ஸ்ரீமான்கள்

1. ஜனார்த்தன பி. சுக்லா
2. ஜகதீச மிச்ரா
3. லால் பகதூர் பாண்டே
4. கே. வி. ரெட்டி
5. கே. நடராஜத் தேவர்
6. ராமேசநாத் கெளதமர்
7. ராம்தாஸ் ஒஜா
8. காங்கா சிங்
9. சோணிராம் பொத்தார்
10. எஸ். பி. லாத்தியா
11. பி. கே. தாதா சான்ஜி
11. டி. ஏ. ராஜன்
13. டாக்டர் பி. ஏ. நாயர்
14. கே. நடராஜன்
15. ஆர். பி. சின்ஹா
16. வெ. சாமிநாத சர்மா
17. சி. எம். அலிபாய்
18. எஸ். பஞ்சவர்ணம்
19. கெளரி பிரசாத் பொத்தார்
20. ஜி. எச். முஸ்தபா
21. சு. வீர. வீரப்பன்
22. ஆ. பழ. சொக்கலிங்கஞ் செட்டியார்
23. மு. சுப. முத்து பழனியப்ப செட்டியார்
24. ரதிலால் தேசாய்
2 . மோஹன்லால் காளிதாஸ்
26. திரேந்திர சந்திர தேவே
27. ஜே. என். பிஸ்வாஸ்
28. ஜாஹுர் ஷா
29. என். ஜி. டட்
30. கேசர்தேவ் சராப்

மேற்படி முப்பது பேரில் முதல் 20 பேர் ஹரிபுரா காங்கிரஸ் பிரதிநிதிகளாகச் செல்ல உரிமையுடையவர்.

ருஷ்யா

ருஷ்யாவின் புதிய அரசியல் திட்டம்

ருஷ்யாவைப் பற்றிச் சிலர் நினைக்கிறார்கள், அங்கே எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்கிறது; தனி மனிதனுடைய சுதந்திரம் அங்கே பூரணமாகப் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதென்கிறமாதிரி. இன்னும் சிலர், அபேதவாத தத்துவத்தை அரசாங்க முறையாகச் செயல் முறையில் கொணர்ந்த ஒரு மகத்தான பரிசோதனை அங்கே நடைபெறுகிறது என்று கருதுகிறார்கள். இந்த மாறுபட்ட கருத்துக்களிடையே ருஷ்யாவைப் பற்றிச் சரியான தகவல்களே கிடைப்பதில்லை.

இந்த நிலைமையில், ருஷ்யாவில் 1936-ம் வருஷம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட புதிய அரசியல் திட்டத்தைப் பற்றி எவ்வித விருப்பு வெறுப்புமின்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

புதிய திட்டப்படி குடியரசு முறையைத் தழுவி நடைபெறும் பதினோரு மாகாணங்கள் சேர்ந்த சமஷ்டி அரசியல் ருஷ்யாவில் நடைபெறும். இதற்கு மொத்தமாக 'சோவியத் யூனியன்' என்று பெயர். இந்த சோவியத் யூனியனானது, 'தொழிலாளர்களினுடையவும் குடியானவர்களினுடையவும் அபேதவாத ராஜ்யமா'க இருக்கும். பொருளுற்பத்திக்குச் சாதனமாயுள்ளவைகளும், அது சம்பந்தமான கருவிகளும் பொதுவுடைமைகளாயிருக்கும். எவை எவை பொதுவுடமைப் பொருள்களாயிருக்க வேண்டும், எவை எவை தனி மனிதனுடைய உரிமைப் பொருள்களாயிருக்க வேண்டுமென்பதைப் பற்றி, இந்தப் புதிய சட்டத்திலேயே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நிலம், நீர், காடுகள், மில்கள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், ரெயில்வேக்கள், பாங்கிகள், போக்குவரவு சாதனங்கள், அரசாங்கப் பண்ணைகள் முதலியனவெல்லாம் பொதுவுடைமைகளாகும். தனிப்பட்ட நபர்கள் தங்களுடைய உழைப்பின் பலனைச் சம்பாதித்த வருமானத்தைக் கொண்டு வாங்குகிற சொத்து சுதந்திரங்களையெல்லாம் தங்கள் சௌகரியப்படி உடைத்தானவர்களாயிருக்கலாம். உதாரணமாக, எந்த நபரும் தங்களுக்கென்று சொந்தமாக வீடு வாசல்கள் வாங்கிக் கொள்ளலாம்; வைத்து அநுபவிக்கலாம். அப்படியே, விவசாயிகளும், சொந்தமாக நிலபுலன்கள் வாங்கி, வைத்து, அநுபவிக்கலாம்.

உழைப்புக்குத் தகுந்த ஊதியமுண்டு என்பதுதான், ருஷ்ய அரசியலின் அடிப்படையான தத்துவமாயமைந்திருக்கிறது. எவனொருவன் அதிகமாக உழைக்கிறானோ அவன் அதிகமான பொருள் வைத்துக் கொண்டிருக்கிறான்; அதிகமான சுகத்தையும் அநுபவிக்கிறான். இதனால் ருஷ்யாவில் எல்லாருக்கும் ஒரே விதமான வருமானம் கிடைக்கிறதென்று சொல்வதோ, அங்கு தேசீயச் செல்வமானது சரிசமானமாகப் பங்கிடப்பட்டிருக்கிறதென்று சொல்வதோ சரியில்லை.

புதிய அரசியல் திட்டப்படி, பிரஜைகளுக்குச் சில மூலாதாரமான உரிமைகளை அரசாங்கம் வழங்கியிருக்கிறது. பிரஜைகளுக்கு வேலை செய்ய உரிமை உண்டு. அப்படியே ஓய்வு கொள்ளவும் உரிமை உண்டு. தொழிலாளர்கள், வாரத்தில் ஆறு நாள் வேலை செய்ய வேண்டும். அந்த ஆறு நாட்களில் ஒரு நாள் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாளின் வேலை செய்யும்

நேரம் ஏழு மணிகள்தான். ஆஸ்பத்திரிகள் மூலமாகவும், ஆரோக்கிய ஸ்தலங்கள் மூலமாகவும் இலவச வைத்திய உதவிகளை எதிர் பார்க்க தொழிலாளர்களுக்கு உரிமை யுண்டு. அப்படியே, இலவசக் கல்வி பெறவும் உரிமை உண்டு.

அரசியல், பொருளாதாரம் முதலிய எல்லாத் துறைகளிலும், ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சரிசமான மான உரிமை உண்டு.

ஒவ்வொரு பிரஜையும், அரசாங்கத்திற்குச் சொந்தமான பொதுவுடமைகளைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சமூகம், மதம், ஆஸ்தி மதிப்பு, கல்வி யறிவு முதலிய எந்தவிதமான வித்தியாசமில்லாமல் 18 வயதடைந்த எல்லாருக்கும் ஓட்டுரிமை உண்டு. இதன்படி சுமார் 100,000,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள். புதிய அரசியல் திட்டப்படி, முதன் முறை, ருஷ்ய பார்லிமெண்டுக்குத் தேர்தல் 12-12-1937ல் நடைபெற்றது. 'ஒரு லட்சம் போலிஸ் ஸ்டேஷன்'கள் ஏற்படுத்தப்பட்டன.

ருஷ்யாவில் ஒரே ஓர் அரசியல் கட்சிதான் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் பொதுவுடமைக் கட்சி இதற்கும் சோவியத் அரசாங்கத்திற்குமுள்ள தொடர்பு, அரசியல் திட்டத்திலேயே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ருஷ்யாவின் மொத்த ஜனத்தொகை 168,000,000. பொதுவுடமைக் கட்சியின் அங்கத்தினர் தொகை 1,500,000. கட்சியில் கட்டுப்பாடு அதிகமாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது.

ஐர்லாந்து

ஐர்லாந்தில் புதிய அரசியல்

ஐர்லாந்தை அரசியல் பாஷையில் 'ஐரிஷ் ப்ரீ ஸ்டேட்' என்றல்லவோ இதுவரையில் நாம் அழைத்து வந்தோம். 1937ம் வருஷம் டிசம்பர் மாதம் 29ந் தேதி முதல் 'ஏரே' என்று அழைக்க வேண்டும். இந்தத் தேதி முதல், ஐர்லாந்தில் புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வருகிறது. இந்தப் புதிய அரசியல், 1937ம் வருஷம் ஜூலை மாதம் பொது ஜன வாக்குக்கு விடப்பட்டது. பலத்த எதிர்ப்பு இருக்கவே செய்தது. ஆனால் திட்டத்திற்குச் சாதகமாக 685,105 ஓட்டுகளும், பாதகமாக 526,945 ஓட்டுகளும் கிடைத்தன. ஐர்லாந்தின் வட பாகம், இன்னும் தனிப்பட்டதோர் நிருவாகத்தின் கீழ் நடைபெற்று வருகிறதேயாயினும், தென் ஐர்லாந்தாகிய சுதந்திர ராஜ்யத்தோடு, அஃது இஷ்டப்பட்டபோது சேர்ந்து கொள்ளும் விதமாகவே இந்த 1937ம் வருஷத்துப் புதிய அரசியல் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. டப்ளினைத் தலை நகராகக் கொண்ட இந்த 'ஏரே' அரசாங்கத்தில் இப்பொழுது 26 மாகாணங்கள் இருக்கின்றன. பெல்பாஸ்ட்டைத் தலை நகராகக் கொண்ட வட ஐர்லாந்தில் ஆறு மாகாணங்கள் இருக்கின்றன.

புதுத் திட்டம் அமுலுக்கு வரும் தினத்திலிருந்து, ஐர்லாந்திலுள்ள எல்லாத் தபால் நிலையங்கள், பொதுக் கட்டிடங்கள் முதலிய யாவற்றிலும், 'ஏரே' என்ற பதத்தின் முதலெழுத்து மட்டும் பொறிக்கப் பட்டிருக்கும். நாணயச் செலாவணியில் இப்பொழுது திடீரென்று எவ்வித மாற்றமும் ஏற்படாது.

புதிய திட்டப்படி தலைவர் ஒருவர் இருப்பாரேயெனினும் டிவாலராதான் நிருவாக சூத்திரக் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருப்பார்.

தேய்ந்த கனவு

சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய 'இரு நகரக் கதை' யின் மொழி பெயர்ப்பு. மொழி பெயர்த்தவர்: ஸ்ரீமான் கி. ரா; வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், ஜார்ஜ் டவுன், மதராஸ். விலை: 8-அணா; பக்கம் 248; டபிள் கிரவுன் அளவு 1 x 16.

நவயுகப் பிரசுராலயத்தார் இவ்வளவு கண்டிப்பாக இருக்கவேண்டாம். இதுதான் இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்தவுடன் நமக்கு ஏற்பட்ட அபிப்பிராயம். சார்ல்ஸ் டிக்கன்ஸ், உணர்ச்சியும் கற்பனா சக்தியும் நிரம்பிய ஒரு சமுத்திரம். அதனை மொழி பெயர்ப்பு என்ற வாய்க்காலின் மூலம் தமிழ்நாட்டு மறுமலர்ச்சி இலக்கியப் பயிரிலே பாய்ச்சி, செழும் பயிர் காணும் திறமை, கி. ரா. என்ற இஞ்சீனிருக்கு நிரம்ப இருக்கிறது என்பது, மேற்படி பிரசுராலயத்தாருக்கு நன்றாகத் தெரியும். பின் ஏன் அவரை, அகப்பையால் மொண்டு கொட்டுங்கள் என்று சொல்லி, மாதிரி 200 பக்கங்களுக்கு மேல் புஸ்தகம் போகக்கூடாதென்றும், கதை ருசி குறையக்கூடாதென்றும் நிபந்தனைகள் போடவேண்டும்? ஒன்று, சார்லஸ் டிக்கன்ஸை அப்படியே (இரண்டு பாகங்களாகவாவது) மொழி பெயர்த்திருக்க வேண்டும். அல்லது இளந் தேங்காயிலுள்ள வழுவலை மட்டும் கிரட்டியெடுத்துக் கொடுப்பது போல, ஒரு 'தழுவலை'ச் செய்திருக்க வேண்டும். இரண்டுமில்லாத ஒரு தனி மோஸ்தராக இருக்கிறது இந்த நூல். மூல நூலிலிருந்து சில சில பாகங்கள் மட்டும் மொழிபெயர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஆங்கிலம் படித்த தமிழர்களும் இதனைப் பூரணமாக ருசிக்கமுடியாது. ஆங்கிலம் தெரியாத தமிழர்களுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல்தானிருக்கும். முக்கியமாக, முதல் நாற்பது பக்கங்கள் வரை எதைப் படிக்கிறோம் என்று கூடத் தெரியவில்லை. சில சமயங்களில் ஏன் படிக்கிறோம் என்ற சந்தேகங்கூட உண்டாகி விடுகிறது. பிறகுதான், டிக்கன்ஸைக் கொஞ்சம் கொஞ்சமாக அநுபவிக்க ஆரம்பிக்கிறோம். எட்டாவது அத்தியாயத்தில் மகாப்பிரபு மார்க்விஸ் எவ்ரிமானின் ஆடம்பரத்தையும் அட்டகாசத்தையும் நாம் பார்க்கிறபோது, பிரான்ஸ் தேசத்தின் அந்தக் கால நிலைமை ஒருவாறு நமக்குத் தென்படுகிறது. பணக்காரர்கள், பொது ஜனங்களைப் பற்றி என்ன மனப்பான்மை கொண்டிருந்தார்கள் என்பதை ஒரே ஒரு வாக்கியத்தில் சித்திரித்துக் காட்டுகிறான் டிக்கன்ஸ்.

> ஜனங்கள் பிரபுவைச் சூழ்ந்து கொண்டார்கள். பிரபு வளைக்குள்ளே யிருந்து ஓடி வந்து விட்ட எலிகளைப் பார்ப்பது

போல் அலட்சியமாய் அவர்களைப் பார்த்தார். பக். 56

மற்றும், மகாப்பிரபு ஒரு சிமிட்டா பொடியைப் போட்டுக் கொண்டு,

கொடுங்கோன்மைதான் நித்தியமான வேதாந்தம். அப்பனே, பயத்தின் சாயை தான் அந்த நாய்களை ஒழுங்கு படுத்துகிறது. சவுக்கடியின் ருசிதான் அந்தக் கழுதைகளை முன்னுக்கு கொண்டுவர முடியும். பக் 63

என்று சாலஸ்டார்னேக்குச் செய்கிற உபதேசத்தில், பிரெஞ்சுப் புரட்சியின் விதையை ஊன்றுகிருன்.

பிரெஞ்சுப் புரட்சியின் போது உருண்ட தலைகளையும், ஓடிய ரத்தப் பெருக்கையும் இந்த நூலின் மூலம் நாம் பார்க்கிற போது, உண்மையிலேயே நமக்கு ரத்தக் கொதிப்பு ஏற்பட்டு விடுகிறது. பக். 135-136,175.

ஸ்ரீமான் கி. ரா. முகவுரையில் கூறுகிற மாதிரி, இந்தப் புத்தகத்தை எழுதுகிற போது அதிக சிரமப் பட்டிருக்க வேண்டும். கதைத் தொடர்பு விடாமல், ஓர் அளவுக்குட் பட்டு, ஒரு பேராசிரியனின் நற்பெயருக்கு மாசு வராமல் எழுதுவது மகா சிரமமான காரியம். அதிலும் அந்நிய நாட்டுக் கதை; அந்நியப் பெயர்கள்; சொற் பிரயோகங்கள் கூட வேறு மாதிரி. இவ்வளவு சங்கடமான நிலைமையில், இந்த நூலைப் பொறுத்த மட்டில் ஸ்ரீமான் கி. ரா. வெற்றி பெற்றிருக்கிருர் என்று சொல்ல வேண்டும். ஆனால் சில சொற் பிரயோகங்களையும், வாக்கிய அமைப்புக்களையும் தமிழர்கள் எவ்வளவு தூரம் சுவைக்க முடியும் என்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது.

'நீண்ட தாடையுடைய ராஜாவும் தேய்ந்த களங்கமில்லாத் முகம் படைத்த ராணியும்'

'கார்டு அந்தக் குரலை நோக்கிச் சொன்னான்.'

'அவன் குனிந்து ஒரு மெலிந்த தாளை பிரயாணியிடம் நீட்டினன்.'

எனக்கு வியாபார சம்பந்தத்தைத் தவிர வேறு விதமான உணர்ச்சி கிடையாது.

நிமிர்ந்த பார்வையும் முதிர்ந்த அறிவின் ஒளி வீசும் முகமும், கம்பீரமாக நின்ற டாக்டர் மானெட்டைப் பார்த்தவர்கள்...

இப்படி, இப்படி.

கடைசியாக ஒரு வார்த்தை. நவயுகப் பிரசுராலயம் போன்ற பொறுப்பும் கண்ணியமும் வாய்ந்த ஒரு ஸ்தாபனத்தின் மூலம் வெளியாகிற நூல்களில் 'எழுத்துப் பிழைகள் இராது. காற் புள்ளி, அரைப் புள்ளி முதலியன இடுகிற மாதிரியை இவற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று வாசகர்கள் எதிர் பார்ப்பார்கள். அவர்களுடைய இந்த எதிர் பார்த்தலின் அளவுக்கு, அடுத்து வெளியாகும் பிரசுரங்கள் இருக்கும் என்று நாம் உறுதியாக நம்பலாமா?

ஹோமியோ பத்தி

குடும்ப வைத்திய சிகிச்சை

இயற்றியவர். ஸ்ரீமான் எம். பால், H. M. B; புத்தகம் கிடைக்குமிடம்: ஆசிரியர், பண்டுலா மெடிக்கல் ஹால், 73-வது தெரு, மாந்தவளை, பர்மா; விலை: ரூ. 1-4-0 பக்கம். 45; டபிள் கிரவுன் அளவு 1 x 16.

'இச்சிறு நூல் நமது தமிழ் நாட்டுப் பெண்கள், வீட்டில் சுலபமாகப் படித்தறிந்து சாதாரண வியாதிகளை ஆரம்பத்திலேயே கண்டித்துக் குணமாக்க' எழுதப்பட்டதாக ஆசிரியர் முகவுரையில் கூறுகிருர். ஆனால் நமது பெண்களுக்கு இது எவ்வளவு தூரம் பிரயோஜனப் படும் என்பது நமக்குத் தெரியாது. காது நோய்க்கு மருந்து 'ப்லாண்டாகோ' (Plantago) என்று சொன்னால், எத்தனை பேருக்குத் தெரியும்? மேனட்டு மருந்து வகைகளுக்கு ஒரு பிரசார நூல் போலிருக்கிறது இது.

45 பக்கங்கள் கொண்ட இந்தப் புஸ்தகத்திற்கு ஒன்றேகால் ரூபாய் விலை! ஏறக்குறைய அரையணுவுக்கு ஒரு பக்கமா?

விசுவ விசித்திரம்

தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் ஒருவகை நீக்ரோ ஜாதியினர். தங்கள் உதடுகளை இந்த விதமாக வளர்க்கின்றனர். சாப்பிடுவதற்கு உபயோகப்படக் கூடிய தட்டுகள் மாதிரி இவை இருக்கின்றன. இது மட்டுமல்ல; இவர்கள், தங்கள் காதுகளைக்கூட, கழுத்தைச்சுற்றி வளைத்துக் கொள்ளக்கூடிய துதிக்கை மாதிரி வளர்க்கிறார்கள்.



மத்திய ஆசியாவிலுள்ள துருக்கி ஸ்தானத்தில் ஆடுகள் கொழு கொழு என்று வளர்கின்றன. இவைகளின் வால்கள் குட்டையாகவும் ஆனால் மயிர் அடர்த்தியாகவும் இருக்கின்றன. இதனால் இந்த வாலைத் தூக்கி வைத்துக் கொள்வதற்காக ஒரு வண்டியைத் தயார் செய்து, ஆட்டோடு பிணைத்துவிடுகிறார்கள். இந்த அடர்த்தியான வால் மயிர் மட்டும் எட்டு பவுண்டுக்கு மேல் பத்து பவுண்ட் வரை இருக்கிறது.

"ஜலமேல் நடக்கலாம்; கனல் மேலிருக்கலாம்; தன்னிகரில் சித்தி பெறலாம்" என்று தாயுமானுர் எப்பொழுதோபாடி விட்டுப் போனுர் இப்பொழுது, கண்கூடாக அதனைப்பார்க்கலாம். ரப்பரினுல் செய்யப்பட்ட ஒரு வகை பூட்ஸை அணிந்து கொண்டால், தண்ணீரின் மேல் தாராளமாக நடந்து செல்லலாம். இந்த அம்மையார் எவ்வளவுஜோராக நடக்கிருர் பார்த்தீர்களா?

ஜப்பானியர்கள் பச்சை குத்திக் கொள்வதில் பரமப் பிரியர்கள், தேகத்திலே சித்திர வேலை நிரம்பியபச்சை குத்திக் கொண்டிருப்பவர்களுள் உலகத்தில் இந்தப் படத்திலுள்ளவனுக்குத்தான் முதல் ப்ரைஸ்!



இந்த ஆசாமி, பிறக்கும்போதே இரண்டு கைகளுமில்லாமல் பிறந்து விட்டான். அதற்காக, தன் அறிவு ஆற்றல்களை அபிவிருத்தி செய்து கொள்வதில் இவன் கொஞ்சங்கூடப் பின்வாங்க வில்லை. வலது கால் விரலில், பேனுக்கட்டையைப் பிடித்துக் கொண்டு என்ன வேகமாக எழுதுகிருன் பாருங்கள்! எழுத்தும் எவ்வளவு சுத்தமா யிருக்கிறது! இவன் ஓர் இந்தியன் என்று சொல்கிறபோது, நமக்குச் சிறிது சந்தோஷம் உண்டாகிறதல்லவா!

அன்றாட உலகம்



1937

நவம்பர்

23 பிரெஞ்சு அரசாங்க சபைக் கட்டிடத்தைத் தாக்க ஒரு சிலர் சதியாலோசனை செய்து கொண்டிருந்ததாகக் கண்டு பிடிக்கப் பட்டு, கைது செய்யப் பட்டார்கள்.

ஸர் ஜகதீச சந்திரபோஸ் காலமானார்.

24 சீன-ஜப்பானிய யுத்தத்தில், இன்று நாங்கிங் நகரம், ஜப்பானிய ஆகாய விமானக் குண்டுகளால் பலமாகத் தாக்கப் பட்டது.

பாலஸ்தீனத்தில், அராபியத் தலைவரான ஷேக் பர்ஹான் சாதி என்பவர், இராணுவக் கோர்ட்டினால் விசாரிக்கப் பட்டு மரண தண்டனை விதிக்கப் பட்டார். ஆயுதங்களை வைத்துக் கொண்டிருந்தார் என்பதே இவர் மீது குற்றம்.

அரசாங்க ஊழியர்களுக்குக்கதர் உடையே கொடுக்க வேண்டுமென்று ஐக்கிய மாகாண சட்ட சபையினர் நிறைவேற்றிய தீர்மானத்தைமேற்படி மாகாண அரசாங்கத்தார் அங்கீகரித்துக் கொண்டு அதன்படி சுற்றறிக்கை விடுத்திருக்கின்றனர்.

சுபாஷ் சந்திரபோஸ் வியன்னா போயடைந்தார்.

25 ஜப்பானியர்கள் வசப்பட்ட ஷாங்காய் நகரத்தில் உணவுப் பஞ்சம் தொடங்கி விட்டது.

ஸ்பெயின் சண்டையில், மாட்ரிட் நகரம், பிராங்கோ கட்சியினரால் ஆகாய விமானங்களிலிருந்து தாக்கப் பட்டது.

அமெரிக்காவில் போர்ட் மோடார் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம். தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்தவர்கள் பட்சபாதமாக நடத்தப் படுகிறார்கள் என்பதே இதற்குக் காரணம்.

போல்ஷ்வெஸத்திற்கு விரோதமாக ஜப்பானும் ஜெர்மனியும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் முதல் வருஷக் கொண்டாட்டம் இன்று டோக்கியோவில் மிக ஆடம்பரமாகக் கொண்டாடப் பெற்றது.

கான்பூர் தொழிலாளர் வேலை நிறுத்தம் முடிவடைந்து விட்டது.

கூடிய வரையில் சுதேசி சாமான்களையே உபயோகிக்க வேண்டுமென்று பம்பாய் மந்திரி சபையார், எல்லா இலாகா தலைவர்களுக்கும் சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள்.

26 கபுர்தாலா மகாராஜா, பட்டத்துக்கு வந்த வைரவிழா கொண்டாடப் பட்டது. நில வரி வசூலில் பாக்கி யிருந்த சுமார் 4 லட்சம் ரூபாய் வஜா செய்யப்பட்டதோடு, கிராம அபிவிருத்திக்காக 30,000 ரூபாயும் சாங்க்ஷன் செய்யப்பட்டது.

ஹிட்லர், ஜர்மன் சர்வாதிகாரியாக வந்தது முதல் பொருளாதர மந்திரியாக இருந்த டாக்டர் சாசெட், தமது பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

ஜில்லா அதிகாரிகள், தங்கள் ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்யும்போது பிரயாண திட்டத்தை அந்தந்த ஜில்லாவிலுள்ள சட்டசபை அங்கத்தினர்களுக்கும் அனுப்ப வேண்டுமென்று சென்னை அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்தனர்.

27 லார்ட் ப்ராபோர்ன், வங்காள மாகாண கவர்னர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

பள்ளிக்கூட ஹாஸ்டல்களில், ஹரிஜன மாணவர்கள், பிரத்தியேக இடத்தில் தங்குமாறு செய்யப்படக் கூடாதென்று கல்கத்தா சர்வகலாசாலை அதிகாரிகள் தீர்மானித் திருக்கிறார்கள்.

பாட்யாலா சமஸ்தானத்தில், ஒரு கிராமத்து ஜனங்கள், தங்கள் ஜமீன்தாருக்கு வரி செலுத்த மறுத்தமையால் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டது.

28 ஆந்திரா சர்வகலா சாலைக்கு நைஜாம் மன்னர் ஒரு லட்ச ரூபாய் நன்கொடை கொடுத் திருக்கிறார்.

எகிப்து பிரதம மந்திரி நஹாஸ் பாஷா மீது ஓர் எகிப்திய இளைஞன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். ஆனால், நஹாஸ் பாஷாவுக்கு ஆபத்தொன்றும் ஏற்பட வில்லை.

29 மகாத்மா காந்தி மூன்று மாத காலம் வரை ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டு மென்று டாக்டர்கள் யோசனை கூறி யிருக்கிறார்கள்.

மஞ்சுகோவில் ஜப்பானின் ஆதிக்கத்தை இத்தலி அங்கீகரித்துக் கொண்டுவிட்டது.

30 சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு மோர் சப்ளை செய்வதாக சிந்து மாகாண அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

நாங்கிங் மீது ஜப்பானியர் படையெடுப்பதற்குள் முன் ஜாக்கிரதையாக மேற்படி நகரத்திலுள்ள சித்திரச் சின்னங்கள்யாவும் அப்புறப்படுத்தப்பட்டன.

1937

டிசம்பர்

1 மைசூர் சமஸ்தானத்தில் நடக்கும் அடக்கு முறையைக் கண்டிப்பதற்காக மேற்படி சமஸ்தான சட்ட சபையிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினர் ராஜீனாமா செய்தனர்.

ஸ்பெயினில், தளபதி பிராங்கோவுக்குள்ள ஆதிக்கத்தை ஜப்பான் அங்கீகரித்துக் கொண்டிருக்கிறது.

விவசாயக் கடன் நிவாரண மசோதா இன்று சென்னை அரசாங்கத்தாரால் வெளியிடப் பட்டிருக்கிறது.

2 திருவாங்கூர் மகாராஜா ஆந்திர சர்வகலாசாலைக்கு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடையளித்தார்.

ஆந்திர சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. திரு.ராஜகோபாலாச்சாரியார் பிரசங்கம் செய்தார்.

சென்னையில் என்றுமில்லாத குளிர். சீதோஷ்ண நிலை 59 டிக்ரிக்கு இறங்கி விட்டது.

ஷாங்காயில், ஜப்பானியர்வெற்றிக்கொண்டாட்டம் கொண்டாடினர். இதனைக் கண்டித்து, அந்நிய நாட்டுப் பிரதிநிதிகள் ஓர் அறிக்கை வெளியிட்டனர். ஆனால் பலனில்லை.

3 ஜப்பானுக்கும் சைனாவுக்கும் சமாதானம் செய்து வைக்கும் முயற்சியில் ஜெர்மன் பிரதிநிதியான டாக்டர் ட்ரவுட்மான் இறங்கியிருக்கிறார்.

சீனக் கஷ்ட நிவாரண நிதிக்கு லண்டன் லார்ட் மேயர் சேர்த்துள்ள நிதிக்கு 74,000 பவுன் சேர்ந்திருக்கிறது.

4 வடமேற்கு எல்லைப்புற மாகாண மந்திரியாக இருந்த ஸர் அப்துல் காயம் காலமானார்.

ஹாவாய்த் தீவுகளை, அமெரிக்கா அரசாங்கம் 200 லட்சம் டாலர் செலவில் பந்தோபஸ்து செய்து கொண்டிருக்கிறது.

5 ஜப்பானுடன் எந்த விதமாகவும் சமாதானம் செய்து கொள்ள முடியாதென்று சியாங்கை ஷேக் கூறுகிறார்.

6 இந்திய சமஷ்டி கோர்ட் இன்று தொடங்கப் பெற்றது.

7 சென்னை ஷெரிப்பாக திரு ஜி. ஏ. நடேசன் நியமிக்கப்பட்டார்.

நாங்கிங் நகரத்தின் மீது, ஜப்பானிய ஆகாய விமானங்கள் குண்டு மாரி பொழிந்து பலத்த சேதத்தை விளைவித்தன. சியாங்கை ஷேக்கும் அவர் மனைவியும், நாங்கிங் நகரத்தை விட்டு வெளியேறி விட்டார்கள்.

மத்திய மாகாண சட்டசபை கூடியது. மது விலக்கு மசோதா, மந்திரியால் கொண்டு வரப்பட்டு தலைவர் தீர்ப்பின் மேல் தள்ளிவைக்கப்பட்டது.

8 பாலஸ்தீனத்தில் யூத-அராபிய கலகம் ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது. பெட்ரோல் குழாயைச் சில அராபியர்கள் துளை செய்து அதிக சேதத்தை உண்டுபண்ணினார்கள்.

டென்மார்க், நார்வே, ஸ்வீடன் முதலிய தேசங்களிலுள்ள சில பத்திரிகைகள், தளபதி கோயரிங்கை, வேடிக்கைப் படங்கள் போட்டுத் தாக்குகின்றன வென்பதற்காக, ஜெர்மனிக்குள் அவை வரக்கூடாதென்று தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

9 பண்டித ஜவஹர்லால் நேரு, தமது அஸ்ஸாம் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இன்று கல்கத்தா வந்து சேர்ந்தார்.

10 தொழிலாளர்களுடைய குறைகளை நீக்கி அவர்களுக்கு ஆவன செய்யுமாறு பம்பாய் கவர்னர், ஆமதாபாத்தில் மில் சொந்தக்காரர்கள் கூட்டத்தில் பேசினார்.

குறைச்சலான நிலங்களை யுடைய விவசாயிகள் செலுத்தும் நிலத் தீர்வையில் ரூபாய்க்கு இரண்டணா விகிதம் வஜாசெய்யப்படும் என்றும், இதனால் எட்டு லட்சம் ரூபாய் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படும் என்றும் மத்திய மாகாண சட்டசபையில் ரெவினியு மந்திரி அறிவித்தார்.

ஸ்பெயினிலுள்ள குடியரசு அரசாங்கத்தை எந்த விதத்திலும் பிராங்கோ கட்சியினால் தோற்கடிக்க முடியாது என்று சமீபத்தில் ஸ்பெயினில் சுற்றிப் பார்த்து வந்த பார்லிமெண்ட் அங்கத்தினரான தளபதி அட்லி கூறுகிறார்.

11 பம்பாய் சட்டசபையிலுள்ள காங்கிரஸ் கட்சியினர் இன்று கூடி மாதந்தோறும் சாதாரண அங்கத்தினர்கள் 6 ரூபாயும் பார்லிமெண்டரி காரியதரிசிகள் 10 ரூபாயும் மந்திரிகள் 20 ரூபாயும் கட்சி நிதிக்குக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர்.

நாங்கிங் நகரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் சீனர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் பலத்த போராட்டம்.

சர்வதேச சங்கத்தினின்று இத்தலி விலகி விட்டது.

12 ருஷ்யாவில் பொதுத் தேர்தல். ஜனங்களிடையே பெரிய உற்சாகம்.

13 நாங்கிங் நகரத்தை ஜப்பானியர்கள் பூரணமாக ஆக்ரமித்துக் கொண்டு விட்டனர்.

அமெரிக்காவுக்குச் சொந்தமான 'பானே' என்ற கப்பலை, ஜப்பானியர்கள், ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் பொழிந்து மூழ்கடித்து விட்டனர். இது, சீனக்கப்பல் என்று தாங்கள் தவறாக நினைத்து விட்டதாகக் கூறுகின்றனர். இதற்கு வருத்தந் தெரிவிப்பதாக ஜப்பானிய மந்திரிகள் சொல்லி விட்டார்கள்.

14 நாங்கிங் நகரத்தைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சீனத் துருப்புகள் திரும்பி வந்துவிட வேண்டுமென்று சியாங்கை ஷேக் உத்திரவிட் டிருக்கிறார்.

பிரிட்டிஷ் மந்திரிகளில் ஒருவரான ஸர். தாமஸ் இன்ஸ்கிப், லண்டனில் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது இன்னும் 4, 5. வருஷங்கள் வரை, யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும் வேலையை பிரிட்டன் விட்டுக்கொடுக்க முடியாதென்று கூறினார்.

அபிசீனியாவை இத்தலி ஆக்ரமித்துக் கொண்டதை டிவேலரா அங்கீகரித்து விட்டார்.

பிரான்ஸும் யூகோஸ்லேவியாவும் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டன. இது 1-1-1938 முதல் அமுலுக்கு வரும்.

15 சர்வதேச சங்கத்திலிருந்து இத்தலி விலகிக் கொண்டு விட்டதனால் பிரிட்டிஷ் அரசாங்கக் கொள்கை எவ்விதத்திலும் மாறுதலடையாதென்றும் சர்வதேச சங்கத்தைப் பலப்படுத்த அது எல்லா முயற்சிகளையும் செய்யும் என்றும் பார்லிமெண்டில் அந்நியநாட்டு மந்திரி ஈடன் கூறினார்.

17 சர்வதேச சங்கத்திலிருந்து இத்தலி விலகிக்கொண்டு விட்டதால் மேற்படி சங்கக் காரியாலயத்தில் வேலை செய்யும் இத்தாலிய உத்யோகஸ்தர்களும் ராஜீநாமா செய்து விடுவதென்று இத்தாலிய அதிகாரிகள் தெரிவித் திருக்கிறார்கள்.

ரோமாபுரிக்கு அருகாமையில் ஓடும் டைபர் நதி வெள்ளப் பெருக்கெடுத்து அதிக சேதத்தை விளைவித்திருக்கிறது. சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் வீடின்றித் தவிக்கிறார்கள்,

18 முஸோலினிக்கு ஒரு பேரன் பிறந்தான்.

19 எகிப்தில் மன்னருக்கும் பிரதம மந்திரி நஹாஸ் பாஷாவுக்கும் மனஸ்தாபம்.

அகில இந்திய கதர் சுதேசி பொருட்காட்சியை சென்னையில் ஸர் சி. வி. ராமன் திறந்து வைத்தார்.

20 ஸ்பானிஷ் கலகக்காரப்படையினர், பார்ஸிலோனா நகரத்தின் மீது ஆகாயவிமானக் குண்டுகள் பொழிந்து அதிகமான சேதத்தை விளைவித்தனர்.

ஜெர்மானியதளகர்த்தரான லுடன்டார்ப் இறந்துபோனார்,

பாலஸ்தீனத்திலுள்ள ஹைபா என்ற நகரத்தில் ஒரு அராபிய போலீஸ் இன்ஸ்பெக்டர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நாங்கிங் அரசாங்கந்தான், சரியான அரசாங்கமென்று அங்கீகரிப்பதாக பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது.

21 பரூக் மன்னரிடத்தில் தங்களுக்குப் பூரண விசுவாசம் இருப்பதைத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு, கெய்ரோவில் இன்று விழாமாதிரி கொண்டாடப்பட்டது.

22 சர்வதேசங்களும் யுத்தத்தை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்ளக் கூடாதென்று 1928ம் வருஷம் பாரிஸில் நிறைவேறிய சமாதான உடன் படிக்கையின் கர்த்தாவான பிராங். பி. கெல்லாக் நியுயார்க்கில் 81வது வயதில் இறந்துவிட்டார்.

இந்தியாவின் வட மேற்கு எல்லையில் உள்ள சூலைமான் மலையில் பெட்ரோல் இருப்பதாகத் தெரிந்து, பர்மா ஆயில் கம்பெனியார், ஆகாய விமான மூலம் ஒரு நிபுணரை அனுப்பிப் பரிசோதித்து வருகின்றனர்,

பீஹார் சட்டசபையில் விவசாய வருமான வரி மசோதா கொண்டு வரப்பட்டு பரிசீலனைக் கமிட்டியின் சர்ச்சைக்கு விடப்பட்டது.

23 தென்னாப்ரிக்கா, ஆஸ்திரேலியா, நியுஜீலந்து ஆகிய இந்த நாடுகளிலிருந்து வரும் மாணக்கர்கள் வைத்தியப்படிப்புப் படித்து நன்மையடைவதை முன்னிட்டு லார்ட் நப்பீல்ட் 2,520,000 ரூபாய் நன்கொடை கொடுத் திருக்கிறார்.

24 பம்பாய் நகர சபை எல்லையிலுள்ள எல்லா சினிமா ஸ்டுடியோக்களும், இனி வருஷத்திற்கு ஆயிரம் ரூபாய் லைசென்ஸ் கட்டணம் செலுத்த வேண்டுமென்று பம்பாய் நகரசபையார் தீர்மானித் திருக்கின்றனர்.

1938ம் வருஷம் ஜனவரிமாதம் 9ந்தேதி அகில இந்திய சீனதினமாகக் கொண்டாட வேண்டுமென்று பண்டித ஜவஹர்லால் நேரு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

25 பானே என்ற அமெரிக்கக் கப்பலை மூழ்கடித்ததற்காக ஜப்பான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டுவிட்டது.

26 பாரிஸ் நகரத்திலுள்ள ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி அப்படியே எரிந்துபோய்விட்டது. 135 பேர் மரணம்.

பாலஸ்தீனத்தில் தளபதி மவுண்டன் என்பவர், அராபியாகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

27 சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஷாண்டங் மாகாணத்தின் தலை நகரான சீனான் என்பது ஜப்பானியர் வசமாகியது.

29 அகில பர்மா இரண்டாவது இந்தியர் மகாநாடு ஜனாப் எஸ். ஏ எஸ். டயாப்ஜியின் தலைமையில் இன்று ரங்கூன் நகரசபை மண்டபத்தில் கூடியது.

30 அகிலபர்மா இந்தியர் மகா நாட்டின் இரண்டாவது நாள் கூட்டம்.

நமது நிருபர்களுடன்—

இந்தப் பகுதியில், ஆசிரியருடன் வாசகர்கள் தாராளமாகச் சந்திக்கலாம். சிலருக்கு குறைகள் நிறைய இருக்கும். அவற்றை வாய்விட்டுச் சொன்னால்தான் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படும். இதுபோல், வேறு சிலர் ஏதேனும் ஆச்சரியமான ஒரு விஷயத்தைப் பார்த்தோ, கேட்டோ விடுவார்கள். அதை வெளியே சொல்லாமற்போனால், அவர்களுக்கு வயிறு வெடித்துப்போகும். இந்தச் சங்கடமெல்லாம் ஏன்? நண்பர்கள் மனந்திறந்து பேசுவதற்குத்தான் இந்தப் பகுதி திறக்கப் பட்டிருக்கிறது.

தமிழில் வேண்டும்.

வந்தனம். ஜோதி, ஜோதியாக விளங்க இறைவன் அருள்வாராக. ஜோதியில் வாசகர்களுடன் பேச தாங்கள் இடமளித்திருத்தல் பற்றி தமிழுலகம் நிறைந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறது.

ஆனால் ஜோதியில், தமிழனுக்கு வேண்டிய—ஹூ-மீ-வு, கள் இல்லாததைத் தாங்கள் விரும்பியே செய்திருக்கிறீர்களா? அப்படி அந்த விஷயத்தில் மட்டும் ஜோதி, ஜொலிக்காதது விரும்பற்பாலதா? நிற்க,

தமிழர்களால் வெளியிடப்படும் பத்திரிகைகள், புஸ்தகங்கள் முதலியவற்றில் பக்கம், ரூபாயைக் காட்டும் எண்கள், ஒன்றிரண்டு தவிர, மற்ற எல்லாவற்றிலும் ஆங்கிலம் உபயோகிக்கப் படுகிறதே, அதை இதரர்கள் தமிழில் தொகைகள் இல்லையோ என்று நினைக்க மாட்டார்களா? மற்றவர்கள் இப்படிச் செய்யாதிருக்கும் போது, உணர்ச்சியுள்ள தமிழன்கூட அப்படிச் செய்கிறானே? அதை என் திருத்திக்கொள்ளக் கூடாது? இது முக்கியமான விஷயமென்று நினைக்கலாமா? நிற்க.

தமிழர்களும், பத்திரிகைகளும் ஜே, என்று சொல்லியும் எழுதியும் வருகிறார்களே. அது ஹிந்தியில், ஜய், அதாவது, ஜய என்பதை, ஜே என்று சொல்வது பொருந்துமா? வடவர்கள் ஜய் என்றுதானே சொல்கிறார்கள். இதன் விஷயம் எப்படி? இது தமிழில் வாழ்க என்று சொல்வதை ஒக்குமா? வெற்றி என்பதைக் குறிக்குமா? ஆனால், தமிழர் சண்டையில், 'எங்கள் தலைவன் வாழ்க' என்று காணப்படுவது எது?

—சொக்கலிங்கம் பிள்ளை

'தமிழனுக்கு வேண்டிய ஹூ-மீ-வுகள் 'ஜோதி'யில் இல்லாததை' நாம் விரும்பிச் செய்யவில்லை. அவசியத்தையும், சௌகரியத்தையும் முன்னிட்டுத் தான் செய்திருக்கிறோம். பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் பத்திரிகை வெளியாவதாலும், அஃது அந்த மாதம் பூராவும் செல்லு படியாகக் கூடிய நிலைமையிலிருப்பதாலும், அதற்காகத் தமிழில் இரண்டு மாதங்களையும் சேர்த்துப் போட வேண்டியிருப்பதாலும், இதனால் நண்பர்களுக்குத் திகைப்பு ஏற்படக் கூடுமென்றும் கருதி ஆங்கில ஹூ மீ த்தை மட்டும் போடுவதென முடிவு செய்யப் பட்டது. பத்திரிகையின் ஆரம்ப காலத்திலேயே, இதைப் பற்றிப் பல முகங்களாகவும் சர்ச்சை செய்யப் பட்ட தென்று சொன்னால் நண்பர் திருப்தி யடைய வேண்டுகிறோம்.

தமிழிலேயே, பக்கம், தொகைகளைக் காட்டும் எண்கள் முதலியவற்றைக் குறிப்பிட வேண்டு மென்று நண்பர் விரும்புகிறார். நல்ல விருப்பந்

தான். ஆனுல் அநுஷ்டான சாத்தியமா யில்லை யென்று அநுபவ பூர்வமாய்ச் சோல்ல விரும்புகிறேம். காலஞ் சென்ற வ. வே. ஸு. ஐயர், 'தேச பக்தன்' ஆசிரிய பீடத்தமர்ந்து, பத்திரிகையில் இந்த முறையை அநுஷ்டானத்திற்குக் கோண்டு வந்தார். ஆனுல் இது பலருக்குப் புரியாமலிருந்ததோடு பிடித்த மில்லாமலுமிருந்த தென்பதை நாம் நன்கு அறிவோம். ஆனுல் இந்தத் தமிழ் முறைதான் வர வேண்டுமென்பதை நாம் அங்கீகரிக்கிறேம். அதற்குப் பீடிகையாக, நமது கல்வி முறையில் தாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும். அந்தக் காலம் விரைவில் வரவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

ஜய (जय) என்ற சமஸ்கிருத பதம் ஹிந்தியில் ஜை (जै) என்று வருகிறது. இந்த 'ஜை' என்பதுதான் வேகமாகச் சொல்கிற போது 'ஜே' என்று ஆகிறது. இதற்கு வெற்றி என்றுதான் பொருள். வாழ்க என்பதல்ல. 'ஜீ' (जी) என்று சொல்லும் போது தான் வாழ்க என்ற பொருள் தோனிக்கிறது.

—ஆசிரியர்

நேரு பணக்காரரா?

அன்புள்ள ஐயா,

ராஷ்ட்ரபதி ஜவஹர்லால் நேருவுக்கு கோடிக் கணக்காய் பணம் உண்டு என்று ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனுல் அவருடைய சரித்திரத்தில் அதை மறுக்கிறார். உண்மை என்ன? விளக்கமாய் "ஜோதி" யில் பதில் தரும்படி வேண்டுகின்றேன்.

—*சுப. முத்துப் பழநியப்பன்*

தலைவர் என்று ஒருவருக்குப் பெயர் ஏற்பட்டு விட்டதே யானுல், அவரைச் சுற்றி எத்தனையோ கட்டுக் கதைகள் எழும்புவது எந்த நாட்டிலும் வழக்கம். இதற்கு ராஷ்ட்ரபதியோ, மகாத்மாவோ புறம்பாக வில்லை. சாதாரணமாக, நமது நாட்டில், தலைவர் என்று இருந்தால் அவருக்கு ஏராளமான பணம் இருக்க வேண்டுமென்றுதான் போது ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனுல் உண்மையில், இந்தத் தலைவர்கள், போது ஜனங்கள் நினைக்கிறபடி அவ்வளவு பணக்காரர்களாக இல்லை. பணக்காரர்களாக வேண்டுமென்ற எண்ணமும் அவர்களுக்கு இருக்கமுடியாது. ஒரு சமயம், பண்டித நேருவே, பத்திரிகைகளுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், போது ஜனங்கள் நினைக்கிற படி தாம் அவ்வளவு பெரிய பணக்காரரில்லையென்றும் தமக்கு யாசகக் கடிதங்கள் யாராவது அனுப்பினுல் அவர்கள் ஏமாந்து போவார்களென்றும் குறிப்பிட்டிருக்கிறார். சிலர் கேட்கிறார்கள், இவர் தமது பெண்ணை வெளி நாடுகளில் படிக்க அனுப்பியிருக்கிறரே? அப்பொழுது இவருக்குப் பணம் நிறையத்தானே யிருக்க வேண்டுமென்று. தம்முடைய ஒரே பெண், தமது வாழ்க்கையின் விளக்கு, தாயிழந்த குழந்தை, தாத்தா (பண்டித மோதிலால்) இருந்திருந்தால் தங்கப் பல்லக்கிலேயே ஏறிச் செல்லக் கூடியவள், அவளுக்கு உயர்ந்த முறையில் கல்வி அளிப்பதற்காக என்ன கஷ்டப் பட்டாலும் பரவாயில்லை என்ற தந்தை கடமையினுல் தூண்டப் பட்டு குமாரி இந்திராவை மேனுட்டுப் படிப்புக்கு அனுப்பியிருக்கிறார் என்று நாம் ஏன் கோள்ளக் கூடாது? நேருவுக்குப் பணமில்லை என்று சோன்ன மாத்திரத்திலேயே அவர் நித்திய தரித்திரத்திலே வாழ்கிறார் என்ற

நாம் அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. பொது ஜனங்கள் நினைக்கிறபடி ஏராளமான செல்வம் படைத்தவரல்ல என்றுதான் கொள்ள வேண்டும். ஆனால் பொதுவாகவே தலைவர்களாக யாரை நாம் கொண்டாடுகிறோமோ, அவர்கள் பணக்காரர்களா இல்லையாவென்று பரிசீலனை செய்து கொண்டிருக்க வேண்டாம். அவர்களுடைய உழைப்பு, அவர்களுடைய தியாகம் இவைகள்தான் அவர்களுடைய ஆஸ்தி. அதுதான் நமக்கு வழி காட்டி.

—*ஆசிரியர்*

பள்ளத்தூர் மகாநாடும் தேசீயக் கொடியும்

21–11–37ல் *பள்ளத்தூரில், திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்ற காரைக்குடி ஜில்லா 2வது அரசியல் மஹாநாட்டில் ஸ்ரீ ராய. சொ. அவர்கள் கொடியை அவமதித்து விட்டாரென்று ஒரு தொண்டரால் குற்றம் கொண்டு வரப்பட்டு, அவர்மீது கண்டனத் தீர்மானம் செய்திருப்பது யாவரும் நன்கறிந்த விஷயம். அதைப் பற்றிப் பொது ஜனங்களில் சிலர் கொடியை அவமதிக்க மாட்டாரென்றும், மற்றும் சிலர் அவமதிக்கத்தக்கதென்றும், ஒரு சிலர், அவமதிக்கதாகுமென்றும் பலபல விதங்களில் பேசிக்கொண்டும், ஒருவருக்கொருவர் வாதித்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் உங்களுடைய அபிப்பிராயமென்ன ?*

—*முத்துக் கணபதி*

இது சம்பந்தமாக ஸ்ரீ ராய. சொ. அவர்களும் நமக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார். இஃது எல்லாப் பத்திரிகைகளிலும் ஏற்கனவே வெளி வந்துவிட்டபடியால் நாம் இங்கே வெளியிடவில்லை. பள்ளத்தூர் மகா நாட்டில் நடந்த சம்பவம் பெரிதும் வருந்தத் தக்கது. அது நமது தேசீய வாழ்வில் இன்னும் ஆற்றிக் கொள்ளப்பட வேண்டிய புண்கள் எத்தனையோ இருக்கின்றனவென்று நமக்கு இடித்துக் காட்டுவதுபோல் இருக்கிறது. ஸ்ரீ ராய. சொ. அவர்கள், தேசீயக் கொடிக்கு மதிப்புக் குறைவு உண்டாகும் முறையில் நடந்து கொண்டிருப்பார் என்று நம்மால் நம்ப முடியவில்லை. அவருடைய தலைமையில் நம்பிக்கை யில்லையானால் அதற்கு ஜில்லா கமிட்டிக் கூட்டத்திலேயே ஒரு பரிகாரந் தேடிக் கொண்டிருக்க வேண்டும். இதற்காக, பகிரங்க மகா நாட்டில் தேசீயக் கொடியை அவமதித்தார் என்று சொல்லிக் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருக்கக் கூடாது. ஆனால் ஒரு விஷயம். எப்படியோ இந்த விஷயம், தீர்மான ரூபமாக பகிரங்க மகா நாட்டில் வந்துவிட்ட பிறகு ஸ்ரீ ராய. சொ. தமது கருத்தை மகா நாட்டிலேயே விளக்கிச் சொல்லி யிருக்க வேண்டும்.

—*ஆசிரியர்*

பிளாஸி யுத்தம்

ஐயா,

1737ஆ ஜுன் மீ 23வ *நடந்த பிளாஸி யுத்தம் எதற்காக நடந்தது? அதன் அந்தரார்த்தத்தை விபரமாய் விளக்க வேண்டுகிறேன்.*

—*மணி*

பிளாஸி யுத்தம் சுராஜ்-உட்-டௌலாவுக்கும் ராபர்ட் க்ளைவுக்கும் நடைபெற்றது. கல்கத்தாவிலுள்ள ஓர் இருட்டறையில் சில ஆங்கிலேயர்களைப் போட்டு அடைத்து விட்டா

னும் இந்த நவாப். அதற்கு வன்மந் தீர்ப்பதற்காக இந்த யுத்தத்தைச் செய்தான் கிளைவ் என்று சொல்லி கிளைவினுடைய வீர தீர சூர பராக் கிரமங்களைப் புகழ்ந்து எழுதப் பட்டிருக்கின்றன நமது பள்ளிக் கூடங் களின் சரித்திர பாட புத்தகங்களில். ஆனால், சுராஜ்-உட்-டௌலா தனது துணைவர்களால் வஞ்சிக்கப் பட்டுத் தோல்வி யடைந்தான். கல்கத்தா இருட்டறை சம்பவமும் நடக்கவில்லை. இவைகளைப் பற்றி விரிவாக எழுது வதென்றால் இங்கே இடம் போதாது. ஆனால் துரதிருஷ்ட வசமாக இன் னும் தமிழில் சரியான முறையில் இந்திய சரித்திரம் எழுதப்படவில்லை. அதுவரை நண்பர் கொஞ்சம் பொறுத் திருக்க வேண்டியது தான்.

பிளாஸி யுத்தத்தின் அந்தரார்த் தம் என்ன? பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியாவில், தன்னுதிக்கத்துக்கு விதை போட்டது இந்தப் பிளாஸி யுத்தத்தில்தான். தப்புக் கையெழுத் துப் போட்டு உமசந்த் என்பவனை ஏமாற்றிய கிளைவ் தான் இந்தக் கைங் கரியத்தைச் செய்தவன். இந்தப் பிளாஸி யுத்தம் நடந்த நூறுவது வருஷத்தில் சிப்பாய்க் கலகம் என் கிற புரட்சி ஏற்பட்டது. அது போது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியாவில் நன்றாக வேரூன்றிக் கொண்டது. இந்த இரண்டு சந்தர்ப் பங்களிலும், பிரிட்டிஷாருக்குப்பெருந் துணையாயிருந்தவர்கள் நமது தேசத் தினரே.

—ஆசிரியர்

தழுவலா? மொழி பெயர்ப்பா?

மேனாட்டு நூல்களை, முக்கியமாகக் கதைகளை உள்ளது உள்ளவாறே மொழிபெயர்த்தல் நலமா அல்லது அவைகளைத்தழுவி எழுதுவது நலமா வென்ற பிரச்னை தமிழ் நாட்டில் தற் சமயம் தலைகாட்டி விவாதிக்கப்பட்டு வருகிறது. பொது மக்கட்கு இவை களால் ஏற்படும் நன்மையைக் கருத வேண்டுமேயன்றி தழுவி எழுதுவது நல்ல சாமர்த்தியமா, அல்லது மொழி பெயர்த்தல் சாமர்த் தியமா வென்று விவாதிப்பதில் பய னில்லை.

இந்திய நாட்டின், சிறப்பாகத் தமிழ் நாட்டின் நாகரிகமும் மேனாட்டு நாகரிகமும் மிகவும் வித்தியாசமான வை என்பதைக் கூறத்தேவையில்லை. மேனாட்டினரின் பல துறைப்பட்ட வாழ்க்கை, அதற்கான தேவை ஆகிய யாவும் நாம் சிலசமயம் கேட்டுத் திடுக்கிட்டு ஆச்சரியப்படக் கூடியவை யாயிருக்கின்றன. அவர்களின் வாழ்க் கை இலட்சியங்கள் யாவும் நமக்கு முற்றிலும் மாறுபட்டவைகள். ஆகவே அவர்கள் கதைகளின் வர்ணிப்புகள் யாவும் அவர்களறிந்த நாகரிகத்தைத் தழுவியே எழுதப்படுகின்றன. அக் கதைகளை உள்ளவாறு மொழிபெயர்த் தல் ஒரு புறம் கஷ்டமாயினும் மறு புறம் மொழிபெயர்த்தவருக்கே சில சமயம் விளங்குவது வெகு துர்லபம். கதையை எழுதியவர் எந்தக் கருத் தைக்கொண்டு,எந்த இலட்சியத்தைக் கொண்டு, எந்த வாழ்க்கை அமைப் பைக் கொண்டு சித்திரித்து எழுதுகிறா ரோ அவைகளை அப்படியே மொழி பெயர்ப்பாய் பிரதிபிம்பிக்கச் செய் வது கூடாத காரியம். தமிழ்நாட்டு நாகரிகத்தில் ஊறி, அதனை அநுஷ் டித்துவரும் நாம், மேனாட்டு ஆசிரியர் நிலையிலிருந்து எழுதுவதென்றால் எளி தான காரியமன்று.

அப்படி எழுதினாலும் ஆங்கிலங் கற்று மேனாட்டு நாகரிகத்தை ஒரு சிறிது அறிந்தவர்கள் அல்லாது ஏனை

யோர் எளிதில் விளங்கிக்கொள்வது வெகு துர்லபம். மொழிபெயர்த்தலில் பெயர்கள்கூட மேனாட்டுப்பெயர்களாகவே யிருத்தல் வேண்டும். நம் நாட்டுப் பெயர்களை அந்நாட்டு வாழ்க்கையில் புகுத்தினால் கதையும் பெயர்களும் பொருத்தமற்று படிப்போருக்குக் கதையின் போக்கு விபரீதமாயிருக்கும்.

மேனாட்டுப் பேராசிரியரின் உள்ளத்தை அறிய வேண்டுமானால் அவர்கள் கதா இதிகாசங்களை அப்படியே மொழி பெயர்க்க வேண்டியதில்லை. அவர்கள் சரித்திரத்தை யெழுதி அவர்கள் எழுதிய நூல்களின் அரிய அம்சங்களை மாத்திரம் ஆங்காங்கு மொழி பெயர்த்துக் காட்டினால் போதுமானது. அவ்வாறே வெவ்வேறு மகுடத்தின் கீழ் மேனாட்டு நாகரிகங்களை நம்மவர்க்கு அறிமுகப் படுத்தி விடலாம். கதைகள் சம்பந்தப்பட்ட வரை அவைகள் முழுதும் தமிழ்மயமா யின்றேல் அதனாலாய பயனொன்றும் ஏற்படாது. ஆகவே உயர்ந்த கருத்துக்களையும், நல்ல படிப்பினைகளையுங் கொண்ட கதைகளை மாத்திரம் தழுவி எழுதி அவ்வப்போது ஆசிரியரின் பேனா முனையையுங் கையாண்டு வெளியிட்டால் மேனாட்டு ஆசிரியர்களை நம் தமிழ் நாட்டிலேயே சந்தித்து அளவளாவுதல்போ லாகுமல்லவா?

மொழி பெயர்த்த கதைகள் பெரும்பாலும், கரடு முரடான பள்ளத் தாக்குகளில் பாய்ந்தோடும் சுனைப் பாய்ச்சல் போன்று, சீரிய தமிழ் நயமின்றி படிப்பதற்கு அருவருப்பாயிருக்கும். ஆகவே தற்சமயம் மொழி பெயர்ப்பு ஓர் சிறு பகுதியினருக்கும், தழுவி யெழுதுதல் பெரும் பகுதியினருக்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

மொழி பெயர்ப்பு சிற்சில விடங்களில் மிகவும் அத்யாவசியமாயிருக்கிறதை ஒப்புக்கொள்ள வேண்டும். சிற்பம், விஞ்ஞானம், கணிதம் முதலிய சாஸ்திரக் கலைகள் வெகு தீவிர முன்னேற்றத்திற்கு வந்து விட்டன. இவ்வித ஆராய்ச்சி நூல்களை மொழி பெயர்த்து உதவுதல் அத்யாவசியமாகிறது. தகுந்த பதங்கள் தமிழில் சுலபத்தில் கிடைக்கா விட்டாலும் யாவரும் அறிந்து கொள்ளக் கூடிய பதங்களை உண்டாக்கிக் கொள்வதனால் யாதொரு குற்றமுமில்லை. ஆகவே சரித்திரம், சாஸ்திரம் முதலியவற்றிற்கு மொழி பெயர்ப்பும், கதா இதிகாசங்கள் போன்றவைகளுக்குத் தழுவி யெழுதுதலும் சாலப் பொருந்தும் என்று முடிவு கட்டலாமன்றோ?

—ஒரு காலேஜ் ஆசிரியர்

இதைப் பற்றி இன்னும் பல அன்பர்களுடைய கருத்துக்களையும் நாம் ஆவலுடன் எதிர் பார்க்கிறோம்.

—ஆசிரியர்